INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM, THALAMBUR, PERIYAPALAYAM, THIRUVANMIYUR - CHENNAI



# தமிழ் மொழிப்பாட நூல்

## இரண்டாம் பருவம்


**Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS)**

Velan Nagar, P.V. Vaithiyalingam Road, Pallavaram, Chennai - 600 117, Tamil Nadu, India

Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)

ACCREDITED BY NAAC WITH A GRADE Marching Beyond 30 Years Successfully

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை -117.

OTAML -21 தமிழ்த் தாள் -II


பாடத்திட்ட வடிவமைப்பு வல்லுநர் குழு

**பேராசிரியர் ப. மகாலிங்கம்,**
**மொழிகள் புல முதன்மையர்,**
**விஸ்டாஸ், பல்லாவரம் ,**
**சென்னை-117.**

**பேராசிரியர் வெ. சிவசங்கர்,**
**தமிழ்த்துறைத் தலைவர்,**
**விஸ்டாஸ், பல்லாவரம்,**
**சென்னை-117.**

**முனைவர் பெ.மோகன்,**
**பேராசிரியர், தமிழ்த்துறை,**
**விஸ்டாஸ், பல்லாவரம்,**
**சென்னை-117**

**பாட ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர்அ.இருதயராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை-117.

**பாட தயாரிப்பு குழு**

**முனைவர். பெ.மோகன்,,**
பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.-117.
(பிரிவு 1 மற்றும் 2)

**முனைவர் பொ.குபேந்திரன்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.-117.
(பிரிவு 3 மற்றும் 4 )

**முனைவர் அ.இருதயராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.-117.
(பிரிவு 5 மற்றும் 6)

**மொழித்திருத்தம்**

**முனைவர் ச. பிரியா,**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை.-117.

**பிரிவு - பதிப்பாசிரியர்.**

**முனைவர் சி, கமலக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.-117.

**செயலக உதவியாளர்**

**திரு. வி. குமார்,**
பிரிவு அலுவலர்,
இணையவழிக் கற்றல் மையம்,
பல்லாவரம், சென்னை 117.



**ISBN :** 978-93-5912-657-9

**பதிப்பு**

முதல் பதிப்பு 05/01/2026

Academic Year-2024-2025

| | | |
|---|---|---|
| Programme | : | ALL U.G |
| Year/Semester | : | First Year / Second Semester |
| Course Title | : | Tamil-II |
| Course Code | : | 24LTAM-21 |
| No. of Credits | : | 2 |

**பாடத்திட்ட நோக்கம்:**

மாணவர்களின் இலக்கிய நாட்டத்தை மேம்படுத்துதல், காப்பியங்கள், பக்தி இலக்கியம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல், தமிழர் தம் கலைகள், நாகரிகம் பண்பாடு ஆகிய பாடப்பகுதிகளை அறிமுகம் செய்து மாணவர்களை ஆளுமை மிக்கவர்களாக உருவாக்கி, போட்டி தேர்வுகளுக்குத் தயார் செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதும் இப்பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**பிரிவு-1: காப்பியங்கள்**

சிலப்பதிகாரம்- கனாத்திறம் உரைத்தக் காதை முழுவதும்.

மணிமேகலை- மலர்வனம் புக்க காதை முழுவதும்.

கம்பராமாயணம் - குகப் படலம் (பாடல் எண்1989 முதல்1997 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பாடல்கள்).

**பிரிவு-2: பக்தி இலக்கியம்**

1. மாணிக்கவாசகர் - திருவாசகம் – மூன்று பாடல்கள்
   புல்லாகி பூடாகி (சிவபுராணம்), எல்லாப் பிறப்பும் (சிவபுராணம்), உற்றாரை யான் வேண்டேன் (திருப்புலம்பல்)
2. ஆண்டாள் - திருப்பாவை – மூன்று பாடல்கள் (1, 3, 4)
   மார்கழித் திங்கள் … (பாசுரம் 1), ஓங்கி உலகளந்த… (பாசுரம் 3), ஆழிமழைக் கண்ணா… (பாசுரம் 4)
3. வீரமாமுனிவர் - தேம்பாவணி – வளன் செனித்தப் படலம்
4. சீறாப்புராணம்- மானுக்கு பிணை நின்ற படலம்

**பிரிவு-3: கலைகள்**

சிற்பம் - ஓவியம் - இசை - கூத்து - ஒப்பனை – ஆடை அணிகலன்கள்.

**பிரிவு-4: நாகரிகம், பண்பாடு**

சொற்பொருள் விளக்கம் - பண்டைத் தமிழர் வாழ்வியல் - அகம் - களவு - கற்பு - குடும்பம் - விருந்தோம்பல் - உறவு முறைகள் - சடங்குகள் - நம்பிக்கைகள் - பொழுதுபோக்கு - புறம் - போர் முறைகள் - நடுகல் வழிபாடு - கொடைப்பண்பு.

**கற்றலின் விளைவுகள்:**

COC1:மாணவர்களுக்குத் தமிழ்க்காப்யிங்கள் மீது ஆர்வத்தைத் தூண்டல்

COC2: மாணவர்களிடம் அமைதியான மனநிலையை உருவாக்குதல்.

COC3: மாணவர்களிடம் கலை ஈடுபாட்டைத் துலங்கச் செய்தல்.

COC4: மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்த்தல்.

**பார்வை நூல்கள்**


1. **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. பதிப்பு -2001.
2. **திருவாசகம்,** அருணா பப்ளிகேஷன், சென்னை, பதிப்பு- 2007.
3. **திருப்பாவை,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு -2009.
4. **சிலப்பதிகாரம், ஸ்ரீ சந்திரன் உரை,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு- 2009.
5. **மணிமேகலை மூலமும் உரையும,** உத்தமதானபுரம் வே.சாமிநாதையர் எழுதிய அரும்பதவுரையும் (பதிப்பாசிரியர்: உ.வே. சாமிநாதையர்; வெளியீடு: வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை.
6. **கம்பராமாயணம் மூலமும் உரையும்,** அ.ச.ஞானசம்பந்தன் உரை, கங்கை நிலையம், தி.நகர், சென்னை-17.
7. பாடநூல் தேடலுக்கான இணையம் - https://archive.org/

**காப்பியங்கள்**

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

1.1.1 காப்பியங்கள்

1.1.2 சிலப்பதிகாரம்

1.1.3 மணிமேகலை

1.1.4 கம்பராமாயணம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினாக்கள்

## அறிமுகம்

இந்தப் பாடம் காப்பியம் என்ற இலக்கிய வகையைப் பற்றி விளக்கமாக விவரிப்பதாக அமைந்துள்ளது. தமிழில் ஐம்பெருங்காப்பியங்களில் இரட்டைக் காப்பியமான சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவற்றுடன் கம்பராமாயணத்தையும் விளக்குவதாக அமையப்பட்டுள்ளது.

## குறிக்கோள்கள்

காப்பிய இலக்கியத் தோற்றம், வளர்ச்சி பற்றி தெரிந்து கொள்ளலாம். உலக இலக்கியங்களில் காப்பியம் பெற்றுள்ள சிறப்பிடத்தைத் தெரிந்து கொள்ளலாம். காப்பியம் பல்வேறு இலக்கிய வகைகளுக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளதை அறிந்து இன்புறலாம். காப்பிய வகைகளைத் தெரிந்து கொள்ளலாம். சமூகம், சமயம், வரலாறு ஆகியவற்றை மீட்டுருவாக்க காப்பியம் துணை புரிவதை அறிந்து பெருமிதம் அடையலாம்.

## 1.1 காப்பியம்

காப்பியம் ஆங்கிலத்தில் Epic என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. கிரேக்க இலத்தீன் மொழிகளில் முன்முறைக் காப்பியம் (Primitive Epic), வழிமுறைக் காப்பியம் (Secondary Epic), வீரயுகக் காப்பியம் (Chivalric Epic) எனப் பல வகையாக

கூறப்படுகிறது. வடமொழியில் இதிகாசம், மகாகாவியம், காவியம், சம்பு காவியம், சந்தேச காவியம், உத்பாத்தியம், கண்ட காவியம் என வகைப்படுத்தப் பெறுகின்றது. தமிழில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம், புராண காவியம் என அமைகின்றது. இலக்கிய உலகில் காப்பியம் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. இதனைச் செவ்விலக்கிய வகையில் (Classical Literature) அடக்குவர். இலக்கிய வளம் நிறைந்த பழமையான மொழிகளில் முதல் இலக்கியம் காப்பியமாக அமைவதைக் காணலாம். இந்த நிலை தமிழுக்கு இருக்கிறதா? என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். இதனால் மட்டுமே தமிழ் பழமையான செம்மொழி அன்று என்று கூறிவிட முடியாது. இங்குக் கர் என்பார் கூற்று நினைத்தற்கு உரியது. அவர் “வீரயுகத்தில் காப்பியம் மட்டுமே எழ வேண்டும் என்ற நியதி இல்லை. பல மொழிகளில் ஹோமரின் இலியத், ஒடிசி போன்ற காவியங்களுக்குப் பதிலாக, கதை எதுவும் இன்றித் தங்கள் தங்கள் நாட்டுச் சிற்றரசர்களையும் தலைவர்களையும் பாராட்டிப் பாடும் பாடல்கள் எழுந்துள்ளன” என்கிறார். சங்க இலக்கியமான புறநானூறும், பதிற்றுப்பத்தும் பத்துப்பாட்டில் பல பாடல்களும் இத்தகைய வீரயுகப் பாடல்கள் தாம். சீன மொழியிலும் இத்தகைய உதிரிப் பாடல்களே வீரயுகத்தில் எழுந்துள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியக் காலம் தொடங்குகிறது. இக்காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் ஊகங்களே. தமிழில் தோன்றிய முதல் காப்பியமே சிலப்பதிகாரம். இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன.

**சொல் விளக்கம்**

வடமொழியில் காவ்யா என்றால் பாட்டு என்பது பொருள். கவியால் படைக்கப்படுவன அனைத்தும் காவியமே. எனவே காவ்யா - காவியம் - காப்பியம் என ஆகியது என்பர். தமிழில் தொல்காப்பியம், காப்பியக் குடி, வெள்ளூர்த் தொல்காப்பியர், காப்பியஞ் சேந்தனார், காப்பியாற்றுக் காப்பியனார் முதலான பெயர்கள் காணப்படுகின்றன. இவை காப்பு + இயம் என்ற சொற்களின் சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. பழமரபுகளைக் காப்பது காப்பியம் எனக் கருத

இடம் உண்டு. காப்பியம் என்ற இலக்கியமே, வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூக - சமய - அரசியல் வரலாற்றையோ அல்லது வரலாறாக நம்பப்படுவதையோதான் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. இவை வாய்மொழி மரபாகச் சொல்லப்பட்டு வந்த கதைகளாக அமைந்தன. இவ்வாறு வரலாற்றுக்கு முந்தைய கால மனிதனின் வாழ்வியல், சிந்தனை மற்றும் சமய நம்பிக்கை பற்றிச் சொல்லப்பட்டு வந்த கதைகளே ஹோமர் போன்ற கவிஞர்களால் காப்பியமாகத் தொகுக்கப்பட்டன.

ஆங்கிலச் சொல்லான Epic என்பதும் 'epo' என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகக் கருதப்படுகிறது; 'epo' என்றால் 'to tell' என்றும், 'epos' என்றால் 'anything to tell' என்றும் பொருள்படும். எனவே Epic என்பது மரபு வழியாகச் சொல்லப்பட்டு வருவது என்பது பொருளாகிறது. இவ்வகையில் காப்பியம் என்பதும் பழமரபுகளைக் காத்து இயம்புவது. அதாவது 'சொல்லப்பட்டு வருவது' என்பது விளங்குகிறது.

**காப்பிய வகை**

காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான ஐம்பெருங் காப்பியங்களும், சூளாமணி, நீலகேசி முதலான ஐஞ்சிறு காப்பியங்களுமே நினைவுக்கு வரும். தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான பலவும் நம் நினைவுக்கு வருவதுண்டு. 20ஆம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன. எனவே காப்பியம் என்ற இலக்கிய வகையைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

**மேலை இலக்கியக் காப்பிய வகை**

கிரேக்கம், இலத்தீன், பாபிலோனியம் முதலான பழமை வாய்ந்த மொழிகளில் எழுந்துள்ள காப்பியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

1) முன்முறைக் காப்பியம் (Primitive or Oral Epic)
2) வழிமுறை அல்லது கலைக் காப்பியம் (Secondary or Literary Epic)
3) வீரயுகக் காப்பியம் (Chivalric Epic)
4) வீரயுகக் காதல் காப்பியம் (Chivalric Romance)
5) காதல் காப்பியம் (Romantic Epic)
6) நகைச்சுவைக் காப்பியம் (Burlesque Epic)

கலைத் தன்மை பெறாத - அதே நேரத்தில் உணர்ச்சிப் பெருக்காகக் கவிஞனால் தங்கு தடையின்றி வாய்மொழி மரபில் பாடப்பட்டு வருவன முன்முறைக் காப்பியங்கள். இதனை அடுத்துத் தோன்றுவன கலைக்காப்பியங்கள். இவற்றில் கவிஞனின் சிந்தனைக்கும் கற்பனைக்கும் இடம் உண்டு. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருத்தியல் இவ்வகைப் படைப்புகளில் சிறப்பான இடத்தைப் பெறும்.

வீரயுகக் காப்பியங்களில் வீரதீரச் செயல்கள், அற்புத ஆற்றல்கள், உணர்ச்சி பூர்வமாக மிகையான கற்பனையுடன் வெளியிடப்பெறும். வீரயுகக் காதல் காப்பியங்களில் காதல், காதலுக்காகப் போராடும் மிகப்பெரிய போராட்டம் முதன்மைப்படுத்தப்பெறும். நகைச்சுவைக் காப்பியங்களில் கிண்டலும் கேலியும் நிறைந்து, தன்னேரில்லாத் தலைவனாக உருவகப்படுத்தப்பட்ட காப்பியத் தலைவன், இங்குக் கிண்டலுக்கும் கேலிக்கும் உரியவனாக, ஆளுமையில் தரம்தாழ்ந்தவனாகச் சித்திரிக்கப்படுவான்.

**வடமொழியில் காப்பிய வகை**

வடமொழியில் காப்பியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பெறுகின்றன.

1) இதிகாசம்
2) மகாகாவியம்
3) காவியம்
4) புராண காவியம்
5) உத்பாத்தியம்
6) சம்பு காவியம்
7) சந்தேச காவியம்
8) கண்ட காவியம்

இதிகாசம் என்ற சொல்லுக்கு 'இவ்வாறு முன் இருந்தது' என்று பொருள். இதிகாசங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறாக (Pre-historic Period) நம்பப்படுவன. வால்மீகி இராமாயணமும், வியாச பாரதமும் இவ்வகைப் படைப்புகளே. வடமொழியின் மகாகாவியம் என்பது இதிகாசக் கதையின் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, விரிவாகப் பேசுவது. இதில் அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நாற்பொருள் இடம் பெறும். கற்பனை வளமும் வருணனைத் திறனும் பெற்றிருக்கும். மகா காவியத்திலிருந்து அளவால் குறைந்தது காவியம். நாற்பொருளும் இதில் இடம்

பெறாது. ஒரு சில குறைந்து அமையும். உயரிய நோக்கமும் கற்பனை வளமும் குறைவாகவே காணப்படும். கடவுளர் பற்றிய புராண வரலாறாக அமைவது புராண காவியம். இதிகாசத்திலோ, புராணங்களிலோ இடம் பெறாத, புதிய கதையை மையமாகக் கொண்டு படைக்கப் பெறுவன உத்பாத்தியம் என்னும் காப்பிய வகையாகும். சம்புகாவியம் என்பது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகும். சந்தேச காவியம் என்பது தூது இலக்கிய வகையாகும். கண்ட காவியம் என்பது பழைய இதிகாச - காப்பியக் கதையை எடுத்துக் கொண்டு, கால வேறுபாட்டிற்கு ஏற்ப மாற்றங்களையும், புதுமைகளையும் சேர்த்துப் படைக்கப் பெறுவது. தமிழில் பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம், சாலை இளந்திரையனின் சிலம்பின் சிறுநகை போன்றவை இக்கண்ட காவிய வகையைச் சார்ந்தவை.

**தமிழில் காப்பிய வகை**

தமிழ்க் காப்பியம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவன ஐம்பெருங் காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் என்பனவே. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை என்ற ஒரு மிகச் சிறந்த காப்பியமும் உள்ளது. பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் என்பனவும் தமிழில் தோன்றிய மிகச் சிறந்த காப்பியப் படைப்புகளே. இருபதாம் நூற்றாண்டிலும் காப்பியம் என்ற பெயரில் பல படைப்புகள் வெளி வந்துள்ளன. இவற்றைப் பின்வரும் வகைப்பாடுகளில் பகுத்துக் காணலாம்.

1) இதிகாசம்
2) புராணம்
3) பெருங்காப்பியம்
4) சிறுகாப்பியம்
5) மறைந்துபோன தமிழ்க் காப்பியம்
6) மொழிபெயர்ப்புக் காப்பியம்
7) இசுலாமிய சமயக் காப்பியம்
8) கிறித்தவ சமயக் காப்பியம்
9) தற்காலக் காப்பியம் மற்றும் கதைப் பாடல்கள்

கம்பராமாயணமும் வில்லிபாரதமும் தமிழில் இதிகாசக் காப்பியங்களாகும். ஆனால் இவை இதிகாசத் தன்மையான வாய்மொழி மரபோ, உணர்ச்சியோ இன்றிக் கலைத்தன்மையோடு கற்பனை வளமும் கருத்தியல் புனைவும் கொண்டு

படைக்கப்பட்டுள்ளன. இதனால், இவை மேலை இலக்கியக் கலைக்காப்பியம் என்ற வகையைச் சார்ந்தன எனலாம்.

தமிழில் புராணக் காப்பியங்கள் மூன்று வகையாகப் படைக்கப் பட்டுள்ளன. ஒன்று, கந்தபுராணம் போன்ற கடவுளர் பற்றிய புராணக் காப்பியம். இரண்டாவது வகை திருவிளையாடல் புராணம் போன்ற கடவுளர் பற்றிய தலபுராணம். மூன்றாவது வகையைச் சார்ந்தவை மாமனிதர் பற்றிய பெரியபுராணம் போன்றவை ஆகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன பெருங்காப்பியங்கள் என்றும்; உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி ஆகியன சிறுங்காப்பியங்கள் என்றும் எண்ணப்படுகின்றன.

சமயப் போராட்டங்கள், மக்களின் கவனிப்பு இன்மை முதலான காரணங்களால் அழிந்து போன தமிழ்க் காப்பியங்கள் பல. உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு சில காப்பியங்களில் தகடூர் யாத்திரை, வளையாபதி, குண்டலகேசி, விம்பசார கதை, சாந்தி புராணம், நாரத சரிதை, கலியாணன் கதை, பருப்பதம், புராண சாகரம், அமிர்தபதி, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, இராசராச விசயம், வீரணுக்க சரிதம், குலோத்துங்க சோழன் சரிதை முதலான காப்பியங்களின் பெயர்கள் அறியப்படுகின்றன.

நச்சினார்க்கினியர் உரையிலும், புறத்திரட்டிலும் காணப்படும் இராமாயணச் செய்யுள்கள், பெருந்தேவனார் குறிப்பிடும் இராமாயண வெண்பா, யாப்பருங்கலத்திலும், வீரசோழியத்திலும் மேற்கோள் காட்டப்படும் வெண்பாவில் அமைந்த இராமாயண செய்யுள்கள், ஸ்ரீபுராணம் குறிப்பிடும் சைன இராமாயணம், பல திரட்டு என்னும் சுவடித் தொகுப்பில் உள்ள நான்கு இராமாயண வெண்பாக்கள் ஆகியவற்றின் மூல நூல்கள் அழிந்து போய்விட்டன.

இதே போன்று சங்ககாலம் தொட்டுப் பாரதக் கதை தொடர்பான பல காப்பியங்கள் எழுந்துள்ளன. சின்னமனூர்ச் செப்பேடு மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் எனச் சங்க காலத்ததான ஒரு பாரதம் பற்றிக் குறிப்பிடுகிறது. அடுத்தது பெருந்தேவனார் பாடிய பாரதம். இவர் பாரதம் பாடிய காரணத்தால் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அழைக்கப்பட்டார். இவர் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் ஆவார். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,

அகநானூறு, புறநானூறு ஆகிய சங்கத் தொகை நூல்களுக்கு அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடியவர் ஆவார். மேலும் வத்சராசன் பாரதம் அல்லது அருணிலை விசாகன் பாரதம் என்ற ஒரு பாரத நூலும் குறிப்பிடப்படுகின்றது. இப்பாரத நூல்கள் அனைத்தும் மறைந்து போயின.

தமிழில் பல தழுவல் காப்பியங்கள் எழுந்துள்ளன. இத்தகைய தழுவலன்றி மொழிபெயர்ப்பாகவும் பல காப்பியங்கள் எழுந்துள்ளன. மனுசரிதை, வசுசரிதை, பிரபுலிங்க லீலை, வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியாரின் துறக்க நீக்கம் (மில்டனின் Paradise Lost), அனந்த நாராயணரின் இலியதம் (ஹோமர்), அ.சிங்கார வேலுவின் ஒதீசியம் (ஹோமர்), ஜமதக்னியின் மொழிபெயர்ப்பான இரகுவம்சம், குமார சம்பவம், மேக சந்தேசம் (காளிதாசர்), ஆதி வரகவி மொழிபெயர்த்த காதம்பரி ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

இசுலாமியக் காப்பியங்களில் குறிப்பிடத்தக்கது சீறாப்புராணம். கிறித்தவக் காப்பியங்களில் தேம்பாவணியும், இரட்சணிய யாத்திரிகமும் சிறப்புடையன. தற்காலத்தில் பாரதியின் பாஞ்சாலி சபதம் முதலானவும் பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி முதலானவும் காப்பிய வரிசையில் குறிப்பிடப்படுவன. முடியரசனின் பூங்கொடி, கவியோகி சுத்தானந்த பாரதியின் பாரத சக்தி மகா காவியம், புலவர் குழந்தையின் இராவண காவியம் ஆகியன பழந்தமிழ்க் காப்பிய மரபில் பாடப்பட்டனவாகும். பஞ்சபாண்டவர் வனவாசம், கர்ணன் சண்டை, நல்லதங்காள் கதை முதலான பல எண்ணற்ற கதைப் பாடல்கள் தற்காலக் காப்பிய வரிசையில் இடம் பெற்றுள்ளன.

**பெருங்காப்பியமும் சிறுகாப்பியமும்**

வடமொழியில் மகாகாவியம், காவியம் என்ற வகைமையையே பெருங்காப்பியம் சிறுங்காப்பியம் என்று தமிழில் குறிப்பிடுகின்றனர். வடமொழியில் இதிகாசங்களான இராமாயண மகாபாரதக் கிளைக்கதைகளை எடுத்துக்கொண்டு, அவற்றைக் கலைத்தன்மையுடன் தண்டியலங்காரம் கூறும் இலக்கணப்படி பாடினர். இவையே மகாகாவியம்-காவியம் எனப்பட்டன. வடமொழி தமிழ்க் காப்பியங்களுக்கிடையே பெயரில் இந்த ஒற்றுமை காணப்பட்டாலும், பாடுபொருளில் இருமொழிக் காப்பியங்களும் வேறுபடுகின்றன. தமிழில் எந்த ஒரு பெருங்காப்பியமோ அல்லது சிறு காப்பியமோ இதிகாசத் தழுவலாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பெருங்காப்பிய இலக்கணம்**

தமிழ்க் காப்பியக் கொள்கை பற்றிய விரிவான செய்தி பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இல்லை. வடமொழி மரபை ஒட்டி எழுந்த தண்டியலங்காரமே முதல்முதலில் காப்பிய இலக்கணம் பற்றி விரிவாகப் பேசுகின்றது. தொடர்ந்து பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், வச்சணந்திமாலை, மாறன் அலங்காரம் முதலான பாட்டியல் நூல்கள் இவ்விலக்கணம் பற்றிப் பேசுகின்றன.

பெருங்காப்பியம் தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனைப் பற்றிய கதையாக அமைய வேண்டும் என்று தண்டியலங்காரம் கூறுகிறது. பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறித் தொடங்கப்பட வேண்டும் என்பார் தண்டி. அவையடக்கம் இடம் பெற வேண்டும் என்பதை மாறனலங்காரம் வலியுறுத்தும். காப்பியப் பாடுப்பொருள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் தருவதாக அமைதல் வேண்டும் என்பது இலக்கண நூலார் அனைவரின் கருத்தாகும்.

பெருங்காப்பிய வருணனைக் கூறுகளாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம் என்பனவற்றைத் தண்டி கூறுகிறார். தென்றலின் வருகை, ஆற்று வருணனைகளை மாறன் அலங்காரம் சுட்டும். நவநீதப் பாட்டியல் மாலை (பொழுது), குதிரை, யானை, கொடி, முரசு, செங்கோல் பற்றிய வருணனைகளைச் சேர்க்கும்.

பெருங்காப்பிய நிகழ்ச்சிகளைப் பொது நிகழ்ச்சி, அரசியல் நிகழ்ச்சி என இரண்டாக வகைப்படுத்தலாம். திருமணம், பொழிலாடல், நீராடல், புதல்வர்ப் பேறு, புலவியிற் புலத்தல், கலவியில் கலத்தல் ஆகியவற்றைப் பொது நிகழ்ச்சிகளாகத் தண்டி ஆசிரியர் குறிப்பிடுவார். மாறன் அலங்காரம் இல்வாழ்க்கை, நிலையாமை, கைக்கிளை ஆகியவற்றைச் சேர்த்துக் கூறும். குலவரவு, உலகின் தோற்றம், ஊழின் இறுதி, தொண்ணூற்று அறுவரது இயற்கை, வேதியர் ஒழுக்கம் இவை பற்றிப் பேச வேண்டும் என்பவற்றைப் புராணக் காப்பிய நிகழ்வுகளாக வச்சணந்திமாலை முதலான இலக்கண நூல்கள் குறிப்பிடும்.

பெருங்காப்பிய அரசியல் நிகழ்ச்சிகளாக மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி, முடிசூடல் ஆகியவை தண்டி கூறுவன. இவற்றுடன் ஒற்றாடல், திறை கோடல் ஆகியவற்றை மாறன் அலங்காரம் சேர்த்துக் கூறும். சுவை, பாவம் (மெய்ப்பாடுகள்) காப்பியத்தில் இடம் பெற வேண்டும். அத்துடன் சந்தி, பாவிகம் ஆகிய கதைப் பின்னல் அமைதல் வேண்டும் என்பார் தண்டி. இதனைச் சற்று விரித்து வித்து, எண், துளி,

கொடி, கருப்பம் எனப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும். பெருங்காப்பியக் கட்டமைப்பாகச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகியவை அமையும் என்பார் தண்டி. இவற்றுடன் படலம், காண்டம் ஆகியவற்றை மாறன் அலங்காரம் குறிப்பிடும். வெண்பா, விருத்தம், அகவல், கொச்சகம் என்னும் பாவகை காப்பியம் பாடச் சிறந்தவை எனப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும்.

இவை தவிர வழிப்படுத்துதல், வழிப்பயணம், பந்தாடல், அசரீரி, சாபம் முதலான நிகழ்வுகளும், சுடுகாடு, தீஎரி முதலான வருணனைக் கூறுகளும், காதை, புராணம் ஆகிய கட்டமைப்புக் கூறுகளும் பெருங்காப்பியக் கூறுகளாக அமைவதைக் காணலாம்.

**தமிழில் பெருங்காப்பியங்கள்**

தமிழில் பெருங்காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் என்ற வகையுள் அடக்குகின்றனர். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன. இவற்றுள் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். இங்கே குறிக்கப்பட்டுள்ள ஐம்பெருங் காப்பியங்கள் வரிசையில் உள்ள குண்டலகேசியும், வளையாபதியும் கிடைக்கப் பெறவில்லை. அவை எப்படி இருந்தன. அவை பெருங்காப்பிய மரபில் பாடப்பட்டவைதானா? என்பது யாருக்கும் தெரியாது. நன்னூல் மயிலைநாதர் உரையில் (நூ.387) ஐம்பெருங் காப்பியம் என்ற பெயர் காணப்படுகிறது. பின்னர் தோன்றிய தமிழ்விடுதூது கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம் என்று குறிப்பிடுகின்றது. இந்த இரு நூல்களிலும் எவை பஞ்ச காப்பியம் என்பது குறிக்கப்படவில்லை. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்தப்ப தேசிகர்,

சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்
நந்தா மணிமே கலைபுனைந்தான் நந்தா
வளையா பதிதருவான் வாசகனுக்கு ஈந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்

என்று ஐம்பெருங்காப்பியங்களை எண்ணிச் சொல்கிறார்.

**சிறுகாப்பிய இலக்கணம்**

சிறுகாப்பியங்களுக்கான தனி இலக்கணம் மேற்சுட்டிய இலக்கண நூல்களில் இடம் பெறவில்லை. பெருங்காப்பியம் தரும் நாற்பொருளில் சில குறைந்து இயல்வது

சிறு காப்பியம் என்பார் தண்டி. தமிழிலுள்ள ஐஞ்சிறுகாப்பியங்களில் இவை அளவில் குறைந்திருப்பது தெரிய வருகிறது. பெருங்காப்பியச் சுருக்கமும் சிறுகாப்பியமாக எண்ணப் படுகின்றது. பெருங்காப்பியங்களுக்கு உள்ள உயர்ந்த, பரந்துபட்ட, நாடு தழுவிய ஓர் உன்னதத் தன்மை சிறுகாப்பியங்களுக்கு இல்லை என்றே சொல்லலாம். இவை குறிப்பிட்ட ஒரு கருத்தை, பகுதியை மட்டுமே மையப்படுத்துகின்றன எனலாம்.

**சிறுகாப்பியங்கள்**

தமிழில் சிறுகாப்பியங்களை ஐஞ்சிறு காப்பியங்கள் என்று வகை செய்வர். இந்த வகைப்பாடும் கூடக் கருத்து வேறுபாடுகளுக்கு உரியதாக உள்ளது. யசோதர காவியம், நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி ஆகியவற்றை ஐஞ்சிறு காப்பியங்களாகத் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

## 1.2 சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம். இது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்வது; மூவேந்தர்களையும் கதைத்தொடர்பால் ஒருங்கிணைப்பது; சமண, பௌத்த, வைதீக சமயங்களைப் பத்தினி வழிபாட்டில் இணைத்துச் சமய ஒற்றுமை பேணுவது; புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனச் சோழ, பாண்டிய, சேர நாட்டுத் தலைநகரங்களையே காண்டத் தலைப்பாகக் கொண்டு தமிழ்த்தேசியம் காண்பது. இது மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொள்ளாது, வணிக மகளையும் கணிகை மகளையும் முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்டது. மொழியாலும், பொருளாலும், இலக்கிய நயத்தாலும், இன்சுவையாலும் முதன்மை பெறும் காப்பியம் இது. பல்வேறு வகையான சிந்தனை மரபுகளையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கி இருப்பது. விரிந்த களப் பின்னணியும் காலப் பின்னணியும் கொண்டது. பல்வேறு இன மக்கட் பிரிவினர் பற்றிப் பேசுவது. சமூக, சமய, அரசியல் சிந்தனைகளின் களஞ்சியமாகத் திகழ்வது. எல்லாவற்றிற்கும் மேலாக, உலக இலக்கிய வரலாற்றில் பெண்மைக்கு முதன்மை தருகின்ற ஓர் உன்னதக் காப்பியமாகத் திகழ்வது சிலப்பதிகாரம்.

**சிலப்பதிகாரம் பெயர்க் காரணம்**

சிலம்பு ஓர் அணிகலன்; மகளிர் காலில் அணிவது. சிலப்பதிகாரத்தில் இருவர் சிலம்புகள் இடம் பெறுகின்றன. கண்ணகி அணிந்த சிலம்பு ஒன்று; அதன் உள்ளீடு மாணிக்கம்; பாண்டிமாதேவி அணிந்த சிலம்பு ஒன்று; அதன் உள்ளீடு முத்து. இவ்விரு சிலம்புகளால் விளைந்த பூசலே காப்பியக் கதை. இவ்விருவர் சிலம்பும் அழகில், தரத்தில், புற அமைப்பில் ஒரே மாதிரியாக அமைந்ததே இதற்குக் காரணம். எனவேதான் சிலம்பால் விளைந்த அதிகாரம் சிலப்பதிகாரம் ஆயிற்று.

**ஆசிரியர் இளங்கோ**

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை என்று பாரதியாரால் புகழப்பெற்ற முப்பெரும் புலவருள் ஒருவர் இளங்கோ. இளங்கோ சேரவேந்தன் சேரலாதனின் இளைய மகன்; மூத்தவன் சேரன் செங்குட்டுவன். இவர் இளவரசன் ஆதலால் இளங்கோ என அழைக்கப்பட்டார்; துறவு பூண்டதால் அடிகள் என்ற சிறப்புப் பெயருடன் இளங்கோ அடிகள் எனச் சிறப்பிக்கப் பெற்றார். இவர் துறவு பூண்டதற்கான காரணம் என்ன? அடிகளே வரந்தரு காதையில் குறிப்பிடுகிறார்; சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பி விழா நடத்தியபோது, தெய்வமாகிய கண்ணகி தேவந்திமேல் வந்து தோன்றி அங்கு வந்திருந்த இளங்கோவடிகளை நோக்கி அவரது உயர் பண்பைப் பாராட்டிப் பேசுகிறாள்.

'இளவரசே! வஞ்சிமாநகரின் மணி மண்டபத்தில் நின் தந்தை சேரலாதன், தமையன் செங்குட்டுவனுடன் அமர்ந்திருந்தாய்; அப்போது அரசனைக் காண வந்த நிமித்திகன் ஒருவன், அரசனாக வீற்றிருக்கும் அழகிய வடிவ இலக்கணம் உனக்கே உண்டு என்று கூறினன்; அப்போது நீ நிமித்திகனைக் கோபத்துடன் பார்த்துச் செங்குட்டுவன் மனத்துயர் நீங்குமாறு உடனே துறவு பூண்டனை; இதனால் உனக்கு நாட்டை ஆளும் பொறுப்பு நீங்கியது; அதே நேரத்தில் மனத்தாலும் எண்ண முடியாத, எல்லை இல்லாத பேரின்பத்தை அளிக்கும் வீட்டுலகை ஆளும் அரசனாக ஆனாய்', இவ்வாறு கண்ணகித் தெய்வம் இளங்கோவுக்கு அருள் செய்கிறாள்.

இச்செய்தி சிலப்பதிகாரப் பதிகத்திலும் இடம்பெறுகிறது. இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்றாலும், அவர் எல்லா சமயத்தையும் சமமாக மதித்தவர். எந்தவிடத்தும் அவர் சமயக் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவில்லை. பிற சமயத்தை, சமயத்தினரைப் பழித்ததில்லை. மாறாகப் பிற சமயத்தை, சமயக்

கணக்கரைப் போற்றியுள்ளார்.

**சிலப்பதிகாரம் எழுந்த காலம்**

சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியம் என்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இதற்கான அடிப்படைச் சான்றுகளில் ஒன்று இளங்கோ சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பது. இச்செங்குட்டுவன் சங்க இலக்கியத்தில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பாடப்பட்டவன்; இவன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

அடுத்த சான்று, வரந்தரு காதையில் இடம் பெறும் கண்ணகி வழிபாட்டில் இலங்கை வேந்தன் கயவாகு கலந்து கொண்டான் என்பது. இவன் காலமும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பது இலங்கை வரலாற்றால் அறியப்படுகிறது.

மூன்றாவதாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களிலும் இடம்பெறும் பதிகங்களில் "இளங்கோ சிலம்பு பாடச் சாத்தனார் கேட்டார்" எனவும், "சாத்தனார் மணிமேகலை பாட இளங்கோ கேட்டார்" எனவும் கூறப்பட்டுள்ளன. இங்குக் குறிக்கப் பெறும் சாத்தனார் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பது அறிஞர் கண்ட முடிவு. இவற்றால் சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியம் என்பது உறுதி செய்யப்படுகிறது.

### கனாத்திறம் உரைத்த காதை

**மகளிர் இரவிற்கு ஏற்ற கோலம் கொண்டு இல்உறை தெய்வத்தை வழிபடுதல்**

அகல் நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை

நிகர் மலர் நெல்லொடு தூஉய், பகல் மாய்ந்த

மாலை மணி விளக்கம் காட்டி, இரவிற்கு ஓர்

கோலம் கொடி-இடையார்-தாம் கொள்ள-

**மாலதியின் வரலாறு**

மாலதி இறந்த மகவைக் கொண்டு தெய்வக் கோட்டங்களுக்குச் சென்று,வரம் வேண்டுதல்

மேல் ஓர் நாள் மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்க,

பால் விக்கி, பாலகன்-தான் சோர, மாலதியும்,

'பார்ப்பானொடு மனையாள் என்மேல் படாதன விட்டு

ஏற்பன கூறார்' என்று ஏங்கி, மகக் கொண்டு,

அமரர் தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம்,

புகர் வெள்ளைநாகர்-தம் கோட்டம், பகல் வாயில்

உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேல்கோட்டம்,

வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம்,

நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம், புக்கு எங்கும்

'தேவிர்காள்! எம் உறு நோய் தீர்ம்' என்று மேவி-

**சாத்தன் கோயிலில் மாலதி பாடுகிடக்க, இடாகினிப்பேய் அவள் கையிலிருந்த பிணத்தைப் பிடுங்கித் தின்னுதல்**

ஓர் பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு,

ஏசும் படி ஓர் இளங்கொடி ஆய், 'ஆசு இலாய்!

செய் தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;

பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையில்

படு பிணம் தா' என்று, பறித்து, அவள் கைக் கொண்டு,

சுடுகாட்டுக் கோட்டத்து, தூங்கு இருளில் சென்று, ஆங்கு

இடு பிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,

மடிஅகத்து இட்டாள், மகவை-

**சாத்தன் மகவாய் வருதல்**

இடியுண்ட மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச் சாத்தன்

'அஞ்ஞை! நீ ஏங்கி அழல்' என்று, 'முன்னை

உயிர்க் குழவி காணாய்' என்று, அக் குழவி ஆய், ஓர்

குயில்-பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,

மாயக் குழவி எடுத்து, மடித் திரைத்து,

தாய் கைக் கொடுத்தாள், அத் தையலாள்.

**தேவந்தியின் வரலாறு சாத்தன் கலை பல பயின்று; தேவந்தியுடன் எட்டு யாண்டு இல்லறம் புரிந்து நீங்குதல்**

மறையோன் பின் மாணி ஆய், வான் பொருள் கேள்வித்

துறைபோய், அவர் முடிந்தபின்னர், இறையோனும்

தாயத்தாரோடும் வழக்கு உரைத்து, தந்தைக்கும்

தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேய நாள்,

தேவந்தி என்பாள் மனைவி, அவளுக்கு,

'பூ வந்த உண் கண் பொறுக்க' என்று மேவி, தன்

மூவா இள நலம் காட்டி, 'எம் கோட்டத்து

நீ வா' என உரைத்து, நீங்குதலும்-

**தேவந்தி சாத்தன் கோட்டத்தை வழிபட்டிருத்தல்**

தூ-மொழி, ஆர்த்த கணவன் அகன்றனன், "போய் எங்கும்

தீர்த்தத் துறை படிவேன்" என்று; அவனைப் போர்த்து இங்ஙன்

மீட்டுத் தருவாய்' என ஒன்றன்மேல் இட்டு,

கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்,

**தேவந்தி கண்ணகியிடம் சென்று ஆசி கூறுதல்**

வாட்டு-அரும் சீர்க்

கண்ணகி-நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று

எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி;

அறுகு, சிறு பூளை, நெல்லொடு தூஉய்ச் சென்று;

' பெறுக, கணவனோடு!' என்றாள்-

**கண்ணகி தான் கண்ட கனாவினைத் தேவந்திக்கு உரைத்தல்**

'பெறுகேன்; கடுக்கும் என் நெஞ்சம்; கனாவினால், என் கை

பிடித்தனன் போய் ஓர் பெரும் பதியுள் பட்டேம்;

பட்ட பதியில், படாதது ஒரு வார்த்தை

இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என்-தன்மேல்;

“கோவலற்கு உற்றது ஓர் தீங்கு” என்று அது கேட்டு,

காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனொடு

ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;

தீக் குற்றம் போலும், செறி-தொடீஇ! தீக் குற்றம்

உற்றேனொடு உற்ற உறுவனோடு யான் உற்ற

நல் திறம் கேட்கின் நகை ஆகும்’-

**தேவந்தி கூறிய தேறுதல் உரை**

பொன்-தொடீஇ! கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒரு நோன்பு

பொய்த்தாய் பழம் பிறப்பில்; போய்க் கெடுக! உய்த்துக்

கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,

மடல் அவிழ் நெய்தல் அம் கானல், தடம் உள,

சோம குண்டம், சூரிய குண்டம், துறை மூழ்கி,

காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு

தாம் இன்புறுவர் உலகத்து, தையலார்;

போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒரு நாள்

ஆடுதும்’ என்ற அணி-இழைக்கு-அவ் ஆய்-இழையாள்,

**கண்ணகியின் மறுமொழி**

‘பீடு அன்று’ என இருந்தபின்னரே- உரை

**"கோவலன் வருகையும், அவன் நிகழ்ந்ததற்கு இரங்கிக் கூறுதலும்"**

‘நீடிய காவலன் போலும், கடைத்தலையான் வந்து-நம்

கோவலன்!’ என்றாள் ஓர் குற்றிளையாள். கோவலனும்

பாடு அமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி

வாடிய மேனி வருத்தம் கண்டு, ‘யாவும்

சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,

குலம் தரு வான் பொருள்-குன்றம் தொலைந்த;

இலம்பாடு நாணுத் தரும் எனக்கு' என்ன-

**கண்ணகியின் விடை**

நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டி,

' சிலம்பு உள; கொண்ம்' என-

**கோவலன் மதுரை சென்று பொருள் ஈட்ட எண்ணியுள்ள தனது கருத்தை வெளியிட்டு, விடியுமுன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லுதல்**

'சேயிழை! கேள்; இச் சிலம்பு முதல் ஆக, சென்ற கலனோடு

உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்த சீர்

மாட மதுரை அகத்துச் சென்று; என்னோடு இங்கு,

ஏடு அலர் கோதாய்! எழுக' என்று, நீடி

வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்

கனை சுடர் கால் சீயாமுன்.

**வெண்பா**

காதலி கண்ட கனவு கரு நெடுங் கண்

மாதவி-தன் சொல்லை வறிதாக்க, மூதை-

வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்-கங்குல்

கனை சுடர் கால் சீயாமுன்.

**கனாத்திறம் உரைத்த காதை விளக்கம்**

தேவந்தி அறிமுகம் - கோவலன் வீடு திரும்புதல்

புகார்நகரம் மாலைப்பொழுது மங்கலமாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது; வீடுகள் பொலிவுடன் விளங்கின. வீட்டு முற்றத்தில் பூவும் நெல்லும் தூவி அழகுபடுத்தினர். வீடுகளுக்கு விளக்கேற்றி வைத்தனர். அந்த மாலைப் பொழுது தேவந்தி என்னும் பார்ப்பனப் பெண் கண்ணகிக்கு ஆறுதல் கூறத் தொடங்கினாள்.

இந்தத் தேவந்தி வாழ்க்கைப்பட்ட வீடு ஒரு பின்னணியைக் கொண்டு இருந்தது. இவளை மணந்தது பாசாண்டச் சாத்தன் என்னும் தெய்வம்; அந்த வீட்டில் அத்தெய்வம் ஆகிய சாத்தன் வளர்ந்து வயதுக்கு வந்து உரிய வாலிபப்பருவத்தில் இவளைமணம் செய்து கொண்டான். இது விசித்திரமான கதை.

மாலதி என்பவள் ஒருத்தி தன் மாற்றாளின் குழந்தைக்குப் பால் ஊட்ட அது விக்கிச் செத்தது. அந்தப் பழி தன் மீது வரும் என்று அஞ்சி அவள் ஊரில் உள்ள பல கோயில்களுக்கும்

சென்று அக்குழந்தையைக் கிடத்தி உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டினாள். பின்பு பாசண்டச் சாத்தனுக்கு உரிய கோயிலை அடைந்தாள். அங்கே அவள் வரம் வேண்டிப் பாடு கிடந்தாள்.

அங்கே இடுபிணம் தின்னும் இடாகினிப் பேய் ஒன்று வந்து, “தவம் செய்யாதவர்க்குத் தேவர்கள் வரம் தரமாட்டர்கள்” என்று கூறிச் செத்த குழந்தையைக் கையால் பற்றிச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று தன் வயிற்று அகத்து இட்டு விழுங்கி விட்டது.

உயிர் நீங்கிய உடலும் அடையாளத்துக்குக் கூட இல்லாமால் போய் விட்டது. இடி உண்ட மயில் போல் துடிதுடித்தாள், ஏங்கி அழுதாள்.

“அன்னையே நீ அழாதே” என்று கூறிப் பக்கத்தில் ஒரு சோலையில் கிடந்த ஒரு குழந்தையைக் காட்டி “எடுத்துச் செல்க” என்று அத்தெய்வம் கூறியது. பாசாண்டச் சாத்தனே அக்குழந்தை வடிவாகியது. மாற்றுக் குழந்தை கிடைத்தவுடன் அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று தன் பழியைப் போக்கிக் கொண்டாள்.

அந்தக் குழந்தை வளர்ந்து கல்வி பெற்றுப் பெரியவன் ஆகி அந்தக் குடும்பத்துப் பொறுப்புகளை ஏற்று வாலிபன் ஆயினான். தாயத்தாரோடு சொத்து உரிமைக்கு வழக்குத் தொடுத்து அப்பெற்றோர்கள் மறைந்த பிறகு அவர்களுக்கு உரிய கடமைகளைச் செய்து மணமும் செய்து கொண்டான். தேவந்தி என்பாள் அவன் வாழ்க்கைத் துணைவியாயினாள்.

நாள்கள் சில நகர்ந்தன. அவளோடு நீடித்து வாழாமல் தான் தெய்வம் என்பதை அவளுக்கு உணர்த்தி “எம்முடைய கோயிலுக்கு நீ வா” என்று கூறிச் சென்றான்; ஊரவர்க்குப் பதில் கூற வேண்டும். தேசாந்திரம் சென்ற கணவன் திரும்பி வருவதற்காகத் தான் கோயில் சென்று வழிபடுவதாகக் கூறி வழிபாடுகள் மேற்கொண்டு வந்தாள்.

**கண்ணகி கனவு**

கண்ணகி தன் கணவனைப் பிரிந்து கவல்கின்றாள் என்பது அறிந்து அவளுக்கு ஆறுதல் கூற அவள் இல்லம் அடைந்தாள். பூவும் நெல்லும் தூவிக் கடவுளை வழிபட்டுக் கண்ணகி தன் கணவனை அடைவாளாக என்று வேண்டினாள். அதனை அவளுக்கு அறிவுறுத்தினாள். எப்படியும் கணவனை அடைவேன் என்று கண்ணகி தன் மன உறுதியைத் தெரிவித்தாள். அதனோடு தான் கண்ட கனவினை அவளுக்கு எடுத்து உரைத்தாள்.

“அந்தக் கனவினை நினைத்தாலே என் நெஞ்சம் நடுங்குகின்றது. என் கணவன் என் கையைப் பிடித்துப் புதிய ஊருக்கு அழைத்துச் செல்கிறான். அங்கே பழிச் சொல் ஒன்று கூறினர். தேளைத் தூக்கி எங்கள் மேல் போட்டது போல் அது இருந்தது. அதனைத் தொடர்ந்து கோவலனுக்கு ஒரு தீங்கு நிகழ்ந்ததால் அது கேட்டுக் காவலன் முன் சென்று வழக்காட அதனைத் தொடர்ந்து அந்நகரும் அரசனும் அழிவு பெற்றனர். அதன் பின் உயிர் துறந்த என் தலைவன் உயிர் பெற்று என்னைச் சந்தித்துப் பேசினார். இதனை நீ நம்பமாட்டாய்; சிரித்துப் பொய் என்று கூறுவாய்; இது யான் கண்ட கனவு ஆகும்” என்று உரைத்தாள்.

**தேவந்தியின் அறிவுரை**

அதனைக் கேட்ட தேவந்தி, “உன் கணவன் உன்னை வெறுக்கவில்லை. சென்ற பிறவியில் நீ உன் கணவனுக்காகச் செய்ய வேண்டிய நோன்பினைச் செய்யாமல் விட்டு விட்டாய். அதனை இப்பொழுது நீக்குக. கடலொடு காவிரி கலக்கும் சங்கமத்துறையில்

நெய்தல் மணக்கும் கானலில் சோமகுண்டம் சூரிய குண்டம் என்னும் நீர்த்தடங்கள் உள்ளன. அந்நீர்த் துறைகளில் முழுகிக் காமவேள் ஆகிய மன்மதன் கோயில் சென்று தொழுதால் இந்த உலகத்தில் பெண்கள் கணவனோடு இன்புற்று வாழ்வர்; அடுத்த பிறவியிலும் இருவரும் போகம் செய் பொன்னுலகில் சென்று பிறப்பர். நாம் இருவரும் சென்று நீராடுவோம்" என்று கூறினாள்.

அவள் உரைத்த உரைகள் அனைத்தும் செவி கொடுத்துக் கேட்ட கண்ணகி ஒரே சொல்லில் தக்க விடை தந்து அவள் வாயை அடக்கினாள். "பீடு அன்று" என்று கூறி அவளை அனுப்பி வைத்தாள்.

அதன்பின் ஏவற்பெண் ஒருத்தி யாரோ வருகிறார்கள் என்பது அறிந்து கடைத்தலை சென்று பார்த்தாள். வந்தவன் காவலன் என்று குறிப்பிட்டாள். அந்த வீட்டுத் தலைவன் என்பதை அறிவித்தாள்.

கோவலனும் நேரே வந்து அவள் பெருமைமிக்க பள்ளியறைக்குச் சென்று அவளைப் பார்த்தான்; வாடிய மேனிகண்டு வருத்தம் அடைந்தான்; அவன் அவளோடு உரையாடிய சொற்கள் பொருள் பொதிந்தவையாக இருந்தன. "வஞ்சனை மிக்க ஒருத்தியின் வலையில் அகப்பட்டுக் குலம் தந்த செல்வத்தை எல்லாம் தொலைத்து விட்டேன். குன்று போன்ற செல்வம் அது குன்றி விட்டது; இப்பொழுது வறுமை வந்து உள்ளது. இலம்பாடு அது எனக்கு நாணத்தைத் தருகிறது" என்று அவளிடம் தன் மனநிலையைத் தெரிவித்தான்; செறிவு மிக்க சொற்களைக் கேட்டு அறிவு மிக்க கண்ணகி நலம்திகழ் முறுவல் நகைமுகம் காட்டிச் "சிலம்பு உள கொள்க" என்றாள். இச்சொற்கள் அவனுக்கு எழுச்சி தந்தன. அவன் சிந்தனை சீர்பெற்றுப் பறந்தது. அவளோடு கலந்து உரையாடி அவள் கூறும் கருத்துக்கு அவன் காத்திருந்தான். "இழந்த பொருளை ஈட்டுதல் வேண்டும், இந்தச் சிலம்பினை முதற் பொருளாகக் கொண்டு நகைகள் செல்வம் அனைத்தையும் மீட்பேன்" என்றான். அதோடு அவன் நிறுத்திக் கொள்ளவில்லை. மாடமதுரைக்குச் சென்று வாணிபம் செய்யும் கருத்தை அறிவித்தான்.

அதனோடு அவன் அமையவில்லை. அவளையும் 'உடன் வருக' என்று அழைத்தான். இவ்வளவு விரைவாக முடிவு செய்தது வியப்பாகத்தான் உள்ளது. அவன் என்ன செய்வான்? ஊழ்வினை அவனை ஆட்டுவித்தது. இருள் நீங்கிய விடியற்பொழுதில் அருமனை விட்டு அகன்றான்.

கண்ணகியுடன் அவன் புறப்பட்டான். மாதவி அவன் காலை வருவான் என்று கூறியது பழுது ஆகிவிட்டது. யார் இதை எதிர்பார்த்தார்கள்? நம்பிக்கை அவளைப் பொறுத்த வரை தளர்ந்தது. அவள் வாழ்க்கை சோகத்தில் ஆழ்ந்தது. துன்பம் அவளைப் பற்றியது.

## 1.3. மணிமேகலை

மணிமேகலை ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை புத்த சமயக் காப்பியமாகும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்றழைக்கப்படுகின்றன.

புத்த சமயக் கருத்துகளை வலியுறுத்துதல், பெண்களின் பெருமைகளை நிலை நிறுத்துதல், பசிப்பிணியை நீக்குதல், சிறைச்சாலைகளை அகற்றி அறக்கோட்டமாக மாற்றுதல் போன்ற கருத்துகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

**மலர்வனம் புக்க காதை**

வயந்த மாலைக்கு மாதவி உரைத்த

உயங்குநோய் வருத்தத்து உரைமுன் தோன்றி

மாமலர் நாற்றம் போல்மணி மேகலைக்கு

ஏது நிகழ்ச்சி எதிர்ந்துளது ஆதலின்

தந்தையும் தாயும் தாம்நனி உழந்த

வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்பக்

காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை

மாதர் செங்கண் வரிவனப்பு அழித்துப்

புலம்புநீர் உருட்டிப் பொதியவிழ் நறுமலர்

இலங்குஇதழ் மாலையை இட்டுநீ ராட்ட,

மாதவி மணிமே கலைமுகம் நோக்கித்

தாமரை தண்மதி சேர்ந்தது போலக்

காமர் செங்கையில் கண்ணீர் மாற்றித்

தூநீர் மாலை தூத்தகை இழந்தது

நிகர்மலர் நீயே கொணர்வாய் என்றலும்,

மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்

சுதமதி கேட்டுத் துயரொடும் கூறும்:

குரவர்க்கு உற்ற கொடுந்துயர் கேட்டுத்

தணியாத் துன்பம் தலைத்தலை எய்தும்

மணிமேக கலைதன் மதிமுகம் தன்னுள்

அணிதிகழ் நீலத்து ஆய்மலர் ஓட்டிய
கடைமணி உகுநீர் கண்டனன் ஆயின்
படையிட்டு நடுங்கும் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்
ஆங்ஙனம் அன்றியும் அணியிழை கேளாய்
ஈங்குஇந் நகரத்து யான்வருங் காரணம்:

பாரா வாரம் பல்வளம் பழுநிய
காராளர் சண்பையில் கௌசிகன் என்போன்
இருபிறப் பாளன் ஒருமகள் உள்ளேன்
ஒருதனி அஞ்சேன் ஓரா நெஞ்சமோடு
ஆரா மத்திடை அலர்கொய் வேன்தனை

மாருத வேகன்என் பான்ஓர் விஞ்சையன்
திருவிழை மூதூர் தேவர்கோற்கு எடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
எடுத்தனன் என்கொணடு எழுந்தனன் விசும்பில்
படுத்தனன் ஆங்குஅவன் பான்மையேன் ஆயினேன்

ஆங்குஅவன் ஈங்குஎனை அகன்றுகண் மாறி
நீங்கினன் தன்பதி நெட்டிடை ஆயினும்,
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
தனித்துஅலர் கொய்யும் தகைமையள் அல்லள்

பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயில்புறம் போகின்
உலக மன்னவன் உழையோர் ஆங்குஉளர்.

விண்ணவர் கோமான் விழாக்கொள் நல்நாள்
மண்ணவர் விழையார் வானவர் அல்லது
பாடுவண்டு இமிரா பல்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைகள் தூக்கலின்
கைபெய் பாசத்துப் பூதம் காக்கும்என்று
உய்யா னத்திடை உணர்ந்தோர் செல்லார்.

வெங்கதிர் வெம்மையின் விரிசிறை இழந்த
சம்பாதி இருந்த சம்பாதி வனமும்.
தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
கவேரன் ஆங்கு இருந்த கவேர வனமும்
மூப்புடை முதுமைய தாக்குஅணங்கு உடைய
யாப்புடைத் தாக அறிந்தோர் எய்தார்

அருளும் அன்பும் ஆர்உயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பின்
பகவனது ஆணையின் பல்மரம் பூக்கும்
உவவனம் என்பதுஒன்று உண்டு
விளிப்புஅறை போகாது மெய்புறத்து இடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டுஅதன் உள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த

தாமரைப் பீடிகை தான்உண்டு ஆங்குஇடின்

அரும்புஅவிழ் செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்புஇனம் மூசா தொல்யாண்டு கழியினும்
மறந்தேன் அதன்திறம் மாதவி கேளாய்
கடம்பூண்டுஓர் தெய்வம் கருத்திடை வைத்தோர்
ஆங்குஅவர் அடிக்குஇடின் அவர்அடி தான்உறும்
நீங்காது யாங்கணும் நினைப்பில ராய்இடின்
ஈங்குஇதன் காரணம் என்னை என்றியேல்

சிந்தை இன்றியும் செய்வினை உறும்எனும்
வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்
செய்வினை சிந்தை இன்றுஎனின் யாவதும்
எய்தாது என்போர்க்கு ஏது வாகவும்
பயம்கெழு மாமலர் இட்டுக் காட்ட
மயன்பண்டு இழைத்த மரபினது அதுதான்

அவ்வனம் அல்லது அணியிழை நின்மகள்
செவ்வனம் செல்லும் செம்மை தான்இலள்
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
அணியிழை நல்லாய் யானும் போவல்என்று
அணிப்பூங் கொம்பர் அவளொடும் கூடி
மணித்தேர் வீதியில் சுதமதி செல்வுழீஇ,

சிமிலிக் கரண்டையன் நுழைகோல் பிரம்பினன்

தவல்அருஞ் சிறப்பின் அராந்தா ணத்துஉளோன்

நாணமும் உடையும் நன்கனம் நீத்துக்

காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி

உண்ணா நோன்போடு உயவல் யானையின்

மண்ணா மேனியன் வருவோன் தன்னை

வந்தீர் அடிகள்நும் மலர்அடி தொழுதேன்

எந்தம் அடிகள் எம்உரை கேண்மோ

அழுக்குஉடை யாக்கையில் புகுந்த நும்உயிர்

புழுக்கறைப் பட்டோர் போன்றுஉளம் வருந்தாது

இம்மையும் மறுமையும் இறுதிஇல் இன்பமும்

தன்வயின் தரூஉம்என் தலைமகன் உரைத்தது

கொலையும் உண்டோ கொழுமடல் தெங்கின்

விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே

உண்டு தெளிந்துஇவ் யோகத்து உறுபயன்

கண்டால் எம்மையும் கையுதிர்க் கொண்ம்என

உண்ணா நோன்பி தன்னொடும் சூள்உற்று

உண்ம்என இரக்கும்ஓர் களிமகன் பின்னரும்

கணவிரி மாலை கட்டிய திரணையன்

குவிமுகிழ் எருக்கில் கோத்த மாலையன்

சிதவல் துணியொடு சேண்ஓங்கு நெடுஞ்சினைத்

ததர்வீழ்பு ஒடித்துக் கட்டிய உடையினன்

வெண்பலி சாந்தம் மெய்ம்முழுது உறீஇப்

பண்புஇல் கிளவி பலரொடும் உரைத்தாங்கு

அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்

தொழூஉம் எழூஉம் சுழலலும் சுழலும்

ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி

நீடலும் நீடும் நிழலொடு மறலும்

மையல் உற்ற மகன்பின் வருந்திக்

கையறு துன்பம் கண்டுநிற் குநரும்,

சுரியல் தாடி மருள்படு பூங்குழல்

பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை

ஒள்அரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்

கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்

காந்தள்அம் செங்கை ஏந்துஇள வனமுலை

அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்

இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து

வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி

நீணிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய

பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்

சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்

மைஅறு படிவத்து வானவர் முதலா

எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி

வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்,

விழவு ஆற்றுப் படுத்த கழிபெரு வீதியில்
பொன்நாண் கோத்த நன்மணிக் கோவை
ஐயவி அப்பிய நெய்அணி முச்சி
மயிர்ப்புறம் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப
அற்றம் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை உடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூண் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்து
இலங்குதொடி நல்லார் சிலர்நின்று ஏற்றி
ஆலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோஎனக் கண்டுநிற் குநரும்

விராடன் பேர்ஊர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறம் சுற்றி,
அணியமை தோற்றத்து அருந்தவப் படுத்திய
தாயோ கொடியள் தகவுஇலள் ஈங்குஇவள்

மாமலர் கொய்ய மலர்வனம் தான்புகின்
நல்இள அன்னம் நாணாது ஆங்குஉள
வல்லுந கொல்லோ மடந்தை தன் நடை
மாமயில் ஆங்குஉள வந்துமுன் நிற்பன
சாயல்கற் பனகொலோ தையல் தன்னுடன்
பைங்கிளி தாம்உள பாவைதன் கிளவிக்கு
எஞ்சல கொல்லோ இசையுந அல்ல
என்றுஇவை சொல்லி யாவரும் இனைந்துஉக,
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு உறாமல்

குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்துஅலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர் கொய்யப் புகுந்தனள் மணிமே கலைஎன்.

**மலர் வனம்புக்க காதை விளக்கம்**

மாதவி தொடுத்த மாலைகளை மணிமேகலை எடுத்துக் குடலில் வைக்கும்போதுதான்

வசந்தமாலை கிளம்பிச் சென்றாள். தன்னைப் பற்றியும், பொய்யாகக் களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, மதுரையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது தந்தையைப் பற்றியும், தனது இன்னொரு தாயான கண்ணகியின் சீற்றத்தையும் பற்றியும் தன் அன்னை மாதவி கூறிய அனைத்தையும் மணிமேகலைக் கேட்டுக்கொண்டிருந்தாள். இன்னும் மலராத தனது வாழ்வு குறித்த அச்சம் அவள் நெஞ்சினில் மூண்டது. கணிகையர் இல்லங்களில் பிறந்த பெண்களுக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒருவழி பாட்டி சித்திராபதி கூறுவதுபோல சகல கலைகளையும் கற்றுக்கொண்டு பேர்பெற்ற கணிகையாக ஆடம்பர வாழ்வு வாழலாம், அல்லது அம்மாவைப் போல இளம் வயதில் துறவு மேற்கொண்டு புத்தப் பிக்குணியாக சமய விற்பன்னர்களுடன் ஊர் ஊராக மதம் பரப்பச் செல்லலாம். இரண்டுமே ஒரு பெண்ணிற்கு இரண்டு உச்சங்களைத் தொடும் வாழ்க்கை. இதற்கு இடையில் ஒரு வாழ்க்கை உள்ளது. உரிய பருவத்தில் காதல் மணவாளன் ஒருவனைக் கைப்பிடித்து, வேதியர் வேள்வி வளர்த்து, தீவலம் வந்து, இல்லறம் தொடங்கும் வாழ்க்கையே அது.

தந்தையும் கண்ணகித்தாயும் உயிருடன் இருந்தாலாவது அவர்களை அண்டி வாழலாம். ஆனால் இருவரும் இறந்துபட்ட பின்பு, இவற்றையெல்லாம் கேள்விப்பட்டு தன்மேல் பரிதாபப்பட்டு, ஒருவன் வந்து கடிமணம் புரிவான் என்பதில் மணிமேகலைக்கு நம்பிக்கையில்லை. ஏன் தனக்காக இன்னொருவன் பரிதாபப்பட வேண்டும்? மாதவித்தாய் அப்படிப்பட்ட பெண் அல்லவே! அவளது ஊடலின் காரணமே தன்னக வெளிப்பாடுதானே? பிறகு ஏன் தான் மட்டும் அடுத்தவன் பரிவை வேண்டிக் காத்திருக்க வேண்டும்? இருப்பினும் வாழ்வின் கால ஓட்டத்தின் நீளம் அவளை வெருட்டியது. அவளையறியாமல் கண்களில் ஆறாக நீர் கிளம்பி, கீழே தொடுக்கபட்டிருந்த மாலைகளில் விழுந்தது.

மாதவி நிமிர்ந்து மணிமேகலையின் முகத்தைப் பார்த்தாள்.

“பேதைப் பெண்ணே! எதற்காக கண்ணீர் வடிக்கிறாய்?””

தனது முந்தானையை இழுத்து, மணிமேகலை முகத்தைத் துடைத்துக் கொண்டாள். மாதவி தனது சிவந்த கரங்களால் மணிமேகலையின் கண்களைத் துடைத்து, மையைத் திருத்திவிட்டாள்.

“எத்தனைமுறை சொல்லியிருக்கிறேன், நீ எதற்கும் கலங்கக்கூடாது என்று? பெண்களின் பலவீனம் கண்ணீர் இல்லை, மணிமேகலா! உறுதியும், கற்புமே அவர்களுடைய பலம். நீ ஒரு பலவீனமான கோழையாக இருக்க விரும்புகிறாயா? அல்லது கற்பின் திண்மையுடன் ஒரு சிறந்த பிக்குணியாக இருக்கவிரும்புகிறாயா?”

“நம்மைப்போன்ற பெண்களுக்குக் கற்பின் திண்மை எங்கிருந்து அம்மா வரும்?”

“எனக்கு வரவில்லையா? சான்றாக உன் தாய் உன் கண்முன் தெரியவில்லையா? மனதின் உறுதியை எப்போதும் இழக்கக் கூடாது, மணிமேகலா”!”

“உனக்கென்னம்மா? நீ தந்தையுடன் ஒரு நயமான இல்லற வாழ்வை வாழ்ந்துவிட்டாய். என்னையும், என்போன்ற பருவத்தில் உள்ள கணிகையர்வீதிப் பெண்களையும் எடுத்துக்கொள். எங்களுக்கு வேறுகதி ஏது?””

மணிமேகலையின் வினாவிற்கு விடை கிடைக்காமல் மாதவி சிறிதுநேரம் தடுமாறிப்

போனாள். மனமுவந்து, புத்தசமயத்தை தழுவித் துறவு வாழ்க்கை வாழ்வது என்பது வேறு, வேறுகதி இல்லையென்ற நிலைக்குத் தள்ளப்பட்டு துறவு வாழ்வை மேற்கொள்வது என்பது வேறல்லவா? ஆசையே மீண்டும் மீண்டும் பிறவிகளைக் கொடுப்பதாக அல்லவா அந்தப் போதிதரும புத்தர் பெருந்தகை சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்! ஆசைகளை மென்மேலும் வளர்த்துச் செல்லும் இல்லற வாழ்க்கை வேண்டாம் என்று தன் மகளைத் தான் பலவந்தப்படுத்த முடியாது. ஆனால் இப்போது இவள் வாழ்க்கையை நேர்படுத்தாவிடில் தனது காலத்திற்குப் பின்பு மீகாமன் இல்லாத கப்பலைப் போல மணிமேகலை தடுமாறக் கூடாது.

'அதனால்தான் கண்ணே உன்னைத் துறவியாக மாற்றச் சம்மதித்தேன்,' என்று உள்ளுக்குள் புழுங்கினாள் மாதவி.

வாழ்க்கை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருவேறு கூறாக ஏன் அமைந்துவிட்டது? இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்துச் சென்றது யார்?

"சரி அதைப்பற்றிப் பிறகு பேசுவோம். உன் கண்ணீர்த் துளிகள் பட்டு, இந்தப் பூமாலைகள் புனிதம் இழந்துவிட்டன பார், மணிமேகலா! மீண்டும் மலர்வனம் சென்று, புதிய மலர்களைப் பறித்துக்கொண்டு வா. புதிய மாலைகள்தான் தொடுக்கவேண்டும்!" என்றாள் மாதவி.

மலர்வனத்திற்கு மணிமேகலையை மாதவி தனியாக அனுப்பப்போகிறாள் என்றதும், அருகிலிருந்த சுதமதி பதறிவிட்டாள்.

"மலர்வனத்திற்கு மணிமேகலையைத் தனியாக அனுப்புவதா? வேண்டாம். சொன்னால் கேளுங்கள். இவள் அடிக்கடி தன்னுடைய தந்தைக்கும், கண்ணகி தாய்க்கும் நேர்ந்த அவலத்தை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடிப்பாள். நீல மலர்களைத் தாங்கிய தண்டினைப்போல அவள் கண்ணீர்க்கோடுகள் தெரியும். இது போதாதா, காமவேள் தனது மலர்க்கணைகளை கீழே போட்டுவிட்டு ஓட? அவன் கதியே இதுவென்றால் உறுதியில்லாத ஆடவர்கள் இவளைக் காண நேர்ந்தால் என்ன ஆவது? இவளைத் திரும்பிப் பார்க்காதவனைச் சோதனை செய்தால் அவன் நிச்சயம் ஒரு பேடியாகத்தான் இருப்பான். வேண்டாமம்மா, இவளைத் தனியாக அனுப்பவேண்டாம்."

"என்ன பேசுகிறாய், சுதமதி? இளம்வயதுப் பெண்கள் ஆடவர் கண்களிலேயே படக்கூடாது என்றால் பிறகு பெண்கள் வீட்டிற்குள் முடங்கிக்கிடக்கத்தான் வேண்டுமா? மேலும் இவள் துறவிக்கோலம் பூண்டவள்தானே?" என்றாள் மாதவி, சீற்றத்துடன்.

"என் கதை அறிந்துமா மாதவி நீங்கள் இவ்வாறு கூறுவது?"

"அப்படி என்ன கதை சுதமதி, உன்னுடையது?" என்றாள் மணிமேகலை ஆவலுடன். இப்போது அவள் கொஞ்சம் சிந்தை தெளிந்திருந்தாள்.

"இருபிறப்பாளர் என்று அறியப்படும் பார்ப்பணகுலத்தில் கௌசிகன் என்ற பார்ப்பணருக்கு மகளாக, காராளர் ஆட்சிசெய்யும் சண்பை என்ற ஊரில் பிறந்து, இளம்பருவம் எய்தியிருந்தேன். இதேபோன்று அப்போதும் புகார் நகரில் இந்திரவிழா எடுக்கப்பட்டு, ஊரெல்லாம் கோலாகலமாக இருந்தது. பல்வேறு தேசத்திலிருந்து மக்களும், தேவர்களும், வானவர்களும் கூடியிருந்தனர். இந்தப் பெருவிழாவைக் காண விஞ்சையன் ஒருவன் வந்தான்.

மாருதிவேகன் என்பது அவனுடைய பெயர். மலர்வனத்தில் மலர்கொய்யும் என் அழகில் மயங்கி, என்னைத் தன்னுடன் கொண்டு சென்று இன்பம் துய்க்க விரும்பினான். நானும் உடன்பட்டேன். கண் இமைக்கும் நொடியில் எல்லாம் முடிந்துவிட்டது. காரியம் முடிந்ததும் என்னை விட்டுவிட்டு அவன் பறந்துபோய்விட்டான்."

"அடப்பாவி!" என்றாள் மாதவி.

"இதற்குதான் மணிமேகலையைத் தனியாகச் செல்லவேண்டாம் என்றேன். மேலும் மலர் வனத்திற்குத் தனியாகச் செல்லுதல் முறையன்று."

"ஏன்?" என்றாள் மணிமேகலை.

"இலவந்திகையைச் சுற்றியுள்ள இடத்தில்தான் மலர்வனம் உள்ளது. இலவந்திகையின் பெரிய மதிலை அடுத்து, பெரிய மரக் கம்புகளை நட்டு, குளிர்ந்த மலர்களைப் பரப்பிப் பந்தல்கள் போட்டிருப்பார்கள். இராஜாங்கத்தின் பாதி வேலையாட்கள் அங்குதான் இருப்பார்கள். இருபத்தெட்டு நாளும் இந்திரனுக்குரிய விழா என்பதால் விழா எடுக்கப்படும் இடத்திற்குத் தேவர்களை அன்றி மக்கள் செல்லமாட்டார்கள். மேலும் அங்கு தேவர்கள் கொண்டுவந்த வாடாத மலர்களால் தொடுக்கப்பட்ட மலர்மாலைகள் மிகுதியாக அடுக்கி வைக்கப்பட்டிற்கும். காவலுக்குப் பூதம் ஒன்றும் இருக்கும். அந்த பூதத்திடம் சிக்கிக்கொண்டால் நமது கதி அதோகதிதான். இதை அறிந்தவர்கள் அந்த மலர்வனம் செல்லமாட்டார்கள்."

"அந்த மலர்வனம் வேண்டாம். வேறு வனங்களே இல்லையா, இந்தப் புகார் நகரில்?" என்றாள் மாதவி.

"ஓ! இருக்கிறதே, மாதவியம்மா! தனது சிறகை விரித்துப் பரப்பியபடி கதிரவன் அருகில் சென்றதால், தனது சிறகுகளை இழந்த சம்பாதி என்ற கழுகு வாழ்ந்த சம்பாதிவனம் உள்ளது. காவிரியின் தந்தையான கவேரன் என்ற மன்னன் இருந்த கவேரவனம் உள்ளது. ஆனால், அத்தகைய வனங்களில் வயதுமுதிர்ந்த, காலத்திற்கு மிகவும் முற்பட்ட பெண்தெய்வங்கள் உள்ளதால் மக்கள் அந்த வனங்களுக்குச் செல்ல அஞ்சுவர்."

"என்ன இது, சுதமதி? ஒவ்வொரு மலர்வனத்தைப்பற்றியும் ஒவ்வொரு கதை கூறுகிறாய்? அப்படியென்றால் புத்ததேவனுக்கு மாலைகள்தொடுக்கத் தேவையான மலர்களைப்பறிக்க ஒரு மலர்வனம்கூடவா இந்த நகரில் இல்லை?"

"ஒ இருக்கிறதெ! அருளும், அன்பும்கொண்டு இந்த உலகத்து உயிர்களை உய்விக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தையுடைய பகவான் புத்தரின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து, பல குளிர்ந்த வண்ண மலர்கள் பூக்கும் மலர்வனம் ஒன்று உள்ளது. அதன் பெயர் உவவனம்."

அந்த உவவனம் குறித்து அறிய மற்ற இருவரும் ஆவலானார்கள்.

சுதமதி மாதவியைப் பார்த்து உவவனத்தின் சிறப்புகளை மேலும் விவரிக்கத் தொடங்கினாள்.

"மரங்களும், பூஞ்செடிகளும், மலர்க்கொடிகளும் கதிரவனின் வெப்பம் பூமியில் தெரியாமல் அடர்ந்திருக்கும் வனம் அது; அந்த உவவனத்தில் ஒரு பளிங்கு மண்டபம் உள்ளது. அதன் அமைப்பு மிக விநோதமானது. உள்ளே இருப்பவர்கள் யாரென்று வெளியிலிருந்து பார்த்தால் தெரியும். ஆனால் உள்ளே இருப்பவர்கள் பேசுவதைக் கேட்க இயலாது. அப்படி ஓர் அமைப்பினைக்கொண்ட மதில்களால் எழுப்பப்பட்ட பளிங்குமண்டபம் அது.""

“ஆச்சரியமாக இருக்கிறதே!“ என்றாள் மாதவி.

“பிரகாசமாக வெளிச்சம் தரக்கூடிய தூய மாணிக்கக் கற்கள் மூலம் அந்த மண்டபம் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். அந்த மண்டபத்தினுள் ஒரு தாமரை பீடிகை உள்ளது. அதன் பீடத்தில் அரும்புகளை வைத்தால் எத்தனை நாட்கள் ஆயினும் அவை மலராமல் அரும்புகளாகவே இருக்கும்.”

“உண்மையாகவா?” என்ற மணிமேகலையின் குரலில் பேதைமை இருந்தது.

“அந்த அரும்புகளை வண்டுகள் கூட மொய்க்காது. அட! இன்னொரு சேதி சொல்ல மறந்துவிட்டேன். நாம் எந்தத் தெய்வத்திற்கு மலர்களைக் காணிக்கையாக இடவேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்தத் தெய்வத்தை மனதில் தொழுதபடி இந்தப் பத்ம பீடத்தில் மலர்களை வைத்தால் அந்த மலர்கள் நாம் நினைக்கும் தெய்வங்களில் பாதங்களைச் சென்றடையும்.”

“இது எப்படி நடைமுறைப்படும்?” என்றாள் மாதவி.

“சொல்கிறேன். ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்ற நினைப்பு எதுவுமில்லாமல் செய்யப்படும் செயலின் விளைவு ஒருவனை நிச்சயமாக வந்துசேரும் என்று நம்புவர்கள் வருத்தப்படும்படியும், நினைப்பின்றிச் செய்யும் செயல்களின் விளைவு ஒருவனை வந்துசேராது என்று எண்ணுபவர்களுக்கு ஏதுவாக இருக்கும் வகையிலும், முன்பு மயன் எனப்படும் தச்சன் அமைத்த தாமரைப் பீடம் அது. எனவே, இதுபோன்ற அதிசயங்கள் நடைமுறைப்படுவதில் வியப்பேதும் இல்லை”.”

“ஓ! இவ்வளவு சேதிகள் அந்த உவவனத்தில் இருக்கிறதா? தெரியாமல் போயிற்றே?” என்றாள் மாதவி.

“இதனால்தான் அவளைத் தனியாக அனுப்பவேண்டாம் என்றேன். வா, மணிமேகலா! நானும் உன்னுடன் உவவனம் வருகிறேன்,“ என்று சுதமதியும் மணிமேகலையுடன் கிளம்பினாள்.

இருவரும் தேரோடும் பெரியவீதியில் நடந்து உவவனம் நோக்கிச் சென்றனர்.

அப்போது அங்கு ஒரு சமணத்துறவி தோன்றினார். அவர் தோளில் ஒரு உறி தொங்கிக்கொண்டிருந்தது. அந்த உறியில் நீர் நிரம்பிய குண்டிகை(கமண்டலம்) இருந்தது. கையில் நன்கு திரண்ட நீண்ட பிரம்பு ஒன்று இருந்தது. அரந்தாணம் என்ற அருகன் கோவிலிலிருக்கும் துறவியாவார் அவர். சமணத் துறவி என்பதால் அவர்கள் வழக்கப்படி ஆடையையும் நாணத்தையும் (தான் என்ற அகந்தையின்மையால் இங்கே ‘நான்’ இல்லை) துறந்திருந்தார். கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய கிருமிகள் தான் நடந்துசெல்வதால் அழிந்துவிடுமோ என்று அவற்றிற்காக வருத்தப்பட்டு ஏங்கிச் சென்று கொண்டிருந்தார். உண்ணா நோன்பிருப்பதால் மெலிந்த தேகத்தை உடையவராகவும், நீராடாத மேனியை உடையவராகவும் விளங்கினார்.

அங்ஙனம் வந்துகொண்டிருந்த சமணத்துறவியை ஒரு கள்ளுண்ட மனிதன் எதிர்கொண்டான். அவன் குரலில் ஒருவித எள்ளல் துலங்க, “அடிகளே, வாருங்கள். என்னுடைய வணக்கங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். ‘இந்த உயிர் உடலில் புகுந்து எத்தனை அவதிப்படுகிறது? அப்படிப்பட்ட உயிர் புழுக்கமான அறையில் அடைபட்டு

அவதிப்படாதவண்ணம் இப்பிறவியிலும், மறுபிறவியிலும் இன்பத்தைதையும், அதற்கும் மேலாக பிறப்பற்ற முக்தி நிலையினையும் தரவல்லது இந்தக் கலத்தில் இருக்கும் கள்,' என்று என்னுடைய தலைவன் ஒருவன் கூறினான். தென்னம் பாளையின் மடலைக் கீறியதால் சொட்டும் இந்தத் தேறலைப் பருகுவதால் கொலை பாதகம் வந்துசேருமா, என்ன? நீங்கள் சொல்லுங்கள், அறிய தவமுடைய சான்றோரே! இந்தக் கலயத்திலுள்ள கள்ளைப் பருகி, உண்மையைக் கண்டு, எனக்கு உரையுங்கள். நான் சொல்வது தவறென்றால் என்னையும், கள்ளையும் புறந்தள்ளுங்கள். இந்தாருங்கள், குடியுங்கள்.!" என்று அந்தக் குடிகாரன் சமணத் துறவியை வழிமறித்தான்.

அவன் பின்னால் பலர் நின்று அவனையும் துறவியையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

மணிமேகலையும் சுதமதியும் இருவரையும் கடந்து சென்றனர்.

இன்னொரு வேடிக்கையான மனிதன் எதிர்பட்டான். அரளிப்பூமாலை ஒன்றை அணிந்திருந்தான். அதற்கு மேலே எருக்கம்பூமாலை ஒன்றையும் அணிந்து கொண்டிருந்தான். துண்டுத் துணிகளை மரக் குச்சிகளால் சேர்த்துக் கட்டபட்டிருந்த மேலாடை அணிந்திருந்தான். மேனி முழுவதும் திருநீறும் சந்தனமும் பூசிக்கொண்டிருந்தான். போவோர்-வருவோரிடம் வீணான வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தான். ஒருசமயம் அழுதான்; தொழுதான்; அரற்றினான்; கூவினான். மற்றொரு சமயம் ஓடினான்; பிறகு ஒரு ஓரமாக நின்றுகொண்டே இருந்தான்; தனது நிழலைப் பார்த்துவிட்டு அதனுடன் சண்டைக்குச் சென்றான். அவனுடைய இந்தப் பித்துக் குளித்தனங்களை கண்டு மனம்வருந்தி அவன் பின்னர் பலர் கூடியிருந்தனர்.

மணிமேகலையும், சுதமதியும் அவர்களையும் கடந்து சென்றனர்.

அவனுக்குச் சுருண்ட தாடி இருந்தது. கருமையான கூந்தல் இருந்தது. தனது இதழ்களில் சாயம் பூசிக்கொண்டு பவளம்போன்ற சிவந்த இதழ்களில் வெண்ணிறப் பற்கள் தெரியும்படியான முறுவல் பூத்து நின்றது. அவன் கண்கள் ஒளி மிகுந்து, இமைகளில் மயிர்க் கால்கள் மிகுந்து தெரியுமாறு ஒப்பனை செய்துகொண்டிருந்தான். வெள்ளைச் சங்கினால் செய்யப்பட்ட தோடுகளைக் காதில் அணிந்திருந்தான். கரியதாய் வளைத்து எழுதப்பட்ட புருவம் பிறைபோன்ற அழகிய நெற்றியில் நன்கு இலங்கியது. விரல்களில் செஞ்சாயம் பூசிக் கொண்டிருந்ததால், அவை காந்தள் மலர்களைப் போலத் தெரிந்தன. மார்பில் செய்திருந்த ஒப்பனை காரணமாக அவன் முலைகள் எடுப்பான தோற்றத்துடன் விளங்கின. அகலமான அல்குலையும், துடியிடையையும் அவன் கொண்டிருந்தான். அத்தகைய தோற்றத்தையுடைய பேடிமகன் ஒருவன் கூத்தாட ஆரம்பித்தான். நீள்விசும்பு அளந்த நெடியோனாகிய திருமாலின் மகனான காமவேள், முன்நாளில் வாணர்கள் தனது மகன் அநிருத்தனை சிறைபிடித்துச் சென்றபோது, அவனை மீட்கும் பொருட்டு, தன்னை ஒரு பேடிபோல வேடமிட்டு ஆடிய கூத்தினை அந்தப்பேடி ஆடிக்காட்டினான். அந்த ஆட்டத்தைக் காணப் பலர் கூடிநின்றனர்.

மணிமேகலையும் சுதமதியும் அவர்களையும் கடந்து சென்றனர்.

வீடுகள் எல்லாம் செங்கற்களாலும் சுண்ணாம்பினாலும் எழுப்பபட்டிருந்தன. மதில்கள் உயர்ந்து மாடங்கள் ஓங்கிய மாளிகைகள் மிகுந்து காணப்பட்டன. ஒவ்வொரு மாளிகைச்

சுவர்களிலும் சுண்ணாம்பு, வண்ணப்பொடிகள் கொண்டு வானவர், விலங்குகள், பறவைகளையும், இயற்கைக் காட்சிகளையும் திறமைமிக்க ஓவியர்களைக் கொண்டு வண்ணச் சித்திரங்களாகத் தீட்டியிருந்தனர். அத்தகைய கண்கவர் ஓவியங்களை வாய்பிளந்து ஒரு கூட்டம் பார்த்து நின்றுகொண்டிருந்தது.

“அங்கே பார், மணிமேகலா!“ என்று சுதமதி ஆச்சரியத்துடன் கூவினாள்.

சுதமதி காட்டிய இடத்தில் ஒரு பாலகன் நின்றுகொண்டிருந்தான்.

அந்தக் குமரன், தங்கத்தில் செய்த மணிக்கோவை ஒன்றை அணிந்திருந்தான். அவனது தாய் அவன் தலைமுடியில் வெண்கடுகை அரைத்துப் பூசியிருந்தாள். அந்த முடியைத் துக்கிக்கட்டி, ஒரு சிண்டு போட்டிருந்தாள். அந்தச் சிண்டில், கொக்கியால் கோர்க்கப்பட்ட மூன்று சரங்களையுடைய ஆரம் ஒன்று ஆடிக்கொண்டிருந்தது. பிறைச் சந்திரனைப் போன்று ஒரு சந்திரகலை அவன் உச்சிமுடியில் தொங்கிக்கொண்டிருந்தது. சிவந்த வாயினால் அது அர்த்தம் புரியாமல் மழலைச் சொற்களில் பேசியவண்ணம் இருந்தது. அந்தக் குமரன் வாயிலிருந்து ஒழுகிய ஜொள்ளு நீரானது அவன் கழுத்தில் அணிந்திருந்த ஐம்படைத் தாலியை நனைத்துக்கொண்டிருந்தது. எதை மறைக்கவேண்டுமோ அதை மறைக்காமல் சுற்றப்பட்ட ஆடை மணிக்கோவைகளுடன் அசைந்தாடிக்கொண்டிருந்தன. பாலகன்தானே? உடை ஒழுங்காக அணிந்தாலும் அவசரமாக சுற்றிக்கொண்டு வந்தாலும் அழகாகத் தோன்றுவான் என்ற தாய்மார்களின் இறுமாப்பினால் அவ்வாறு தோன்றினான் போலும்! அவனுடைய தாயானவள் அந்தப் பாலகனை அள்ளி எடுத்து, ஒரு விளையாட்டுப் பொன்தேரின் உச்சியிலிருந்த பொம்மை யானையின் பிடரியில் அமர்த்தினாள். உடனே கூடிய நான்கைந்து பெண்கள், “ஆலின் கீழ் அமர்ந்துள்ள பரமசிவனின் மகனான பாலமுருகனுக்கு விழா எடுக்கப்போகிறோம்! அனைவரும் வாருங்கள்”!” என்று உற்சாகக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தார்கள்.

இருவரும் உவவனம் அருகில் வந்துவிட்டனர். திடுமென்று ஒரு கூட்டம் அவர்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டது. முன்பொரு காலத்தில் விராடதேசத்தில் பேடி உருவில் இருந்த அர்ஜுனனை அறிந்துகொண்ட மக்கள் அவனைச் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்ததுபோல நின்றது.

“நன்றாக இருகின்றதம்மா, மாதவி செய்த காரியம்!“ என்றாள் ஒருத்தி.

“சும்மா தகதகன்னு மின்னுகிறாள். இவளுக்கு தவக்கோலம்போட்டுப் பார்க்கிறாளே இவளுடைய தாய்? நன்றாகவா இருக்கிறது?” என்றாள் மற்றொருத்தி.

“இந்த மலர்வனதிற்குள் மணிமேகலை நடந்து சென்றால் நீர்ப் பொய்கையின் அருகில் விளையாடும் அன்னங்கள் இவளது நடையழகில் மயங்கி தம் நடை தளர்ந்து போய்விடாதா?” என்றாள் மற்றொருத்தி.

“அங்கே தோகை விரித்தாடும் மயில்கள், இவள் எழிலைக் கண்டு இவளிடம் அழகுக்குறிப்பு கேட்பதற்கு வந்துநிற்கும்”!” என்று ஒருத்தி கூறியதும் மற்ற பெண்கள் கொல்லென்று சிரித்தனர்.

“பைங்கிளிகள் மழலைமொழி பேச, இவளிடம் பாடம்கற்கப் போட்டி போடும்.“

“சும்மா சொன்னதையே சொல்லாதீர்கள். இவள் அழகுகிற்கு உவமை கூறவே முடியாது!“ என்று ஒருத்தி முற்றுப்புள்ளி வைத்தாள்.

நெஞ்சத்தில் ஆறாத வடுக்களை ஏற்படுத்திய புண்படும் பேச்சினைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் மணிமேகலை சுதமதியுடன் உவவனதிற்குள் நுழைந்தாள்.

மரங்கள் அடர்ந்த வனமாகத் திகழ்ந்தது, அந்த உவவனம்.

குரா, வெண்கடம்பு, குருத்து, கொன்றை, மஞ்சாடி, வகுளம், செம்மையான அடிமரம் கொண்ட வெட்சி, நாரத்தை, நாகம், புன்னை, பிடவக் கொடி, செம்முல்லைச் செடி, வளைந்த முல்லை உடைய தாழை, வெட்பாலை, செருந்தி, மூங்கில், அசோகு, வேங்கை, பெரிய செண்பகம், செந்தழல்போல மலர்கள் நிறைந்த முருக்கைமரம் என்ற இத்தனை மரங்களும் மலர்களைச் சொரிந்து, அந்த வனமானது ஒரு தேர்ந்த ஓவியனின் நேர்த்தியான சித்திரம் போல விளங்கியது.

அந்தப் பேரியற்கை மணிமேகலையை இருகரம் கூப்பித் தொழச் செய்தது. மணிமேகலை அந்த வனத்தைத் தொழுதுவிட்டு சுதமதியுடன் மலர் கொய்ய உள்ளே நுழைந்தாள்.

## 1.4. கம்பராமாயணம்

**கம்பர்**

12ஆம் நூற்றாண்டில் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் திருவழுந்தூர் என்றழைக்கப்படும் தோழுந்தார் என்னும் ஊரில் பிறந்தார். கம்பருடைய தந்தை ஆதித்தன். தமிழ் கவிஞரும், நூலாசிரியரும் ஆவார். இவர் இயற்றிய கம்பராமாயணம் நூலானது புகழ் பெற்றதாகும். கம்பராமாயணத்தினை படித்த பலரும் கம்பரின் கவித்திறனைப் பாராட்டியுள்ளார்கள். கம்பருக்கு "கல்வியிற் பெரியோன் கம்பன்", "கவிச்சக்ரவர்த்தி" போன்ற பட்டங்களை சூட்டியுள்ளனர். கம்பரின் கவித்திறனால், "கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவி பாடும்" என்ற முதுமொழி தமிழில் உள்ளது.

**கம்பராமாயணம்**

இந்நூல் கம்பரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும். இது வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றிய இராமாயணத்தினைத் தழுவி எழுதப்பட்ட நூல் ஆகும். இது ஒரு வழி நூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் தன் புலமையை வெளிக்காட்ட தமிழ் மொழியில் இயற்றியுள்ளார். இராமாவதாரம் என்ற பெயரில் கம்பரால் அழைக்கப்பட்ட இந்நூல் பிற்காலத்தில் கம்பர் இயற்றிய இராமாயணம் என்பதால், இது கம்பராமாயணம் என்று அழைக்கப்படுகிறது.

கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களையும், 113 படலங்களையும் உடையது. இதில் 10569 பாடல்கள் உள்ளன. காண்டம் என்பது

பெரும்பிரிவினையும் படலம் என்பது அதன் உட்பிரிவினையும் குறிக்கும். ஏழாம் காண்டமாகிய "உத்திர காண்டம்" என்னும் பகுதியை கம்பரின் சம காலத்தவராகிய "ஒட்டக்கூத்தர்" இயற்றினார் என்பர். தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பரின் காலத்தில் (பன்னிரண்டாம் நூற்றாண்டு) உச்சநிலையினை அடைந்தது என்பர். இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் "தமிழுக்குக் கதி" (கம்பராமாயணம் திருக்குறள்) என்பர்.

கம்பரின் இராமாயணத்தைக் கம்பநாடகம் எனவும் கம்பச்சித்திரம் எனவும் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் அழைப்பதுண்டு. "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்!" என்றும் பாரதியார் தமிழின் உயர் வினையும் இனிமையினையும் பாராட்டினார். மாக்ஸ்முல்லர் என்னும் மொழி நூலறிஞர். 'தமிழே மிகவும் பண்பட்ட மொழி' என்றும், 'தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி' என்றும் பாராட்டியிருக்கிறார்.

**குகப்படலம்**

வனம் புகுந்த இராமன் குகனைத் தோழமை கொண்ட செய்தியை உணர்த்தும் பகுதியை விவரிப்பதே குகப்படலம் ஆகும்.

குகன் கையுறை ஏந்தி இராமனைக் காண வருதலும், இலக்குவன் மூலம் இராமனது அழைப்புப் பெற்று அவனைக் காணுதலும், கையுறைப் பொருளைத் தருதலும், தேனும் மீனுமாகிய அவற்றை அன்பினால் இராமன் ஏற்றுக்கோடலும், மறுநாள் நாவாயுடன் வருக என்ற இராமன் வார்த்தையை அவனது தனிமைத் துன்பம் நோக்கிக் கசிந்த மனத்தனாய் மறுத்துக் குகன் அங்கேயே இருத்தலும், அன்றிரவெல்லாம் கண்விழித்து நின்ற குகன் காலைக் கடன் முடித்த இராமன் ஆனையின் வண்ணம் நாவாய் கொண்டு வராது இராமனைத் தன் சிருங்கிபேர நகரிலேயே தங்க வேண்டுதலும், இராமன் மீண்டும் வரும்போது குகனிடத்திற்கு வருவதாகக் கூற, அதனை ஏற்று, குகன் நாவாய்க் கொணர, மூவரும் ஏறிக்கங்கைக் கரையைக் கடத்தலும், சித்திரகூடத்திற்கு வழி வினாவிய இராமனுக்குத் தன்னையும் உடன் கொண்டு செல்லக் குகன் வேண்ட, இராமன் குகனை அவன் குடிகளுடன் இருக்கப் பணிக்க, குகன் விடைபெற, மூவரும் வனத்துள் செல்லுதலும் ஆகிய செய்திகள் இதனுள் கூறப் பெறுகின்றன.

**1989. சித்திர கூடத்திற்குச் செல்லும் வழியைக் குகனிடம் இராமன் வினாவல்**

அத் திசை உற்று, ஐயன்,
அன்பனை முகம் நோக்கி,
‘ சித்திர கூடத்தின்
செல் நெறி பகர் என்ன,
பத்தியின் உயிர் ஈயும்

பரிவினன் அடி தாழா,

'உத்தம! அடி நாயேன்,

ஓதுவது உளது' என்றான்.

கங்கையின் மறு கரையை அடைந்த இராமன் தன்னிடம் அன்பு கொண்ட குகனை நோக்கி, "சித்திரக் கூடத்துக்குச் செல்லும் வழியைச் சொல்லுக" என்று கேட்டான். குகன் இராமனின் திருவடிகளை வணங்கி, "உத்தமனே! நான் உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்று உள்ளது" என்றான்.

**ஐயன் -** இராமன்; **அத்திசை உற்று -** கங்கையின் அக்கரையை அடைந்து**, அன்பனை முகம் நோக்கி -** குகனைப் பார்த்து; **'சித்திர கூடத்தின் செல் நெறி பகர்' என்ன -** சித்திரகூடத்திற்குச் செல்லும் வழியைக் கூறுக என்று கேட்க; **(குகனும்) பத்தியின் உயிர் ஈயும் பரிவினன் -** இராம பக்தியால் தன்னுயிரையும் இராமனுக்கு ஈந்துவிடும் அன்புடையனாகி: **அடி தாழா** இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி: **'உத்தக! அடி நாயேன் ஓதுவது உளது' என்றான் -** எல் லோரிலும் மேம்பட்டவனே! நாய்போல் கடைப்பட்ட அடிமையாகிய யான் சொல்லுவது உளது' என்று சொன்னான்**.**

1990. தானும் உடன்வர அனுமதிக்க இராமனைக் குகன் வேண்டுதல்

'நெறி, இடு நெறி வல்லேன்;

நேடினேன், வழுவாமல்,

நறியன கனி காயும்,

நறவு, இவை தர வல்லேன்;

உறைவிடம் அமைவிப்பேன்;

ஒரு நொடி வரை உம்மைப்

பிறிகிலேன், உடன் ஏகப்

பெறுகுவென் எனில் நாயேன்;

"நான் உங்களுடன் வரும் பேறு பெற்றால், நேர் வழியையும், அதில் குறுக்கிடும் பல கிளை வழிகளையும், அறியும் வல்லமை உடைய நான் தக்கபடி வழிகாட்டுவேன். பழுது நேராமல் நல்லனவாகிய காய்களையும், கனிகளையும் தேனையும் தேடிக் கொண்டு வந்து கொடுப்பேன். ஆங்காங்கே தங்குவதற்குத் தகுந்த குடில் அமைத்துக் கொடுப்பேன். ஒரு நொடிப் பொழுதும் உம்மைப் பிரிய மாட்டேன்" என்று குகன் கூறினான்.

1991.

'தீயன வகை யாவும்

திசை திசை செல நூறி

தூயன உறை கானம்

துருவினென் வர வல்லேன்;

மேயின பொருள் நாடித்

தருகுவென்; வினை முற்றும்

எயின செய வல்லேன்;

இருளினும் நெறி செல்வேன்;

“தீய விலங்குகளின் வகைகளை, நீங்கள் தங்கும் இடத்தைச் சூழ்ந்த எல்லாத் திசைகளிலும் நெருங்க விடாமல் சென்று அவற்றை அழித்து, தூயவனாகிய மான் மயில் போன்றவை வாழும் காட்டிடத்தை ஆராய்ந்து கண்டுபிடித்துக் காட்டும் வல்லமை பெற்றுள்ளேன். நீங்கள் விரும்பிய பொருளைத் தேடிக் காண்டு வந்து கொடுப்பேன். நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவேன். இரவிலும் வழி அறிந்து நடப்பேன்” என்று குகன் கூறினான்.

1992.

‘கல்லுவென் மலை; மேலும்

கறவலையின் முதல் யாவும்;

செல்லுவென் நெறி தூரம்;

செறி புனல் தர வல்லேன்;

வில்இனம் உளென்; ஒன்றும்

வெருவலென்; இருபோதும் -

மல்லினும் உயர் தோளாய்! -

மலர் அடி பிரியேனால்;

மற்போரிலும் சிறப்புப் பெற்ற தோள்களை உடையவனே! செல்லும் இடம் மலைப் பகுதியானாலும் அங்கே கவலைக் கிழங்கு முதலியவற்றைத் தோண்டி எடுத்துத் தருவேன். வெகு தொலைவில் உள்ள வழியிலும் சென்று அங்குள்ள நீரைக் கொண்டு வந்து கொடுப்பேன். பலவகையான வில்லைப் பெற்றுள்ளேன். எதற்கும் அஞ்ச மாட்டேன். உங்களுடைய மலர் போன்ற திருவடியை ஒரு போதும் பிரிய மாட்டேன்” என்று குகன் கூறினான்.

1993.

திருஉளம்எனின், மற்று என்

சேனையும் உடனே கொண்டு,

ஒருவலென் ஒருபோதும்

உறைகுவென்; உளர் ஆனார்

மருவலர்எனின், முன்னே

மாள்குவென்; வசை இல்லேன்;

பொரு அரு மணி மார்பா!

போதுவென், உடன்' என்றான்.

"ஒப்பற்ற மார்பை உடையவனே! தாங்கள் சம்மதித்தால் எனது படையை உடன் அழைத்துக் கொண்டு ஒரு பொழுதும் உங்களைப் பிரியாது உங்களுடன் இருப்பேன். என்னால் வெல்ல முடியாத பகைவர்கள் வந்தாலும் உங்களுக்குத் தீங்கு நேரும் முன் நான் இறந்து போவேன். எந்தப் பழியும் பெறாதவனாகிய நான் உம்மோடு வருவேன்" என்று குகன் கூறினான்.

1994. இராமன் குகனை அவன் இனத்தாருடன் இருக்கக் கட்டளையிடல்

அன்னவன் உரை கேளா,

அமலனும் உரைநேர்வான்;

'என் உயிர் அனையாய் நீ'

இளவல் உன் இளையான்; இந்

நன்னுதலவள் நின் கேள்;

நளிர் கடல் நிலம் எல்லாம்

உன்னுடையது; நான் உன் தொழில்

உரிமையின் உள்ளேன்.'

குகன் கூறிவற்றைக் கேட்ட இராமன் "நீ எனது உயிர் போன்றவன். என் தம்பி இலக்குமணன் உனக்குத் தம்பி. அழகிய நெற்றியைப் பெற்ற இச்சீதை உனக்கு உறவினள். குளிர்ந்த கடலால் சூழப்பட்ட இந்நாடு முழுவதும் உன்னுடையது" என்றான்.

1995.

'துன்பு உளதுஎனின் அன்றோ

சுகம் உளது? அது அன்றிப்

பின்பு உளது; "இடை, மன்னும்

பிரிவு உளது" என, உன்னேல்;

முன்பு உளெம், ஒரு நால்வேம்;

முடிவு உளது என உன்னா

அன்பு உள, இனி, நாம் ஓர்

ஐவர்கள் உளர் ஆனோம்;

"துன்பம் உண்டு என்றால் சுகமும் உண்டு. இப்போது இணைந்திருப்பதற்கும், வனவாசத்திற்குப் பின் இணைந்திருக்கப் போவதற்கும் இடைப்பட்டதான பிரிவு என்னும் துன்பம் உள்ளதே என்று எண்ணாதே. உன்னைக் கண்டு தோழமை கொள்வதற்கு முன்னே உடன் பிறந்தவர்களாக நாங்கள் நால்வர் இருந்தோம். இப்போது எல்லையற்ற அன்புடைய உடன் பிறந்தார்களாகிய நாம் ஐவர் ஆகிவிட்மோம்" என்றான் இராமன்.

1996.

‘படர் உற உளன், உம்பி
கான் உறை பகல் எல்லாம்;
இடர் உறு பகை யா? போய்,
யான் என உரியாய் நீ;
சுடர் உ றுவடி வேலாய்!
சொல் முறை கடவேன் யான்;
வடி திசை வரும் அந் நாள்,
நின்னுழை வருகின்றேன்.

ஒளி வீசும் கூரிய வேலை உடையவனே! நான் காட்டில் வாழும் காலமெல்லாம் உன் தம்பியாகிய இலக்குமணன் என்னுடன் இருக்கப் போகிறான். எனவே துன்புறுத்தும் வகைகள் எவை? ஒன்றும் இல்லை. உன் இருப்பிடத்திற்குச் சென்று நான் இருந்து மக்களைக் காப்பது போலக் காப்பதற்கு உரியவன் நீ! வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்ப வடக்கு நோக்கி வரும் அந்த நாளில் உன்னிடம் உறுதியாக வருவேன். நான் சொன்ன சொல்லைத் தவற மாட்டேன்”

1997.

‘அங்கு உள கிளை காவற்கு
அமைதியின் உளன். உம்பி;
இங்கு உள கிளை காவற்கு
யார் உளர்? உரை செய்யாய்;
உன் கிளை எனது அன்றோ?
உறு துயர் உறல் ஆமோ?
என் கிளை இது கா, என்
ஏவலின் இனிது’ என்றான்.

உன் தம்பியாகிய பரதன் அயோத்தியில் உள்ள சுற்றத்தாரைக் காப்பதற்கு ஏற்ற தகுதியோடு இருக்கிறான். நீ என்னுடன் வந்து விட்டால் இங்குள்ள சுற்றத்தாரைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள். நீயே சொல். உன் சுற்றத்தார் என் சுற்றத்தார் அல்லவா? அதனால் அவர்கள் தம்மைக் காப்பாற்றுவார் இல்லாமல் மிகுந்த துன்பத்தை அடைதல் தகுமா? இங்குள்ள என் சுற்றத்தாரை என் கட்டளையை ஏற்று இனிதாகக் காப்பாயாக” என்றான் இராமன்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
   அ. குறுந்தொகை ஆ. திருக்குறள் இ. சிலப்பதிகாரம் ஈ. திருவாசகம்
2. முத்தமிழ்க் காப்பியம் என்றழைக்கப்படும் நூல்
   அ. மணிமேகலை ஆ. சீவக சிந்தாமணி இ. திருக்குறள் ஈ. சிலப்பதிகாரம்
3. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்களுள் ஒன்று

அ. முப்பால் ஆ.  துறவுக் காப்பியம் இ. மணநூல் ஈ. குடிமக்கள் காப்பியம்

4. இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கபடுபவை

அ. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

ஆ. சிலப்பதிகாரமும் நீலகேசியும்

இ. மணிமேகலையும் சீவகசிந்தாமணியும்

ஈ. வளையாபதியும் குண்டலகேசியும்

5. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களை உடையது.

அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து ஈ. ஆறு

6. புகார் காண்டத்திலுள்ள காதைகள்

அ. எட்டு ஆ. பத்து இ.ஏழு ஈ. பதின்மூன்று

7. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்

அ. இளங்கோவடிகள் ஆ. கம்பர் இ. திருவள்ளுவர் ஈ. கபிலர்

8. சிலப்பதிகாரத்திலுள்ள காதைகள் மொத்தம் எத்தனை ?

அ. 118  ஆ. 30  இ. 113  ஈ. 48

9. சிலப்பதிகாரம் உருவாகிய நூற்றாண்டு

அ. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு   ஆ. கி.பி. எட்டாம் நூற்றாண்டு

இ. கி.மு. முதலாம் நூற்றாண்டு     ஈ.கி.பி. ஏழாம் நூற்றாண்டு

10. சிலப்பதிகாரம் எந்த சமயத்தைச் சார்ந்தது

அ. சைவம் ஆ. வைணவம் இ. சமணம் ஈ. பௌத்தம்

11. சிலப்பதிகாரம் எந்த பா வகையால் பாடப்பெற்றுள்ளது?

அ. வெண்பா ஆ. நிலைமண்டில ஆசிரியப்பா இ. வஞ்சிப்பா இ. கலிப்பா

12. கண்ணகியின் தோழியின் பெயர்

அ. மணிமேகலை ஆ. தேவந்தி இ. சுதமதி ஈ. சித்திராபதி

13. கனாத்திறம் உரைத்த காதையில் குறிப்பிடப்பெறும் பொய்கைகள்

அ. சோமகுண்டம் சூரிய குண்டம்     ஆ. இராமேஸ்வரம்     இ. காசி     ஈ. சூரியகுண்டம் வாயு குண்டம்

14. ”தவம் செய்யாதவர்க்கு தெய்வம் வரங்கொடுப்பதில்லை” என்று இடாகினிப்பேய் யாரிடம் கூறியது ?

அ. தேவந்தி   ஆ. கண்ணகி   இ. மாலதி   ஈ. கோவலன்

15. கண்ணகி தான் கண்ட கனவுக் குறித்து யாரிடம் கூறினாள்?

அ. கோவலன் ஆ. தேவந்தி  இ. சுதமதி  ஈ. மணிமேகலை

16. தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் எது?

அ. சிலப்பதிகாரம் ஆ. மணிமேகலை  இ. வளையாபதி ஈ. நீலகேசி

17. மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் யார் ?

அ. இளங்கோவடிகள் ஆ. திருவள்ளுவர்  இ. சீத்தலைச் சாத்தனார்.

ஈ. திருத்தக்கத்தேவர்

18. மணிமேகலை எத்தனை காதைகளை உடையது ?

அ. பத்து  அ. இருபது இ. ஏழு  ஈ. முப்பது

19. மணிமேகலையின் தோழி

அ. கண்ணகி    ஆ. மாதவி    இ. சுதமதி   ஈ. மாலதி

20. மாதவியின் தாய் யார் ?

அ. மாலதி  ஆ. சுதமதி  இ. சித்திராபதி  ஈ. தேவந்தி

21. மணிமேகலை எந்த சமயத்தைச் சார்ந்தாள்?

அ. வைணவம்  ஆ. பௌத்தம்  இ. ஆசிவகம் ஈ. கிறித்தவ மதம்

22. மலர்வனம் புக்க காதையில் குறிப்பிடப்பெறும் வனங்கள் எத்தனை?

அ. எட்டு   ஆ. இரண்டு   இ. ஐந்து   ஈ. பத்து

23. இந்திரவிழாப் பற்றிக் குறிப்பிடப்பெறும் நூல்களுள் ஒன்று --------

அ. மணிமேகலை   ஆ. சீவகசிந்தாமணி  இ. நன்னூல்  ஈ. நாலடியார்

24. இந்திரவிழா எத்தனை நாட்கள் நடைப்பெற்றதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது?

அ. எட்டு ஆ. இருபத்தைந்து   இ. இருபத்தெட்டு ஈ முப்பது

25. மணிமேகலை எந்த வனத்திற்கு மலர் பறிக்கச் சென்றாள்?

அ. கவேர வனம்  ஆ. இலவந்திகை வனம் இ. உவவனம் ஈ. உய்யா வனம்

26. புத்த தேவனுக்காக மலர் பறிக்க ஏற்ற வனமாக சுதமதி குறிப்பிட்ட வனம் எது ?

அ. இலவந்திகை வனம் அ. சம்பாதி வனம் இ. உவவனம் ஈ. உய்யா வனம்

27. சம்பாதி என்னும் பறவைத் தெய்வம் இருக்கும் வனம் எது?

அ. உய்யா வனம் ஆ. உவவனம் இ. சம்பாதி வனம் ஈ. கவேர வனம்

28. காவிரி ஆறு என்னும் பெண்ணின் தந்தையின் பெயரில் இருக்கும் வனம் எது ?

அ. கவேர வனம் ஆ. உய்யா வனம் இ. சம்பாதி வனம் ஈ. உவவனம்

29. புத்தபீடிகை அமைந்துள்ள வனம்

அ. உய்யா வனம் ஆ. சம்பாதி வனம் இ. உவவனம் ஈ. கவேர வனம்

30. அருச்சுணன் பூண்ட வேடம் எது என்று மணிமேகலைக் குறிப்பிடுகிறது?

அ. ஆண் வேடம் ஆ. பெண் வேடம்  இ. பேடி வேடம் ஈ. குழந்தை வேடம்

31. புகார்நகர வீதியில் தேரில் உலா வந்த குழந்தையின் கழுத்தில் அணியப்பட்ட அணிகலன் எது?

அ. காசு மாலை ஆ. ஆரம்  இ. ஐம்படைத் தாலி ஈ. மாங்காய் மாலை

---

**தொகுத்தறிவோம்**

---

இக்காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய

காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். ஐம்பெருங் காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் என்நிலையில் இருப்பினும் இவ்வாறு வகைப்படுத்த காணலாம்.

1) இதிகாசம்

2) புராணம்

3) பெருங்காப்பியம்

4) சிறுகாப்பியம்

5) மறைந்துபோன தமிழ்க் காப்பியம்

6) மொழிபெயர்ப்புக் காப்பியம்

7) இசுலாமிய சமயக் காப்பியம்

8) கிறித்தவ சமயக் காப்பியம்

9) தற்காலக் காப்பியம் மற்றும் கதைப் பாடல்கள்

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

---

1. இ. சிலப்பதிகாரம்
2. ஈ. சிலப்பதிகாரம்
3. ஈ. குடிமக்கள் காப்பியம்
4. அ. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
5. ஆ. மூன்று
6. இ. ஏழு
7. அ. இளங்கோவடிகள்
8. ஆ. 30
9. அ. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
10. இ. சமணம்
11. ஆ. நிலைமண்டில் ஆசிரியப்பா
12. ஆ. தேவந்தி
13. அ. சோமகுண்டம் சூரிய குண்டம்
14. இ. மாலதி
15. ஆ. தேவந்தி
16. ஆ. மணிமேகலை
17. இ. சீத்தலைச் சாத்தனார்.
18. ஈ. முப்பது
19. இ. சுதமதி

20. இ. சித்திராபதி
21. ஆ. பௌத்தம்
22. இ. ஐந்து
23. அ. மணிமேகலை
24. இ. இருபத்தெட்டு
25. இ. உவவனம்
26. இ. உவவனம்
27. இ. சம்பாதி வனம்
28. அ. கவேர வனம்
29. இ. உவவனம்
30. இ. பேடி வேடம்
31. இ. ஐம்படைத் தாலி

---

பார்வைநூல்கள்

---


1. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன், மு,: சாகித்திய அக்காதெமி, புது தில்லி
2. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.
3. **சிலப்பதிகாரம், ஸ்ரீ சந்திரன் உரை,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு- 2009.
4. **மணிமேகலை மூலமும் உரையும, உத்தமதானபுரம் வே.சாமிநாதையர் எழுதிய அரும்பதவுரையும் (பதிப்பாசிரியர்: உ.வே. சாமிநாதையர்; வெளியீடு: வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை.**
5. **கம்பராமாயணம் மூலமும் உரையும், அ.ச.ஞானசம்பந்தன் உரை, கங்கை நிலையம், தி.நகர், சென்னை-17.**


---

பயிற்சி சிறுவினாக்கள் - விடைகள்

---

1. **சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், மூவேந்தர் காப்பியம், உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

2. **இரட்டைக் காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை

3. **"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரங்கொடார்"- விளக்குக்.**

சிலப்பதிகாரம்- கனாத்திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய் பற்றிய குறிப்பு உள்ளது. இடாகினிப் பேய், மாலதியை நோக்கி, "தவம் செய்யாதவர்களுக்குத் தெய்வம் வரங்

கொடுப்பதில்லை” என்று கூறி மாலதியின் கையிலிருந்த இறந்த குழந்தையின் பிணத்தைக் கையில் வாங்கி விழுங்கி விட்டது.

**4. மணிமேகலைக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?**

மணிமேகலைத் துறவு
துறவுக் காப்பியம்

**5. சிலப்பதிகாரம் குறிப்பிடும் பொய்கையின் பெயர்களைக் குறிப்பிடுக.**

சோம குண்டம் ,
சூரிய குண்டம்

6. **மாலதி எவ்வாறு அழுதாள்?**

மாலதி, ”இடி உண்ட மஞ்ஞைப் போல் ஏங்கி அழுதாள்”

**7. தேவந்தி கண்ணகியை எவ்வாறு வாழ்த்தினாள் ?**

தேவந்தி கண்ணகியை நோக்கி, “கண்ணகி நீயும் பிரிந்த உன் கணவனை மீண்டும் பெறுவாய்!” என்று வாழ்த்தினாள்.

**8. பெண்களின் பலம் எவை என்று மாதவி கூறுகிறாள்?**

மனவலிமை, கற்புத் தன்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி

**9. புகார்நகரிலுள்ள மலர் வனங்கள் யாவை?**

இலவந்திகை வனம, உய்யா வனம் , கவேர வனம், சம்பாதி வனம், உவவனம்.

**10. கம்பராமாயணத்துக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?**

கம்ப நாடகம், கம்ப சித்திரம்

**11. கம்பருக்கு வழங்கும் பட்டங்கள் யாவை?**

கல்வியில் பெரியவன் கம்பன், கவிச்சக்கரவர்த்தி, கம்ப நாடன், விருத்தப்பா பாடுவதில் வல்லவன்.

**12. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?**

கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது.
பால காண்டம், அயோத்தி காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்

**14. குகன் இராமனுக்கு கையுறைப் பொருளாக அளித்தவை யாவை?**

குகன் இராமனுக்குக் கையுறைப் பொருளாக மீனும் தேனும் அளித்தான்.

---

பயிற்சி நெடுவினாக்கள்

---

1. கனாத்திறம் உரைத்தகாதையின் கருத்துகளைச் சுருக்கிவரைக.
2. கண்ணகி கூறிய கனவினையும் தேவந்தி கூறிய விடையையும் தொகுத்துரைக்க.
3. மலர்வனம் புக்ககாதையின் பாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக
4. மணிமேகலை மலர்பறிக்கச் சென்ற நிகழ்வினை விளக்கி எழுதுக.
5. மணிமேகலை குறிப்பிடும் புகார்நகர வீதியின் காட்சிகளை விளக்கி எழுதுக.
6. குகப்படலத்தின் வழி கம்பர் உணர்த்தும் செய்திகளை தொகுத்து எழுதுக
7. இராமனுக்கும் குகனுக்கும் இடையே நடைப்பெற்ற உரையாடலை தொகுத்து எழுதுக.

**பக்தி இலக்கியங்கள்**

**பாட அமைப்பு**

அறிமுகம்
குறிக்கோள்கள்
2.1. பக்தி இலக்கியங்கள்
2.2 சைவ இலக்கியம் - திருவாசகம்
2. 3 வைணவ இலக்கியம் - திருப்பாவை
2.4. கிறித்துவ இலக்கியம் - தேம்பாவணி
2.5 இஸ்லாமிய இலக்கியம் - சீறாபுராணம்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக
தொகுத்தறிவோம்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்
பயிற்சி வினாக்கள்

**அறிமுகம்**

சமய இலக்கியங்கள் பக்திப் பெருக்கை எடுத்துரைப்பவை. சமயத் தத்துவங்களைப் புலப்படுத்துபவை. சமயத் துறவிகளும் அவரவர்சமயம் கூறும் உண்மைக் கருத்துகளை (மெய்ப்பொருளியலை) இலக்கிய நூல்களாகப் படைத்தனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் கல் நெஞ்சையும் கனிவிக்கும் பக்திப் பாடல்களை இயற்றிப் பரம்பொருளை வழிபடும் மரபைத் தோற்றுவித்தனர். இவ்வாறு சமயச் சான்றோர்களாம் ஞானச் செல்வர்கள் அருளியவை சமய இலக்கியங்களாம் திருவாசகம், திருப்பாவை, தோம்பாவணி, சீறாபுராணம் ஆகியவை நமக்குப் பாடமாக உள்ளன.

**குறிக்கோள்கள்**

- மனித மனங்களைப் பண்டுத்துதல்.
- தமிழகத்தில் உள்ள சமயங்களைம் அவற்றின் சிறப்புகளையும் அறியச் செய்தல்
- சமய நல்லிணக்கத்தை மலரச் செய்தல்.

## 2.1 பக்தி இலக்கியங்கள்

சங்ககாலம் என்று வரையறுக்கப்பட்ட காலமே தமிழகத்தின் பொற்காலம் என்று போற்றப்படுகிறது. முவேந்தர்களது ஆட்சியில் அசகைக்க முடியாத பேரரசாகத் தமிழகம் விளங்கியது. தமிழகம் கடைச்சங்க காலத்தின் இறுதியில் வட பகுதியில் பல்லவருக்கும், தென் பகுதியில் களப்பிரருக்கும் வீழ்ச்சியை ஏற்படுத்தித் தந்தது. அவர்கள் ஆட்சிக் காலத்தில், நாடு முழுவதும் பரவி வந்த சமண. புத்த சமயங்களின்மேல் வெறுப்பு உண்டாகியது. களப்பிரர்கள் சைவ, வைணவ சமயங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. அதனால் புத்த சமண

சமயங்களுக்கும் எதிர்ப்பாகத் தமிழ் நாட்டில் எழுந்த சைவ, வைணவ சமயங்கள் மிகுந்த செல்வாக்குற்றன.

களப்பிரர்கள் ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் தம் அரசியல் செல்வாக்கினை இழந்தார்கள். தெற்கே, நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய அரசன் களப்பிரர்களை வென்று நாட்டைக் கைப்பற்றினான். வடக்கே பல்லவர்கள் ஆட்சி செல்வாக்குப் பெற்றுத் தொண்டை மண்டலம் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றி கல்வியிற் கரையிலாக் காஞ்சி நாட்டினர். இவர்கள் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் புத்துயிர் பெற்றுப் பொலிந்தன. மிக வேகமானதொரு வளர்ச்சியனையும் பெற்றன. இதனால் இக்காலத்தைச் "சமயக் காலம்" என்றும் கூறலாம். சைவப் பெரியார் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் இக்காலத்தே தோன்றிச் சமய உணர்வு ஊட்டும் பக்திப் பாடல்களைப் பாடினர். இதனால் சமய எழுச்சி ஏற்பட்டது. மன்னரையும் மக்களையும் பாடுவது போய், இறைவனையும் இறைவன் அடியார்களையும் பாடுகின்ற இலக்கிய மரபு உருவாகியது. நால்வரும் பன்னிரு ஆழ்வார்களும் பிறந்து இருக்காவிடில் தமிழர்தம் பண்பாடும் தமிழும், சமயமும் தாழ்வுற்று இருக்கும். இதனை

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும் -முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங்கே”

என்னும் பாடல் மூலம் அறியலாம், 'காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பேன்' என்று சொல்லும்படி ஆழ்வார்கள் வாழ்க்கை அமைந்தது. திருவருள் திறத்தினை நினைந்து நினைந்து வியப்புற்றுக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கிப் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் உலக இலக்கிய வரலாற்றில் தமிழுக்கு ஒரு சிறப்பான இடத்தினைத் தேடித்தந்துள்ளன.

அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியங்கள் இல்லை. எனவே, மொழி நூல் முறையில் எத்துணை வழுவுடயதாய் இருப்பினும் ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும் கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது ஒரு புடை ஒக்குமெனின்", தமிழ் பக்தியின் மொழி எனலாம்.

தமிழ்மொழி மக்கள் மொழியாக மாறியது. வடமொழிச் சொற்கள் நிறையப் புகுந்ததன் விளைவாகத் தமிழ்மொழி நெகிழ்ச்சியுற்றது. சொல்வளம், எளிமை, நளினம் ஆகியவை நிறைந்து தமிழை இனிமையாக்கின. ஆன்மநேய ஒருமை தமிழ்மொழியை ஓர் உயர்ந்த பக்தி மார்க்கமொழியாக மாற்றியது.

## 2.2 சைவ இலக்கியங்கள்

சமணமும், பௌத்தமும் சரிந்து, சைவ சமயம் தழைத்து வளருவதற்குத் தொண்டு புரிந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவர். அறுபத்து மூவரில் வேதியர், வேளாளர், சாலியர் பஞ்சமர், பரதவர், வண்ணார், வேடர் மற்றும் வேறு பல இனத்தினரும் இருந்தனர். இச்சைவப் பெரியார்கள் இயற்றிய பக்திப் பனுவல்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சோழப் பேரரசன் இராசராசன் வேண்டுகோள்படித் தில்லையில் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளப் பெற்றன. பின்னர்ச் சேக்கிழார் இயற்றிய பெரிய

புராணத்தையும் அவற்றுடன் சேர்த்துப் பன்னிரு திருமுறைகள் என வழங்கலாயினர்.

**பன்னிருதிருமுறைகள்**

சம்பந்தர் பாடல்களைத் “திருக்கடைக்காப்பு" என்னும் பெயரால், 1, 2, 3 ஆம் திருமுறைகளாகவும் அப்பர் பாடல்களைத் 'தேவாரம் என்னும் பெயரால் 4, 5, 6 ஆம் திருமுறைகளாகவும் சுந்தரர் பாடல்களைத் "திருப்பாட்டு" என்ற பெயரில் 7-ஆம் திருமுறையாகவும், மணிவாசகர் பாடியருளிய திருவாசகத்தை 8-ஆம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் சேந்தனார் முதலியோரது பதிகங்களை 9.ஆம் திருமுறையாகவும், திருமூலர் நூலை 10-ஆம் திருமுறையாகவும் காரைக்காலம்மையார், நம்பியாண்டார் நம்பி முதலியோர் பாக்களை 11-ஆம் திருமுறையாகவும், சேக்கிழார் நூலை 12-ஆம் திருமுறையாகவும் வகுத்துள்ளனர்.

**திருவாசகம்**

திருவாசகம் என்பது சைவ சமயக் கடவுளான சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர். பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் திருவாசகம் எட்டாம் திருமுறையாக உள்ளது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது மூதுரை.

**அமைப்பு**

திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றுள் மொத்தம் 658 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன.

1. சிவபுராணம்,
2. கீர்த்தித் திருவகவல்,
3. திருவண்டப்பகுதி,
4. போற்றித் திருவகவல்

என்னும் நான்கு பெரும் பகுதிகள் இதில் உள்ளன.

திரு என்பது நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி. நூறு பாடல்களைக் கொண்ட நல் சதகம் எனப்படும். உலக வரலாற்றிலேயே மேதையாக மாணிக்கவாசகரைவிடப் புலமை உழைப்பு துன்பத்தைப் பொறுத்தல் இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை என்று ஜி.யு.போப் அவர்கள் கூறியுள்ளார்.

**மாணிக்கவாசகர்**

சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர். பாண்டியனுக்காக குதிரை வாங்க சென்ற போது திருப்பெருந்துறையில் இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். அவ்விறைவனை மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி அழுது தொழுதவர். இதனால் மாணிக்கவாசகரை அழுது அடியடைந்த அன்பர் என்பர். இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணிமொழியார்,

தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு. திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் அருளியவை. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன.

சிவபுராணத்திலிருந்து சில வரிகளும், திருப்புலம்பல் பகுதியிலிருந்து சில வரிகளும் நமக்குப் பாடமாக அமைந்துள்ளன.

### 1. புல்லாகிப் பூடாய்... (சிவபுராணம்)

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே.

பொருள்:

புல்லாகவும், சிறு செடிகளாகவும், புழுவாகவும், மரமாகவும், பலவகை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பாம்பாகவும், கல்லில் வாழும் உயிராகவும், மனிதராகவும், உடல் நீங்கிய பேய்களாகவும், பலதரப்பட்ட கணக்கூட்டங்களாகவும், வலிமை மிகுந்த அசுரர்களாகவும், முனிவராகவும், தேவராகவும் இந்த அசையும் மற்றும் அசையாதவற்றால் ஆன (அண்டம்) முழுதும் சென்று எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்துவிட்டேன், எம்பெருமானே!

உன்னுடைய தங்கத் திருவடிகளைக் கண்டு இன்று உண்மையாகவே வீடு பேறடைந்தேன். நான் உய்யும் பொருட்டு எனது உள்ளத்துள் ஓம் எனும் ஒலியாய் எழுந்த உண்மைப் பொருளே! காளையை ஓட்டி வருபவனே! வேதங்கள் "ஐயா!" எனப் பெரிதும் வியந்து கூறி ஆழமாகவும் பலபல தன்மைகளைப் பெருகி ஆராய்ந்தும் காண முயலுகின்ற மிகச்சிறிய பொருளுமாக இருப்பவனே!

### உற்றாரை யான்வேண்டேன்... (திருப்புலம்பல்)

உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா! உன் குரை கழற்கே,
கற்றாவின் மனம் போல, கசிந்து, உருக வேண்டுவனே!

திருக்குற்றாலத்தில் விரும்பி வீற்றிருக்கின்ற, கூத்தப்பெருமானே, உறவினரை யான் விரும்புவேனல்லேன்; வாழ்வதற்கு ஊரை விரும்புவேன் அல்லேன்; புகழை விரும்புவேன்

அல்லேன்; கல்வியை மட்டும் கற்றவரை யான் விரும்பமாட்டேன் கற்க வேண்டிய கல்விகளும் இனி எனக்குப் போதும் உனது ஒலிக்கின்ற கழலையுடைய திருவடிக்கே, கன்றையுடைய பசுவினது மனத்தைப் போல, கனிந்து உருகுவதை யான் உன்பால் விரும்புகின்றேன்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -1**

1. சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவர் யார்?

அ) அகத்தியர் ஆ) திருநாவுக்கரசர் இ)வீரமாமுனிவர் ஈ)ஆண்டாள்

2. பதிகம் என்பது எத்தனை பாடல்களில் தொகுப்பு?

அ)15 பாடல்கள் ஆ)20 பாடல்கள் இ)10 பாடல்கள் ஈ)2 பாடல்கள்

3. திருவாசகத்தில் எத்தனை பதிகங்கள் உள்ளன?

அ)51 பதிகங்கள் ஆ)36 பதிகங்கள் இ)25 பதிகங்கள் ஈ) 18 பதிகங்கள்

4. மாணிக்கவாசகர் பாடிய நூல்களுள் ஒன்று?

அ) குறுந்தொகை ஆ)திருக்குறள் இ) பழமொழி நானூறு ஈ)திருக்கோவையார்

5. திருவாசகத்தை இயற்றியவர் யார்?

அ) மாணிக்கவாசகர் ஆ) திருஞானசம்பந்தர் இ) திருமூலர் ஈ) சுந்தரர்

6. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது?

அ) பழமொழி ஆ) கலித்தொகை இ) மூதுரை ஈ)தொல்காப்பியம்

7. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்? அ)திருவள்ளுவர் ஆ)ஜி யு போப் இ) மறைமலையடிகளார் ஈ)உமறுப்புலவர்.

## 2.3 வைணவ இலக்கியங்கள்

கி.பி. 700ல் தொடங்கிய ஏறக்குறைய 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழகத்தில் வைணவ பக்தி இயக்கமும் வளரத் தொடங்கியது. இப்பக்தி இயக்கத்தை மக்களிடையே நடத்திக் காட்டியதொரு பெருமை ஆழ்வார்களையே சாரும். 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் திருமாலைத் தலைமையாகக் கொண்ட வைணவ வழிபாடு பன்னிரு ஆழ்வார்களின் பக்திப் பாடல்களால் மறுமலர்ச்சி பெற்றது இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்களைப் பாடியுள்ளார்.

இவர்களுடைய அருட்பாக்களைத் தொகுத்து "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" எனப் பெயரிட்டுள்ளனர். இதனைத் தமிழ் உலகிற்குக் கொடுத்தருளிய பெருமை நாதமுனி அவர்களையேச் சாரும். இந்நூலில் மடல் மாலை, அந்தாதி போன்ற பிரபந்த வகைகளும், பிற்காலப் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இதில் உள்ள பாக்கள் எளிய நடையைக் கொண்டவை.

பன்னிரு ஆழ்வார்கள்: ஆழ்வார்கள் பன்னிருவருள் முதலாழ்வார்கள் என்று குறிக்கப்படுபவர் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவருமே யாவர். இவர்கள் மற்ற ஆழ்வார்கட்குக் காலத்தால் முற்பட்டவர்கள்.

திருப்பாவை

திருப்பாவை பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். இது 30 பாடல்களால் ஆனது. வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 474 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும்.

தமிழ் நாட்டில் மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பிருத்தலைப் பின்பற்றி வந்துள்ளனர். அந்நாட்களில் விடியும் முன்பே கன்னிப் பெண்கள் துயில் எழுவர். அவர்கள் பிற பெண்களையும் துயில் எழுப்பி, ஆற்றில் நீராடி, இறைவனைத் துதித்து வழிபடுவர். இதனைப் பின்னணியாகக் கொண்டு எழுந்ததே இந்நூல். இதனால் தற்காலத்திலும் பாவை நோன்புக் காலத்தில் இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

**ஆண்டாள்**

மதுரைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊரில் வசித்துவந்த விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) என்னும் அந்தணர் ஒருவரால் ஒரு குழந்தையாகத் துளசிச் செடியின் கீழ் கிடந்தபோது, ஆண்டாள் கண்டெடுக்கப்பட்டாள். இவ் அந்தணர் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் அரங்கநாதர் கோவிலுக்கு மலர்கள் கொய்து கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டவர். தனக்கெனக் குடும்பம் எதுவும் இல்லாதிருந்த நிலையிலும், கண்டெடுத்த குழந்தையைத் தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை எனக் கருதி வளர்த்து வரலானார். ஆயர் குல பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு இட்ட பெயர் கோதை என்பதாகும்.

இளம் வயதிலேயே, தனக்குத் தெரிந்த சமயம் சார்ந்த கருத்துகள் மற்றும் தமிழ்மொழி போன்ற அனைத்தையுமே விஷ்ணுசித்தர் கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராகவும் தமிழில் நல்ல திறமை கொண்டவராகவும் இருந்தார்.

சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக்கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாகத் தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர்த் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனால் கோதை சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருநாள் இதனை அறிந்து கொண்ட விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்துகொண்டார். அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டுப் புதிய மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றிக் கோதை அணிந்த மாலைகளே தனக்குப் உகப்பானவை எனவும் அவற்றையே தனக்குச் சூடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதனாலேயே "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்றும் "இறைவனையே ஆண்டவள்" என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார்.

கோதை மண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து, திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோயிலில் உறையும் இறைவனையே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தார். என்ன செய்வதென்று அறியாது கவலையுடனிருந்த விஷ்ணுசித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார். குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள் என்பது ஆண்டாள் வரலாறு.

**திருப்பாவை**

பாசுரம் 1

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்
கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்.

விளக்கம்:

அழகிய அணிகலன்களை அணிந்த கன்னியரே! சிறப்பு மிக்க ஆயர்பாடியில் வசிக்கும் செல்வவளமிக்க சிறுமிகளே! மார்கழியில் முழுநிலா ஒளி வீசும் நல்ல நாள் இது. இன்று நாம் நீராடக் கிளம்புவோம். கூர்மையான வேலுடன் நம்மைப் பாதுகாத்து வரும் அரிய தொழிலைச் செய்யும் நந்தகோபன், அழகிய கண்களையுடைய யசோதாபிராட்டி ஆகியோரின் சிங்கம் போன்ற மகனும், கரிய நிறத்தவனும், சிவந்த கண்களை உடையவனும், சூரியனைப் போல் பிரகாசமான முகத்தையுடையவனும், நாராயணனின் அம்சமுமான கண்ணபிரான் நமக்கு அருள் தர காத்திருக்கிறான். அவனை நாம் பாடிப் புகழ்ந்தால் இந்த உலகமே நம்மை வாழ்த்தும்.

**பாசுரம் 3**

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

பொருள்:

சிறுமியரே! நம் பரந்தாமன் வாமன அவதாரத்தில் மூன்றடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்து தன்னுடையதாக்கிக் கொண்ட உத்தமன். அவனது சிறப்பைக் குறித்து பாடி, நம் பாவைக்கு மலர்கள் சாத்தி வழிபடுவதற்கு முன் நீராடச் செல்வோம். இந்த விரதமிருப்பதால், உலகம் முழுவதும் மாதம் மும்முறை மழை பெய்து தண்ணீர் இல்லாத குறையைப் போக்கும். மழை காரணமாக வயல்களில் செந்நெல் செழித்து வளரும். மீன்கள் வயலுக்குள் பாய்ந்தோடி மகிழும். குவளை மலர்களில் புள்ளிகளையுடைய வண்டுகள் தேன் குடிக்க வந்து கிறங்கிக் கிடக்கும். வள்ளல் போன்ற பசுக்கள் பாலை நிரம்பத்தரும். என்றும் வற்றாத செல்வத்தை இந்த விரதம் தரும்.

**பாசுரம் 4**

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

பொருள்: மேகத்திற்கு அதிபதியான நாராயணனே! நாங்கள் சொல்வதைக் கேள். உன்னிடம் ஒரு சொட்டு தண்ணீரைக் கூட வைத்துக் கொள்ளாதே. கடல் நீர் முழுவதையும் முகர்ந்து கொண்டு மேலே சென்று, உலகாளும் முதல்வனாகிய கண்ணனின் நிறம் போல் கருத்து, வலிமையான தோள்களையுடைய பத்மநாபனின் கையிலுள்ள பிரகாசமான சக்கரத்தைப் போல் மின்னலை வீசி, வலம்புரி சங்கு ஒலிப்பது போல் இடி ஒலியெழுப்பி, வெற்றியை மட்டுமே ஈட்டும் அவனது சார்ங்கம் என்னும் வில்லில் இருந்து புறப்படும் அம்புகளைப் போல் மழை பொழிவாயாக! அம்மழையால் நாங்கள் இவ்வுலகில் மகிழ்வுடன் வாழ்வோம். மார்கழி நீராடலுக்காக எல்லா நீர்நிலைகளையும் நிரப்பி எங்களை மகிழ்ச்சியடையச் செய்வாயாக

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -2**

---

1. வைணவ சமய கடவுள் யார்?

அ) சிவன் ஆ) திருமால் இ) இந்திரன் ஈ) முருகன்

2 திருப்பாவையை பாடியவர் யார் ?

அ) பெரியாழ்வார் ஆ) நம்மாழ்வார் இ)ஆண்டாள் ஈ)பேயாழ்வார்

3.திருப்பாவைக்கு ஆண்டாள் இட்ட பெயர்.

அ)சங்கத்தமிழ் மாலை முப்பது ஆ)அறநூல் இ)அகநானூறு ஈ)பக்தி இலக்கியம்

4.பாவை நூல்களுள் காலத்தால் முற்பட்ட நூல்?

அ) திருவாசகம் ஆ) அகத்தியம் இ) திருமந்திரம் ஈ) திருப்பாவை

5.பன்னிரண்டு ஆழ்வார்களுள் பெண் ஆழ்வார் யார்?

அ)மதுரகவியாழ்வார் ஆ)பூதத்தாழ்வார் இ)ஆண்டாள் ஈ)பெரியாழ்வார்

6. யாருடைய கனவில் திருமால் தோன்றினார்?

அ)மதுரகவியாழ்வார் ஆ)பூதத்தாழ்வார் இ)ஆண்டாள் ஈ)பெரியாழ்வார்

## 2.4 தேம்பாவணி வீரமாமுனிவர்

வீரமாமுனிவர்

இத்தாலி நாட்டில் வெனிஸ் மாநிலத்தில் மாந்துவா என்னும் மாவட்டத்திலுள்ள காஸ்திகிளியோனே என்ற சிற்றூரில் 08.11.1680 பிறந்தார். இவரின் இயற்பெயர்: கான்ச்டன்டைன் சோசப்பு பெச்கி. கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் இயேசுசபை குருவானார். தமிழகம் வந்தார். மறை பரப்பு முயற்சிக்காக முதலில் தமிழை சுப்ரதீக் கவிராயரிடம் கற்றுக் கொண்ட இவர். தமிழில் வியத்தகு புலமை பெற்று இலக்கணம், இலக்கியம். அகராதி படைத்து தமிழுக்குச் செழுமையூட்டினார். தமது பெயரினை தைரியநாதன் என்று முதலில் மாற்றிக் கொண்டார். பின்னர், அப்பெயர் வடமொழி என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும், தமது இயற்பெயரின் பொருளைத் தழுவி, செந்தமிழில் வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார்.

தமிழின் சிறப்பை மேல் நாட்டார் உணர திருக்குறள், தேவாரம், திருப்புகழ். நன்னூல், ஆத்திசூடி போன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழிகளில் வெளியிட்டார். தமிழ் கற்க எதுவாக தமிழ் லத்தீன் அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ்-போத்துக்கீய அகராதியை உருவாக்கினார். திருக்காவலூர்த் திருத்தலத்தையும், ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கலமாதாவையும் போற்றும் வண்ணம் "திருக்காவலூர் கலம்பகம்" பாடியுள்ளார். 'பெயரகராதி' 'பொருளகராதி' 'தொகையராதி" 'தொடையகராதி' எனவும் அமைத்துத் தமிழுக்குச் செழுமை சேர்த்தவர்! 'சதுரகராதி' கண்ட பெருமையும் வீரமாமுனிவரையே சாரும். தமிழ் மொழியில் தோன்றிய நிகண்டுகளில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது இந்தச் 'சதுரகராதி',

ஒரு மொழி அகராதி சதுரகராதி. இரு மொழி அகராதி தமிழ்-இலத்தீன்-அகராதி மூன்று மொழி அகராதி போர்த்துக்கீஸ்-இலத்தீன்-தமிழ் அகராதி உருவாக்கியதால், "தமிழ் அகராதியின் தந்தை" எனப் போற்றப்பட்டார். சதுரகாதியை நிகண்டுக்கு ஒரு மாற்றாகக் கொண்டு வந்தார்.

தேம்பாவணியின் சிறப்பைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச்சங்கம்; பெஸ்கிப் பாதிரியாருக்கு ராஜரிஷி என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தது. மறைவு: 04.02.1747

தேம்பாவணி

தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்துத் தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்குப் பொருள் உண்டு. இயேசு நாதரை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இது பாடப்பட்டது. சூசையப்பருக்குத் தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் பாடியுள்ளார்.

**வளன் செனித்த படலம்:**

காப்பியத் தலைவனான வளன் என்னும் சூசை மாமுனிவர், தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றைக் கூறுவதே வளன் செனித்த படலம் ஆகும். யோசேப்பு என்றும் சூசை என்றும் ஒலிபெயர்க்கப்பட்ட ஜோசப் என்னும் பெயரை வீரமாமுனிவர் அப்பெயரை வளன் என்று தமிழ்ப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வளங்களை வளரச் செய்பவன் என்னும் பொருளுடைய எபிரேய மொழியில் சூசை என்னும் பெயர் வழங்கி வருகிறது. அதன் நேரிய மொழிபெயர்ப்பு தமிழில் வளன் என்பதாகும்.

**கதை சுருக்கம்:**

யூதேயா நாட்டு மன்னன் சவுல். பிலித்தையர் என்பார் திருமறையைப் பழித்தும் கடவுளை இகழ்ந்தும் வந்தனர். அரக்கன் கோலியாத் இஸ்ரேல் மக்களை இகழ்ந்து, அவர்களுள் ஒருவனை போருக்கு அழைத்தான். தாவீதன் என்னும் சிறுவன் அவனிடம் போர் புரிந்து அவனைக் கொன்றான்.

**வளன் செனித்த படலம்**

**தாவீது மன்னன் சிறப்பு**

அன்ன மா திரு நகர் அகத்து, உடற்கு உயிர்

என்ன, மா தாவிதன் இனிதில் வீற்றிருந்து,

ஒன்னலார் வெரு உற உவந்து பாவலர்

சொன்ன பா நிகரும் மேல் துளங்கினான் அரோ. (1)

பெருமை வாய்ந்த எருசலேம் திரு நகரத்தில், உடலுக்கு உயிர் போல, தாவிது மன்னன் மகிழ்ச்சியோடு அரசு வீற்றிருந்தான். பகைவர் அச்சங்கொள்ள, பாவலர் புகழ்ந்து சொன்ன பாடலின் நிகருக்கும் மேலாக விளங்கினான்.

அருளொடு வீங்கிய அகத்தினான்; துளி

மருளொடு வீங்கிய மழைக் கையான்; மலர்ச்

சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினான்;

பொருளொடு வீங்கிய பொறைப் புயத்தினான். (2)

அவன் உயிர்களிடம் கருணை நிறைந்த நெஞ்சம் படைத்தவன்; மழைபோல் கொடுக்கும் வள்ளல் தன்மை உடையவன்; மலர்களால் அணிந்த மார்பு கொண்டவன்; பொன் அணிகலன்களால் நிறைந்த மலை போல் திரண்ட புயங்களை உடையவன்.

ஒளி தவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்;

அளி தவழ் நிழல் செயும் அருட் குடையினான்;

வெளி தவழ் நவ மணி விழுங்கும் தேரினான்;

களி தவழ் மதம் பொழி களிற்றின் ஆண்மையான். (3)

அவன் மின்னலின் ஒளி தவழும் இடியை அம்பாகப் பொழிந்த வில்லை உடையவன்; கருணை தவழும் நிழலைக் குடிகளுக்கு வழங்கும் அருள் என்னும் குடையை உடையவன்; வெளிச்சம் தவழும் ஒன்பது வகை மணிகள் பதித்த தேரை உடையவன்; மதம் பொழியும் ஆண் யானை போன்ற வீரம் படைத்தவன்.

மொய் முனர் பின்று இலா முரண் கொடு ஏறு எனா,

மெய் முனர் பொய் எனா வெருவு ஒன்னார் இவன்

கை முனர் நிற்கு இலா கலங்கிப் போற்றும், போர்

செய் முனர் செயம் செயும் சிங்க வாகையான். (4)

போர் முகத்தில் புறமுதுகிட்டு ஓடாத வலிமை கொண்டவன். பகைவர் இவன் கை வன்மைக்குமுன் நிற்க இயலாது கலங்கித் தவிக்கும் வல்லமை கொண்டவன்.

வேல் செயும் போரினால் வெலப்படான்; தனைச்

சால் செயும் தவத்தினால் வென்ற தன்மையான்;

சேல் செயும் புணரி சூழ் செகத்தில் நின்று, ஒளி

மேல் செயும் வானவர் விழைந்த பான்மையான். (5)

அவன் வேல்கொண்டு செய்யும் போரினால் எவராலும் வெல்லப் படாதவன்; தவத்தினால் தன்னையே வென்ற தன்மை உடையவன்; மீன்களைக் கொண்ட கடலால் சூழப்பட்ட மண்ணுலகில்தான் இருப்பினும், மேலே ஒளியைப் பொழியும் வானவரும் விரும்பத்தக்க தன்மை உடையவன்.

நீதி நல் முறை எலாம் நிறைந்த நீண் தவம்,

ஆதி தன் மறை இவை அனைத்தும் மேல் படர்

கோது இல் நன் உதவி செய் கொழு கொம்பு ஆகி, வான்

ஏது இல் நல் முறை இவண் இசைந்த மாட்சியான். (6)

நல்ல நீதி முறையெல்லாம் நிறைந்த நீண்ட தவமும், ஆதிக் கடவுளின் வேதமும் ஆகிய இவை அனைத்தும் பெற்று, உதவியை நாடிவருவோர்க்கு கொழு கொம்பு போன்றவன். வானகத்திற்கு உரிய குறையற்ற நன்முறைகளெல்லாம் இவ்வுலகில் அடைந்து கொண்ட மாட்சிமை உடையவன்.

கோல் நலம் கோடு இலா நிறுவிக் கூர்த்தலால்,

நூல் நலம் பொருள் நலம் அறத்தின் நுண் நலம்

தேன் நலம் இனிதினில் திளைந்து, நாடு எலாம்

மீன் நலம் பயின்ற வான் வியப்ப வாழ்ந்ததே. (7)

நீதி தவறாது செங்கோலின் நலம் வழுவாத முறையில் ஆட்சி செய்பவன். நூலால் ஆகும் கல்வி நலமும், செல்வத்தின் நலமும், அறத்தின் நலமும், தேன் போன்ற இன்ப நலமும் இனிது நிறைந்தவன். விண்மீன்களின் நலம் நிறைந்த வானுலகமும் வியக்குமாறு நாடெல்லாம் வாழ்ந்தவன்.

பகை செய்வார்க்கு இடி என, படிந்து போற்றிய

தகை செய்வார்க்கு அமுது என நாமத் தன்மையான்,

நகை செய்வார்க்கு, இளவலாய், நடத்தும் வேல் இலான்,

மிகை செய்வான்; ஆண்மையை விளம்பல நன்று அரோ. (8)

தன்னோடு பகை கொள்பவருக்கு இடி போலவும், தன் கால்களில் விழுந்து துதித்து மேன்மை செய்பவருக்கு அமுது போலவும், அச்சந்தரும் தன்மை உடையவன் அத்தாவிதன் சிறுவனாய் இருந்த காலத்தில் தன்னை இகழ்ந்தவர்களுக்கு, வேல் முதலிய படைக்கருவிகள் இல்லாமலேயே தன் ஆற்றலால் துன்பம் செய்தவன்; இத்தகையவனின் வீரத்தை எடுத்துக் கூறுதல் நன்றாம்.

**தொகுத்தறிவோம்**

வீரமாமுனிவரின் இயற் பெயர் கான்ஸ்டான் ஜோசப்பெஸ்கி. கான்ஸ்டான் என்னும் இத்தாலி மொழி சொல்லுக்கு அஞ்சாமை எனப் பொருள். இவர் தம் பெயரை “தைரியநாதசாமி” என மாற்றிக்கொண்டார். தமிழ்ச் சான்றோர் இவரை வீரமாமுனிவர் என அழைத்தனர்

திருக்காவலூர் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்ர்த்த குரு கதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -3**

---

1. **யூதேயா நாட்டு மன்னன் யார்**

   **அ)** சவுல் ஆ) சூசை இ) பிலித்தையன் ஈ) கோலியாத்

2. **வளன் யாருடைய வழித்தோன்றல்?**

   அ) சவுல் ஆ) தாவீது இ) பிலித்தியர் ஈ) ஜோசப்

3. **ஜோசப்பு என்பதை வீரமாமுனிவர் எவ்வாறு தமிழ்ப்படுத்தினார்.**

   அ) சூசை ஆ) ஜோசப் இ) வளன் ஈ) எதுவுமில்லை

4. **தமிழ்ச்சங்கம் பெஸ்கிப் பாதிரியருக்கு வழங்கியப் பட்டம் என்ன?**

   அ) தமிழ் அகராதியின் தந்தை ஆ) வீரமாமுனிவர் இ) காவிசாமியார் ஈ) ராஜரிஷி

5. **தேம்பாவணி நூலின் பாட்டுடைத்தலைவன் யார்?**

   அ) வளன் ஆ) இயேசு இ) தாவீது ஈ)வீரமாமுனிவர்

6. **கிறித்துவ சமயத்தவரின் கலைக்களஞ்சியம் எவை?**

   அ) இயேசு காவியம் ஆ) இரட்சணயாத்திரியம் இ) தேம்பாவணி ஈ) விவிலியம்

7. **தமிழ் அகராதியின் தந்தை எனப் போற்றப்பட்டவர் யார்?**

   அ) வீரமாமுனிவர் ஆ) ஜீ.யு.போப் இ) கால்டுவெல் ஈ) தொல்காப்பியர்

---

**குறு வினா - விடைகள்**

---

**தேம்பாவணியின் ஆசிரியர் யார்?**

வீரமாமுனிவர்

**தேம்பாவணி பெயர்க்காரணம் கூறுக.**

தேம்பா + அணி - வாடாத மாலை என்றும்

தேன் + பா + அணி - தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் பொருள்கொள்ளபெறுகின்றது.

**வீரமாமுனிவரின் படைப்புகள் மூன்றினைக் கூறுக.**

தொன்னூல் விளக்கம் , சதுரகராதி , தேம்பாவணி.

**ஜோசப் என்ற எபிரேய சொல்லுக்கு இணையானத் தமிழ்ச் சொல் யாது?**

ஜோசப் என்ற எபிரேய சொல்லுக்கு இணையானத் தமிழ்ச் சொல் வளன் என்பதாகும்.

**தாவீது சிறுவன் யாரை எப்படி வென்றான்?**

கோலியாத் என்ற வீரனை கவன்கல் கொண்டு வென்றான்.

**முதல் நூல் வழி நூல் சான்று தருக.**

முதல் நூல் ராமாயணம் – வழி நூல் கம்பராமாயணம்

முதல் நூல் கன்னி மறைபொருளான இறைநகரம் – வழி நூல் தேம்பாவணி

---

## 2.5 மானுக்குப் பிணை நின்ற படலம் *சீறாப்புராணசம்*

---

*சீறா + புராணம் = சீறாப்புராணம். 'சீறத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபே சீறா என்பது. சீறத் என்னும் அரபுச் சொல்லுக்கு வரலாறு என்பது பொருள். உலகில் தூய வாழ்க்கை நடத்திய உத்தமர் ஒருவரின் (நபிகள் நாயகம்) வரலாற்றைக் கூறும் நூலாதலால் இது சீறாப்புராணம் என வழங்கலாயிற்று. இந்நூல் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் உணர்த்தும் காப்பியமாகத் திகழ்கின்றது.*

**உமறுப்புலவர்**

சீறாப்புராணத்தைப் பாடியவர் உமறுப்புலவர். இவரது தந்தையார் சேகு முதலியார். இராமநாதபுரத்தை அடுத்த கீழைக்கரை இவர் பிறந்த ஊராகும். இவர் கடிகை முத்துப்புலவரின் சீடர். சீதக்காதி என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். உமறுப்புலவர்

பாடிய மற்றொரு நூல் ‘முதுமொழி மாலை’ என்பதாகும்.

**மானுக்குப் பிணை நின்ற படலம்**

இந்நூலின் இரண்டாவது காண்டத்தில் (நுபுவத்துக் காண்டம்) உள்ளது இப்படலம். நபிகள் நாயகம் வேடனிடம் சிக்கிய ஒரு பெண் மானுக்காகத் தாமே பிணையாக நின்று, அம்மானை அவனிடமிருந்து மீட்ட பெருங் கருணைத்திறத்தை இப்படலம் உணர்த்துகின்றது.

முகமது நபி ஒருநாள், நகர்ப்புறத்தினைநீங்கிச் செழுமையான மேகங்களைத் தனது முடியினில் தாங்கியதும், மணமிக்க மலர் வனங்களைக் கொண்ட ஒருமலையினை அடைந்தார். காட்டில் திரியும் விலங்குகளைக் கொன்று அவற்றின் தசைகளை அறுத்துக் கோலில் கட்டிப் பக்குவமாகச் சுட்டுத் தன்னந் தனியே அவற்றை உண்டு, தனது ஊனைப் பெருக்கிவரும் வேடன் ஒருவனைக் கண்டார். அவன், இவ்வாறு வேட்டையாடி உண்பதைத் தவிர வேறொரு அறிவும் அற்றவன். சிறுசிறு முத்துக்களாக வியர்வை திகழும் மேனி; ஊன் மணக்கின்ற வாய்; புதர்கள் போல் முடிவளர்ந்த தலை; படுகொலை வீசும் பார்வையுடைய விழிகள், அரபு மொழியில் பேசுபவன். அவன் காட்டில் மான் ஒன்றைப் பின் தொடர்ந்து சென்று, வலையில் பிடித்துக் கட்டிவைத்திருப்பதனை முகமது கண்டார்.

முகமது நபிகள் மானைக் கண்டபின், அரும்புகளும் தளிரும் மிக்க சோலையையும் காணார்; அருவியையும் பார்க்கவில்லை. அருகில் உள்ள நிழலையும் நோக்கார்; தம் மீது ஈச்சங்காய்கள் மழை போலச் சொரிவதையும் நோக்காராகி மானையே நோக்கிச் சென்றார்.

**மானின் நிலை**

தரையில் வெள்ளியை உருக்கிவிட்டது போலத் தனது மடியில் பால் சிந்தியது. கண்களில் நீர் பொழிய உடல் பெருமூச்சு விட்டது. திரும்ப முடியாமல் காலில் கட்டுண்டு நிலத்தில் கிடந்தது. கொடி போன்ற உடலிலும் இரையைப் போன்ற குளம்பிலும் இட்ட சுருக்கினால் வேதனைப்பட்டுக் கிடந்த மானின் உடல் பதைக்கின்ற நிலையை நபிகள் கண்டார்.

அக்காட்டில் உள்ள மலர்கள் செந்தேனைப் பொழிந்தன. அக்காட்சி மானின் துயரத்தைக் காண முடியாமல் கண்ணீர் சிந்துவதைப் போலிருந்தது. மானைக் கட்டி வைத்திருந்த வேடனைக் கண்ணால் காண்பதும் பாவம் என்பது போல பறவைகள் தனது இனத்தோடு கூட்டுக்குள் புகுந்தன. அப்போது பூக்களில் உள்ள தேனை உண்ட வண்டுகள் இசை பாடின. அந்த இசை முகமது நபிகள் வருவார். வருத்தப்படும் மானை மீட்பார் என்று கூறுவது போலிருந்தது.

**நபிகளிடம் பெண்மான் முறையிடல்**

வளம் நிறைந்த அக்காட்டில் தன்னருகே வந்து நின்ற நபியை நோக்கி, தனது குட்டையான வாலை அசைத்து, நெடுங்கழுத்தை நீட்டிக் கறையற்ற நிலவு போன்றவரே! வள்ளல் முகமதே! என விளித்துப் போற்றித் தடையின்றி எவர்க்கும் கேட்கும்படியாக, வணங்கிச் சலாமிட்டுப் பின் கூறலாயிற்று :

“வல்லவனாகிய இறைவனது உண்மைத் தூதரே! விரைந்து எனது சொற்களை உகந்து கேட்டு உமது அருளைத் தருவீராக!” எங்களுக்கு ஒரு இளங்கன்று வேண்டுமென ஆசைப்பட்டு

நானும் என் கலைமானும் இருக்க, நான் கருவுறாததால் வருத்தத்துடன் வாழந்தோம். அப்போது முகமதாகிய உங்கள் பெயரைப் போற்றினேன். எனக்கு இளஞ்சூல் உருவாகிக் கரு வளர்ந்தது."

யானும் எனது துணையும் சேர்ந்து ஒன்றானதைப் போன்ற உருவோடு ஓர் இளங்கன்று பிறந்தது. இன்பக்கடலில் ஆழ்ந்து இம்மலையிடத்தைச் சார்ந்து துன்பம் அகன்றிருந்தேன். ஆனால் என் முன்வினையினை நான் அறியவில்லை. எனது உயிர் போன்ற கன்றும் ஆண்மானும் யானும் எங்கள் சுற்றமும் மலைச்சாரலில் ஓரிடத்தில் வயிராறத் தழையுண்டு, பசி தீர்ந்து பின் நீர் அருந்தி எள்ளளவு அச்சமும் இன்றி நின்று உலவிய நேரம்! நாங்கள் நின்றிருந்த திசையின் எதிரிலிருந்து இடிமுழக்கம் போன்று ஒரு வரிப்புலியின் முழக்கம் கேட்டது. அதைக் கேட்டு நாங்கள் ஒவ்வொரு திசையிலும் தனித்தனியாகச் சிதறி ஓடினோம்.

தாண்டிச் சென்ற செடிகளும் புதர்களும் நிலத்தில் அழுந்த ஒன்றையொன்று சென்ற திசை காணாமல் நாங்கள் ஓடினோம். நானும் எனது கன்றைக் காணாது வாடிய மனத்தோடும் உடம்பானது ஆடிக் காற்றில் துரும்புபோல் ஆட வேறோர் கானகம் புகுந்தேன். அக்காட்டினை அடைந்தபோது, அங்கு மறைந்திருந்த இவ்வேடன், வலையைச் சுற்றி எனக்கு சுருக்கு இட்டு, புலி வாயிலிருந்து தப்பிச் சிங்கத்தினிடம் சிக்கினாற் போல, நான் உடலுயிர் பதைக்கத் தேம்பி மனமிழந்து ஒடுங்கி நின்றேன்.

**மானின் மனநிலை**

நான் பிடிபடுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தான் பிறந்தது என்கன்று; இன்னும் புல்லை மேய்ந்தறியாது; நீரும் பருகாது; என் மடியிற் சுரந்த பாலும் வழிந்தது. என் கன்று பூமியில் கிடந்து என்ன பாடுபடுகின்றதோ? அறியேன். எனது கன்று தனது தந்தையாகிய கலைமானிடம் சேர்ந்ததோ? அல்லது வேறொரு புறமாக ஓடிச் சென்றதோ, தன் இனத்தைச் சேர்ந்து பெற்றோருக்காக ஏங்கியதோ? அல்லது புலியின் வாயில் அடிபட்டுஇறந்ததோ? என்னைத் தேடி இங்குமங்குமாக ஓடி மறுகிற்றோ? அறியேனே.

மாந்தர் எவரும் சொர்க்கத்தில் புகச்செய்யும் புண்ணியனே! நான் இவ்வேடனின் பசியைத் தீர்க்கச் சித்தமாக உள்ளேன். அதற்கு முன் என் கால்களைப் பிணித்துள்ள பிணைப்பை நீக்கி என்னைத் தாங்கள் பிணையாக நின்று விடுவித்தல் வேண்டும். என்னைத் தாங்கள் விடுவித்தால், என்னுடைய கலைமானைச் சேர்ந்து, அதன் கவலையை மாற்றி, எனது நிலையை என் இனத்திற்குத் தெரிவித்து, எனது கன்றினுக்கு இனிய தீம்பால் ஊட்டி, எனது குலத்தோடு சேர்ந்து இருந்து விட்டுச் சில நாழிகைப் போதில் திரும்புவேன் என்று அப்பெண்மான் நபியிடம் குறையிரந்தது.

**மானுக்குப் பிணையாக நபிகள் நாயகம் நிற்றல்**

மான் இவ்வாறு உரைக்கக் கேட்ட நபி, மனத்தில் கருணை பொங்க, வேடனை நோக்கி, "இந்த மான் தனது கன்றின் துயர் தீர்த்து வரும்வரை நான், இதற்குப் பிணை; எனவே இதனை விடுக" என்றார். அதைக் கேட்ட வேடன் சினத்துடன் சிரித்து முட்கள் நிரம்பிய காட்டில் உச்சந்தலையில் உள்ள வியர்வை உள்ளங்கால் வரை நனைக்கும்படி ஓடி எந்த வேட்டையும் கிடைக்காத நிலையில் இந்த மானைப் பிடித்து வந்தேன், இந்த மானின்

தசையால் என் பெரும்பசி நீங்கியது என மகிழ்வோடு இருந்தேன். முகமது அவர்களே நான் வருத்தப்படும்படி பேசி விட்டீர்கள். நீங்கள் கூறியது எவருக்கும் பொருந்தாது.

மேலும் காட்டில் பிடித்த மானை விட்டு விட்டால் அது மீண்டும் மனிதரிடம் திரும்பும் செயல் முன் எப்போதும் நிகழ்ந்ததில்லை. ஞானமுடையவர்கள் இவ்வாறு பேசமாட்டார்கள். எனவே, குறைவான இச்சொற்களை விடுக என்றான். என்னைப் பிணையாகக் கொண்ட இந்தப் பெண்மான் ஒரு நாழிகைப் போதில் வராவிட்டால், நான் உனது பசியைத் தீர்ப்பதற்காக ஒன்றிற்கு இரண்டு மான்களைத் தருவேன்! கவலைப் படாதே! என்று இனிமையுடன் நபிகள் உரைத்தார். உலகில் ஒரு புதுமையினையோ அல்லது ஒன்றுக்கு இரண்டு மான்களோ கிடைக்கும் என்பதை எண்ணி வேடனும் சம்மதித்தான்.

**வேடனின் செயலை மான் தன் கூட்டத்திற்கு உரைத்தல்**

ஒரு வனப் பகுதியினிடத்து எண்ணற்ற பெண்மானும் கன்றும் கலையுடன் இருக்க அக்கூட்டத்தை இனிதே கண்டது – அப்பெண்மான். தன் இனத்தினுள் சென்று சேர்ந்து கவலை நீங்கியது. தனது கலையின் வருத்தத்தையும் போக்கித் தனது கன்றுக்குப் பாலூட்டி, மென்மையான முதுகையும் வாலினையும் நாவினால் நக்கிக் கொடுத்துக் கழுத்தை வளைத்து மோந்து அதன் வேட்கையையும் போக்கியது.

கன்றிற்கு அமுதம் ஊட்டிய பின்னர்க் காட்டகத்தில் ஓடிச் சென்று, தனது இனத்திற்கெல்லாம் தான் வேடனால் கைப்பற்றப்பட்ட வரலாறும், நபிகள் அதை மீட்டுவர விட்டதும் எடுத்துரைத்தது. பிணையாக நபிகள் இருந்தனர் என்ற மொழியைக் கேட்டுப் பிணைக்குலம் அனைத்தும் உள்ளப் பதைப்படைந்து துன்பம் எய்தின. துணையாகிய ஆண்மானும் உடல் சோர்ந்து பெருமூச்சு எய்தி நின்றது. பின்னர் அங்குப் போக வேண்டாம் எனக்கூறியது. தம்மோடு மாறுபட்டவர் கையிலிருந்தும் தப்பி வந்த மானானது, அவரால் தாம் கொல்லப்படுதலை விரும்பி மீண்டும் அத்தகைய மனிதர்கள் கையில் சேர்வதுண்டோ? மறுத்துச் சொல்லாதே. இக்குட்டியை வெறுத்தும் நம் இனத்தைத் துறந்தும் முடிவினை நோக்கிப் போக வேண்டாம் என்னும் முறையினை எடுத்துக் கூறியது.

**பெண்மான் எடுத்த முடிவு**

பெரியவன் தூதராகிய நபிகள், இவ்வுலகத்தில் எல்லா உயிர்களையும் அணைத்துக் காப்பதற்கு அவரல்லது வேறு ஒருவர் இல்லையல்லவா? எனது உயிரை வேடனது பசிக்காக ஈந்து, நபியினது பிணையை மீட்க நாம் மனம் கொள்ளவில்லையென்றால், நான் சொர்க்கத்தையிழந்து தீ நரகினில் புகுவதேயின்றி எனக்கு வேறு கதியும் பெருமையும் உண்டோ? சிறப்புமிக்க ஆண்டகை நபியின் முன்னர்ச் சொன்ன சொல்லை மாற்றிவிட்டு மறந்திருந்தால் நான் வரிப்புலி வாய்ப்பட்டு இறப்பதே கதியாகும். வேறு இருப்பதற்கு இடமும் உண்டோ? எனவே வாழ்வதற்கு எழும் விருப்பத்தினைக் கைவிடல் வேண்டும்.

**வேடனின் மனமாற்றம்**

மானும் அதன் கன்றும் சேர்ந்து வருவதனை நபிகள் பெருமான் கண்டு மகிழ்ந்து அன்போடு இருள் கொண்ட மனத்தானாகிய வேடனைக் கூவியழைத்து, “ஒரு பிணைக்கு இரண்டாக உன்னிடம் வருகின்றன பார்” என்றுரைத்தார். அதனைக் கேட்டு வேடன்

வியப்பாக நோக்கும்போது, முன் வந்த மானும் அதன் கன்றும் நபிகள் பாதத்தில் பணிந்தன. பின்னர் பெண்மானானது வணக்கம் கூறிப் பாவி எனக்காக வேட்டுவனுக்குத் தங்களையே பிணையாக்கினீர்! இப்போது மீட்டருள வேண்டும் என்றது. இவ்வாறு பக்கத்தில் வந்து பெண்மான் கூற, முகம்மது நபி வேடனை அருகில் அழைத்து அவற்றின் பண்பினைச் சுட்டிக்காட்டி, நீ நம்முடைய பிணையை விட்டுவிட்டு, தனது பசியினைத் தீர்த்துக் கொண்டு பெருநகரினை அடைக! என்றார். வேடனும் தான் வீடு பெற்றேன்; வாழ்ந்தேன் என்று அவர் பாதத்தில் வீழ்ந்தான்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -4**

1. நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்று இலக்கியம் எது

2. (அ)தேம்பாவணி (ஆ) சீறாப் புராணம் (இ)கம்பராமாயணம் (ஈ)சிலப்பதிகாரம்

3. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார். (அ)

உமறுப்புலவர்(ஆ)வீரமாமுனிவர்(இ)கம்பர் (ஈ) இளங்கோவடிகள்

4. சீறாப்புராணத்தில் உள்ள மொத்த விருத்தப்பாக்களின் எண்ணிக்கை.

( அ) 5027 ( ஆ) 5023( இ)5025 (ஈ) 5029

4. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்.

(அ) நபிகள் நாயகம் (ஆ) கம்பர் (இ) சீதக்காதி (ஈ) அபுல்காசிம்

5. மானுக்கு பிணை என்ற மாமனிதர் யார்

(அ) அபுல்காசிம்(ஆ) உமறுப்புலவர் (இ) சீதக்காதி (ஈ)நபிகள் நாயகம்

**தொகுத்தறிவோம்**

சமணமும், பௌத்தமும் சரிந்து, சைவ சமயம் தழைத்து வளருவதற்குத் தொண்டு புரிந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவர்.. இச்சைவப் பெரியார்கள் இயற்றிய பக்திப் பனுவல்கள் பன்னிரு திருமுறைகள் என வழங்கலாயினர்.

கி.பி. 700ல் தொடங்கிய ஏறக்குறைய 900 வரை சைவ சமய எழுச்சிக்கு இணையாகத் தமிழகத்தில் வைணவ பக்தி இயக்கமும் வளரத் தொடங்கியது. இப்பக்தி இயக்கத்தை மக்களிடையே நடத்திக் காட்டியதொரு பெருமை ஆழ்வார்களையே சாரும். 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் திருமாலைத் தலைமையாகக் கொண்ட வைணவ வழிபாடு பன்னிரு ஆழ்வார்களின் பக்திப் பாடல்களால் மறுமலர்ச்சி பெற்றது. இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்களைப் பாடியுள்ளார்.

இவர்களுடைய அருட்பாக்களைத் தொகுத்து "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" எனப் பெயரிட்டுள்ளனர்.

தேம்பாவணி மூன்று காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் 12 படலமாக 36 படலங்கள் உள்ளன. மொத்தம் 3,615 விருத்தப் பாக்கள் 90 சந்த வகைகளுடன் பாடப் பெற்றது.

தேம்பாவணி என்னும் நூல் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான புனித யோசேப்பு மீது

இயற்றப்பட்ட நூலாகும்.

இத்தமிழ்க் காப்பியம் பிறமொழி நூல் ஒன்றில் வருகின்ற செய்திகளைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்ப யோசேப்பின் வரலாற்றை இயற்றியிருக்கிறார் வீரமாமுனிவர்.

சீறாப்புராணம் உலகில் தூய வாழ்க்கை நடத்திய உத்தமர் நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைக் கூறும் நூல். இந்நூல் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் உணர்த்தும் காப்பியமாகத் திகழ்கின்றது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

பயிற்சி-1

1. ஆ) திருநாவுக்கரசர்
2. இ)10 பாடல்கள்
3. அ)51 பதிகங்கள்
4. ஈ)திருக்கோவையார்
5. அ) மாணிக்கவாசகர்
6. அ) பழமொழி
7. ஆ)ஜி யு போப்

பயிற்சி- 2

1. ஆ) திருமால்
2. இ)ஆண்டாள்
3. அ)சங்கத்தமிழ் மாலை முப்பது
4. ஈ) திருப்பாவை
5. இ)ஆண்டாள்
6. ஈ)பெரியாழ்வார்

பயிற்சி- 3

1. **அ)** சவுல்
2. ஆ) தாவீது
3. இ) வளன்
4. ஈ) ராஜரிஷி
5. அ) வளன்
6. இ) தேம்பாவணி
7. அ) வீரமாமுனிவர்

பயிற்சி -4

1. ஆ) சீறாப் புராணம்
2. அ)உமறுப்புலவர்

3. அ)5027
4. இ) சீதக்காதி
5. ஈ) நபிகள் நாயகம்

**பார்வைநூல்கள்**

1. **திருவாசகம்,** அருணா பப்ளிகேஷன், சென்னை, பதிப்பு- 2007.

2. **திருப்பாவை,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு -2009.

3. **தேம்பாவணி**

4. ***சீறாப்புராணம்***

5. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன், மு, சாகித்திய அக்காதெமி, புது தில்லி.

6. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.

**பயிற்சி வினா - விடை**

1. ***சீறாப்புராணம்* குறிப்பு வரைக.**
   *சீறாப்புராணம்* என்பது**,** இறைத்தூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு**,** உமறுப்புலவரால் இயற்றப்பட்ட ஒரு தலைச்சிறந்த இஸ்லாமிய இலக்கியம் ஆகும். இது மூன்று காண்டங்களையும்**, 92** படலங்களையும் கொண்டது.
2. **உமறுப்புலவர் குறிப்பு வரைக**
   உமறுப்புலவர் (**1642-1703)** தமிழ் இஸ்லாமியக் கவிஞர். *சீறாப்புராணம்* என்னும் செவ்வியல் காவிய நூலை இயற்றியவர்.
3. **எட்டயபுர மன்னனின் அவைப்புலவராக இருந்தார்.**
   நபிகள் நாயகம் யாருக்காக யாரிடம் பிணையாக நின்றார்**?**
4. **பெண்மானுக்காக வேடனிடம் பிணைாக நின்றார்**
   நபிகள் நாயகம்

**பயிற்சி வினாகள்**

1. மாணிக்கவாசகர் இறைவனிடம் கசிந்துருகி வேண்டிய நிலையை விளக்கி எழுதுக.
2. திருவாசகம் உணர்த்தும் பிறப்பு நிலைகள் குறித்து விளக்குக.
3. திருப்பாவை உணர்த்தும் மார்கழி நீராடல் குறித்துக் கட்டுரை வரைக.
4. பாவைநோன்பின் சிறப்புகள் குறித்து கட்டுரை வரைக.
5. தேம்பாவணியில் வீரமாமுனிவர் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
6. வளன் சனித்தப் படலத்தின் வழி நீவீர் அறிந்தவற்றை தொகுத்து கட்டுரை வரைக
7. *சீறாபுராணம்* பாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
8. நபிகள் நாயகம் மானுக்கு பிணையாக நின்ற நிகழ்வினை விளக்கி கட்டுரை வரைக.

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்

3.1 கலைகள்

3.2 சிற்பக்கலை

3.3 ஓவியக்கலை

3.4 இசைக்கலை

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நின்று மனிதனது உள்ளத்திற்கு உவகை ஊட்டி உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது கலையாகும். கலையாற்றல் காவியமாக வெளிப்படலாம் கண்ணைக் கவரும் ஓவியமாக வெளிப்படலாம் சிற்பமாக உருக்கொள்ளலாம் மனதை மகிழ்விக்கும் இசையாக பிறப்பெடுக்கலாம். எனவே உள்ளத்தில் பொங்கி எழும் கலை ஆற்றலாகிய சிற்பம் , ஓவியம், இசை, கூத்து ஆகியவற்றை இப்பாடத்தில் காண்போம்.

**குறிக்கோள்**

- ❖ உணர்ச்சிகளையும் கருத்துகளையும் உருவங்கள் மூலமாக வெளிப்படுத்துவது சிற்பக்கலையின் நோக்கமாகும்.
- ❖ ஓவியக்கலையின் வழி மனிதன் அழகுணர்ச்சியை வெளிப்படுத்திக்காட்டுதல்.
- ❖ தமிழரின் இசை அறிவை உணர வைத்தல்

**3.1 கலைகள்** :

இயற்கையிலும் வாழ்க்கையிலும் உள்ள அழகின்பம் தெளிவாக இல்லாமல் கலந்து உள்ளன. இவ்வாறு கலந்த நிலையை மாற்றி வேண்டுவனவும் பொருந்துவனவும் மட்டும் கொண்டு அமைத்தால், மனிதனின் மனம் நன்கு நுகர செய்வது கலைகள்.

இயற்கையும் வாழ்க்கையும் தரும் இன்பம் நொடிக்கு நொடி மாறிவிடுகிறது. நாம் வேண்டும் போது கிடைப்பதில்லை. ஆனால், கலை நாம் வேண்டும்போது கிடைக்கக்கூடிய வகையில் அதனைப் படைத்து நிலைக்கச் செய்கின்றது.

கலை, சுவை நிரம்பியதாக அமைந்து மரத்துப்போன மனத்திற்கு விருந்து அளிக்கிறது. மேற்கூறிய காரணங்களால்தான் கலைகள் நமக்குத் தேவைப்படுகின்றன என்கிறார் மு.வரதராசன்.

அறிவியலுக்கும் கலைக்கும் உள்ள வேறுபாட்டை மு.வ. பின்வருமாறு

எடுத்துரைக்கிறார். “உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை. கருவிகளால் அளந்து வரையறுத்துக் கூறுவது அறிவியல். அளவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் உணர்ச்சியால் வாரி வழங்குவது கலை.”

கலை என்னும் சொல்லும் கல்வி என்னும் சொல்லும் பொதுவாக ஒரே பொருளை உணர்த்துகின்றன. கற்றல் என்றால் ஒருவன் கற்றுத் தெரிந்து கொள்ளுதல். கலை என்றால் அவ்வாறு கற்றுத் தெரிந்து கொள்வதை அழகுணர்ச்சியோடு தெரிந்து கொள்வது என்று பொருள் கொள்ளலாம் எனக் கலைக்கு மா. நன்னன் விளக்கம் அளிக்கிறார்.

கலை கருத்தின் உறைவிடம்; அழகின் பிறப்பிடம்; இன்பத்தின் ஊற்று; கவர்ச்சியின் நிறைவு; மகிழ்ச்சியின் மாட்சி; பண்பாட்டின் கொடுமுடி; நாகரிகத்தின் ஒளிவிளக்கு. மனிதனுடைய எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்குவது கலை என்கிறார் க.த. திருநாவுக்கரசு.

மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி நிரம்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலே கலை என்று மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

கலை என்பது மனிதனின் காட்சிக்கும் கருத்திற்கும் இலக்காகி அளவும் பொருத்தமும் தோற்றப் பொலிவும் அழகும் பெற்றதாக உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கும் அமைப்பில் உருவாக்கம் பெறுவதாகும் எனத் 'தமிழகத்துக் கலைகள்' என்னும் நூலில் சி.கோவிந்தராசனார் கூறுகிறார்.

“ஒரு பொருளைத் திறம்பட படைத்துக் காட்டுவதும் ஒரு வினை நிகழ்ச்சியைத் திறம்பட இயற்றிக் காட்டுவதும் கலை" என்கிறார் பொற்கோ.

**கலை சொல்லும் பொருளும்**

சங்கப் புலவர்கள் 'கலை' என்ந சொல்லை ஆண்மான் மானின் கொம்பு என்ற பொருளில் மட்டும் ஆண்டனர் சங்க நூல்களையடுத்து வந்த சிலப்பதிகாரத்தில் தான் 'கலை என்னும் சொல் 'அழகிய படைப்பு' என்னும் விரிந்த பொருள் காணப்படுகிறது

”எண்ணெண் கலையும் இசைந்துடன் போக” (சிலம்பு)

**கலை - வகைகள்**

கலைகள் அறுபத்து நான்கு எனக் கூறுவர். அவை 1. எழுத்திலக்கணம் 2. எழுத்தாற்றல் 3. கணிதம் 4. மறைநூல் 5. தொன்மம் 6. இலக்கணம் 7. நயனூல் 8. கணியம் 9. அறநூல் 10. ஓகநூல் 11. மந்திர நூல் 12. நிமித்திக நூல் 13. கம்மிய நூல் 14. மருத்துவ நூல் 15. உறுப்பமைவு நூல் 16. மறவனப்பு 17. வனப்பு 18. அணிநூல் 19. மதுரமொழிவு 20. நாடகம் 21. நடம் 22. ஒலிநுட்ப அறிவு 23. யாழ் 24. குழல் 25. மதங்கம் 26. தாளம் 27. விற்பயிற்சி 28. பொன் நோட்டம் 29. தேர்ப்பயிற்சி 30. யானையேற்றம் 31. குதிரையேற்றம் 32. மணிநோட்டம் 33. நிலத்து நூல்/மண்ணியல் 34. போர்ப்பயிற்சி 35. மல்லம் 36. கவர்ச்சி 37. ஓட்டுகை 38. நட்புப் பிரிப்பு 39. காமநூல் 40. மயக்குநூல் 41. வசியம் 42. இதளியம் 43. இன்னிசைப் பயிற்சி 44. பிறவுயிர் மொழியறிகை 45. மகிழுறுத்தம் 46. நாடிப்பயிற்சி 47. கலுழம் 48. இழப்பறிகை 49. மறைத்ததையறிதல் 50. வான்புகவு 51. வான்செலவு 52. கூடுவிட்டுக் கூடுபாய்தல் 53. தன்னுருக் கரத்தல் 54. மாயச்செய்கை 55. பெருமாயச்செய்கை 56. அழற்கட்டு 57. நீர்க்கட்டு 58. வளிக்கட்டு 59. கண்கட்டு 60. நாவுக்கட்டு 61. விந்துக்கட்டு 62. புதையற்கட்டு 63. வாட்கட்டு 64. சூனியம் என்பதாகும்.

கலைகள் அறுபத்தி நான்கு எனக் கூறினாலும்கூட கலை என்றதும் நம் நினைவில்

எழுவன பயன் கலைகளே ஆகும். பயன் கலைகளில் சிலவற்றைக் குறித்து விரிவாகக் காண்போம்.

தமிழரின் கலை வெளிப்பாடுகள் அவர்தம் பண்பாட்டுப் பெருமைக்குச் சான்று பகர்வன. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று கூறுவது மரபு, இசை, நாடகம், கட்டடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் தமிழர் திறம் வாய்ந்தவர் ஆவர்.

## 3.2. ஓவியக்கலை

குகைகளில் வாழ்ந்த காலந்தொடங்கி ஓவிய ஈடுபாடு மனிதனுக்கு இருந்திருப்பதைச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. பறவைகள், விலங்குகள், மரங்கள், மனிதர்கள் எனத் தான் கண்டவற்றையும் வேட்டை, சடங்கு என தான் செய்தவற்றையும் அவன் தீட்டி மகிழ்ந்ததை உலகெங்கும் கிடைக்கின்ற பாறை ஓவியங்கள் எனப்படும் குகை ஓவியங்கள் அறிவிக்கின்றன.

கிராமம், நகரம் என வாழ்வியல் வளர்ந்த போது அழகுணர்ச்சியும் மேம்பட்டு தன் புழங்கு பொருள்களிலும் ஓவியம் வரைந்து வாழ்வை அழகுப்படுத்திக் கொண்டதைச் சிந்து, சுமேரியா, எகிப்து முதலான இடங்களிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் காட்டுகின்றன. தமிழகத்திலும் தொல்பழங்காலம் முதல் இடையறாது ஓவியக்கலை வளர்ந்து வந்துள்ளது.

ஓவியத் தீட்டிய துகிலை ஏந்தி மடலேறுதல் என்னும் அகத்திணைக் கூறினைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை முதலியன சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டமைப் பற்றிப் பேசுகின்றன. சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையிலும் ஓவியம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிலம்பில் ஓவிய விதானம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அரண்மனைகளில் ஓவியங்கள் வரையப்பட்ட மாடங்கள் விளங்கின். பாண்டியன் மாறன்வழுதி அத்தகு சித்திர மாடத்தில் இறந்தமையால் அவன் பெயர்முன் சித்திர மாடத்துத் துஞ்சிய எனும் அடைமொழி அமைந்தது. திருப்பரங்குன்றத்து முருகன் கோயிலில் எழுதெழில் அம்பலம் ஒன்று இருந்தது. அதில் புராணக் காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன.

**தொல்பழங்கால ஓவியங்கள்**

பழங்கால மனிதர் வாழ்ந்த இயற்கைக் குகைகளில் வேட்டைக் காட்சிகளும் பிறவும் காணப்படுகின்றன. தொல்பொருளாய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல் பல எழுத்து உருவங்களும் பிற உருவங்களும் உள்ளன. இவற்றைக் கொண்டு தொல்பழங்கால மக்களின் ஓவியத் திறனை அறிய முடிகிறது.

**சங்ககால ஓவியக்கலை**

தொல்காப்பியர் காலத்தில் நடுகல் வணக்கம் இருந்தது. அக்கல்லில் இறந்த வீரனது உருவம் செதுக்கப்பட்டிருந்தது. கல்வில் உருவம் செதுக்கப்படுவதற்கு முன்பு சிற்பி அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் சிற்பக் கலையினும் தொன்மை வாய்ந்தது ஓவியக்கலை எனப் புலனாகிறது. ஓவியம், ஓவம், கண்ணுள் வினைஞர், வட்டிகைச் செய்தி, புனையா ஓவியம், எழுதுநிலை மண்டபம், சித்திரக்கூடம், சித்திரமாடம், ஓவிய மாக்கள், துகிலிகை முதலிய சொற்கள் சங்க இலக்கியங்களில் பரவலாக ஆளப்பட்டுள்ளன.

ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்தில் இருந்தது தெளிவாகிறது. பலவண்ணக் கலவையால் 'துகிலிகை' கொண்டு படைக்கப்பெற்ற காட்சிகள் ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம். படம், படாம், வட்டிகை என்றெல்லாம் அழைக்கப்பட்டன. ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதொழில் அம்பலம் என அழைக்கப்பெற்றன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது தேவி படுத்திருந்த கட்டிலின் மேற்கூரையில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததை 'நெடுநல்வாடை' என்னும் நூல் வழி அறிய முடிகிறது.

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன் கோவிலில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகத் தீட்டப் பட்டிருந்ததைப் 'பரிபாடல்' கூறுகிறது. செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும் மாடங்கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் தீட்டியிருந்ததாக 'மணிமேகலை' கூறுகிறது.

திருப்பரங்குன்றத்து மலைமீதிருந்த முருகன் கோயிலில் எழுத்துநிலை மண்டபம் ஒன்று இருந்ததாகவும் அதில் இரதி, காமன், அகலிகை, இந்திரன் மற்றும் கௌதம முனிவர் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்ததைப் பரிபாடல் விளக்குகிறது. காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்துக் கொண்டு மடல் ஏறும் வழக்கம் இருந்ததை அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன.

**பல்லவர், பாண்டியர் கால ஓவியங்கள்**

பல்லவர்கள் தாங்கள் உருவாக்கிய கோயில்கள் அனைத்திலும் காணப்படும் ஓவியத் துணுக்குகள் புலப்படுத்துகின்றன. பல்லவர் கால ஓவியங்களில் எஞ்சியுள்ளவை காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் பனைமலை தாளகிரிசுவரர் கோயிலிலும் உள்ளவையாகும். இப்படி இருக்கும் ஓவியங்கள் சுவரோவியங்களாகக் காட்சி தருகின்றன. பல்லவர் காலத்துக் குடைவரை கோயில்களிலும் பின்பு கட்டப்பட்ட கட்டுமான கோயில்களின் மீதும் ஆங்காங்கே காணப்படும் சுவரோவியங்களும் காலத்தால் முந்தியன ஆகும். மாமண்டூரில் இருக்கும் ருத்ரவாளீஸ்வரம் குடைவரைக் கோயிலில் இருக்கும் ஒரு சிறிய ஓவியமே பல்லவர் காலத்துச் சுவரோவியங்களில் மிகப் பழமையானதாகும் என்கிறார் ப.சு.ராமன். (சித்திரமாரமடம் புத்திரன் 44).

மெல்லிய கோடுகளைக் கொண்டு கலவை வண்ணங்களால் அழகாகத் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் பல்லவர் காலத்து ஓவியக் கலையின் சிறப்பினை உணர்த்துகிறது. கட்டடம், சிற்பம் போன்று ஓவியக் கலைக்கும் புத்துயிர் ஊட்டியவன் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் ஆவான் அவன் சித்திரகாரப்புலி" எனச் சிறப்புப் பெயர் பெற்றிருந்தான். திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில், பல்லாவரம் குகைக் கோயில் காஞ்சி ஏகாம்பரேச்சுரர் கோயில் பௌர்ணமி மண்டபம் முதலியன மகேந்திரவர்மனின் சித்திரக் கலையை விளக்கும் பல்லவர்களையடுத்து வந்த பாண்டிய மன்னர்களின் ஓவியங்கள் திருமலைப்புரம் முதலாகப் பல இடங்களில் காணப்படுகின்றன.

**சித்தன்னவாசல்**

சித்தன்னவாசல் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது. இங்குக் குடைவரை உள்ளது. இது சமணக் கோயில். அவனிபசேகர ஸ்ரீ வல்லபன் என்ற பாண்டிய மன்னன சித்தன்னவாசல் குகையைப் புதுப்பித்தான் இச்செய்தியைக் கல்வெட்டில் பொதிக்கப் ட்ட தமிழ்ப்பா விளக்குகிறது.

திருந்திய பெரும்புகழ் தேவ தரிசனத்து அருந்தவ முனிவனைப் பொருட்செல்வன் அறன்கிளர் நிலைமை இளம்கௌதமன் எனும் வளங்கெழு திருநகர் மதுரை ஆசிரியர் அவனிப சேகர சீர்கெழு செங்கோல். (சிரி வல்லவன்) உலகமே வியக்கும் ஓவியங்கள் சித்தன்னவாசலில் காண முடிகிறது.

சித்தன்னவாசலில் குடையப்பட்ட முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடன மாதர் இருவரின் உருவங்கள் தீட்டப்பெற்றுள்ளன. வலப்புறத்தூணின் உட்பகுதியில் அரசன் அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. மணிகள் பதிக்கப்பெற்ற சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் அரசன் முடிமேல் காட்சியளிக்கிறது. மேற்கூரையில் பெரிய ஓவியம் உள்ளது. அந்த ஓவியத்தில் தாமரைக் குளம் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. தாமரை இலைகள், மலர்கள், பேரரும்புகள் முதலியவற்றைக் காணமுடிகிறது. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின்றனர். குளத்தில் எருமைகளும் மீன்களும் காணப்படுகின்றன. இக்கோயில் சமணக் கோயிலாதலின் பல தீர்த்தங்கரர் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. ஆகவே சித்தன்னவாசல் ஓவியம், சிற்பம், நடனம் என முக்கலைகளையும் சிறப்பிக்கும் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

மகேந்திரவர்ம பல்லவன் சித்திரகாரப்புலி என்றே அழைக்கப்பட்டான். பனைமலைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகியவற்றின் திருச்சுற்றுகளில் பல்லவர் கால ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. பாண்டியர் கால ஓவியக்கலை மாட்சியைத் திருநெல்வேலி-திருமலைப்புரம் குகைக்கோயில் வழி அறியலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் குகை ஓவியங்கள், பிற்கால ஓவியக்கலையின் பெருமைக்குச் சான்று. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவரையில் பெரியபுராணக் காட்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. சோழர் காலத்து ஓவியங்களான இவற்றின் மேல் சுண்ணாம்புப் பூசி நாயக்கர்கள் தம் ஓவியத்தை வரைந்தமையைத் தொல்லியலாளர் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

கோயில்கள், ஓவியங்களின் பதிவுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. கோயில்களில் உள்ள ஓவியங்களில் புராணக் காட்சிகள், ஆடல் மகளிர் உருவங்கள், தெய்வத்திரு உருவங்கள் ஆகியன பெரிதும் இடம்பெற்றுள்ளன. மதுரை, தில்லை, தஞ்சை, குடந்தை முதலிய இடங்களில் நாயக்கர்கால ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் தஞ்சை சரஸ்வதி மகாலிலும் அரண்மனைப் பகுதிகளிலும் பெரியகோயிலிலும் நாயக்கர்கால ஓவியங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். மராட்டியர்கால ஓவியக்கலை. கண்ணாடி, தந்தம் இவற்றிலும் இடம்பெற்றன.

இன்று மேனாட்டு ஓவியக்கலைப் பாணி குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. புதுமை ஓவியங்களும் இக்கால ஓவியர்களால் வரையப்படுகின்றன.

ஓவியங்களின் கருப்பொருளாகத் தெய்வங்கள். மன்னர், செல்வர், பெரியோர் ஆகியோரின் உருவங்களும் ஆடல் மகளிரின் அழகுக் காட்சிகளும் புராண இலக்கியக் காட்சிகளும் அக்காலத்தில் இடம்பெற்றமையைப் போல அவற்றோடு இக்காலத்தில் சமுதாய அவலங்களும் எளிய மக்களின் வாழ்க்கைக் காட்சிகளும் கருப்பொருளாக உள்ளன. திரைச்சீலை, கோயிற் சுவர் ஆகியவற்றில் அக்காலத்தில் ஓவியங்கள் இடம்பெற்றன. இக்காலத்தில் ஓவியக் களனாகக் காகிதமே பெரிதும் அமைகிறது.

சாலைத்தரைகளில் கூட கண்கவர் ஓவியங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வரைந்து வைக்கும் ஓவியர்களையும் நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்க நேர்கிறது. கதை, கவிதை இலக்கிய நூல்களில் விளக்கமும் அழகும் தரும் வகையில் இக்காலத்தில் ஓவியம் இடம்பெறுகிறது. ஓவியத் தொகுதிகளே இக்காலத்தில் தனி நூல்களாகவும் வெளிவருகின்றன. மரபுநிலை, புதுமைநிலை ஓவியக் கண்காட்சிகளும் ஆங்காங்கு நிகழ்ந்து வருகின்றன.

**சோழர் கால ஓவியங்கள்**

தொண்டை மண்டலத்தில் தொடங்கிய கலைப்பாணி கொங்கு நாட்டிலும் சேர நாட்டிலும் பரவத் தொடங்கியது. திருநந்திக்கரை குகைக்கோயிலுள்ள சேரர் கால ஓவியங்கள் புகழ் வாய்ந்தன. சோழர் கால ஒவியங்களுள் இன்று நாம் காணுமாறு இருப்பவை தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்கள் ஆகும். இவ்வோவியங்கள் தஞ்சைப் பெரியகோயில் கருவறையின் புறச்சுவர்கள் மீது எழுதப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவை மறைக்கப்பட்டு அவற்றின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன.

சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாற்றைத் தடுத்தாட்கொண்டது, திருவஞ்சைக் களத்திலிருந்து கயிலைக்கு அழைத்துச் சென்றது, கயிலையில் ஆதி உலாவரம் ஞான உலா கேட்பது என்ற மூன்று பெரும் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஓவியம் அமைக்கப்பட்டுள்ளதாக குடவாயில் பாலசுப்ரமணியம் கூறுகிறார் (சித்திரமாடம், பாரதிபுத்திரன், ப.54) புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் இல்லத்தில் திருமண நிகழ்விற்காக உணவு தயாரிக்கும் காட்சி முதற்பகுதியாகும். பெரிய அளவிலான மூன்று பானைகள் அடுப்பின் மேல் உள்ளன. ஆண்களும் பெண்களும் இணைந்து சமையற்பணி மேற்கொள்கின்றனர். ஓர் ஆடவன் அடுப்பின் மேல் உள்ள பானையில் அரிசியைக் கொட்டுகிறான். மற்றொருவன் அவனுக்குத் துணை புரிகிறான். பெண்கள் காய்களை நறுக்குகின்றனர். பலவகைப் பாத்திரங்கள் அங்குள்ளன. சமையற்கூட காட்சிக்கு மேலாகத் திருமணப் பந்தல் காணப்பெறுகிறது. ஜகதி, கண்டம், குமுதம் போன்ற கட்டுமான அமைப்புடன் கூடிய திண்ணையின்மேல் திருமணத்திற்கு வருகைபுரிந்த முதியவர்கள் அமர்ந்துள்ளனர். இளையோர் நின்றுள்ளனர். பந்தலின் விதானம், அதில் பறக்கும் பறவைகள். முதியவர் ஒருவரின் தோற்றம் முதலியன இதில் இடம்பெறுகின்றன. மூன்றாம் காட்சி திருவெண்ணைநல்லூர் சபையைக் காட்டுவதாகும். அதில் முதிய கிழவரின் ஓவியம் நன்கு வரையப் பெற்றுள்ளது. மேலும், கயிலைக்காட்சி, சோழர்கால நாட்டிய மகளிர் குறித்த ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன.

**விஜயநகரத்தார் கால ஓவியம்**

தமிழ்நாட்டின் பல இடங்களில் விஜயநகரத்தார் கால ஓவியங்கள் உள்ளன. காஞ்சி, காளத்தி, குடந்தை, திருவரங்கம், திருப்பதி, திருவண்ணாமலை, தில்லை, திருவீழிமிழலை, ஓமலூர் இடங்களில் விஜயநகர ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. திருவரங்கம் கோயிலில் வேணுகோபாலர் சந்நிதி முகமண்டபம் மேல் விதானத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்கு குழலூதும் வேணுகோபாலனையும் அண்ணலைச் சூழ்ந்த ஆநிரைகளையும் கோகுலனைச் சூழ்ந்த கோகுலத்து கோபியரின் எழில் கோலமும் சிறப்பு வாய்ந்தவையாகும். தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலைச் சிவன்கோயில் மண்டபத்தின் மேல் விதானத்தில் உள்ள ஓவியங்கள் குழலூதும் வேணுகோபாலனையும் காளியன் என்னும் நஞ்சுண்ட நாகத்தின் மேல் நடமாடும் நாயகனாகக் கிருஷ்ணனையும் சித்திரிக்கும்.

காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் கோபுரச் சுவற்றில் உள்ள கண்ணனுடைய இளம்பருவ விளையாடல் ஓவியங்கள் விஜய நகரத்தார் காலத்தைச் சேர்ந்தது. கிளியின்மேல் ரதிதேவி அமர்ந்துள்ள காட்சி, ரதியும் மன்மதனும் உள்ள காட்சி காணத்தக்கது. தர்மபுரி மாவட்டம் அதமன் கோட்டையில் உள்ள ஒரு கோயிலில் இராமாயணக் காட்சிகள் முழுமையும் மேல்விதானத்தில் தீட்டப்பட்டுள்ளன.

**நாயக்கர் கால ஓவியங்கள்**

விஜயநகர மன்னர்களைப் பின்பற்றி அவர்களின் பிரதிநிதிகளாக வந்த நாயக்கர்கள் பல இடங்களில் ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். மதுரை, தில்லை,திருவெள்ளறை, திருக்குற்றாலம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம், செங்கம், பட்டீஸ்வரம் முதலிய இடங்களில் நாயக்கர்கால ஓவியங்கள் உள்ளன. மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் ஊஞ்சல் மண்டபத்தின் எதிரில் உள்ள சிறு மண்டபத்தின் மேல்விதானத்தில் அங்கயற்கண்ணி அம்மையைச் சுந்தரேசப் பெருமாள் மணந்துக்கொள்ளும் காட்சி மிக அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. மராட்டியர் கால ஓவியங்களைத் தஞ்சை அரண்மனையிலும் தஞ்சை அருகில் உள்ள மாரியம்மன் கோயில் என்னும் புன்னைநல்லூரிலும் காணலாம். நாயக்க மராட்டிய ஓவியங்கள், மரபில் மாறுபட்டுக் கண்கள் மிகப் பெரிதாக அகன்றும் நீண்டும் தோற்றத்தில் சிறிது கேலிச் சித்திரம் போலும் அமைந்துள்ளன.

**இக்கால ஓவியக்கலை**

வீரனது உருவம், இறைவனின் உருவம், இயற்கையை வரைதல் எனப் பல்வேறு நிலைகளில் இயங்கிய ஓவியம் ஐரோப்பாவில் தோன்றிய கலை இயக்கங்களின் தாக்கத்தால் பெரிதும் மாற்றம் அடைந்துள்ளது. அதனால் உருவம், உள்ளடக்கம், வண்ணச் சேர்க்கைகள் வெளியீட்டு முறைகள் ஆகியவற்றில் பெருமாற்றங்கள் பெற்றுள்ளன. ஓவியம் நவீனத் தன்மை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் போர்ச்சுக்கீசிய ஓவியங்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கிறித்தவ ஆலயங்களில் இடம்பெற்றிருப்பதை எஸ்.ஜெயசீலஸ்டீபன் எடுத்துரைக்கிறார் (சித்திரமாடம், பாரதி புத்திரன், ப.99). இக்காலத்தில் சமுதாய அவலங்களும் எளிய மக்களின் வாழ்க்கைக் காட்சிகளும் ஓவியர்களின் கருப்பொருள்களாக உள்ளன. இக்காலை ஓவியம் வரையக் காகிதம் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. ஒவியக் கண்காட்சிகள் பெரிய அளவில் நடைபெறுகின்றன. ஓவியக்கலை வளர தமிழ்நாட்டில் பல கல்லூரிகள் இருக்கின்றன.

## 3.3. சிற்பக்கலை

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.. தமிழ்ச் சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள்.

**கற்கவிஞர்கள்**

சிற்பக் கலைஞர்களைக் "கற்கவிஞர்கள்" என்று அழைப்பர். ஏனென்றால் அவர்கள் சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைகின்றார்கள்.

**சிற்பங்களின் வகைகள்**

சிற்பங்கள் அவற்றின் உருவ அமைப்பின் அடிப்படையில் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

முழு உருவச் சிற்பங்கள்

புடைப்புச் சிற்பங்கள்

**முழு உருவச் சிற்பங்கள்**

உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்பர்.

**புடைப்புச் சிற்பங்கள்**

பின்பகுதி தெளிவாக தெரியாமல் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் என்பர். புடைப்புச் சிற்பங்களை சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைக் காணலாம்.

**சிற்பங்கள் அமைக்கப்படும் நான்கு நிலைகள்**

சிற்பங்கள் நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் வடிவமைக்கப்படுகின்றன. அவை,

- தெய்வ உருவங்கள்
- இயற்கை உருவங்கள்
- கற்பனை உருவங்கள்
- முழுவடிவ (பிரதிமை) உருவங்கள்.

பழங்காலம் முதல் தமிழகத்தில் சிற்பக்கலை சிறந்து விளங்கிற்று. அகழாய்வில் புகார்,

காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை முதலிய இடங்களில் கிடைத்த மண்ணுருவங்கள் தொன்மையான சிற்பக் கலைக்குச் சான்றாகின்றன. கிராமப்புறக் கோயில்களில் கிடைக்கும் சுதைச் சிற்பங்கள் காண்போரை ஈர்க்கும் வகையில் உள்ளன. பல்லவர் காலத்தில் சுதைச்சிற்பங்கள் இருந்தன. சோழர் மற்றும் நாயக்கர் காலத்துக் கோயில்களில் கூட சுதைச்சிற்பங்கள் இடம்பெற்றன. நடுகல் உருவமைத்தல் கற்சிற்பத்தின் தொடக்கநிலை எனலாம்.

கண்ணகிக்குப் படிமம் அமைக்கப்பட்டதைப் பற்றிச் சிலப்பதிகாரம் பேசுகிறது. தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை பல்லவருக்கு உரியதாகும். கோயில்கள் சிற்பங்களின் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. மாமல்லபுரத்தில் உள்ள மகிடாசுரமர்த்தினி குகை, ஆதிவராகர் மண்டபம், மூர்த்தி மண்டபம், வராகர் குகை ஆகியவற்றில் அழகிய சிற்பங்கள் உள்ளன. சிவன். திருமால், முருகன், காவற்பெண்கள், திருமகள், கொற்றவை, வராகமூர்த்தி, நான்முகன், நாரதன், விலங்குகள், பல்லவ மன்னர்களின் உருவங்கள் இவற்றில் சிற்பக்கலை நுட்பங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. பாறையில் இடம்பெற்றுள்ள பகீரதன் தவம் குறிக்கும் புடைப்புச் சிற்பம் குறிப்பிடத்தக்கது.

தாராசுரத்தில் உள்ள ஐராவதேசுவரர் கோயில் சிற்பங்கள், தில்லைக் கோபுரச் சிற்பங்கள், தஞ்சைப் பெரியகோயில் சிற்பங்கள் ஆகியன சோழர்காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்றாகின்றன. பல்லவர், சோழர் காலச் சிற்பக்கலைகளுக்கு இடையே உருவ அமைப்பு, பாவங்கள் முதலியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. நாயக்கர் காலத்தில் அவர்தம் சிற்பக்கலையின் தாக்கம் தமிழகக் கோயிற் சிற்பங்களில் காணப்பட்டன. தெலுங்கு, கன்னடப் பகுதிகளின் ஆடை, அணிகலன் முதலியவற்றின் சாயல் அக்காலத்தில் வடிக்கப்பட்ட தமிழகச் சிற்பங்களில் இடம் பெற்றன.

செம்பில் சிலைகளை வார்க்கும் கலையும் நெடுங்காலமாகத் தமிழகத்தில் நிலவி வந்தது. இக்கலைக்கான தொழில்நுட்பத்தைத் தமிழர் பண்டுதொட்டு அறிந்திருந்தனர். பல்லவ, சோழர் காலத்தில் இக்கலை சிறப்பான நிலையை எய்தியது. உலகப் புகழ்ப்பெற்ற நடராசர் உருவங்கள் செப்புப் படிமக்கலையின் உயர்வை உணர்த்தும். செப்புத் திருமேனிகள் ஐந்து உலோகக் கலவையால் செய்யப்பட்டன. இதனால் இவை பஞ்சலோகத் திருமேனிகள் எனப்பட்டன. இவை முழுமையும் கனமான நிலையிலும், உட்கூடான நிலையிலும் செய்யப்பெறும்.

தமிழகத்தில் காணப்படும் சிற்பங்களோடு சமண, பௌத்த சமயஞ்சார் சிற்பங்களும் காணப்படுகின்றன. தமிழகத்தில் காணப்படும் சிற்பங்களால் அவ்வக்கால ஆடை, அணிகலன் முதலியவற்றின் அமைப்புகளை அறிய முடிகின்றது.

**சங்க காலச் சிற்பக்கலை**

வீரச் செயல் புரிந்து இறந்துவிட்ட வீரனுக்குக் கல் நடுவது பழந்தமிழர் பழக்கம். அந்தக் கல்லில் வீரனது உருவத்தைச் செதுக்கி, அதற்கு அடியில் அவ்வீரனது பெயரும் புகழும் பொறித்து வைத்த செய்தியைத் தொல்காப்பியம் தெரிவிக்கிறது. செங்குட்டுவனால் இமயமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கல்லில் கண்ணகியின் உருவம் பொறிக்கப்பட்ட

செய்தியைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. சங்க காலத்தில் சுதையினாலான (சுண்ணாம்பு) உருவங்கள் ஏராளமாகச் செய்யப்பட்டன. இவ்வுருவங்கள் செய்வாரை "மண்ணீட்டாளர்' என்று அழைப்பர். பூம்புகார், மதுரை முதலிய இடங்களில் மண்ணீட்டாளர் புகழுடன் இருந்தனர் எனச் சிலப்பதிகாரம் வழி அறிய முடிகிறது.

பண்டைய சோழரின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சிபுரம், அரிக்கமேடு, கொற்கை, குடந்தை ஆகிய இடங்களில் புதைபொருளாகக் கிடைத்த மண் உருவங்கள் இதற்குச் சான்றுகளாகும். பூம்புகார் நகரத்திலிருந்த மாளிகைகளில் சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்களை இந்திரவிழாவின் போது பல பகுதிகளிலிருந்து வந்த மன்னர் கண்டு களித்தனர் என மணிமேகலை கூறுகிறது.

**பல்லவர் காலச் சிற்பக்கலை**

பல்லவர் காலத்தில் செங்கல்லால் எழுப்பப்பட்ட கோயில்களில் சுதை உருவங்கள் ஏராளம் செய்து வைக்கப்பட்டன. தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை பல்லவர்களுக்குரியதாகும். இவர்கள் கட்டிய குடைவரைக் கோவில்களிலும் கட்டுமானக் கோயில்களிலும் எண்ணற்ற சிற்ப உருவங்கள் உள்ளன. பாறைகளிலேயே செதுக்கப்பட்ட சிற்பங்கள், கட்டிடங்களை அழகு செய்யும் சிற்பங்கள் என இருவகையான சிற்பங்கள் பல்லவர் காலத்தில் இருந்தன.

பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களிலும் ஒற்றைக் சுற்றளிகளிலும் பாறைகளிலும் கட்டடக் கோயில்களிலும் சிற்பங்கள் மிகுந்துள்ளன. மாமல்லபுரத்தில் மகிஷாசுர மர்த்தினி குகை, ஆதிவராகக்குகை (I&II), மும்மூர்த்தி குகை ஆகிய குகைக் கோயில்களில் எழிலார்ந்த சிற்பங்கள் உள்ளன.

பல்லவர்களது கட்டுமானக் கோயிலான காஞ்சி கைலாயநாதர் கோயிலில் சிவபெருமானின் பல்வேறு தோற்றங்களும் திருமால், நான்முகன், முருகன், கொற்றவை முதலியவர்களின் தோற்றங்களும் பல்வேறு நிலைகளில் சிற்பமாகப் படைக்கப்பட்டுள்ளன. மேலும், காஞ்சி வைகுந்தநாதர் கோயிலில் பல்லவர்களது வரலாறு சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இதனால் தான் சிற்ப வல்லமையில் பல்லவருக்கு ஈடாகத் தமிழகத்தில் யாரையும் கூற முடியாது என்கிறார் இரா. நாகசாமி.

**பாண்டியர் காலச் சிற்பங்கள்**

பாண்டிய மன்னர்கள் அமைத்த குகைக் கோயில்களான திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் சிற்ப வேலைப்பாடுகள் சிறந்துள்ளதைக் காண முடிகிறது. கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோவில் விமானத் தளங்களில் சிற்பி உருவாக்கியுள்ள தெய்வ மூர்த்தங்களைப் பாண்டியர்காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்றாகக் கூறலாம். மேலும், சிவமூர்த்தங்கள் தெய்வீகக்களையுடன் அமைக்கப்பட்டுள்ள திருவாலீசுவரக் கோயிலையும் சான்றாகக் கூறலாம்.

**சோழர் காலத்தில் சிற்பக்கலை.**

புடைப்புச் சிற்பங்கள், முழுச்சிற்பங்கள் என இருவகையாக சோழர் காலச் சிற்பங்களைப் பகுத்துப் பார்க்கலாம். தஞ்சைப் பெரிய கோயில் சிற்பங்கள் சோழர்காலச்

சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. மேலும் கங்கை கொண்ட சோழபுரக் கோயில், திரிபுவனக் கோயில், தாராசுரம் கோயில், சிதம்பரம் கோயில் ஆகியனவற்றில் மேற்கூறிய இருவகையான சிற்பங்களையும் காணமுடிகிறது. தஞ்சைக் கோயிலில் 81 சிவன் நடன உருவங்கள் உள்ளதாகக் கூறுவர். நடனச் சிறப்பும் தத்துவ சிறப்பும் மிக்க நடராஜர் சிலைகள் சோழர் காலத்தே கல்லிலும் செம்பிலும் சிறப்பாக அமைக்கப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரத்தில் சண்டீசர்பதம், சம்மந்தர், ஒரே வட்டக் கல்லில் அமைந்த நவக்கிரகம், சிங்கமுகக் கிணறு ஆகிய சிற்பங்கள் சிறப்புமிக்கன. தாராசுரத்தில் இரண்டாம் இராசராசன் தோற்றுவித்த இராசேசுவரம் கோயிலிலும் தில்லையின் வாயில்களை அலங்கரிக்கும் கோபுரங்களிலும் வைக்கப்பட்ட சிற்பங்கள் சோழர் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

**விஜயநகர - நாயக்கர் காலச் சிற்பங்கள்**

கி.பி.14, 18 ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகரத்து மன்னர்களும் நாயக்க மன்னர்களும் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களையும் திருமண மண்டபங்களையும் அமைத்தனர். அந்த மண்டபத்தின் தூண்களில் வளமான சிற்பங்கள் அமைத்தனர். அராபிய நாட்டிலிருந்து ஏராளமான குதிரைகள் வாங்கினர். இந்த வரவின் காரணத்தால் விஜயநகரத்தார் தூண்களில், வீரர்கள் அமர்ந்த நிலையில் முன்காலைத் தூக்கி நிற்கும் குதிரைகள் உள்ள சிற்பங்கள் ஏராளமாக வடிக்கப்பட்டுள்ளன.

விஜயநகர மன்னர்கள் தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டவர்கள். ஆதலின் அப்பகுதியிலிருந்த சில உருவ அமைப்புகளையும் ஆடை அணிகலன்களையும் இவர்களது சிற்பங்களில் காணமுடிகிறது. விஜயநகரத்தார் காலத்துத் தமிழகச் சிற்பங்களில் மாதர்களின் மார்பகங்கள் மூடப்பட்டு இருப்பதைக் காணமுடிகிறது. தூணில் உள்ள சிற்பங்கள் 5 அல்லது 6 அடிக்குமேல் உயர்ந்தவையாக உள்ளன. அரியநாத முதலியார் கட்டிய ஆயிரங்கால் மண்டபமும் புது மண்டபமும் மீனாட்சி கோவிலும் நாயக்கர் மன்னர்களின் சிற்பப் பெருமையைக் காட்டுகின்றன. மீனாட்சி கோயிலில் பிச்சாடனர். மோகினி, காளியின் நடனம், சிவனுடைய ஊழிக்கூத்து, திருக்கலியாணக் காட்சி இவற்றைக் குறிக்கும் சிற்பத்தூண்கள் உள்ளன.

## 3.4 இசைக்கலை

இசைக்கலை மிகவும் தொன்மையானது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் சங்ககாலத்திற்கு முற்பட்ட திணை வாழ்க்கைக் காலத்திலேயே ஒவ்வொரு நிலத்திற்கும் பண் வகைகளும் இசைக் கருவிகளும் தோன்றிச் செழித்தன. பாணர்கள் பல்வகையான இசைக் கருவிகளை இசைத்து இசை வளர்த்தனர்.

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப இசையோடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர் என்னும் தொல்காப்பிய நூற்பா இசைத் தமிழின் தொன்மையைச் சுட்டுகிறது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங்களும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. அதுமட்டுமின்றி நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசை வேறுபாடுகளையும் செய்யுளில்

இடம்பெறும் வண்ணங்களையும் தொல்காப்பியர் செய்யுளியலில் கூறுகிறார். தமிழ்ச் செய்யுளைப் பாட்டு, பா என்றே வழங்குவர். இது பாடு என்ற வினையடியாகப் பிறந்தது. தமிழ் நெட்டெழுத்து ஏழும் இலக்கணத்தில் வரும் மாத்திரை, அளபெடை ஆகியனவும் இசைக்குப் பொருந்தின.

தமிழ் முத்தமிழ் எனவும் போற்றப்பெறுகிறது. இயல், இசை, நாடகத்துள் இசைக்கலை நடுநாயகமாக வைக்கப்பட்டுள்ளமை தமிழரின் இசைக்கலை ஏற்றத்தை எடுத்தியம்பும்.

**இசைக்கருவியின் வகைகள்**

தமிழரின் இசைக்கருவிகள் தோல், துளை, நரம்பு, வெண்கலம் (கஞ்சம்) என நால்வகைப்பட்டிருந்தன. முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை முதலிய கருவிகள் இருந்தன என்பதனை மலைபடுகடாம் தெரிவிக்கிறது. மேற்கூறிய கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி எனப் பகுத்துள்ளனர். குழல், கோடு, தூம்பு இம்மூன்றும் துளைக்கருவிகள். முழவு, முரசு, பதலை, பறை, துடி போன்றவை தோற்கருவிகள், யாழ். நரம்புக்கருவி. பாண்டில் என்பது கஞ்சக்கருவி.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் உரையால் பேரிகை, படகம், இடர்கை, தக்கை, கணப்பறை, தமருகம். தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை,. முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தருணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், துடி, பெரும்பறை என்னும் தோற்கருவிகளை அறிய முடிகின்றது. பெருங்குருகு, பஞ்ச பாரதியம், பெருநாரை, இசை நுணுக்கம் முதலியன பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இறையனார் களவியலுரைகாரர் முதுநாரை, முதுகுருகு என்னும் இசை நூல்கள் இருந்தனவாகக் கூறுவர்.

இவை குறித்து ஞா. தேவநேயப்பாவாணர் குறிப்பிடும் செய்திகளை முதலில் நோக்குவோம். 'தோற்கருவிகள் ஆடல் முழா, பாடல் முழா, பொது முழா என்றும், அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு, நாள் முழவு, காலை முழவு என்றும்; மணப்பறை, பிணப்பறை என்றும் வகுக்கப்பட்டிருந்தன. பறை என்பது தோற்கருவிப் பொதுப்பெயர். இன்னிசைத் துளைக்கருவிகள் புல்லாங்குழல், இசைக்குழல்(நாதசுரம்), முகவீணை என்னும் ஏழிசைக் குழல்களாகவும்; ஒத்து (ஊமைக்குழல்) என்னும் ஓரிசைக் குழலாகவும் இருவகைப்பட்டிருந்தன. தாரை, சின்னம், வாங்கா, கோம்பு, சங்கு முதலிய ஓரிசைத் துளைக்கருவிகள், ஊர்வலம், போர் முதலிய நிகழ்ச்சிகளில் ஆரவார இசைக்கருவிகளாய்ப் பயன்படுத்தப்பட்டன. மகுடி என்பது நல்ல பாம்பை மயக்குவதற்கென்றே அமைக்கப்பட்ட ஏழிசைச் சிறப்பின்னிசைக் குழலாகும். நரம்புக்கருவிகள் ஒரு நரம்புள்ள சுரையாழிலிருந்து, ஆயிரம் நரம்புகள் உள்ள பெருங்கலம் (ஆதியாழ்) வரை, பல்வேறு வகைப்பட்டிருந்தன. அவற்றுள் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்னும் நான்கும் சிறந்தவை. அவற்றுளும் தலைச்சிறந்தது செங்கோட்டியாழ். அதுவே பின்னர் வீணையாகத் திரிந்தது. ஆயிரம் நரம்பென்பது, ஆயிரங்காற் பூச்சி என்பதிற்போல், நரம்பின் பெருந்தொகையையே குறிக்கும். தாளக்கருவி வெண்கலத்தினாற் செய்யப்பட்டதினால், அது வெண்கலக் கருவி எனப்பட்டது. சல் அல்லது

சல்லரை என்னும் ஓசையுடைமையால் தாளக் கருவியிற் பெரியது சல்லரியென்றும், சிறியது சாலர் என்றும் பெயர் பெற்றன.' (பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும். பக்.122-113) தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் யாழ், பறை முதலிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியம் இசைவல்ல பாணர் முதலியோரைக் குறிப்பிடுகின்றது.

**இசை நூல்கள்**

இசை இலக்கிய, இலக்கண நூல்கள் பற்றிய செய்திகளைச் சிலப்பதிகாரமும் அதன் உரைகளும் தருகின்றன. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதியம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறு படலம், தாள வகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டறைக்கோவை முதலயன பண்டைய இசைப்பனுவல் நூல்களாக அறியப்படுகின்றன. இறையனார் களவியலுரைகார் முதுநாரை,முதுகுருகு என்னும் இசைநூல்கள் இருந்தவனவாகக் கூறுவர்.

சிலம்பின் அரங்கேற்றுக் காதையாலும், உரையாலும் இசையாசிரியன், தண்ணுமையாசிரியன் ஆகியோர் குறித்தும் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ் என்பவை பற்றியும் அறிகிறோம். இசையை ஏழிசை எனல் மரபு. அவை குரல், துத்தம், கைக்கிளை, இனி, உழை, விளரி, தாரம் என்பவையாகும். சிலம்பின் வரிப்பாடல்களும், திருவாசகத்தின் பாடல்களும், தேவாரப்பாடல்களும் இசைத்தமிழின் வளத்தை உணர்த்தும். பெரியபுராணம் திருநீலகண்டயாழ்ப்பாணரின் இசைப்பணியைக் காட்டும், தஞ்சை பெரியகோயிலில் தேவாரம் பாடும் நாற்பத்தென்மர் இருந்தமையை வரலாறு காட்டுகின்றது.

கருவி இசையிலும் வாய்ப்பாட்டு இசையிலும் வல்ல தமிழரின் வரலாற்றில் பிற்காலத்தில் தெலுங்கு இசை ஒரு தளர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் விளைவாகத் தமிழிசை இயக்கம் இந்நூற்றாண்டில் முனைப்போடு தோன்றிப் பரவியது. சீர்காழி அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை முதலியோரின் இசைத்தமிழ் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. விபுலானந்த அடிகளின் யாழ்நூல், ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் ஆகியன தமிழரின் இசைக்கலை வளம் காட்டும் படைப்புகளாகும்.

**தமிழ்ப் பண்கள்**

தமிழ்ப் பண்கள் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவற்றின் இடத்தைப் பிடித்த வட சொற்களாகிய சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தய்வதம், நிஷாந்தம் என்பவற்றின் முதல் ஏழு எழுத்துக்களும் ச, ரி, க,ம,ப,த,நி என ஆயின. பண்கள் 103 எனக் கூறுகின்றனர். தினை உண்ணவந்த யானை, கொடிச்சி பாடிய குறிஞ்சிப்பண் கேட்டு மெய்மறந்து நின்றதாக அகநானூறு 102 ஆம் பாடல் தெரிவிக்கிறது. வழிச் செல்வாரின் பாலைப் பண்ணைக் கேட்டு வன்னெஞ்சக் கள்வரும் தம் நெஞ்சமிழந்து படையை நழுவ விடுவர் என்பதனை

ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மறுவின் பாலை

என்று பொருநராற்றுப் படை கூறுகிறது. மேலும், பரிபாடலில் ஒவ்வொரு பாட்டுக்கும் பண்

வகுக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்களைக் காணும் போது சங்க காலத்திலேயே இசை செழித்தோங்கியமை புலனாகும். ஐவகை நிலங்களுக்கும் குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண், பாலைப்பண் எனப் பண்கள் இருந்தன. ஐந்து வகைப் பண்களும் காலைப் பண்கள், காலை-மாலைப் பண்கள், இரவுப் பண்கள் எனப் பொழுதிற்கேற்றாற் போல அமைந்திருந்தமையை இலக்கியங்களால் உணரலாம்.

**இசைவாணர்கள்**

பண் - இராகம், பாண் - பாட்டு, பாணர் - பாடகர், பாடினியர் -பெண் பாடகர், பாணரும் பாடினியரும் இசைத்தமிழ்ப் பண் புலவராவர். மன்னர்களும் வள்ளல்களும் பாணர்களை ஆதரித்து வந்தனர். பாணர்களுக்குப் பொற்றாமரையும் பாடினிக்குப் பொன்னரி மாலைகளையும் வள்ளல்கள் அளித்தனர். பரிசு பெற்ற பாணர்கள் தம்மினத்தவரைக் கண்டு பரிசில் பெற ஆற்றுப்படுத்தினர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய நூல்கள் பாணர்கள் வாழ்வைப் புலப்படுத்துவன. பாணர்கள் மன்னனின் அவைக்களத்தில் பாடினர். திருவிழாக்களின் போது மக்களை மகிழ்வித்தனர். தலைவனுக்குத் தூதுவர்களாக விளங்கினர். பெரு நகரங்களில் பாணர் சேரிகள் இருந்தன. இவற்றால் இசைவாணர்கள் பெற்றிருந்த சிறப்பினை அறிய முடிகிறது.

**சிலம்பில் இசை**

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையும் அடியார்க்கு நல்லார் எழுதிய உரையும் தமிழிசையின் சிறப்புகளை அறிய உதவுகின்றன. சிலம்பின் வழியே பல்வேறு வகையான வரிப் பாடல்களை அறிய முடிகிறது. அவை ஆற்று வரி, கானல் வரி, ஊசல் வரி, வேட்டுவ வரி முதலியனவாகும். அதுமட்டுமன்றி குன்றக்குரவை, உழவர் மங்கலம் முதலான பல்வேறு பாடல்கள் குறிக்கப்படுகின்றன.

**பல்லவர் காலத்தில் இசை**

கி.பி. நான்காம் நூற்றாண்டில் தமிழகத்தில் பல்லவராட்சி ஏற்பட்டது. சமணர், பௌத்தர், வைதீகர் நுழைவால் வடமொழி தமிழகத்தில் வேரூன்றியிருந்தது. அதனால் வட சொற்களும் வடமொழி இலக்கண நூல்களும் வழிபாட்டு முறையும் தமிழில் புகுந்தன. காந்தாரம், தக்கேசி, சாதாரி, காந்தார பஞ்சுரம், கௌசிகம் பேகராகம் முதலிய பண் வகைகளும் சதகம், தசாங்கம், பதிகம் யமகம் முதலியனவும் வட நாட்டவரால் வந்தனவாகும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர். சைவ வைணவ சமயங்கள் பல்லவர் காலத்தில் மிகுதியாகப் பரவுவதற்குரிய காரணங்களுள் ஒன்று இசைப்பாக்கள் ஆகும். இறைவனையே இசையாகக் கண்டனர். தேவாரத்தில் சாதாரி, குறிஞ்சி, நட்டபாடை, இந்தளம், வியாழக்குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செல்வழி கொல்லி, கொல்லி காவாணம், மேகராகக் குறிஞ்சி முதலான பண்கள் உள்ளன. மேலும் யாழ், வீணை, குழல், கின்னரி, கொக்கரி, சக்கரி, தக்கை, முழவம். மொந்தை, மிருதங்கம், தமருகம், துந்துபி, குடமுழா, தந்தலம், முரசு, உடுக்கை, தாளம், துடி,கொடு கட்டி போன்ற கருவிகளை நாயன்மார்கள் குறிப்பிடுகின்றனர். பல்லவ மன்னர்களில் முதலாம் மகேந்திரன், இராசசிம்மன் போன்றோர் இசையறிஞராக விளங்கினர்.

**சோழர் காலத்தில் இசை**

வடநாட்டவர் உறவால் பலவகைச் சந்தங்கள் தமிழில் புகுந்து விட்டன. வடகச் சந்தம், கருநாடகச் சந்தம் முதலிய சந்தங்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் குறிக்கப்பட்டுள்ளன. வேதச் சுலோகங்கள் ஒருவகைச் சந்தத்தில் பாடப்பட்டன. அவற்றைப் பாடியோர் 'ஆரியம் பாடுவார்' எனப்பட்டனர். ஒன்பதாம் திருமுறையிலுள்ள பாக்கள் திரு இசைப்பாக்கள் எனப்பட்டன. கம்பராமாயணம், பெரிய புராணம், சீவகசிந்தாமணி நூல்களில் இசை பற்றி வரும் செய்திகள் பலவாகும். சோழர்காலக கல்வெட்டுகளும் இசை பற்றிய செய்திகளைத் தருகின்றன. குலோத்துங்க சோழன் இசை நூல் எழுதியதைக் கலிங்கத்துப் பரணி என்னும் நூல் கொண்டு அறிய முடிகிறது.

**பிற்காலத்தில் இசை**

விஜயநகர அரசர்கள் கன்னடத்தையும் தெலுங்கையும் வளர்த்தனர். கருநாடக இசை புகழ் பெற்றதாக அமைந்தது. இத்தகு புதிய மாற்றத்தினால் தமிழகத்தில் வாழையடி வாழையாக இருந்து வந்த தமிழிசை மறைந்தது. தெலுங்குப் பாடல்கள் செல்வாக்கும் பெற்றன.

நாயக்க மன்னர்கள் காலத்தில் கீர்த்தனை தமிழகத்தில் நுழைந்தது. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைதியுடைய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் பிற்காலத்தில் எழுதப்பட்டன. தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சாமா சாத்திரியார் ஆகியோர் இயற்றிய கீர்த்தனைகள் செல்வாக்கு அடைந்தன. இந்தக் கீர்த்தனைகளைப் பின்பற்றித் தமிழர் இசைப் பாடல்கள் இயற்றினர். சீர்காழி அருணாசலக்கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையும் கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தனார்க் கீர்த்தனையும் அவ்வகையில் புகழ் வாய்ந்தனவாகும். இவர்களைத் தவிர அனந்த பாரதியார், கவிக்குஞ்சர பாரதியார், கிருட்டிணய்யர் இராமலிங்க வள்ளலார், கோடீசுர ஐயர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், மாரிமுத்துப் பிள்ளை, முத்துத் தாண்டவர், மாம்பழக் கவிராயர்,ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் போன்றவரும் கீர்த்தனைகள் இயற்றினர். இருப்பினும் திருப்புகழ், குறவஞ்சி, பள்ளு, பரணி முதலியன தமிழிசையைச் சார்ந்து எளிய மக்களின் பாக்களாகத் தோன்றின. திருப்புகழில் 1008 சந்தங்கள் உள்ளன என்பர். கீர்த்தனைச் செல்வாக்கால் தமிழில் அருணாச்சலக் கவிராயரின் 'இராம நாடகக் கீர்த்தனை, கோபால கிருஷ்ண பாரதியாரின் 'நந்தனார் சரித்திர கீர்த்தனை', மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'சர்வ சமயச் சமரசக் கீர்த்தனைகள்' முதலியன எழுந்தன.

**பிறநாட்டு இசைகள்**

இசுலாம், கிறித்தவம் என்னும் இரண்டு சமயங்கள் நுழைவால் இந்துஸ்தானி இசையும் மேனாட்டு இசையும் தமிழகத்தில் பரவின. ஆங்கில ஆட்சியில் 'பேண்டு' இசை தமிழகத்தில் பரவியது.

**நாட்டுப்புறப் பாடல்களில் இசை**

புன்னாகவராளி, நாத நாமக்கிரியா, ஆனந்த பைரவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நீலாம்பரி, மஞ்சி, கரகப்பிரியா, தோடி முதலிய இராகங்களில் நாட்டுப்புறப் பாடல்களையோ கதைட பாடல்களையோ பாடும்போது உடுக்கை, மிருதங்கம், தம்பட்டம் ஜால்ரா, பறை, சாரங்கி,

டமாரம், நையாண்டி மேளம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புறப் பாட்டில் மனம் பறிகொடுத்ததைப் பாரதியார். ஏற்றநீர்ப் பாட்டின் இசையிலும் நெல்லிடிக்குங் கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும் சுண்ணமிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும் பண்ணை மடவார் தம் பழகு பல பாட்டினிலும் வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும் நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நின்றொலிக்கும் பாட்டினிலும் நெஞ்சைப் பறிக் கொடுத்தேன் என்று பாடுகிறார்.

**இசைத் தமிழ் ஆய்வு நூல்கள்**

சுவாமி விபுலானந்தர் இயற்றிய 'யாழ் நூல்', தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் 'கருணாமிர்த சாகரம்', பண்டிதர் மகன் வரகுண பாண்டியனார் எழுதிய 'பாணர் கைவழி நூல்' ஆகியன இசைத் தமிழ் ஆய்வு நூல்களாகும்.

**தமிழிசைச் சங்கம்**

பல்லவ, சோழ, நாயக்கர் காலத்தில் ஊடுருவிய தெலுங்கிசை கருநாடக இசை மேன்மையுற்று இசையரங்குகளில் தெலுங்குப் பாடல்கள் பாடிவந்த நிலையைப்போக்க, தமிழிசை வளர, 1940இல் அண்ணாமலைச் செட்டியார் 'தமிழிசைச் சங்கம்' என்னும் பெயரில் ஒரு சங்கத்தை உருவாக்கினார். தமிழிசைச் சங்கம் ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்துகிறது. இசை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இசையாய்வுக்குத் தனித் துறையை நிறுவியுள்ளது.

தமிழர்களுக்குத் தமிழிசையின் பால் ஈடுபாடு வளர புரட்சிக் கவிஞர்,

செந்தமிழில் இசைப்பாடல் இல்லையெனச்
செப்புகின்றீர் மானமின்றிப்
பைந்தமிழில் இசையின்றேல் பாழுங்கிணற்றில்
வீழ்ந்துயிரை மாய்த்தலன்றி
எந்தமிழில் இசையில்லை எந்தாய்க்கே
உடையில்லை என்ப துண்டா?
உந்தமிழை அறிவீரோ தமிழறிவும்
உள்ளதுவோ உங்கட் கெல்லாம்

என்று பாடுகிறார்.

பிற கலைகளின் மீது பெரிதும் ஈடுபாடு இல்லாத தந்தை பெரியார், தமிழ் இசைக் கலை வளர வேண்டும் என ஆவல் கொண்டார். இசைத்தமிழ் வளரப் பெரிதும் காரணமாக இருந்த ஆபிரகாம் பண்டிதர், ப. சுந்தரேசனார், வெள்ளைவாரணனார், விபுலானந்த அடிகள், பேராசிரியர் சாம்பமூர்த்தி, பேரா. கோதண்டபாணிப் பிள்ளை, அறிஞர் வீ.ப.கா. சுந்தரம், முனைவர் எஸ். இராமநாதன், வீணை வல்லுநர் கோமதி சங்கரய்யர், அ.இராகவன், ஆர். ஆளவந்தார் முதலானவர்கள் தமிழ் உலகில் நன்றியுடன் நினைவு கூரத்தக்கவர்கள்.

இக்காலத்தில் வானொலியும், திரைப்படமும் பல இசைக்கலைஞர்களை உருவாக்கி வருகின்றன. திரைப்படத்தின் வாயிலாக மெல்லிசை புகழ் பெற்று வருகிறது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. ஆதி மனிதனின் ஓவியக்கலைக்குச் சான்று
   அ) பாறை ஓவியம்　　ஆ) கோயில் ஓவியம்　இ) சுவர் ஓவியம்　　ஈ) துகில் ஓவியம்
2. புழங்கு பொருட்களில் வரைந்த ஓவியங்களுக்குச் சான்று
   அ) சிந்து ஆ) சுமேரியா இ) எகிப்து ஈ) அனைத்தும்
3. சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டமைப் பற்றி எந்த இலக்கியம் கூறுகின்றது
   அ) மதுரைக்காஞ்சி　　ஆ) புறநானூறு　　இ) அகநானூறு　　ஈ) குறுந்தொகை
4. தொல்பழங்கால மக்களின் ஓவியத்திறனை எவ்வாறு அறிய முடிகின்றது
   அ) மட்பாண்டங்கள்　ஆ) சுவர் ஓவியங்கள்　இ) கோவில் ஓவியங்கள்　　ஈ) துகில் ஓவியங்கள்
5. சிற்பக்கலையிலும் தொன்மை வாய்ந்தது
   அ) ஓவியக்கலை　　ஆ) இசைக்கலை　　இ) கட்டடக்கலை
   ஈ) கூத்துக்கலை
6. திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள முருகன் கோவிலில் காணப்படும் ஓவியக்காட்சிகள் எந்த சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றது.
   அ) பரிபாடல் ஆ) மதுரைக்காஞ்சி இ) நற்றிணை ஈ) புறநானூறு
7. பல்லவர் கால ஓவியங்களுக்குச் சான்று
   அ) பனைமலை தானகிரிசுவர் ஓவியங்கள்　　ஆ) பெருவுடையார் கோவில்　இ) சிதம்பரம் நடராசர்கோவில் ஓவியம்　　ஈ) எதுவுமில்லை.
8. உலகமே வியக்கும் ஓவியங்கள் எங்கே அமைந்துள்ளன
   அ) காஞ்சி கைலாச நாதர் கோவில், ஆ) பனைமலை தானகிரிசுவர், இ) சித்தன்னவாசல் ஓவியங்கள் ஈ) பெருவுடையார் கோவில்
9. சிற்பக்கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்.
   அ) ஓவியர்கள் ஆ) கற்கவிஞர்கள் இ) இரண்டும்　　ஈ) இரண்டுமில்லை
10. முழு உருவத்துடன் அமைந்துள்ள சிற்பம்
    அ) புடைப்புச்சிற்பம்　ஆ) முழுஉருவச்சிற்பம்இ) சுதைச்சிற்பம்　　ஈ) பாறைசிற்பம்
11. சிற்பங்களின் வகைகள்
    அ) 4　ஆ) 8　இ) 6　ஈ) 2
12. முன்பகுதி மட்டும் தெரியும்படி அமையும் சிற்பம்

அ) புடைப்புச்சிற்பம் ஆ) முழுஉருவச்சிற்பம்இ) சுதைச்சிற்பம் ஈ) பாறைசிற்பம்

13. சிற்பங்கள் அமைக்கப்படும் நிலைகள் எத்தனை?

அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 8

14. கற்சிற்பத்தின் தொடக்க நிலை எது?

அ) நடுகல் ஆ) பாறை இ) ஓவியம் ஈ) கோவில்

15. தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்தப் பெருமை எவருக்கு உரியது?

அ) பாண்டியர் ஆ) சேரர் இ) சேழர் ஈ) பல்லவர்

16. தமிழ்ச் செய்யுளைப் எவ்வாறு வழங்குவர்.

அ) பாட்டு ஆ) பா இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை

17. தமிழரின் இசைக்கருவிகள் எத்தனை வகைப்பட்டிருந்தன

அ) 4 ஆ) 6 இ) 8 ஈ) 10

18. துளைக்கருவிக்குச் சான்று

அ) எல்லரி ஆ) தூம்பு இ) பதலை ஈ) யாழ்

19. தோற்கருவிப் பொதுப்பெயர்.

அ) பறை ஆ) முழவு இ) ஒத்து ஈ) தாரை

20. பிற கலைகளின் மீது பெரிதும் ஈடுபாடு இல்லாமல் தமிழ் இசைக் கலை வளர வேண்டும் என ஆவல் கொண்டார் யார்?

அ) விபுலானந்த அடிகள் ஆ) ஆபிரகாம் பண்டிதர் இ) ப. சுந்தரேசனார் ஈ) தந்தை பெரியார்

---

தொகுத்தறிவோம்

---

- மனிதன் கிராமம், நகரம் என வாழ்வியல் வளர்ந்த போது அழகுணர்ச்சியும் மேம்பட்டு தன் புழங்கு பொருள்களிலும் ஓவியம் வரைந்து வாழ்வை அழகுப்படுத்திக் கொண்டான்.
- கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.. சிற்பங்கள் அவற்றின் உருவ அமைப்பின் அடிப்படையில் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. முழு உருவச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் ஆகும்.
- தமிழ் முத்தமிழ் எனவும் போற்றப்பெறுகிறது. இயல், இசை, நாடகத்துள் இசைக்கலை நடுநாயகமாக வைக்கப்பட்டுள்ளது.
- தமிழரின் இசைக்கருவிகள் தோல், துளை, நரம்பு, வெண்கலம் (கஞ்சம்) என நால்வகைப்பட்டிருந்தன. முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை முதலிய கருவிகள்இருந்தன.

❖ தமிழ்ப் பண்கள் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. பரிபாடலில் ஒவ்வொரு பாட்டுக்கும் பண் வகுக்கப்பட்டுள்ளது. இக்கருத்துக்களைக் காணும்போது சங்க காலத்திலேயே இசை செழித்தோங்கியமை புலனாகும். ஐவகை நிலங்களுக்கும் குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண், பாலைப்பண் எனப் பண்கள் இருந்தன. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைதியுடைய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் பிற்காலத்தில் எழுதப்பட்டன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

1. அ) பாறை ஓவியம்
2. ஈ) அனைத்தும்
3. அ) மதுரைக்காஞ்சி
4. அ) மட்பாண்டங்கள்
5. அ) ஓவியக்கலை
6. அ) பரிபாடல்
7. அ) பனைமலை தானகிரிசுவர் ஓவியங்கள்
8. இ) சித்தன்னவாசல் ஓவியங்கள்
9. ஆ) கற்கவிஞர்கள்
10. ஆ) முழுஉருவச்சிற்பம்
11. ஈ) 2
12. அ) புடைப்புச்சிற்பம்
13. ஆ) 4
14. அ) நடுகல்
15. ஈ) பல்லவர்
16. இ) இரண்டும்
17. அ) 4
18. ஆ) தூம்பு
19. அ) பறை
20. ஈ) தந்தை பெரியார்

**பார்வைநூல்கள்**


1. **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி**,** ஐந்திணைப் பதிப்பகம், பதிப்பு -2001.

2. **தமிழ்ப் பண்பாடு, த.அருள் பத்மராசன்,** தமிழரசன் பதிப்பகம் சென்னை-71.

3. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன்.மு, சாகித்திய அக்காதெமி, புது தில்லி
4. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.

---

**குறுவினாகள் - விடைகள்**

---

**பல்லவர்களின் கட்டடக் கலைக்குச் சான்று**.

மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோயில், பஞ்சபாண்டவர் இரதங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில்

**நாயக்கர் கால ஓவிங்களுக்குச் சான்று தருக.**

செஞ்சியிலும் வேலூரிலும், தஞ்சை, மதுரை, நத்தம், ஸ்ரீவில்லிபுத்தூர்

**சுதை சிற்பங்கள் என்றால் என்ன**?

சுதைச் சிற்பங்கள் என்பவை சுண்ணாம்பால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் ஆகும்

**புகழ்ப்பெற்ற குகை ஓவியம் எது? எங்குள்ளது.**

பனமலையில் குகை ஓவியம், சித்தன்னவாசல் குகை ஓவியம்.

**சித்திரகாரப் புலி குறிப்புவரைக**.

மகேந்திர வர்மன் சித்திரக் கலையில் சிறந்தவனாக விளங்கியதால். சித்திரகாரப் புலி என்று அழைக்கப்பட்டான்.

**நரம்புக் கருவிக்கு எ.கா.தருக.**

பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்.

**பண்டைய இசைநூல்கள் யாவை**?

பரியாடல், இசைநுணுக்கம்

**யாழ்இசைக் கருவியின் வகைகள் யாவை**?

பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்.

**ஓரிசைத் துளைக் கருவிக்கு சான்று தருக.**

தாரை, சின்னம், சங்கு

**இசைக் கருவியின் வகைகள் யாவை**?

தோற்கருவி, காற்றுகருவி, நரம்புக்கருவி, வெண்கலம்.

**கூத்தின் வகைகள் யாவை**?

வேத்தியல், பொதுவியல்

---

**நெடுவினாகள்**

---

1. தமிழர் கலைகள் குறித்து விளக்குக.
2. பண்டைத் தமிழரின் இசைக்கலை குறித்து  விவரி.

3. சிற்பக்கலை வளர்ச்சியினை விளக்கி எழுதுக.
4. தொல்காப்பியர் குறிப்பிடும் இசை பற்றி எழுதுக.
5. சிற்பக் கலை வளர்ச்சிக்குத் தமிழரின் பங்களிப்பை விளக்கி எழுதுக.
6. தமிழரின் ஓவியக்கலையின் சிறப்புகளை விவரி.
7. தமிழரின் உடை பண்பாடு குறித்து கட்டுரை வரைக.

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்

4.1 கூத்து

4.2 ஒப்பனை

4.3 ஒப்பனையில் ஆடைகள்

4.4 ஒப்பனையில் அணிகலன்கள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினாகள்

அறிமுகம்

ஒப்பனை என்ற சொல்லிற்கு அழகூட்டுதல் என்பது பொருள். இருக்கின்ற அழகை மிகைப்படுத்திக் காட்டுதல், இருக்கின்ற அழகை வெளிக்கொணருதல், அழகு இல்லாத பொருளையும் அழகாக மாற்றுதல் ஒப்பனையின் பயன்களாகும். இத்தகைய ஒப்பனைக் கலை தமிழிலக்கியங்களில் பழங்காலந்தொட்டு இடம் பெற்றுள்ளது. ஒப்பனைக் கலையில் ஆடை அணிகலன்கள் இப்படத்தின் விளக்கப்பெறுகின்றன..

குறிக்கோள்

தமிழரின் முருகியல் உணர்ச்சிகளையும் கலைத்திறனையும் வெளிப்படுத்துதல்

## 4.1 கூத்து

'நடமே நாடகம்' என்று திவாகரம் கூறுகிறது. கூத்து என்பது நாடகம் அன்று எனவும் அதனைப் பரதநாட்டியம் அல்லது நடனம் என்பதோடு தொடர்புப்படுத்திக் காண வேண்டும் என்றும் தெ.பொ.மீ. குறிப்பிடுகிறார்.

நாடகம் என்ற சொல் முதன் முதலில் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

(தொல்.அகம். 56)

நாடகம் என்பது முற்காலத்தில் கூத்து எனச் சுட்டப்பெற்றது. கூத்து நிகழ்த்துபவர்களைக் கூத்தர் எனத் தொல்காப்பியம் சுட்டும். அஃது ஒன்றே மனத்திற்கும் செவிக்கும் மட்டுமன்றிக் கண்ணுக்கும் விருந்தளிக்கும் தன்மை கொண்டது. மிகப் பழங்காலத்திலிருந்தே நாடகக் கலை தமிழகத்தில் நிகழ்ந்து வந்திருப்பினும், அதற்கான எழுத்துச் சான்றுகள் கிடைக்கவில்லை. இடைக்கால உரையாசிரியர்களின் குறிப்புக்களால் அவர் காலத்திய நாடகங்கள் பற்றி அறிய முடிகிறது.

கூத்து என்ற சொல் முதலில் நடனத்தையும் பின்பு கதை தழுவி வரும் கூத்தாகிய

நாடகத்தையும் குறித்தது. கோயில் விழாக்களிலே நாடகம் தோற்றம் எடுத்தது என்று அறிஞர் கருதுவர். ஆடல், பாடல் என்னும் இரண்டின் சேர்க்கையாக முதலில் நாடகம் அமைந்து இருந்தது. பின்பு, பாட்டாலமைந்த உரைநடை இடையிடையே கலந்தது, அதனபிறகு பேச்சு நடையிலமைந்த உரைநடை சேர்ந்தது.

எனலே ஆடல் பாடல் வடிவில் அமைந்த உரைநடை, பேச்சு நடை சேர்த்து நாடகத்தை அழகு செய்தன. இங்ஙனம் வளர்ந்த நாடகம் வேத்தியம் பொதுவியன் எனப் பிரிந்தது. வசைக்கூத்து புகழ்க்கத்து, வேடிக்கைக் கூத்து,அகக்கூத்து, புறக்கத்தி, விளையாட்டுக் கூத்து, வினை வெற்றிக் கூத்து, தோல்விக் கத்து எனக் கத்தைப் பல வகைப்படுத்துவர்.

சிலப்பதிகார உரை, பரதம், அசுத்தியம் முதலிய நாடகத்தமிழ் நூல்கள் இருந்து அழிந்தமைக்குச் சான்றாக அமைகிறது.

**சங்க காலக் கூத்துக்கலை**

குறவர்களும் பரதவர்களும் குரவைக் கூத்து ஆடியதை மலைபடுகடாம். நற்றிணை, மதுரைக்காஞ்சி, புறநானூறு முதலிய இலக்கியங்களில் காண முடிகிறது.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் அவர் காலத்து நாடக மேடையமைப்பினை விளக்கியுள்ளார். மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல் பற்றியும் விளக்கம் தருகிறார். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார். நடன மக்களைப் பயிற்றுவிக்கும் ஆடல் ஆசிரியா இருவகைக் கூத்துகளில் வல்லவராக இருக்க வேண்டும் என்கிறார். இருவகைக் கூத்தாவன

| | | |
|---|---|---|
| வசைக் கூத்து | - | புகழ்க்கூத்து |
| வேத்தியல் | - | பொதுவியல் |
| வரிக்கூத்து | - | வரிச்சாந்திக் கூத்து |
| சாந்திக் கூத்து | - | வினோதக் கூத்து |
| ஆரியம் | - | தமிழ் |
| இயல்புக் கூத்து | - | தேசிகக்கத்து |

என்பனவாகும். இக்கூத்துகளின் விளக்கத்தையும் விரிவாகத் தருகிறார் அடியார்க்குநல்லார்.

**பல்லவர் காலக் கூத்துக்கலை**

பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியால் கோயில்களில் ஆடல் பாடல் வளர்ந்தது பல்லவ மன்னர்கள் பரத கலைக்கு ஆக்கம் தந்தனர். ரிஷபத்தனியார் தேவரடியார், தளிச்சேரிப் பெண்டுகள், கூத்திகள் எனக் கோயில் நடனப் பெண்டிர் பெயர் பெற்றிருந்தனர். பல்லவர் காலத்தில் குழு நடனம் சிறப்புற்றிருந்தது.

**சோழர் காலக் கூத்துக்கலை**

சோழர்கள் காலத்தில் கோயில்களில் ஆடவும் பாடவும் மகளிர் இருந்தனர். அவர்களுக்கு நிவந்தங்கள் கொடுக்கப்பட்டன. தஞ்சைக் கோவிலில் மட்டும் 400 தேவரடியார்கள் இருந்தனர். அவர்களுக்கு ஆளுக்கொரு வேலி நிலம் கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் திருவிழாக்களின் போது நடனம் தவறாமல் நடைபெற்றது.

பிற்காலச் சோழர் காலத்தில் ஆண்டுதோறும் வைகாசி விழாவில் தஞ்சை

இராசராசேசுவரத்தில் இராசராசேசுவர நாடக நடைபெற்று வந்தது. இராசராசசோழன் காலத்தில் திருமூல நாயனார் நாடகம், ஆரியக்கூத்து ஆகியனவும் நடைபெற்றுள்ளன. முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் பூம்புலியூர் நாடகம் நடத்தப்பட்டுள்ளது. தஞ்சைக் கோயிலில் சரபோஜி மன்னா காலத்தில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் எழுதிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் நடத்தப்பெற்றது.

**நாயக்கர் காலக் கூத்துக்கலை**

நாயக்கர் கால மன்னர்களும் மராட்டிய மன்னர்களும் கலைவளர்ச்சியில் ஈடுபட்டனர். அரண்மனைகளில் இருந்த அரசன் சிலைக்கு முன் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் மகளிர் ஆடினர். நாயக்க மன்னர் காலத்தில் தேவதாசிகள் கோயில்களில் அமர்த்தப்பட்டனர்.

**இடைக்காலத்துக்குப் பின் கூத்துக்கலை**

அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை. கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை வேதநாயக சாத்திரியாரின் ஞானத்தச்ச நாடகம் போன்ற கீர்த்தனை இலக்கியங்களும் தோன்றின. இவை கீர்த்தனை நாடகம் எனப்பட்டன.

**பிற்கால நாடகங்கள்**

19 ஆம் நூற்றாண்டு மற்றும் 20 ஆம் நூற்றாண்டில் நாடக இலக்கியம் புத்துயிர் பெற்றது. சங்கரதாஸ் சுவாமிகள் காலத்தில் பராண, இதிகாச நாடகங்கள் புத்துயிர் பெற்றன. பம்மல் சம்பந்தனாரின் முயற்சியால் தெருக்கூத்தாக நடந்து வந்த நாடகக் கலை மேடை நாடக மதிப்பைப் பெற்றது. அவரால் 1891 இல் நிறுவப்பட்ட 'சுகுண விலாச சபை' நாடகத்திற்கு மாபெரும் பணியாற்றியுள்ளது. 94 நாடகங்கள் இவரால் எழுதி அரங்கேற்றப்பட்டன அதன்பின் நாடகக்கலை டி.கே.எஸ். சகோதரர்களால் வளர்க்கப்பட்டது. பின்னர் எஸ்.வி. சகஸ்ரநாமம், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், மனோகர், நவாப் இராசமாணிக்கம் போன்றோர் நாடகக் கலையை வளர்த்தனர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய வி கோ. சூரியநாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞர். நாடகத் தமிழுக்குரிய பழைய இலக்கண நூல்கள் காணப்பெறாமையால் தமிழிலும் பிற மொழியிலும் கண்ட நாடக இயல்புகளைத் தொகுத்து 'நாடக இயல்' என்னும் இலக்கண நூலை வெளியிட்டார். விடுதலைப் போராட்டக் காலத்தில் வெள்ளையருக்கு எதிராக விடுதலை உணர்வு தூண்டும் பல நாடகங்கள் நடத்தப் பெற்றன. தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் எழுதிய 'சுதரின் வெற்றி, 'தேசபகதி' போன்ற நாடகங்கள் இத்தகையவை.

சமுதாயம் மறுமலர்ச்சி பெற எம்.ஆர். ராதா, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, ஆர்.எஸ். மனோகர் முதலானவர்களின் நாடகங்கள் உதவின.

**நாடக வகைகள்**

நாடகங்களைப் படிக்கும் நாடகம், நடிக்கும் நாடகம், படிக்கவும் நடிக்கவும் உதவும் நாடகம் என மூவகையாகப் பகுப்பர். அவற்றைத் தெருக்கூத்து, மேடை நாடகம், சிறப்பு நாடகம், செய்யுள் நாடகம். எட்டிய நாடகம், உரைநடை நாடகம், ஓரங்க நாடகம், வானொலி காடகம், இசை நாடகம், தொலைக்காட்சி நாடகம் எனப்பாகுபடுத்துவர். அவ்வகையில்

பெரும்பாலான கவிதை நாடகங்கள் படிப்பதற்காகவே எழுதப்பட்டன யோகி சுத்தானந்த பாரதியாரின் 'காலத்தேர்' என்னும் நாடகம் படிக்கவும் நடிக்கவும் பெற்றது.

சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம் எனும் நாடகம் மிகவும் புகழ் பெற்றதாகும். கோயில் விழாக்கள், இலக்கிய மன்ற விழாக்கள். பள்ளி விழாக்கள், கல்லூரி விழாக்கள் எனப் பல்வேறு இடங்களில் நாடகம் நடிக்கப் பெற்று வருகின்றன.

**நாட்டுப்புறங்களில் கூத்து**

கிராமங்களில் மக்கள் கூத்தை விரும்பிப் பார்க்கின்றனர். கிராமத்தில் நடைபெறும் பெரும்பாலான விழாக்களில் கூத்து நிகழ்வதுண்டு அறுவடை முடிந்து, ஓய்வாக உள்ளபோது கிராமமாக இணைந்து கூத்தைப் பார்ப்பார்கள். கூத்து என்றால் நடனம், நாட்டியம், நாடகம் என்றெல்லாம் வழங்கப்பட்டாலும் கிராம மக்கள் தெருக்கூத்தை மட்டும் 'கூத்து' என்றனர்.

கிராம மக்கள் விடிய விடியக் கூத்தை நிகழ்த்துவர். இக்கூத்து பண்பாட்டையும் மக்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுகிறது. கூத்தின் தன்மை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுவதுண்டு. இத்தகைய நாட்டுப்புறக் கத்துக்களை மூவகைப் படுத்துவர்.

1.தெருக்கூத்து

2. கழைக்கூத்து

3. பாவைக் கூத்து

**தெருக்கூத்து**

1.கடவுள் துதி

2. கட்டியங்காரன் வரவு

3. கதாபாத்திரங்கள் திரைக்குப்பின் இருந்து பாடுதல்

4. கதாபாத்திரங்கள் திரைக்கு வெளியே வந்து பாடுதன்

5. கதையை நடித்தல்

6. கதை நிறைவில் மங்கலம் பாடுதல்.

என ஆறு பகுப்புகளைக் கொண்டு கூத்து நிகழும்

**கழைக்கூத்து**

"கழை' என்றால் முங்கில் என்று பொருள் மூங்கில்மேல் நடந்து செல்லும் கூத்து கழைக்கூத்து எனப்படும். கழைக்கத்தில் கதை என்ற ஒன்று இருக்காது. இதனைக் கதை தழுவாத சுத்து என்று கூறுவர்.

**பாவைக் கூத்து**

மரத்தால் செய்யப்பட்ட பொம்மையையும் தோலால் செய்யப்பட்ட பொம்மையையும் நுட்பமான நூலால் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆட்டியசைத்துக் கதை நிகழ்ச்சிக்கு ஏற்ப நடிக்கச் செய்யும் கலைக்குப் பாவைக் கூத்து என்று பெயர்.

தொடக்கக் காலத்தில் கூத்து என்றும் பின்னர் நாடகம் என்றும் அழைக்கப்பெற்ற நாடகக்கலை அறிவியல் முன்னேற்ற சாதனங்களால் திரைப்படம் என்னும் புதியதோர் வடிவைப் பெற்றுள்ளது. தொலைக் காட்சிகளில் நடைபெற்று வரும் தொடர் நாடகங்கள், வானொலி நாடகங்கள் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் மேடையில் நடிக்கும் நாடகங்கள்

என நாடகக் கலை இன்னும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. தமிழர் பண்பாட்டில் ஒன்றான நாடகக் கலை நன்கு வளர தமிழக அரசும் இயல் இசை நாடக மன்றம் மூலம் உதவி செய்து வருகிறது.

## 4.2 ஒப்பனை

தொல்பழங்கால நாகரிகத்தில் தமிழர் நாகரிகம் தலைசிறந்த ஒன்று என ஐயமின்றிக் கூறலாம். தமிழினம் பல்வேறு கலைகளை வளர்த்து வாழ்வியலைப் பண்படுத்திய இனம். அக்கலைகளை அறுபத்து நான்கு எனக் கூறும் மரபும் உண்டு. அவ்வறுபத்து நான்கு கலைகளில் ஒப்பனைக் கலையும் ஒன்று.

தமிழரின் முருகியல் உணர்ச்சியையும் கலைத்திறனையும் புலப்படுத்துவதே ஒப்பனைக் கலை. ஒருநாட்டு மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாகவும் அமைவது ஒப்பனைக் கலை. மேலும் ஒரு நாட்டின் கற்பனை வளத்தையும் செல்வச் செழிப்பையும் காட்டுவதாகவும் ஒப்பனைக் கலை அமைகிறது.

அழகில் சற்றுக் குறைந்தவர்கள் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும், இயல்பாகவே அழகுடையவர்கள் மேலும் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும் ஒப்பனைக் கலை. உறுதுணையாவது ஒப்பனை செய்து கொண்டவர்களுக்கு மனமகிழ்ச்சியும், காண்பவர்களுக்குக் கண்கவர்ச்சியும் ஏற்படுகின்றன.

மயிலை சீனி. வேங்கடசாமி 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். அந்நூலில் அவர் அழகுக் கலைகளைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் கருதத்தக்கன: "அழகுக் கலைக்கு இன்கலை என்றும், கவின்கலை என்றும் நற்கலை என்றும் வேறு பெயர்கள் உண்டு.

மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும் மனோபாவத்தினாலும்

கற்பனையினாலும் அழகுக் கலைகளை அமைத்து அவற்றின் மூலமாக உணர்ச்சியையும் அழகையும் இன்பத்தையும் காண் கிறான். அழகுக்கலைகள் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிறபடியினாலே, நாகரிகம் படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள்; பேணி வளர்க்கிறார்கள் ; துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள்.

அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூற வேண்டும். அவனை முழு நாகரிகம் பெற்றவன் என்று கூற முடியாது. அழகுக் கலைகள் எத்தனை? அழகுக்கலைகள் ஐந்து. அவை கட்டடக்கலை, சிற்பக்கலை. ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பன"

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தம் பத்துப் பாட்டாராய்ச்சியில் அழகுக் கலைகளைப் பற்றிக் கூறியுள்ளார். அவர் அத்தலைப்பில் ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக் கலை, நடனக்கலை ஆகியவற்றையே அழகுக்கலைகள் என வரைந்துள்ளார். அவற்றுடன் ஒப்பனைக்கலை என்னும் பெயர் சூட்டாமலேயே பண்டைத் தமிழரின் உடைகளைப் பற்றியும் அணிகள் பற்றியும் மணப்பொருள்கள் பற்றியும் பத்துப்பாட்டிலுள்ள செய்திகளைத் திரட்டிப் பல உள்தலைப்புகளுடன் எழுதியுள்ளார்.

'பெருங்கதை ஆராய்ச்சி' என்னும் நூலின் ஆசிரியர் சு. செல்லப்பன், அணிகலன்களையும் ஆடை வகைகளையும் ஆராய்ந்ததுடன் ஒப்பனை குறித்தும்

வரைந்துள்ளார். அதில் அவர், மகளிர்க்கு ஒப்பனை செய்யும் பணிப்பெண்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பதையும், அன்னார் 'வண்ண மகளிர்' எனப்பட்டனர் என்பதையும் ஒப்பனைக்குரிய அறையை யும் நீராடும் முறையையும் ஆடை அணிந்த விதத்தினையும் அணிகளைப் பற்றிய விவரங்களையும் கூந்தல் ஒப்பனையையும் தொய் யில் எழுதலையும் ஆராய்ந்து எழுதியுள்ளார். ஆடவரும் ஒப்பனை செய்து கொள்வதில் ஆர்வங் காட்டினர் எனவும், ஆடவர்க்கு ஒப்பனை செய்வோர் 'கோலவித்தகர்' எனப்பட்டனர் எனவும் கூறியுள்ளார். தொய்யில் எழுதிக் கொள்ளும் வழக்கம் ஆடவர்க்கும் உண்டு எனவும் குறிப்பிட்டுள்ளார்."

ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்னும் நூலின் ஆசிரியரான செந்துறைமுத்து அவர்கள் பண்டைத் தமிழர் ஒப்பனைக் கலையில் உயர்ந்து விளங்கினர் என்பதையும், அக்கலை, தமிழரின் உயரிய நாகரிகத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது என்பதையும் விளக்கிப் பின்வருமாறு எழுதியுள்ளார். "பழங்காலத்தில் ஒப்பனைக் கலை மிகவும் சிறந்து விளங்யது. நாகரிக முன்னேற்ற காலம் எனப்படுகின்ற இக்காலத்திற் கூட அத்தகைய ஒப்பனைக் கலை வளர்ச்சியில்லை. இன்றைய நவீன நாகரிகம் என்பதே-நவீன ஒப்பனை என்பதே அக்காலத்திய ஒப்பனைக் கலையின் மறுமலர்ச்சியே. இன்றைய மகளிர் ஒப்பனை இதனை நன்கு உணர்த்துகின்றது"

**ஒப்பனை அறை**

மகளிர் தங்களை ஒப்பனை செய்து கொள்வதற்கென்று தனி அறையொன்றை அமைத்துள்ளனர். அவை அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டிருந்தது. ஞாயிற்றின் வெயிலும், வெளிக்காற்றும் உள்ளே புகாதவாறு தடுப்புகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஒப்பனை செய்வதற்குரிய மகளிரை வண்ணமகளிர் அழைத்து சென்று அவ்வறையின் கண் அமர்த்தி அழகிய ஒப்பனையை செய்யத் தொடங்குவர்.

**ஒப்பனை வகைகள்**

ஒப்பனை வகைகளைக் கூறுமிடத்து மகளிர் நீராடல், ஆடை அணிதல், கூந்தலை அகிற்புகையூட்டி அழகுபடுத்துதல், தொய்யில் எழுதுதல், அணிகலன்களால் தங்களை அழகுபடுத்துதல் என்ற நிலைகளில் அமைந்துள்ளன.

## 4.3 ஒப்பனையில் ஆடைகள்

அற்றம் மறைத்தற்காக மட்டுமன்றி அழகுக்காகவும் ஆடைகளை அணிந்தவர் தமிழ் மக்கள். தமிழகத்தின் தலைசிறந்த தொழில்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது ஆடை நெய்யுந் தொழில். அக்காலத்திலேயே பட்டினாலும், பருத்தியினாலும், நாரினாலும், எலிமயிர் முதலியவற்றாலும் ஆடைகள் நெய்து வந்தனர். பழங்காலத்தில் இவற்றைக் கொண்டு ஆடை நெய்ததைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்" என்னும் சிலப்பதிகார அடியும்; "நூலினும் உலண்டினும் நாரினும் இயன்ற' என்கிற பெருங்கதை அடியும் மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

ஆதிகால மக்கள் தழை உடையையும், அமரவுரியையும் தோலாடைகளையும் உடுத்தி வாழ்ந்தனர். குறவரும் மறவரும் இத்தகைய உடைகளைப் பயன்படுத்தினர். ஆனால், நாடுநகரங்களில் வாழ்ந்தவர்கள் பருத்தி, பட்டு, கம்பள ஆடைகளை உடுத்தினர். உடையை உடுக்கை, ஆடை, கலிங்கம், காழகம், அறுவை, மடி, துகில், கூறை முதலிய பெயர்களால்

குறித்தனர்.

ஆடை நெய்யும் தொழிலையும் உடைசெய்யும் தொழிலையும் மகளிர் மேற்கொண்டிருந்தனர். பருத்தியிலிருந்து நுண்ணிய நூல் நூற்கும் தொழிலையும் மகளிர் செய்தனர். அன்னாரைப் 'பருத்திப் பெண்டிர்' என வழங்கினர். கணவனை இழந்த மகளிர் இத்தொழிலைச் செய்தனர்.

**ஆடை வகைகள்**

பண்டைத் தமிழர் பல்வகையான ஆடைகளை அணிந்தனர். அவை பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை எனப் பல வகையின.

**பொன்னாடை**

பட்டு நூலில் பொன்னிழைகளைச் சேர்த்து நெய்த ஆடைகள் பொன்னாடை எனப்பட்டன. பொன்னிழைகளையே சரிகை என்பர் இக்காலத்தில். இது திருமாலைப் பாராட்டிய பரிபாடலின் கடவுள் வாழ்த்துப் பாடலில் கூறப்பட்டுள்ளது. வேறொரு பாடலில் நீலமலையின்மிசைப் படர்ந்த இருளைக் கெடுக்கும் ஞாயிற்றுமண்டிலத்தின் ஒளிபோன்ற அழகுடைய பொன்னாடையினைப் புனைந்த திருமால் என வருணிக்கப்பட்டுள்ளது. இதில் சொல்லப்பட்டது 'பீதாம்பரம்' என்னும் விலையுயர்ந்த பொன்னாடையாகும்.

**பட்டாடை**

பட்டு நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடைகளே பட்டாடை என்பவை. பட்டுடைகளில் கொட்டைக்கரை போன்றவை அழகுக்காக அமைக்கப் பட்டன.

'அரத்தம் பூம்பட்டு' என்பதைச் சிலம்பு குறிப்பிடுகின்றது. இரத்த நிறம் பொருந்தியதும் பூ வேலைப்பாடு மிக்கதுமான பட்டு என்பதே இதன் பொருள். இதனைச் செம்பட்டு என்றும் கூறினர். இச்செம்பட்டு கார்காலத்தில் உடுத்திக் கொள்ளப்பட்டது என்பர் அரும்பதவுரைகாரர்.

**பூவாடை**

பலவிதமான பூக்கள் நிறைந்த வேலைப்பாடு மிக்க ஆடைகளைத் தமிழர் நெய்து அணிந்து தம்மை அழகு படுத்திக்கொண்ட .

**படம்**

ஆடவர் அணிந்துகொள்ளும் சட்டையைச் சங்ககாலத்தில் 'படம்' என்றனர். தொண்டை நாட்டுப் பெருவழிகளைக் காவல் காத்த வீரர் 'படம்' அணிந்திருந்தனர். இச்சொல்லுக்கு உரைஎழுதிய நச்சினார்க் கினியர் "படம் புக்கு' என்பதற்குச் சட்டையிட்டு எனப் பொருள் கூறியுள்ளார்.

**மெய்ப்பை**

மெய்யை மறைக்கும் உடைக்கு 'மெய்ப்பை'என்னும் பெயரும் இருந்திருக்கிறது. "மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து" என்னும் அடி, முல்லைப் பாட்டு அடி. மெய்ப்பை என்பதற்கும் சட்டை என்றே நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். சிலப்பதிகாரமும் "மெய்ப்பைபுக்கு" என்றே கூறுகிறது எனவே படம். மெய்ப்பை இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களே.

**வட்டுடை**

முழந்தாளளவாக வீரர்கள் அணிந்து கொள்ளும் உடை வட்டுடை எனப்பட்டது.

**ஈரணி**

நீராடுங் காலத்துப் பெண்டிர் 'ஈரணி' என்பதை அணிந்து கொண்டனர். பின்வரும் இலக்கியச் சான்றுகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

"வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரி... ஆடியோரே
இளந்துணை மகளிரொடு ஈரணிக் கலைஇ
ஈரணி அணியின் இகல்மிக நவின்று
தனி புனலாடும் தகைமிகு போர்க்கண்
விரும்பிய ஈரணி மெய்யீரம் தீர

இவற்றால் ஈரணி என்பது இக்காலத்தே சொல்லப்படும் Bathing Dress போன்ற ஒருவகை ஆடை என்பதை அறியலாம்.

**புட்டகம்**

புட்டகம் என்னும் சொல் புடவையைக் குறிப்பதாகும். இது மகளிர் ஆடை.

"புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்" என்பது பரிபாடல் அடி. 'நீராடற்குரிய புடவைகளை அலங்கரித்து உடுப்போரும்' என்பது பரிமேலழகர் உரை. ஆகவே புட்டகம் என்பது புடவை என்னும் பொருளுடையது.

**வட்டம்**

"வாலிழை வட்டம்" வெண்மையான இழையால் நெய்யப்பட்ட ஆடை என்னும் செய்தி மட்டுமே தெரியவருகிறது. இவ்வுடைபற்றிய வேறு செய்திகள் யாண்டும் காணப் படவில்லை

**ஆடைகளுக்கு மணமூட்டுதல்**

புத்தாடைகளுக்கும் உவர் மண்ணிட்டு வெளுத்த ஆடைகளுக்கும் அகிற் புகையூட்டி மணம்மிக்கதாகச் செய்தலும் அக்கால வழக்கம். மணம் ஊட்டிய ஆடைகள் மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் தன்மை வாய்ந்தன. பெண்கள் மெல்லிய நூலால் நெய்த ஆடைகளுக்கு அகிற்புகையை ஊட்டினர். நூலாடை, பட்டாடை, கம்பளி ஆடை முதலிய அனைத்தும் நறுமணம் ஊட்டப்பட்டு விற்கப்பட்டன என்பது தெரிய வரு கிறது.

**ஆடைகளை வெளுத்தலும் கஞ்சிபோடுதலும்**

ஒப்பனைக்குரிய ஆடைகள் மாசு போக நன்கு வெளுக்கப்பட்டன. அழுக்கைப் போக்க உவர்மண் பயன்படுத்தப்பட்டது. இத்தொழிலை மேற்கொண்டவர் புலையர் புலத்தியர் எனப்பட்டனர். சலவை செய்யப்பட்ட ஆடைகள் "கழுவுறு கலிங்கம்" எனப் பட்டது. இங்ஙனம் கழுவப்பட்ட கலிங்கம் சுருக்கமின்றி இருக்கவும் தொய்வின்றி இருக்கவும் கஞ்சியில் தோய்த்து உலர்த்தும் வழக்கமும் இருந்தது. சலவை செய்யும் காலத்துக் கறைகளை நீக்கும் முறைகளையும் அறிந்திருந்தனர்.

**ஆடைகளைப் பாதுகாத்தல்**

ஆடைகள் பாதுகாப்பாகப் போற்றிக் காக்கப்பட்டன, அவற்றைக் காத்தற்குப் பெட்டிகளும் பயன்படுத்தப்பட்டன. அவை 'கலிங்கக் கடகம்' எனவும்,“கலிங்க வட்டி” எனவும் சொல்லப் பட்டன.

## 4.4. ஒப்பனையில் அணிகலன்கள்

உலக மக்களில் தமிழர்களைப் போல் ஒப்பனைக்கு அணிகலன்களைப் பயன்படுத்தியவர்கள் வேறு எந்நாட்டவரும் இல்லை. தமிழ் மக்கள் ஆண்டாண்டுக் காலமாகத் தம்மை அழகுபடுத்திக் கொள்ள அணிகலன்களை அணிந்து வருகிறார்கள். அவர்தம் அணிகலன்கள் விலை உயர்ந்தவை; நுட்பமான வேலைப்பாடு நிறைந்தவை; கலைநயம் நிறைந்தவை; கவர்ச்சியானவை. ஒப்பனையில் ஆர்வம் உடையவர்கள் என்பதால், தொடக்க காலத்தில் தமிழ் மக்கள் கண்ணுக்கினிய காட்சியைத் தந்த பல் வகையான தளிர்களையும்,

மொட்டுகளையும், மலர்களையும், கொடிகளையும் காதுகளில் செருகியும், கழுத்தில் அணிந்து கொண்டும் கைகளிலும் தலையிலும் சுற்றிக் கொண்டும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர்.

கால ஓட்டத்தில் நாகரிகம் வளர வளரப் பலவிதமான உலோகங்களை மனிதன் கண்டுப்பிடித்தான். இரும்பு, பித்தளை, செம்பு, ஈயம், வெள்ளி, பொன் முதலிய உலோகங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. எனவே, அவற்றைப் பலவிதமான அணிகலன்களாகச் செய்து மக்கள் தம்மை அணிசெய்து கொண்டனர்.

உலோகங்கள் மட்டுமன்றி நவமணிகளும் அவற்றின் இயல்பும் பயனும் பற்றி ஆராய்ச்சி செய்தவர் தமிழர்கள்; அவற்றை அழகு பட அணிகலன்களாகச் செய்து அணிந்து மகிழ்ந்தவர் தமிழர்கள். பின்வருவன ஒன்பான் மணிகள்: 1. வயிரம் 2. மரகதம் 3. மாணிக்கம் 4. புருடராகம் 5. கோமேதகம் 6. வயிடூரியம் 7. முத்து 8. பவளம் 9. நீலம்

அக்காலத்தில் மணிகளில் உள்ள குற்றங்குறைகளைப் பற்றியும் குணநலன்களைப் பற்றியும் ஆராய்ச்சியும் செய்துள்ளனர். சிலப்பதிகார அடிகளும் அவற்றிற்கு அடியார்க்குநல்லார் வகுத்த ஆய்வுரைகளும் இவற்றை மெய்ப்பிக்கின்றன. அவற்றைக் காண்போம்.

**வயிரம் (Diamond)**

வயிரத்திற்குக் குற்றங்கள் பன்னிரண்டு; குணங்கள் ஐந்து என்றனர் அடியார்க்குநல்லார்.

**குற்றங்கள்**

"சரைமலம் கீற்று சப்படி பிளத்தல் துளை, கரி விந்து. காகபாதம், இருத்து கோடியில்லன கோடி முரிந்தன தாரை மழுங்கலென இவை" "சரைமலங்கீற்றுச் சப்படி பிளத்தல்துளை கரி விந்து காகபாதம், இருத்துக் கோடி களிலாதன முரிதல், தாரை மழுங்கறன் னோடீ ராறும் வயிரத் திழிபென மொழிப" இவற்றில் மிக்க குற்றங்கள் நான்கு. அவை: 1.காக பாதம் 2.களங்கம் 3.விந்து 4. இரேகை என்பன. இவற்றினால் வரும் தீமைகள் இவை: "காக பாதம் கொல்லும்" "மலம் பிரியாதது நிலந்தரு கிளைகெடும்" "விந்து சிந்தையில் சந்தாபந் தரும்" "கீற்று வாலினை ஏற்றவர் மாய்வர்".

**குணங்கள் ஐந்து**

எட்டுப்பலகை, ஆறுகோடி, தாரை, சுத்தி, தராசம் ஆகியன. இவற்றை வேறுவிதமாகவும் கூறியுள்ளனர்: "பலகை எட்டும் கோணமாறும் இலகிய தாரையுஞ் சுத்தியும் தராசமும் ஐந்து குண மென்றறைந்தனர் புலவர், இந்திரசாபத் திகலொளி பெறினே".நான்கு வகை வருணத்தொளி? வயிரங்களுக்குண்டு. அவை பின் இத்தகு வயிரங்களை அணிகின்றவர்க்குரிய பயன்களும்° சொல்லப் பட்டுள்ளன: "மறையோர் அணியின் மறையோராகிப் பிறவி ஏழும் பிறந்து வாழ்குவரே" "மன்னவர் அணியின் மன்னவர் சூழ இந்நில வேந்தர் ஆவர் எழுபிறப்பும்" "வணிகர் அணியின் மணிபொன் மலிந்து தணிவறவடைந்து தரணியில் வாழ்வர், சூத்திரர் அணியில் தோகையர், கனகம் நெல்வாய்ப்ப மன்னி மகிழ்ந்து வாழ்குவரே.

**மரகதம் (Emerald)**

பசுமை நிறைந்தது. பசிய கதிரொளி பரந்துள்ளது. "ஞாயிற்றின் ஒளி மரகதக் கல்லின் மீது பட்டால் அதன் பச்சை வண்ண ஒளி அதன் சுற்றுப்புறம் எல்லாம் பரவி அருகிலுள்ள எல்லாப் பொருள்களையும் பச்சை நிறமாக ஒளிரச் செய்கிறது. எனவே, அணிகலன்களில் மரகத மணியை நடுநாயகமாக அமைத்து ஏனைய மணியைச் சுற்றிலும் வைத்து அணிகள் அமைக்கப்படுகின்றன. மரகதத்தின் பசுமையான ஒளி ஏனைய மணிகளில் பிரதிபலிப்பது ஓர் அரும் பெரும் அழகாகும்" என்பது சாத்தன்குளம் அ. இராகவன் கருத்து. மரகதத்தின் குற்றங்கள் எட்டு. அவை: கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பொரிவு, தராசம், இறுகுதல் என்பவையாகும். குணங்கள் எட்டு "நெய்த்தல் கிளி மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரில் பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல் பத்தி பாய்தல் பொன்வண்டின் வயிறொத்துத் தெளிதல் எட்டும் குணமே"

**மாணிக்கம் (Ruby)**

செந்நிறத்தையுடையது. மணிகளில் மன்னன். நால்வகை மாணிக்கங்கள் சொல்லப்படுகின்றன. வைரத்திற்கு அடுத்தபடியாக வைத்துப் போற்றப்படுவது. பிறப்பிடம், வருணம், பெயர், குணம், குற்றம், நிறம்,விலை, பத்தி இவற்றைப் பொறுத்து இவற்றின் இயல்பு கணிக்கப்படும்.

(1) பதுமம் -பதுமராகம் (அ) சாதுரங்கம்

(2) நீலம் - நீலகந்தி (அ) சௌகந்தி

(3) விந்தம் - குருவிந்தம் (அ) இரத்த விந்து

(4) படிதம் - கோவாங்கு

**புருடராகம் (Topaz)**

வைரம் போன்று மஞ்சள் கலந்த வெண்மையான மணி. புருட ராகம் பூசநட்சத்திரம் போல் பொலியும்; பொன்னைத் தெளிய வைத்தாற் போல் இலங்கும். இதனைச் சிலப்பதிகாரம் "பூச உருவில் பொலந்தெளித்தனைய" என்று கூறியுள்ளது.

**இதன் குற்றங்கள்**

'ஒளியின்மை, நாசனை (மாணிக்கத்தில் உண்டாகும் வெண்ணீர்) கருமை, மஞ்சள்,மேடுபள்ளம், கலங்கல், கருவெண்மை, வெண்மை' ஆகியவை புருடராகத்தின் குற்றங்களாகும்.

**குணங்கள்**

'அழகிய தோற்றம், பருமன், தெளிவு, கனம், மென்மை, கோங்கிலவ மலர் போன்ற நிறம், நல்ல வெண்மை' ஆகிய ஏழு விதமான குணங்களாக வாகட நூல் கூறுகிறது.

**வயிடூரியம் (Cat-eyes)**

இது கதிரவன் ஒளியைப் போன்றும், தேன் துளியைப் போன்றும் இலங்கும்.

**குற்றம்**

'கறுப்பும் சம உருவமும் உள்ளது: கரடுமுரடானது. நீர் நிறம் உள்ளது. இலேசானது' முதலியன குற்றமுடையன.

**குணம்**

மூங்கில் இலை; பூனைக்கண்; மயிற்கழுத்து இவை போன்ற ஒளியுள்ள வைடூரிய மணிகளே உயர்ந்தன. இம்மணி எங்கு இருப்பினும் அதனுள் நூல் இழை போன்ற ஒளிவீசும். இதனை 'நூலோட்டம்' என்பர்.

**நீலம் (Sapphire)**

"இருளைத் தெளிய வைத்தாற் போன்றவை நீலமணிகள்" என்றார் இளங்கோவடிகள் இவை நான்கு சாதியன. குணம் பதினொன்றும், குற்றம் எட்டும் உடையன. இதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

"நீலத்தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமும் நண்ணுமாகரமும்
குணம் பதினொன்றும் குறை இருநான்கும்
அணிவோர் செயலும் அறிந்திசினோரே".

**நால்வகை**

"வெள்ளை, சிவப்பு, பச்சை, கருமையென்று எண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே".

**குணம்**

"கோகுலக் கழுத்துக்குவளை சுரும்பர் ஆகுலக் கண்களவிரிச்சாறு காயா நெய்தல் கனத்தல் பத்தி பாய்தல் எனக்குணம் பதினொன்றாமே". 26

**குற்றங்கள்**

அப்ரகம், சசர்கரம், திராசம், பின்னம், மிருத்திகா கர்பம், அச்மகர்பம், 27

1. அப்ரகம் அப்ரகம் போன்ற நிறம் நீலத்தின் மீது படர்ந் திருப்பது
2. சசர்கரம் - மணியில் மணல் சேர்ந்திருப்பது.
3. திராசம் - பொரிசல் இருந்தால் திராசம்.
4. பின்னம் - உடைந்திருப்பது.
5. மிருத்திகா கர்பம் கல்லின் உள்ளே மணல் இருப்பது.
6. அச்மகர்பம்- உள்ளே கல் காணப்படுவது.

**கோமேதகம் (Zircon)**

மஞ்சளும் சிவப்பும் கலந்தது போன்ற நிறத்தையுடையது கோமேதகம்."இருவேறுருவ" என்றார் இளங்கோவடிகள்

**குற்றங்கள்**

1. மங்கலானது, 2. மாசுள்ளது, 3. இலேசானது, 4. மேடு பள்ளம் உள்ளது. 5. உப்புக் கசிவுள்ளது, 6 தகடு வடிவம், 7. ஒளியற்றிருப்பது, 8. உருக்குக் கல் போலிருப்பது.

**குணங்கள்**

1. "நல்ல தெளிந்த பசுவின் சிறுநீர் நிறமுடையது, 2. மாசில்லாதது, சுத்தமானது, 3. பளபளப்புடையது, 4.அழுத்தம் உள்ளது. 5. கனம் உடையது. 6. மேடுபள்ளம் இல்லாதது, 7.கொழுப்பானது, 8. ஒளி நிறைந்தது ஆகிய எட்டுக் குணங்கள் கொண்டது நல்ல கோமேதக மணியாக மதிக்கப்பெறும்

**முத்து (Pearl)**

பாண்டிய நாடு முத்துடைத்து என்னும் பழம்பாடல் தமிழகத்தில் முத்துக்களின் சிறப்பைக் காட்டுகிறது. பண்டைத் தமிழர் முத்துக்களைக் காதணிகளாகவும் வளைகளாகவும் மாலைகளாகவும் கோத்து அணிந்து மகிழ்ந்தனர். அரசிகள் முத்துக்களைச் சேலைகளின் முந்தானையின் முனைகளில் கோத்து அணிந்தனர். தமிழக முத்துக்களைக் கிரேக்க, உரோமானிய, எகிப்திய நாகரிக நங்கையர் விரும்பி வாங்கிப் பயன்படுத்தினர். பாண்டி நாட்டுத் துறைமுகமாகிய கொற்கையில் வந்து பொற்காசுகளைத் தந்து கொற்கை முத்துக்களைக் கொள்முதல் செய்து கொண்டு போனதாக அயல்நாட்டு வரலாறுகள் கூறுகின்றன

**முத்துக்களின் வகைகள்:**

1. வட்ட முத்து 2.ஒப்பு முத்து 3.குறுமுத்து 4.நிம் போளம் 5.பயிட்டம் 6.அம்புமுத்து 7. கரடு 8.இரட்டை 9.சப்பாத்தி 10.சக்கத்து 11.குளிர்ந்த நீர் 12.சிவந்த நீர் இவையின்றி ஆணிமுத்து, கருமுத்து என்பனவும் சொல்லப்படுகின்றன.

**குற்றங்கள்**

காற்றினாலும் மண்ணினாலும் கல்லினாலும் நீரினாலும் தோன்றியவை. காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை என்பன மிக்க குற்றங்கள்

**குணங்கள்**

சந்திரன்- வெண்ணீர்மை

குரு- பொன்னீர்மை

அங்காரகன்- செந்நீர்மை

**பவளம் (Coral)**

பவளப் பூச்சிகள் கடலில் உள்ள பிற உயிர்களால் தங்களுக்கு நேரும் ஆபத்தை அகற்ற ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் பாதுகாப்பு அரணே பவளமாகும்.

**நிறங்கள்**

சிவப்பு, வெண்ணிறங் கலந்த சிவப்பு, வெண்மை, கறுப்பு, நீலம் போன்ற பல நிறங்களில் பவளங்கள் உள்ளன. ஆயினும் தமிழர் சிவப்பு நிறப் பவளத்தையே விரும்புவர்.

**குற்றங்கள்**

கருப்பத்தே துளைபடுதல், கல்லிடுக்கிற் புகுந்து முடங்குப் படுதல், திருக்கு முறுக்குண்டெழுதல் முதலியன பவளத்திற்குரிய குற்றங்கள்.

**குணமிக்கவை**

நிறம், உருட்சி, சிந்துரம், ஈச்சங்காய், முசுமுசுக்கைக் கனி, தூது வழுதுணம் பழம் போல்வன. இவ்வொன்பான் மணிகள் மூவகையாகப் பிரிக்கப்படுகின்றன.

தலைமணிகள்: வைரம், முத்து, மரகதம், மாணிக்கம்.

இடைமணிகள்: நீலம், புட்பராகம். வைடூரியம்.

கடைமணிகள்: பவழம், கோமேதகம்

**பிற அணிகலன்கள்**

தொடக்க காலத்தில் காதுகளில் அழகுக்காகச் செருகிக் கொண்ட குழை-அதாவது

தளிர், கால மாற்றத்தில் பொன்னாற் செய்யப்பட்டாலும் 'குழை' என்னும் பெயரைப் பெற்றே விளங்குகிறது. சுருளாகச் சுருட்டிக் காதில் அணிந்து கொள்ளப்பட்ட பனையோலை 'காதோலை' எனவும், பூவிதழ் தோடு எனவும் பெயர் பெற்றது. தொடக்கத்தில் அரையில் அணிந்து கொண்ட 'கொடி' பிற்காலத்தில் 'அரைஞாண்' எனப்பட்டது.

"அணிகலன்களின் இத்தகைய படிப்படியான வளர்ச்சியைத் தென்னிந்தியாவில் காணலாம். இங்குள்ள பண்டை மக்கள் முறுக் குண்ட புற்களையும் நார்களையும் கடகங்களாகவும் வளையல்களாகவும் அணிந்தார்கள். கண்ணாடி மணிகளையும் பவழங்களையும் கழுத்தணிகளாகவும் அணிந்தார்கள். சிற்றூர்களில் உள்ள ஏழை மக்கள் வெள்ளி, பொன், பித்தளை, செம்பு, ஈயம் போன்றவற்றை நகைகளாகச் செய்து அணிகின்றார்கள். அவற்றுள் நுண்ணிய வேலைப்பாடமைந்த நகைகளும் உள்ளன.

**அணிகலன்களைக் குறிக்கும் சொற்கள்**

பூண், அணி, பணி, இழை, கலன், நகை முதலிய சொற்கள் தமிழில் வழங்குகின்றன. இவையனைத்தும் காரணப்பெயர்களாக இருப்பதைக் காணலாம்.

**பூண்**

பூணப்படுவது பூண்.

**அணி**

இச்சொல்லுக்கு அழகு, அலங்காரம், ஒப்பனை, கோலம், திரட்சி முதலிய பல பொருள்கள் உண்டு. அணிந்து கொள்வது அல்லது அழகு தருவது அணி எனப்படும்.

**இழை**

இழை என்பது பொன்னில் கற்களை வைத்து இழைக்கப் படுவதால், பொன்னைக் கம்பிகளாக இழைத்துச் செய்யப்படும் அணிகலன்களுக்கும் பெயராயிற்று.ஆனால், காலப்போக்கில் இழை என்னும் சொல்லால் எல்லா நகைகளும் குறிக்கப் பெற்றன.

இனி, இழை என்னும் சொல்லைப் பல்விதமான அடை கொடுத்துச் சங்கப் புலவோர் கையாண்டுள்ளதைக் காணலாம். அணி இழை , அவிர் இழை, ஆயிழை, இலங்கிழை, உருள் இழை, எல்லிழை, ஏந்திழை, ஒள்ளிழை, கிளர் இழை, சீருடைய இழை, சுடரிழை, சேயிழை, திருந்திழை, தெரியிழை, நுணங்கிழை, நேரிழை, பாசிழை, புனையிழை, மாணிழை, மின்னிழை, முற்றிழை, வயங்கிழை, வாலிழை, விளங்கிழை, விறலிழை, கலைத்திறன்

**கலன்**

கல்லென்னும் ஒலியெழுப்புவதால் கலன் எனப் பெயர் உண் டாயிற்று.

**நகை**

ஒளிவிடுவதால் நகை எனப்படுகிறது.

**பணி**

பண்ணப்படுவதன் காரணமாகப் பணி எனப்பட்டது என்றும் கருத இடமுண்டு. தட்டார்களில் பணித்தட்டார் என்னும் பிரிவினர் இருந்ததாகச் சிலப்பதிகாரம் சொல்கிறது.

**வளை**

தமிழ்ப் பெண்கள் விரும்பி அணியும் அணிகலன்களில் வளை சிறப்பானது.

வளையமாக இருப்பதால் வளை எனும் பெயர் பெற்றது. தொல்பழங்காலத்திலும் இவ்வணிகலன் இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது. சங்க வளை, ஆமை ஓட்டு வளை, பித்தளை, செம்பு, வெள்ளி, பொன் முதலியவற்றால் ஆகிய வளைகள் செய்யப்பட்டன. வளை அணிந்ததால் பெண்டிர் 'வளையோர்' என்றும் சொல்லப்பட்டனர். வளைகளில் மாணிக்க வளை, முத்து வளை, பொன் வளை, நவரத்தின வளை, சங்க வளை முதலியன கூறப்பட்டுள்ளன. சந்துக்காரை, சூடகம், பரியகம், கைச்சரி, வண்டு முதலியன வளையலைக் குறிக்கும் சொற்களாகும்.

வளைக்கு அடைமொழிகளாகப் பயன்படுத்திய பல்வேறு சொற்கள் அதன் சிறப்பை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. அணிவளை, அரம்போழ் அவ்வளை, ஆய்வளை, இடுபுணர்வளை, இலங்குவளை, இறைவளை, எல்வளை, ஒள்வளை, சில்வளை, சிறுவளை, சுரிவளை, சூர்ப்புறு கோல்வளை, செறிவளை, திருந்துகோல் எல்வளை, தெரிவளை, தொகுவளை, தோள்வளை, நல்மாண் எல்வளை, நிரைவளை, நேர்வளை, வீங்குவளை.

**தொடி**

வளையைப் போன்று கைகளில் தொடுத்துக் கொள்ளப்படுவது தொடி என்னும் அணிகலன். இதனைத் தோளிலும் தொடுத்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. இருபாலாரும் தொடுத்துக் கொள்வர். இவ்வணியும் பெருமளவில் பெரும்பாலோரால் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதனைப் பின்வரும் அடைமொழிகளால் அறியலாம். அகல்தொடி, அவிர்தொடி, ஆய்தொடி, இலங்குதொடி, ஒண்தொடி, கழல்தொடி, குறுந்தொடி, கோல்தொடி, சுடர்த்தொடி, செறிதொடி, பூந்தொடி, பைந்தொடி, பொலந்தொடி, நிரைதொடி, விழுத்தொடி , விளங்குதொடி, வீழ்தொடி.

**குழை**

இச்சொல் 'தளிர்' என்னும் பொருளை உடையது. பின்னர் உலோகத்தால் ஆன அணிகலனைக் குறிக்கலாயிற்று. காதணி களில் ஒன்று குழை. பின்வரும் அடைமொழிகளுடன் இச்சொல் இலக்கியங்களில் பயின்று வருகிறது. அரிக்குழை, அவிர்குழை, ஒண்குழை, கனங்குழை, கொடுங்குழை, சிறுகுழை, சோர்குழை, பூங்குழை, பொலங்குழை, வடிவார் குழை, வரிக்குழை, வினைக்குழை,

பொதுவகையான அணிகலன்கள் பற்றி இதுகாறும் சொல்லப் பட்டது. இனி ஒவ்வோர் உறுப்பிற்கும் அணிந்து கொள்ளப்பட்ட அணிகலன்களைப் பற்றிக் காணலாம். வருணனை இருவகையாக அமையும். ஒன்று முடிமுதல் அடி வரை வருணிப்பது. மற்றொன்று அடி முதல் முடி வரை அமைவது. இங்கு அணிகல ஒப்பனையைக் கேசாதிபாதம் என்ற முறையில் காண்போம்.

**தலையணிகள்**

**முடி**

கடவுளர்க்கும் மன்னவர்க்கும் தலை ஒப்பனையில் சிறப்பாக அமைவது முடி. திவாகரம், பிங்கலம் என்னும் இரு நிகண்டுகளும் முடியின் உறுப்புகளாகத் தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என்னும் ஐவகை உறுப்புகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வைந்து

உறுப்புகளைக் கொண்டதும் விலைமதிக்க முடியாததும் வேலைப்பாடு மிக்கதுமான திருமுடியை முருகப்பெருமான் அணிந்திருந்ததாகத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் வருணித்துள்ளார்.பரிபாடலில் திருமாலைப் பாராட்டும்போது திருமால் 'புனை திருமுடியை உடையவன்' எனப் பாராட்டப்பட்டுள்ளது.

**அரசர் முடி**

சேர வேந்தன் தன்னை எதிர்த்த ஏழு அரசர்களின் முடிகளைக் கவர்ந்து அவற்றை உருக்கி அப்பொன்னைக் கொண்டு ஆரம் செய்து அணிந்து கொண்டான். இதனால் அரசர்கள் வேலைப்பாடு மிக்க பொன்முடியை அணிந்து கொண்டனர் என்பது உறுதியாகிறது.

**மகளிர் முடி ஒப்பனை**

பண்டைக்காலத் தமிழ்ப் பெண்டிர் கூந்தலை வாரி முடித்துக் கொண்டு அதில் பலவகையான அணிகலன்களை அணிந்து ஒப்பனை செய்து கொண்டனர். அவ்வணிகளே 'தலைக்கோலம்' எனப்பட்டது. திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் திருப்பரங்குன்றத்துச் சோலையில் விளையாடிய சூரர மகளிரின் தலை ஒப்பனை பற்றிய குறிப்பு வந்துள்ளது. அன்னார் தெய்வவுத்தி அல்லது சீதேவி என்னும் தலைக் கோலத்துடன் வலம்புரிச் சங்கின் வடிவாகச் செய்யப்பட்ட நகையினையும் தலையில் அணிந்திருந்தனர். அவற்றுடன் நெற்றியில் சுறா மீனின் அங்காந்த வாயாகப் பண்ணின அணிகலனையும் சூடியிருந்தனர்.

விறலி ஒப்பனை செய்த கரிய கூந்தலில் பொன்னாற் செய்த மாலையைக் கட்டியிருந்தாள். இதனால் அன்றாட வாழ்விலும் ஒருவகைத்தலை ஒப்பனை இருந்தது என்பது தெரிய வருகிறது. வையையில் புதுப்புனல் வந்தபோது அதில் புனலாடிய மகளிரின் தலைப்பாளை' என்னும் அணியையும் வெள்ளம் கவர்ந்து சென்றதாகச் சொல்லப்பட்டுள்ளது.
இவ்வணியைத் 'தொய்யகம்' என்றும் கூறினர்.

**சுரிதகம்**

சுரிதகம் என்பதும் ஒருவகைத் தலையணியாகும். இது சடை யில் அணியப்படும் திருகுப்பூப் போன்று வட்டமானதும் மணிகள் பதித்ததுமான பொன்னணி ஆகும்.

**உத்தி**

திருமகளைப் பொறித்து வைத்த, புனைந்த தலைப்பணி 'உத்தி' எனக் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ளது.

**மகரவலயம்**

பரிபாடல் 'மகரவலயம்' என்னும் தலையணியைக் கூறியுள்ளது. ஆளை எறிந்து கொல்லும் இயல்புடைய மகரமீனின் வடிவத்தை உடையதாய்ச் செய்யப்பட்டது மகரவலயம்' என்பது.

**சூளாமணி**

மணிகள் இழைத்து வில்லையாகச் செய்யப்பட்ட தலைக்குரிய அணியே சூளாமணி. கம்பன் இதனைச் சூடையின் மணி- என்றனன். இது வடமொழித்தொடர்.

**முஞ்சகம்**

சிறுவர்களுக்குரிய தலைஒப்பனையில் 'முஞ்சகம்' என்னும் அணியும் கூறப்பட்டுள்ளது.

இது தலை உச்சியில் அணியப்படுவது. இதைப் பற்றிய குறிப்பும் பரிபாடலில்தான் கிடைக்கிறது. தமிழக வேந்தர்களும் வள்ளல்களும் தம்மை நாடிவந்து ஆடியும் பாடியும் மகிழ்வித்த விறலியர்க்கும் பாடினியர்க்கும் பொன்னணிகளைப் பரிசாகத் தந்தனர். அது பொன்னரிமாலை எனப்பட்டது. இவ்வணிகலனையே பெரும்பாணாற்றுப்படை “பொன்னின் தொடைஅமைமாலை” என்று கூறியுள்ளது. பொருநராற்றுப் படையிலும் பெருங்கதையிலும் கூட இவ்வணிகலன் சொல்லப்பட்டுள்ளது. பரிசாகக் கொடுக்கப்படும் அணிகலன் அனைவர் கண்ணுக்கும் தெரியும்படி தலையில் அணிந்து கொள்ளப்பட்டது போலும். விறலியர்க்குப் பொன்னரி மாலை பரிசளிக்கப்பட்டதுபோல பாணர்க்குப் பொற்றாமரை வழங்கப் பெற்றது. இதனை வெள்ளி நாரில் கோத்து, சென்னியில் சூடிக் கொண்டனர். பொருநராற்றுப் படையும் புறநானூறும் இதனைப் பற்றிக் கூறுகின்றன.

**மத்தக நித்திலம்**

மத்தக நித்திலம் என்பது தலைக்கோலமுத்து முத்துகளைக் கொண்டு செய்யப்பட்ட தலையணிகளில் இதுவும் ஒன்று.

**நுதல் அணி**

மக்களின் உறுப்புகளில் முகம் சிறப்பானது. அதில் நெற்றி அனைவரும் காணும் வண்ணம் அமைந்துள்ளது. எனவே பெண்டிர் ஒப்பனையில் நுதலுக்கு முக்கியத்துவம் தந்து நுதலிலும் அணி கலன்களை அணிந்து அழகுபடுத்திக் கொண்டனர். நுதலுக்குரிய அணிகளைத் தனியாக அணிய இயலாது. தலையணிகளோடு இணைத்து நுதலில் தொங்கவிடப்படுவனவாகவே இருந்தன. இவை சிலவாயினும் சிறப்பானவையாகும்.

**நெற்றிச்சுட்டி**

நெற்றியில் தொங்குமாறு அணியப்பெற்றது நெற்றிச்சுட்டி.

**நெற்றிப்பட்டம்**

இது பொற்றகட்டால் செய்யப்பெற்றது. 'நெற்றியில் வளைவான பட்டத்தை அணிந்த தோற்றம் திங்களை வளைத்துக்கிடந்த வானவில் போன்றிருந்தது' எனப் பெருங்கதை உவமித்துள்ளது.

**திலகம்**

இது நெற்றிப் பொட்டை மட்டும் குறிப்பிடாமல், நுதலில் அணியும் பொன்னால் செய்யப்பட்ட ஓர் அணிகலனையும் குறிக்கிறது. இதனைப்பற்றிக் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ளது.

**காதணிகள்**

முன்னரே கூறியதைப் போலத் தொல்பழங்காலத்தில் காதணிகள் என்பவை குழையாகவும், பூக்களின் தோடுகளாகவும், ஓலைகளாகவுமே இருந்தன. கால ஓட்டத்தில் காதணிகளின் உருவும் மாறி உலோகங்களாயின. ஆயினும் பெயர் மாற்றம் பெறாமல் அதே பெயர்களில் நிலைபெற்றன. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் காது குத்திக் குழையணிந்து கொண்டனர். இக்காலத்தில் ஆடவர் காதணி அணிந்து கொள்ளும் வழக்கம் பெரும்பாலும் குறைந்து விட்டது. எனினும் குழந்தைப் பருவத்தில் ஆண் பெண் இருபாலார்க்கும் காது குத்தும்

வழக்கம் ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இது சமயத் தொடர் பான சடங்காகவும் மாற்றம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

**பொலங்குழை**

பொன்னால் செய்யப்பட்ட காதணியே பொலங்குழை எனப்பட்டது. மக்கள் அணிந்து கொள்ளும் பொலங்குழையைக் கடவுளர்க்கும் அணிவித்தனர். முருகப் பெருமானைப் பாராட்டிப் பாடிய நக்கீரர் 'முருகன் பொலங்குழை அணிந்திருந்தான்' எனப் பாடியுள்ளார்.

**பூங்குழை**

சங்ககால மகளிர் அணிந்த காதணிகளில் பூங்குழையும் ஒன்று. பூத்தொழிலுடன் பொன்னால் செய்யப்பட்ட குழையே 'பூங்குழை' எனப்பட்டது. 'விறலி ஒருத்தி பூங்குழை பூண்டிருந்தாள்' என்பதைப் பொருநராற்றுப்படை சொல்கிறது.

**ஒண்குழை**

பெண்களின் காதணிகளில் ஒண்குழையும் ஒன்று. மதுரை நகரச் செல்வ மகளிர் ஒண்குழையை அணிந்திருந்ததாக மதுரைக் காஞ்சியின் வாயிலாக அறிகிறோம்.

**கனங்குழை**

பண்டைக்காலக் காதணிகளில் கனங்குழையும் ஒன்று. பெண்டிர் முதலில் 'கடிப்பு' என்னும் அணியை இட்டுக் காதைப் பெரிதாக்கிய பின் 'கனங்குழை'யை அணிந்து கொண்டனர்.

**சிறுகுழை**

ஆயர் மகளிர் காதுகளில் 'சிறுகுழை' அணிந்திருந்தனர். நச்சினார்க்கினியர் இதனைத் 'தாளுருவி' என்று கூறியுள்ளார்.

**மகரக்குழை**

குழைகளில் மகரமீன் வடிவில் செய்யப்பட்டவைகளும் காதணிகளாக அணிந்து கொள்ளப்பட்டன. பாண்டிமாதேவி மிகவும் ஒளி பொருந்திய மகரக்குழையை அணிந்திருந்தாள் என நெடுநல்வாடை கூறுகிறது.

**புல்லிகை**

காதணிகளுள் இதுவும் ஒன்று என்பதைக் கலித்தொகையால் அறிகிறோம். இது காதினின்றும் தொங்கும் இயல்பினது. இது மெல்லிய காதில் கிடக்கும் புல்லிகை என்னும் பூணாகிய கீழே தொங்கும் இயல்புடையது. இதற்குப் பெருமழைப் புலவர் கன்னப்பூ, வாளி, குடைக்கடுக்கன் என்றெல்லாம் பொருள் எழுதி யுள்ளார்.

**கொடுங்குழை**

வளைந்திருப்பதால் இது கொடுங்குழை எனப் பெயர் பெற்றது. தலைமகள் ஒருத்தி கொடுங்குழை அணிந்திருந்ததாக அகநானூற்றுப் பாடலொன்றால் அறிகின்றோம். இது ஒளிமிகுந்த மத்தக மணி பதிக்கப்பெற்ற விளக்கம் மிக்க காதணி.

**கடிப்பு**

மகளிர் காதினை வளர்த்தற்கு இடப்படுவதோர் அணிகலன். பரிபாடலில் இதைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. சிலப்பதிகாரமும் இவ்வணிகலன் குறித்துக் குறிப்பிட்டுள்ளது.

அரும்பதவுரைகாரர் இதனை நீலக்குதம்பை என்றனர். (முகப்பில் கட்டின இந்திர நீலத்தின் இடை இடையே வயிரங்கள் பதித்து அழகுற அமைந்த நீலக்குதம்பை'என்பது அவருரை.

**கடுக்கன்**

இக்காலத்தில் ஆடவர் அணிந்து கொள்ளும் காதணிக்கே கடுக்கன் என்னும் பெயர் அமைந்துள்ளது. ஆனால் சங்க காலத்தில் பெண்டிர் அணிந்த காதணிகளில் கடுக்கனும் ஒன்று. நெடுநல்வாடை 'வாயுறை' என்பது 'வாயுறவென்று இருக்குமாயின் கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காது' என்று நச்சினார்க் கினியர் உரை எழுதியுள்ளார்.

**கழுத்தணிகள்**

கழுத்தில் அணியப்படும் அணிகள் கழுத்தணிகள் எனப்படும். பேரணிகளில் பெரும்பாலானவை கழுத்தணிகளே."கழுத்தணி கலன்கள் நூற்றுக்கு மேற்பட்டவை உள்ளன" என்கிறார் அ. இராகவன். கழுத்தை அணிசெய்த சில அணிகலன்கள் பூண், இழை, கலன் என்னும் பொதுச்சொற்களாலும் சொல்லப்பட்டுள்ளன.

சூரர மகளிர் நுட்பமான வேலைப்பாடமைந்த பூண்கள் விளங்கத் தம்மார்பை ஒப்பனைச் செய்து கொண்டனர். ஆகத்தை அழகு செய்த அப்பூண்கள் பற்றிய விளக்கமும் விவரமும் தெரியவில்லை. 'பூணகத் தொடுங்கிய வெம்முலை' என்பதற்கு 'மெல்லிய பணிகள் இடையில் கிடக்கின்ற விருப்பத்தையுடைய முலை' என்பது நச்சர் உரை.

மதுரை நகரப் பரத்தையர் நுண்பூண் அணிந்த மார்பினை உடையவர்கள் என்கிறது மதுரைக்காஞ்சி. குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ள தலைவி முத்து, மணி, பொன் முதலியவற்றால் ஆன கலன்களைக் கழுத்தில் அணிந்திருந்தாள். வேந்தன் கரிகாலன் ஒளிபொருந்திய பேரணிகளால் தன் மார்பை அலங்கரித்துக் கொண்டிருந்தான்.

**மதாணி**

கழுத்திலிருந்து தொங்கவிடப்படிருந்ததும், மார்பை அணி செய்யும் பதக்கத்தை உடையதுமான அணி, மதாணி எனப்பட்டது. மதுரை மாநகர வாழ்வரசியர் மதாணி அணிந்து, தம்மை ஒப்பனை செய்துகொண்டனர். பவளம், மணி இவற்றை இடைஇடை வைத்துக் கட்டிய மாலைகளும் இருந்திருக்கின்றன. அகநானூற்றுப் பாடல் தொகுதிகளின் பெயரும் 'மணிமிடைபவளம்' எனப் பெயர் பெற்றுள்ளமை இதனைத் தெரிவிக்கின்றது. இவையன்றி முத்துகளைக் கோத்து மாலையாகச் செய்து அணிந்துகொள்ளும் வழக்கமும் உண்டு. அகநானூற்றுப்பாடல்களில் 'நித்திலக்கோவை' என்னும் தொகுப்பும் உண்டு. பொற்காசுகளைப் பொற்கம்பியில் கோத்துக் காசுமாலையாகச் செய்து அணிந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும் இருக்கிறது. நள்ளி என்னும் வள்ளல் தன் கழுத்தில் பல வடங்களை யுடைய முத்து மாலையை அணிந்திருந்தான்.

**சிறுவர் கழுத்தணிகள்**

சங்க காலத்திலேயே சிறுவர்களுக்கும் பலவித அணிகள் அணிவிக்கப்பட்டன. வாள் போன்றும் மழுப் போன்றும் பொன்னாற் செய்யப்பட்ட அணிகளும், இந்திரகோபப் பூச்சி போன்ற சிவப்பு நிறம்மிக்க பவழத்தில் ஆன இடப உருவமைந்த ஒருவகை அணியும் முத்து, பிற மணிகள் ஆகியவற்றை ஒருங்கு கோத்து உருள் வடிவில் ஆக்கிய மூவட அணியும்

நீலமலர்களும் தோற்றுவிடும்வண்ணம் அமைந்த நீலமணி மாலையும் கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ள சிறுவர்க்குரிய கழுத்தணிகளாகும்.

**தாலி**

தாலி என்றதும் இக்காலத்தில் திருமணங்களில் மணமகளுக்கு மணமகனால் அணிவிக்கப்படும் மாங்கல்யமே அனைவருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், இங்குக் கூறப்படுவது அத்தாலி யன்று. இது அணிகலன்களில் ஒன்றாகும். சிறுவர் கழுத்தில் 'தாலி' அணிவிக்கும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது. புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் மன்னவனைப் பாராட்டிய இடைக்குன்றூர் கிழார் 'சிறுவர்க்கணிவிக்கும் தாலியும் இன்னும் களையப்படவில்லை. இவன் போருக்கு வந்து விட்டானே' எனப் பாடியுள்ளார். இதற்கு உரை எழுதியவர் 'ஐம்படைத்தாலி கழித்ததும் இலன்' என எழுதியுள்ளார். குறுந்தொகை, புலிப்பல் தாலியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. புறநானூற்றிலும் இத்தாலியைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. அகநானூறு"புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி என ஒரு பாட்டிலும், "பொன்னுடைத் தாலி" என வேறொரு பாட்டிலும் குறித்துள்ளமையையும் காண்கிறோம். வீரயுகம் எனக் கூறத்தக்க சங்க காலத்தில் ஓர் ஆடவனின் வீரத்தின் அடையாளமாகப் புலியைக் கொன்று அதன் பல்லைக் கொணர்ந்து தன் காதலிக்குக் கட்டியிருத்தல் வேண்டும். தொடக்கத்தில் புலிப்பல் கோத்த தாலி பிற்காலத்தில் பொற்றாலியாக மாற்றம் பெற்றுவிட்டது.

சிறுவர்களுக்கு அணிவிக்கப்பட்ட ஐம்படைத்தாலியாகிச் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்னும் திருமாலின் ஆயுதங்கள் பொறிக்கப்படலாயிற்று என்பதை உணரலாம். இடைக்காலத்தில் சைவ சமயத்தைச் சார்ந்த உரையாசிரியர்கள் சிவபெருமானின் ஆயுதங்கள் பொறித்த ஐம்படைத் தாலியைப் பற்றி எழுதியுள்ளனர். உண்மையில் சைவர்களின் குழந்தைகட்கு அணிவித்த தாலிகளில் சிவபெருமானின் ஆயுதங்களே பொறிக்கப் பட்டிருந்தன. எப்படியாயினும் இது வீரத்தின் அறிகுறியாகச் சிறுவர்கட்கு அணிவிக்கப்பட்டு, பின்னர் சமய நம்பிக்கைக்கு உள்ளாகிவிட்டது.

**தோளணி**

தோளில் அணிந்து கொள்ளப்பட்ட அணிகளில் தொடி, தோள் வளை அல்லது வாகு வலயம் என்பன முக்கியமானவை. தோளணிகளில் பெண்டிர்க்குரியனவும் உண்டு. ஆண்களுக்குரியனவும் உண்டு. மன்னவர்களும் மறவர்களும் தொடியணிந்து தம்மை அலங்காரம் செய்து கொண்டனர். முள்ளூர் மன்னன் காரி என்னும் வள்ளல் 'தொடி' என்னும் அணிகலனை அணிந்திருந்தான். அவனைப் புலவர்"கழல் தொடிக் காரி என வருணித்தனர்.

**கையணிகலன்கள்**

மனித உறுப்புகளில் கைகள் மிகச் சிறப்பானவை. கண்களுக்குச் சமமாகச் சொல்லத்தக்கவை. கைகளில் அணியும் அணிகலன்கள் அனைவர் பார்வைக்கும் தென்படுபவை. கைகளில் அணிகலன்களை அணிந்து கொள்வது ஒப்பனையில் முக்கியமானது. பழங்காலத்தில் தமிழ்ப்பாவையர் வெண்மையான சங்குகளை அறுத்து வளையாக அணிந்து கொண்டனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

ஐங்குறுநூற்றில் 'வளைப்பத்து' என்னும் பத்துப் பாடல்கள் உள்ளன. அதில் சங்கை அறுத்துச் செய்யும் வளை பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. தோளிலணியும் தொடியும் முன்கையில் அணியும் வளையும் சங்கினால் செய்யப்பட்டன. வலம்புரிச் சங்கால் வளை செய்து அரசி அணிந்திருந்தாள். கைத்தொழிலில் வல்லோன் வாளரத்தால் அராவிய வளைந்த அழகிய வளையையும். அகன்ற தொடியையும் அணிந்த முன்னங் கையை உடையாள் என்பது நற்றிணை தரும் தகவல். "சிலவாகிய வெண்மையான வளைகளை உடைய செய்யோள்" எனக் கலித்தொகை வருணிக்கின்றது.

**பொன் வளை**

பொன்வளையைப் 'பொற்றொடி' எனவும் கூறினர். பெண்டிர் பொன்வளைகளால் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். சிறு குழந்தைகட்கும் பொற்றொடி அணிவிக்கப்பட்டது. "யாவரும் விரும்பும் பொற்றொடி" அணிந்த புதல்வனைத் தெருவில் பார்த்து விட்டாள் பரத்தை. உடனே அவனைத் தூக்கி எடுத்துத் தழுவிக் கொண்டாள். இந்நிகழ்ச்சி அகப்பாடல் ஒன்றில் வந்துள்ளது.

**கைவந்தி**

கைகளில் அணிந்துக் கொள்ளும் அணிகளில் கைவந்தியும் ஒன்று. இது மேற்கைகளில் அணிந்துக் கொள்ளப்படுவது. இக்காலத்தில் இதனைக் ‘கைவங்கி' என்கின்றனர். மதுரை மாநகர் செல்வ மகளிர் பொலிவுடைய கைவந்தியால் தம்மை அணிசெய்து கொண்டனர்.

**கடகம்**

இருபாலாரும் அணிந்துக் கொள்ளும் அணிகலன்களில் இதுவும் ஒன்று. தன் தேவியைப் பிரிந்து போர்க்களம் சென்றிருந்த பாண்டிய வேந்தன், ஒரு கையைப் படுக்கையின் மேல் வைத்து, 'கடகம்' அணிந்த ஒரு கையால் முடியைத் தாங்கியிருந்தான்.

**பவள வளை**

பண்டைக்காலப் பாவையர் பவள வளைகளையும் அணிந்தனர். பவள வளைகளுடன் குவளையின் பச்சை நிறத் தண்டினையும் ஆம்பலின் தண்டினையும் அணிந்து தம்மை அலங்கரித்துக் கொண்டதாகப் பரிபாடல் அறிவிக்கிறது.

**இடுபுணர் வளை**

பரிபாடலில் குறித்துள்ள கையணிகளில் 'இடுபுணர் வளையும்" ஒன்று. ஆணியிடும் இரட்டை வளையல் என உரைகாரர் இதற்கு விளக்கமும் அளித்துள்ளார்.

**சித்திரச் சூடகம்**

மாதவி நல்லாள் சூடகம் அணிந்து எழில்பெற விளங்கினாள். சித்திரச் சூடகம் என்னும் இது, முகப்பில் கட்டிமி மாணிக்கத்துடன் பத்திகளில் வயிரங்கள் பதித்த சித்திரத் தொழிலையுடைய சூடகமாகும்.

**நவரத்தின வளை**

அடியார்க்கு நல்லார், பரியகம் என்பதற்கு நவரத்தின வளை என உரை எழுதியுள்ளார். இதனைப் 'பரியகம்' என்னும் சொல்லால் குறித்தனர் இளங்கோவடிகள்.அரும்பதவுரைகாரர் பரியகம் என்பதனைப் பாசித்தாமணி, (அ) கைச்சரி எனக் குறித்துள்ளார்,

**சிறுவர் கையணி**

சிறுவர்க்குக் கைகளில் நண்டின் கண்போலக் காட்சி தரும் அழகிய பொன் அணிகலன் அணிவிக்கப்பட்டது.

**விரலணி**

தொன்றுதொட்டுள்ள அணிகலன்களில் விரல் அணிகளும் பல பெயர்களில் குறிக்கப் பெற்றுள்ளன. விரலணிகளில் மோசை, செங்கேழ் விளக்கம், மோதிரம், விரலணி என்பன சொல்லப்பட்டுள்ளன.

**மோசை**

மெல்லிய விரல்களில் அணிந்த விரலணிகள் 'மோசை' எனப்பட்டது. இதனை முனைவர் மா. இராசமாணிக்கனார் 'மோதிரம்' என்கிறார். "மோசை-விரலணி; வாழைப்பூப் போலக் குவிந்துளதென உவமையாலறியக் கிடத்தலின் மோதிர மன்மை யுணர்க" எனப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரை விளக்கமும் எழுதி யுள்ளார்.

**முடக்கு மோதிரம்**

இதனை "வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்' எனச் சிலம்பு சொல்கிறது. இதற்கு 'நெளிமோதிரம்'என அடியார்க்கு நல்லாரால் உரை வகுக்கப்பட்டது.

**அடுக்காழி**

இதனைக் "கேழ்கிளர் செங்கேழ்கிளர் மணிமோதிரம்"என்றார் இளங்கோவடிகள்.

**வயிர மோதிரம்**

நுடங்கின ஒளியையுடைய வயிரம் சூழ்ந்த மரகதத்தையுடைய தாள்செறி. இதனைக் கடைசெறி என்பர் அடியார்க்கு நல்லார். இவை மரகத நாயகமாகிய 'வட்டப்பூ' என்பர் அரும்பதவுரைகாரர்.

**மரகதமணி மோதிரம்**

'மரகதமணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்" என்பது இளங்கோவடிகள் கூற்று. சிலப்பதிகாரமே இதைப் பற்றி யும் சொல்லியுள்ளது.

**சுறா மீன் மோதிரம்**

'சுறாவேறெழுதிய மோதிரம் தொட்டாள்" என்பது கலித்தொகை தரும் தகவல்.

**வாளை மீன் மோதிரம் (அ) செங்கேழ் விளக்கம்**

வாளையின் அங்காந்த வாயைப் போன்று மடக்கிச் செய்யப்படும் மோதிரம்.டி" வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்து செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கம்" என நெடுநல்வாடை அறிவிக்கிறது

**பொன்மோதிரம்**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் பொன்னால் செய்யப்பட்டு அதில் பொலிவுமிக்க மணிகள் பதிக்கப்பெற்றதொரு மோதிரத்தை அணிந்திருந்தான். பெரும்பாலும் 'விளக்கம்' என்னும் சொல் மோதிரத்தைக் குறிப்பது.

**இடையணிகள்**

தமிழக மகளிர் ஒப்பனையில் இடைக்குரிய அணிகள் பலவும் இடம் பெற்றிருந்தன.

இக்காலத்தில் பெண்கள் ஒட்டியாணம் அணிந்து கொள்வதைக் காண்கிறோம். ஆடவர் பொன் அல்லது வெள்ளியால் செய்த அரைஞாண் அணிந்து கொள்ளுகின்றனர். இடை அணிகளில் பாண்டில், மேகலை, குறும்பொறி, சில்காழ், பல்காழ், பைங்காழ், பருமம், காஞ்சி, ஏணிப்படுகால், விரிசிகை என்பன குறிப்பிடத்தக்கன.

**பாண்டில்**

பாண்டில் என்பது ஒட்டியாணம் போன்றதோர் இடையணி. ஐங்குறுநூற்றில் பாலை பாடிய ஓதலாந்தையார் இதனைப் 'பொற்காசுகளை வரிசையாகக் கோத்துச் செய்யப்பட்ட இடையணி கலன் 'எனக் குறித்துள்ளார்.

**மேகலை**

இலக்கிய நூல்களில் பெரிதும் சொல்லப்படுவது மேகலை. மணிமேகலை என்னும் அணிகலன் ஒரு காப்பியத்தின் பெயராகவும் இடப்பட்டது. திருமுருகாற்றுப்படையில்" பல்காசு நிறைத்தசில்காழ்" என்னும் தொடருக்குப் "பலமணிகள் கோத்த ஏழுவடமாகிய மேகலை" எனவே ஏழு கோவையை உடைய இடையணி மேகலை எனப்பட்டது. இடையணிகளில் ' சில்காழ், பல்காழ், பைங்காழ், பருமம் என்னும் பெயரையுடைய அணி கலனும் ஒன்று.

**காஞ்சி**

மேகலைகளில் இதுவும் ஒருவகை. ஆடையின் புறத்தே அணியப்படுவது.

**தொடையணிகலன்**

'குறங்குசெறி' என்பது தொடையில் அணிந்து கொண்ட அணி கலன். தொடை அணிகலன் பெரும்பாலும் நாட்டியப் பெண்கள் அணிவதாக இருக்க வேண்டும். ஆடைக்கு மேல் தொடையைக் கௌவிக்கொண்டு இருக்குமாறு அணியப்பட்டது இது. 'கவான் செறி' என்றும் இது கூறப்பட்டது. சிலப்பதிகாரத்தில் மாதவி 'குறங்குசெறி' அணிந்திருந்தாள் என அது அறிவிக்கின்றது,

**காலணிகலன்கள்**

கணைக்காலில் அணியப்படுவனவும், கால்விரல்களில் அணியப் படுவனவும் காலணிகலன்கள் எனப்படும். காலணிகலன்கள் பண்பாட்டுச் சிறப்புடன் வரலாற்றுச் சிறப்பும் கொண்டவை.

**சிலம்பு**

சிலம்பு காலில் அணிந்து கொள்ளப்படும் அணிகலன்களில் ஒன்று. குடைச்சூல், ஞெகிழம் என்பனவும் சிலம்பைக் குறிக்கும் சொற்கள். மாதவி அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ்சீறடியில் சிலம்பை அணிந்து கொண்டதாகச் சிலப்பதிகாரம் கூறியுள்ளது. பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் முதலியனவும் அவள் அணிந்து கொண்ட காலணிகளாகும். காற்சரி, கழல், கட்டுவடம், பாதசாலம், கிண்கிணி, தண்டை முதலியனவும் பிற காலணிகள்.

பண்டைக்காலப் பெண்கள் சிலம்பு அணிந்து கொள்வது பெரு வழக்காகும். மணம்புரிந்து கொள்ளுமுன் இது அணிந்து கொள்ளப் பட்டது. திருமணத்திற்கு முன் சிலம்பைக் கழற்றுதல் ஒரு விழா வாகக் கொண்டாடப்பட்டது. அதனைச் 'சிலம்புகழி நோன்பு ற்றனர். சிலம்பு நீளவட்டமான காலணி. இது குழாய்போற் செய்யப்பட்டு, உள்ளே பரல்கள் இடப்பட்டன.

பரல்களாக இடப்பட்டவை முத்துக்களும் மாணிக்கங்களுமாகும்.

வில்லைப்போல் அமைந்து நன்கு வளைந்த குடைச்சூலாகிய சிலம்பு என்றும்,பொன்னினும் மணியினும் தொழிற்சிறப்பினும் சிறந்து விளங்கியதால் 'வளங்கெழு குடைச்சூல்' எனவும் சொல்லப்பட்டுள்ளன.

**கிண்கிணி**

சிறுவர்களும் பெண்களும் கிண்கிணி அணிந்து தம்மை அலங் கரித்துக்கொண்டனர். கலித்தொகையில் நச்சினார்க்கினியர் கிண்கிணி என்பதற்கு ஒருவகைச் சதங்கை' எனப் பொருள் எழுதியதுடன் 'தண்டை' எனவும் பொருள் எழுதியுள்ளார்.

**கட்டுவடம்**

இது காலணிகளில் ஒன்றென்பதைப் பரிபாடல் மூலம் அறிகிறோம்.

**கால்மோதிரம்**

கால்விரல் அணிகளில் கால்மோதிரமும் ஒன்று. சிலப்பதிகாரமும் பரிபாடலும் இவ்வணிகலன் பற்றிக் கூறியுள்ளன. சிலப்பதிகாரம் 'மெல்விரல் நல்லணி' என்னும் தொடருக்கு மகர வாய் மோதிரம், பீலி, கால்மோதிரம் என்னும் அணிகள் என்பர் அடியார்க்குநல்லார்.

**சிறுவர் காலணி**

சிறுவர்களின் காலணிகளில் கிண்கிணியும் ஒன்று. செல்வச் சிறார்களின் சிறிய அடிகளில் தவளையின் வாயைப் போன்று பொன்னால் செய்து அதனுள் ஒலி செய்யும் மணிகளையும் இடுதல் வழக்கம். தேரையின் வாய் போல் செய்யப்பட்ட கிண்கிணியும் இருந்திருக்கிறது.

**ஈரமைச்சுற்று**

காலில் அணிந்துள்ளது உருக்கிய பசும்பொன்னால் பண்ணிய காற்சரியுடன் கூடிய நிறம் பொருந்திய ஈரமைச் சுற்று' என் னும் காலணி என்பதால் சிறுவர் அணியைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

---

1. **அழகுக் கலையை "இன்கலை என்றும், கவின்கலை" என்றும் கூறியவர் யார்?**

   அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) மா. இராசமாணிக்கனார் இ) வெள்ளைவாரணார் ஈ) மறைமலையடிகளார்.

2. **கீழ்க்கண்டவற்றுள் எவை ஒப்பனை வகைகளைச் சார்ந்தது**

   அ) மகளிர் நீராடல் ஆ) ஆடை அணிதல் இ) கூந்தலை அகிற்புகையூட்டி அழகுபடுத்துதல் ஈ) அனைத்தும்.

3. **ஆடை வகைகளுள் ஒன்று**

   அ) கச்சை சிலம்பு குண்டலம் துகில்

4. **சங்க காலத்தில் ஆடவர் அணிந்துக் கொள்ளும் சட்டையை எவ்வாறு அழைத்தனர்?**

   அ). கால் சட்டை ஆ) மேலாடை இ)படம் ஈ)செம்பட்டு

5. **மெய்யை மறைக்கும் உடைக்கு ------என்று பெயர்**

அ) காப்பு ஆ) புட்டகம் இ) பூவாடை ஈ) மெய்ப்பை

6. **ஆடைக்கு வழங்கும் வேறு பெயர்**

அ) கலிங்கம் ஆ) பருத்தி இ) நூல் ஈ)பட்டாடை

7. **பருத்திப் பெண்டிர் என அழைக்கப்பட்டவர்கள்**

அ) இளம்சிறார்கள் ஆ)பருத்திநூற்கும் கைம்மை மகளிர் இ)திருநங்கைகள் ஈ)கன்னிப்பெண்கள்

8. **பலவிதமான பூக்கள் நிறைந்த வேலைப்பாமிக்க ஆடைகளை ------- என்றழைத்தனர்**

அ) பட்டாடை ஆ)பூவாடை இ)படம் ஈ) சட்டை

9. **புட்டகம் என்பது எவ்வகை ஆடை?**

அ) சேலை ஆ) மேலாடை இ) வேட்டி ஈ)கச்சை

10. **ஆடைகளை வெளுக்கும் தொழிலைச் செய்பவர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**

அ) ஆயர் ஆய்ச்சி ஆ) பரதவர் பரத்தியவர் இ)புலையர் புலத்தியர் ஈ)குறவன் குறத்தியர்

11. **ஆடைகளைப் பாதுகாக்கும் பெட்டிக்கு ------ என்று பெயர்**

அ) கலிங்க வட்டி ஆ) கலிங்கப் பெட்டி இ)சலவைப்பெட்டி ஈ) உடைப்பெட்டி

12. **ஒன்பான் மணிகளுள் இல்லாத ஒன்று.**

அ)வைரம் ஆ) முத்து இ)பவளம் ஈ)இரும்பு

13. **இடையில் அணிந்து கொண்ட அணிகலன் -------என்று அழைக்கப்பட்டது**

அ) காதோலை ஆ) குழை இ) அரைஞாண் ஈ)திகில்

14. **இழை என்னும் சொல் எவற்றைக் குறிக்கும்**

அ)அணிகலன் ஆ)ஆடைகள் இ)நவரத்தினம் ஈ) உணவுப்பொருள்

15. **ஆடவர்கள் அணியும் அணிகலன்**

அ) கடிப்பு ஆ) கொடுங்குழை இ) கடுக்கண் ஈ) மகரக்குழை

16. **ஆயர்மகளிர் அணிந்திருந்த சிறுகுழை எவ்வாறு அழைக்கப்பட்டது.**

அ)தாளுருவி ஆ)மகரக்குழை இ) புல்லிகை ஈ)கடிப்பு

17. **பொன்னால் செய்யப்பட்ட காதணி**

அ) பூங்குழை ஆ) திலகம் இ)நெற்றிச்சுட்டி ஈ)பொலங்குழை

18. **பூத்தொழிலுடன் பொன்னால் செய்யப்பட்ட காதணி**

அ) பூங்குழை ஆ) திலகம் இ) நெற்றிச்சுட்டி ஈ) பொலங்குழை

19. **சூளாமணி எப்பகுதியில் அணியப்படும் அணிகலன்**

அ) தலை ஆ) கழுத்து இ)இடை ஈ) கால்

20. **சிறுவர்க்கு அணியும் தாலி ------ என்றழைக்கப்படும்**

அ) ஆரம் ஆ) ஐம்படைத்தாலி இ) தாலி ஈ)தொடி

தொகுத்தறிவோம்

தமிழரின் முருகியல் உணர்ச்சியையும் கலைத்திறனையும் புலப்படுத்துவதே ஒப்பனைக் கலை. ஒருநாட்டு மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாகவும் அமைவது ஒப்பனைக் கலை. மேலும் ஒரு நாட்டின் கற்பனை வளத்தையும் செல்வச் செழிப்பையும் காட்டுவதாகவும் ஒப்பனைக் கலை அமைகிறது.

அழகில் சற்றுக் குறைந்தவர்கள் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும், இயல்பாகவே அழகுடையவர்கள் மேலும் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும் ஒப்பனைக் கலை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

4 அ) மயிலை சீனி. வேங்கடசாமி

5 ஈ) அனைத்தும்

6 அ) கச்சை

7 இ)படம்

8 ஈ) மெய்ப்பை

9 அ) கலிங்கம்

10 ஆ)பருத்திநூற்கும் கைம்மை மகளிர்

11 ஆ)பூவாடை

12 அ) சேலை

13 இ)புலையர் புலத்தியர்

14 அ) கலிங்க வட்டி

15 ஈ)இரும்பு

16 இ) அரைஞாண்

17 அ)அணிகலன்

18 இ) கடுக்கண்

19 அ)தாளுருவி

20 ஈ)பொலங்குழை

21 அ) பூங்குழை

22 அ) தலை

23 ஆ) ஐம்படைத்தாலி

பார்வைநூல்கள்

5. **தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்,** பேராசிரியர் வெ. வரதராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன்.மு, சாகித்திய அக்காதெமி, புது தில்லி
7. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.

---

குறுவினாகள் - விடைகள்

---

**மண்ணார் என்பவர் யார்?**

துணி துவைப்பவன்

**நூலாக் கலிங்கம் என்றால் என்ன?**

கலிங்க நாட்டி லிருந்து வந்த பட்டு ஆடையைத் தமிழர் நூலாக் கலிங்கம் என்று கூறினர்

**பூந்துகில் என்றால் என்ன?**

பூவேலைசெய்தஆடை; பொன்னாலாகியஆடை

**புலிப்பல் தாலி குறிப்பு வரைக.**

தமிழ் மக்களிடையே புழக்கத்தில் இருந்த கழுத்தில் அணியும் ஒரு வகை அணிகலன் ஆகும். ஆண், பெண் இரு பாலாரும் இதனை அணிந்திருந்தனர்

**காஞ்சி அணி குறிப்பு வரைக.**

மகளிர் இடையில் அணியும் ஒட்டியாணம். இடையில் உடுத்தியிருக்கும் ஆடை எந்த நிலையிலும் நழுவாமல் இருக்க இந்தக் காஞ்சியை அணிந்துகொள்வார்கள்.

**தண்டட்டி குறிப்பு வரைக**

பெண்கள் காதில் அணியக்கூடிய காதணி வகைகளுள் ஒன்று. இது தங்கம் அல்லது வெண்கலத்தினால் செய்யப்பட்ட ஒரு கனமான அணிகலனாகும்.

---

நெடுவினாகள்

---

8. ஒப்பனையில் ஆடைகலைக் குறித்து கட்டுரை வரைக.
9. ஒப்பனையில் அணிகலன் கலைக் குறித்து கட்டுரை வரைக.

# நாகரிகம்-பண்பாடு

**பாட அமைப்பு**

அறிமுகம்
குறிக்கோள்
5.1 தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்
5.2 அன்றாட வாழ்க்கைமுறை
5.3 திருமணம்
5.4 விருந்தோம்பல்
5.5 நம்பிக்கைகள்
5.6 பழக்கவழக்கங்கள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக
தொகுத்தறிவோம்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்
பயிற்சி வினா

**அறிமுகம்**

நாகரிகம் என்பது நகர மக்களின் திருந்திய வாழ்க்கை. நாகரிகம் என்னும் சொல் நகரகம் என்னும் சொல்லின் திரிபாகும். எல்லா நாட்டிலும் மாந்தர் முதல் முதல் நகர நிலையிலேயே நாகரிகமடைந்துள்ளனர். அதனால் நகரப் பெயரினின்று நாகரிகப் பெயர் தோன்றியுள்ளது. சிற்றூர்கட்கும் நகரங்கட்கும் எவ்வளவோ தொடர்பேற்பட்டுள்ள இக்காலத்தும், நாகரிகமில்லாதவன் நாட்டுப் புறத்தான் என்றும் பட்டிக்காட்டான் என்றும் இழித்துக் கூறுதல் காணலாம். இவ்வுலகில் எத்தனையோ நாகரிகங்கள் சொல்லப்படினும், அவையெல்லாம் கீழை நாகரிகம், மேலை நாகரிகம் என இரண்டாய் அடங்கும். இவ்விரண்டுள், முன்னது முந்தியது; தமிழரது பின்னது பிந்தியது; ஆங்கிலரது. எனவே நாகரிகம் பண்டுபாடு என்ற இப்பாடத்தில் தமிழரின் அக வாழ்க்கைமுறையை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளன.

**குறிக்கோள்**

தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பற்றி சுருக்கமான முறையில் விளக்கியுரைப்பது இப்பாடத்தின் நோக்கமாகும்.

**5.1 தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்**

தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதற்கு முன்னர், இவ்விரு சொற்கள் உணர்த்தும் பொருட்களை புரிந்துகொள்வது முக்கியமான தாகும்.பெரும்பாலும் இவை இரண்டும் ஒரே பொருளில் புரிந்துகொள்ளப்படுகின்றன. இவ்விரு சொற்களுமே

மனிதன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெற்றுள்ள வளர்ச்சினைக் குறிப்பிடுகின்றன. எனினும், அறிஞர்கள் இவ்விரண்டிற்கும் இடையே நுட்பமான வேறுபாட்டைக் காண முயன்றுள்ளனர்.

மனிதனுடைய வளர்ச்சியினை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அகவளர்ச்சி என்றும், புறவளர்ச்சி என்றும் அழைக்கலாம். தனக்கே உரிய சிறப்புப் பண்புகளாலேயே மனிதன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். அவனுடைய மனமே அவ்வேறுபாட்டை உருவாக்குகிறது. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேணவேண்டியவனாகிறான். இதற்குச் சில பண்புகள் தேவைப்படுகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையானவையாகும். இவையே மிக உயர்ந்த மானிடப் பண்புகளாகும். இத்தகைய பண்புகளை முன்னேறிய இனங்கள் அனைத்திலும் காணமுடியும். இத்தகு மானிடப் பண்புகளின் வளர்ச்சியே அகவளர்ச்சி எனக் குறிப்பிடப்படுகிறது.

மனிதனுடைய அறிவும் அனுபவமும் மேற்சொல்லப்பட்ட பண்புகளாக மட்டுமின்றிப் பருப்பொருட்களாகவும் வெளிப்படுகின்றன. உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பிற பொருட்களின் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சி வெளிப்படுகின்றது. இவை எல்லாம் தோன்றுவதற்கான அறிவு அகச்சார்பு உடையதாயினும், மேற்குறிப்பட்ட நுண்பொருட் பண்புகளுடன் ஒப்பிடுகையில் புறத்தன்மை கொண்டதாகும். இத்தகைய வளர்ச்சி புறவளர்ச்சி எனக் குறிப்பிடப்படுகிறது.

மேற்சொல்லப்பட்டுள்ள அகவளர்ச்சிகள் பண்பாடு என்றும், புறவளர்ச்சிகள் நாகரிகம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவ்விரண்டு வளர்ச்சிகளும் இணைந்து அமைந்த சமுதாயமே முழுவளர்ச்சி பெற்ற சமுதாயம் எனலாம்.

**நாகரிகம்**

நகர்ப்புறத்து ஆரவார வாழ்வே நாகரிகம் எனலாம். ஆங்கிலச் சொல்லான 'Civilization என்பதும் நகர்ப்புறத்து திருந்திய வாழ்வையே குறிகின்றது என அறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் விளக்கியுள்ளார். இலத்தீன் மொழியிலும் Civitas என்பது City அல்லது City State என்று பொருள்படும். Civis-Citizen: 'Civilis' என்னும் இலத்தீன் சொல் ஆங்கிலத்தில் Civilize என்றாயிற்று. எனவே, நகரமே நாகரிகப் பிறப்பிடம் என்று தெரிகிறது. உலகப்பெரு நாகரிகங்கள் அனைத்தும் பேராற்றங் கரைகளிலேயே உருவாகின. யூப்ரட்டீஸ், டைக்ரட்டீஸ், சிந்து, கங்கை, காவிரி, வைகை, பேரியாறு ஆகியவற்றின் ஓரங்களில் தோன்றிய நாகரிகங்களே பழமையானவை. மருத நிலங்களே நகரங்கள் உருவாகக் காரணமாகின. பெரிய நகரங்கள் பல்வகைத் தொழில்களும், கலைகளும் தோன்ற இடமளித்தன. நகர் >நகரம் நகரிகம் நாகரிகம் என்றாயிற்று என்பார் அறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர். அகம்

**பண்பாடு**

ஆங்கிலத்தில் உள்ள கல்ச்சர் (Culture) என்னும் சொல்லுக்கு இணையாகத் தமிழில்

'பண்பாடு' என்னும் சொல் ஆளப்படுகிறது. பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் பிற்காலத்தில் ஆக்கம் பெற்ற சொல்வடிவம் 'பண்பாடு' என்னும் சொல்லாகும். 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்' என்னும் கலித்தொகைத் தொடர் இச்சொல்லாக்கத்தோடு தொடர்புபடுத்திக் காணப்படுகிறது.

அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பண்பாட்டுக்குத் தரும் விளக்கம் சிந்திக்கத்தக்கதாகும். பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். மக்களின் வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட சுருவிகள், சமூகப் பழக்க-வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர்.

பண்பாடு பற்றி தெ.பொ.மீ அவர்கள் மேலும் கூறுவது மனம்கொள்ளத் தக்கதாகும். 'முன்னே கூறியது போல, இவை மக்கள் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும், தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும்போதே பண்பாடு என்கிறோம்'.

மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்னும் நிலைமையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழககங்கள் முதலியவற்றைக் கொண்டு பெற்ற வாழ்கை முறையே பண்பாடு' என ஈ.பீ.டெய்லர் (E.B. Taylor) விளக்கியுள்ளார்.

நாகரிகம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் இலக்கணம் காலத்துக்குக் காலம் மாறுபடும் தன்மை உடையதாகும். மனித இனம் ஒவ்வொன்றிலும் காணப்படும் வாழ்க்கைமுறை, செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு அந்தந்த இனத்தின் பண்பாடு விளக்கப்படும். மனிதப் பண்பாடு என்பது ஒரு பொதுத்தன்மை கொண்டதாயினும், குறிப்பிட்ட மனித இனம் ஒவ்வொன்றும் தனக்கெனத் தனித்து அடையாளப்படுத்திக் காணத்தக்க பண்பாட்டு ஒழுங்கைக் கொண்டதாக இருக்கும்.

தமிழ் மக்களின் வாழ்வில் காலங்காலமாகக் காணப்பெறும் வாழ்வியல் முறைகள் தமிழ்ப் பண்பாடு எனப்பெறும். தமிழ்ப் பண்பாடு செழுமையும் உயர்வும் உடையது. சங்க இலக்கியங்கள் முதலிய பண்டைய இலக்கியங்கள் வழியும், நாட்டுப்புற இலக்கியப் படைப்புகள் வழியும் தமிழ்ப் பண்பாடுகள் குறித்த செய்திகள் பலவற்றை நாம் வரலாற்று நோக்கில் அறியலாம். குறிப்பிட்ட இனத்தின் பண்பாடு என்பது பல இனத்தவரோடு கலந்து வாழும் சூழலில், மற்றை இனத்தாரின் பண்பாட்டுத் தாக்கத்தால் நெகிழ்ச்சியும் மாற்றமும் பெறும். தமிழரின் தனித்த பண்பாடு என்பது அயல்மொழி, அயல்நாட்டவரின் ஆட்சி ஆகியவற்றால் மாற்றங்களைப் பெற்றுள்ளது. அயல்நாட்டில் குடியேறி வாழ்வதாலும் தமிழர் தம் தனித்த பண்பாட்டினை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், தமது தனித்த பண்பாட்டைப் பேணிக்காக்கும் முயற்சியைத் தமிழ் மக்கள் தாய் நிலத்திலும் அயல் நிலத்திலும் தொடர்ந்து மேற்கொண்டே வருகின்றனர்.

## 5.1 தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, உணவு முறை, ஆடை அணிகலன்கள் அணியும் முறை. திருமணம், விருந்தோம்பல் பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகள்,

விழாக்கள், சடங்குகள், உறவுநிலைகள், கட்டடக கலை, சிற்பம், ஓவியம், இசை, கூத்து, நடனம் மற்றும் கைவினைகள் ஆகியவை தமிழ்ப் பண்பாட்டின் தலையாய கூறுகளாகும்.
தமிழரின் சமயம், அரசியல், ஆட்சிமுறை, வரிவகைகள், நாணயங்கள், நீதிமுறைகள், வணிகம், கல்வி, வேளாண்மை, வானியல் அறிவு மற்றும் மருத்துவம் ஆகியவை தமிழர் நாகரிகத்தின் தலையாய் கூறுகளாகும்.

## 5.2 அன்றாட வாழ்க்கைமுறை

அன்றாட வாழ்க்கைமுறை என்பது மக்கள் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில்கொள்ளுதல் வரையிலான நிகழ்வுகளின் கோவை எனலாம். தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் அல்லது வாழ்க்கைமுறை கொண்டிருக்கலாம். ஒருவரேகூட ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் அல்லது வாழ்க்கைமுறை கொண்டிருக்கலாம். எனினும், தமிழர் அனைவரும் பொதுவாகக் கொண்டிருக்கும் வாழ்க்கைமுறை குறித்தே இங்கு காணவிருக்கிறோம்.

தொல்காப்பியம் நாளொன்றை ஆறு பொழுதுகளாகப் பாகுபடுத்தியுள்ளது. வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்பன அவை. இவற்றுள் வைகறை காலை இரண்டுமணி தொடங்கி, காலை ஆறு மணி வரையிலான காலப்பகுதியாகும். பண்டைத் தமிழர்கள் வைகறைப் பொழுதில் துயில் எழுவதைப் போற்றி வந்துள்ளனர். இதனை "வைகறை யாமம் துயில் எழுந்து' என்னும் ஆசாரக்கோவைத் தொடராலும் அறியலாம்.

தமிழர்தம் அன்றாட வாழ்வின் தொடக்கமே தூய்மை, அழகியல் உணர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. விடியற்காலையில் மகளிர் தத்தம் இல்ல வாசலைப் பெருக்கித் தூய்மை செய்து, சாணம் தெளித்து மகிழ்வர். அழகிய கோலங்களை வாசலில் இடுவர். சாணமிடுதல் சுகாதார அறிவின் வெளிப்பாடாகவும், கோலமிடுதல் அழகியல் உணர்வின் வெளிப்பாடாகவும் உள்ளது. மேலும், கோலமிடல் ஒரு கலையாக விளங்குவதையும், அரசிமாக் கொண்டு கோலமிடுதல் எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்கு உணவுதரும் சுருணை உணர்வின் வெளிப்பாடாகவும் அமைகின்றன.

வைகறையில் துயிலெழல், ஆறு குளம் முதலிய நீர்நிலைகளுக்குச் சென்று நீராடல், இறைவழிபாடு செய்தல், தேவாரம் முதலியவற்றைப் பாடிப் பூசித்தல், முதல் நாள் வடித்த சோற்றில் நீர் ஊற்றி வைத்திருந்த நீராகாரத் தெளிவினை குடித்தல், பழையது உண்ணல், கூழ், களி உண்ணல் எனத் தமிழரின் அன்றாட வாழ்வின்

தொடக்கப்குதி அமைந்திருப்பதை இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை வேளையில் கோவில்களில் திருப்பள்ளி எழுச்சிவிழா கொண்டாடப்படும். பக்தர்கள் கடுமையான குளிரையும் பனியையும் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரில் குளித்து இறைவளை வழிபடுவர். இறைவளை வழிபடுதல் நோக்கமாயினும், மருத்துவப் பயனும் இதில் அடங்கியுள்ளது. அதிகாலை நேரத்தில் குளிர்ந்த நீரில் குளிப்பது உடல் வெப்பத்தைப் போக்கி உடலுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது.மேலும், ஓசோன் படலம் அதிகாலை நேரத்தில் பூமிக்கு அண்மையில் இருப்பதால், அதன் காற்று உடலுக்கு நன்மை பயக்கும் என்று அறிவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அனைத்துத் தொழில்களும் புது

உணர்வோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் தொடங்க ஏற்ற நேரமாகக் காலை நேரம் கருதப்படுகிறது. தமிழர்களின் அன்றாட வாழ்க்கை தூய்மையும் ஒழுங்கும் கொண்டு விளங்கியதை ஞா. தேவநேயப்பாவாணர் தமது பண்டைத் தமிழர் நாரிகமும் பண்பாடும் என்னும் நூலில் (ப 31,32) விளக்கமாகக் கூறியுள்ளார்.

'கல்வித் தொழிலாளர், காவலர், வணிகர் முதலிய உடல் உழைப்பில்லா வகுப்பினர் காலையிலும் உழவர், கைத்தொழிலாளர்கள், கூலி வேலைசெய்வோர் முதலிய உழைக்கும் வகுப்பினர் மாலையிலும் நாள்தோறும் குளித்துவந்தனர். அழுக்கைத் தேய்ப்பதற்கு ஆடவர் பீர்க்கங்கூட்டைப் பயன்படுத்துவதுண்டு. பெண்கள் மஞ்சள், சுண்ணம் முதலியவற்றைத் தேய்த்துக் குளிப்பர். சுண்ணம் என்பது பலவகைநறுமணப் பொருட்களைச் சேர்த்து இடித்த பொடி. அதனை இடித்துவைப்பது பண்டைக் காலத்து இளமகளிருக்குப் பெருவழக்கமாக இருந்துள்ளது. சுண்ணம் இடிக்கும்போது பாட்டுப் பாடுவர். இச்செயல் மாணிக்கவாசகர் மனத்தைக் கவர்ந்ததினால், 'திருப்பொற் சுண்ணம்' என்னும் திருவாசகப் பாடல் தில்லையில் அருளிச் செய்யப்பெற்றது. ஆடவர் புதன் மற்றும் சனி ஆகிய நாட்களிலும் பெண்டிர் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எண்ணெய்த் தேய்த்து தலைமுழுகினர். இது குளிப்பு நீராட்டு என்றும் தலைமுழுக்கு நெய்யாட்டு என்றும் சொல்லப்பெறும். நெய்யாட்டில் எண்ணையையும் உடம்பழுக்கையும் போக்க சீயற்காய் அரையல், அரைப்பு அரையல், உசிலைத்தூள், பாசிப் பயிற்றுமா, களிமண் முதலியவற்றைப் பயன்படுத்தினர். இருபாலரும் குளித்தவுடனும் தலைமுழுகியவுடனும் வெளுத்த துண்டினால் தலையையும் உடலையும் துவர்த்தி, வெளுதுத்த ஆடை உடுத்துவர். மாற்றாடை இல்லாவிடில், முன்பு அணிந்திருந்த ஆடையைத் துவைத்து உடுத்துவர்.

பெண்டிர் அகிற் புகையாலும் சந்தனப் புகையாலும் தம் கூந்தலின் ஈரம் உலர்த்துவர். காலையில் குளிப்பினும் குளிக்காவிடினும், பல் துலக்காமல் ஒருவரும் உணவு உண்பதில்லை. சோறுண்பவர் வாயும் முகமும் கைகாலும் கழுவியபின், துப்புரவான இடத்தில் தடுக்கில் அல்லது பலகையில் அமர்ந்து சம்மணம்மிட்டு அமர்ந்து உணவு உண்பர். கழுவிய வாழை இலையில் அல்லது வெண்கல வட்டிலில் உணவை இட்டு வலக்கையால் எடுத்துண்பர். அரசர் பொற்சுலத்திலும், செல்வர் வெள்ளிக்கலத்திலும் உண்பது வழக்கம். பெற்றோரும் பெற்ற சிறுபிள்ளைகளுமாய் இருந்தாலொழிய, ஒரே கலத்தில் அல்லது இலையில் பலர் உண்பதில்லை. உண்டு எழுந்தபின், இலையை அகற்றித் தண்ணீர் அல்லது சாணநீர் தெளித்துத் துப்புரவாக்குவர். இலையில் விட்ட மிச்சிலை பெற்றோரும் மனைவியரும் இரப்போரும் தவிரப் பிறர் உண்ணார். சில உணவு வகையால் ஏற்படும் வாய் நாற்றத்தைப் போக்குவதற்கு நறுமணச் சரக்கை வாயிலிடுதல், வெற்றிலைத் தின்னுதல், மார்பிற் சந்தனம் பூசுதல் முதலியவற்றைக கையாள்வர். இவற்றைச் செரிமானத்தின் பொருட்டென்றுச் சொல்வதுமுண்டு"

தமிழரின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் அவர்தம் பண்பாட்டு மேன்மையைப் புலப்படுத்துகின்றன என்று வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார். அவரின் கருத்துக்களை இனிக் காணலாம். 'பண்டைத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை எளிமையும் மேன்மையும்

உடையதாகும்; சிறிதும் கபடமற்றதாகும். மேலும், பண்டைத் தமிழர் குடும்ப நெறியில் உள்ளத்தைச் செலுத்தினர், பொருளீட்டி இன்புறுதலில் ஈடுபாடு செலுத்தினர், உபகாரஞ் செய்தலை மேற்கொண்டனர். தமிழரது பண்பாட்டின் மேன்மையை இத்தகைய இனிய வாழ்க்கை நன்கு புலப்படுத்துகிறது. (தமிழர் பண்பாடு கம்பனி காவியம், ப.40)

**உணவுமுறை**

உணவைச் சுவையுறச் சமைப்பதிலும் சுவைதேர்ந்து உண்பதிலும் தமிழர் சிறந்து விளங்குகின்றனர். சமுதாய ஏற்ற இறக்கங்களுக்கேற்ப உணவுமுறை, தரம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. தமிழர்தம் உணவுப் பண்பாடு குறித்த ஞா.தேவநேயப்பாவாணரின் கருத்துகள் சிலவற்றை இங்கு காண்போம்.

உலகில் முதன்முதலாய் உணவை நாகரிகமாகச் சமைத்து உண்டவன் தமிழனே. ஏனைய நாட்டாரெல்லாம், தம் நாட்டில் விளைந்த உணவுப் பொருட்களைப் பச்சையாகவும் சுட்டும் வெறுமையாய் அவித்தும் உண்டுவந்த காலத்தில் உணவைச் சோறும் கறியும் என இரண்டாக வகுத்து, நெல்லரிசியைச் சோறாகச் சமைத்தும், கறி அல்லது குழம்பு வகைகளை, கவையூட்டுவனவும் உடம்பை வலுப்படுத்துனவும் நோய் வராது தடுப்பனவுமான பலவகை மருந்துச் சரக்குகளை உசிலையாகச் (மசாலா) சேர்த்து ஆக்கியும், உயர்வாக உண்டுவந்த பெருமை தமிழனுடையதாகும். காய்வகைகளைக் காம்பு களைந்து சீவ வேண்டுபவற்றைச் சீவிக் கழுவியும், பித்தமுள்ளவற்றை அவத்திறுத்தும், மஞ்சள், மிளகு அல்லது மிளகாய் வற்றல், சீரகம், கொத்துமல்லி,

தேங்காய் முதலியவற்றை மைபோல் அரைத்துக் கலந்தும், இஞ்சி, வெங்காயம் வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கராம்பூ(கருவாய்ப்பூ), கருவாய்ப் பட்டை, ஏலம், சோம்பு முதலியவற்றை வேண்டுமளவு சேர்த்தும், வெந்தபின் புளி அல்லது எலுமிச்சஞ்சாறு விடவேண்டியவற்றிற்கு விட்டும், கடுகு, கறிவேப்பிலை முதலியன தூவி ஆவின் நெய்யில் தாளித்தும், முதன்முதற் குழம்பு செய்யப்பெற்றது தமிழகத்திலேயே. தாளிப்பு இலக்கிய வழக்கில் குய் எனப்படும்.

உலகில் அரிசியுள்ள தானியங்கள் பலவகை உள்ளன. அவற்றுள் நெல்லரிசிச் சோறு போல் வேறொன்றும் சுவையாய்க் குழம்பொடு பொருந்துவதில்லை. தமிழகத்திலேயே, காடைக் கண்ணியரிசி, குதிரைவாலியரிசி, சாமையரிசி, தினையரிசி, வரகரிசி என ஐவகை அரிசிகள் உள்ளன. அவை நெல்லரிசிக்கு ஈடாது. கம்பும் சோளமும் கஞ்சியும் கூழுமே சமைத்தற்கு உதவும். கேழ்வரகால் களியும் கூழும்தான் ஆக்க முடியும். கோதுமை, வாற்கோதுமை போன்ற பிறநாட்டுத் தானியங்களால் ரொட்டி மட்டுமே செய்யமுடியும்.

பச்சரிசி, புழுங்கலர்சி என்னும் இருவகையுள், தமிழர் விரும்பியது பின்னதே. அது சூட்டைத் தணிப்பதால் வெப்பநாட்டிற்கு ஏற்றதாகும். குழம்பின் சுவையையும் மிகுத்துக் காட்டும். அதற்காகவே, அதற்குரிய தனி முயற்சியை மேற்கொண்டனர். அதனால் ஏற்படும் வலுக்குறைவிற்குக் கறி வகைகளாலும் நெய்யாலும் ஈடு செய்யப்பெறும்.

பொதுவாக, காலைச் சிற்றுண்டியும் நண்பகல் மற்றும் மாலைப் பேருண்டியுமாக மூவுண்டிகளே பண்டைத் தமிழர் உண்டுவந்தனர். உழவர்கள் மற்றும் கூலியாட்களைப்

பொறுத்தவரை பழஞ்சோறு, பழங்கறி, ஊறுகாய் ஆகியவையே காலை மற்றும் நண்பகல் உணவாகும். புதுக் கறியாயிருப்பின் நெருப்பில் வாட்டியதும் துவையலுமாயிருக்கும். இரவுணவே அவருக்குப் புதுச் சமையலாகும்.

மங்கல நாட்கள், விழா நாட்கள், விருந்து நாட்கள் போன்ற சிறப்பு நாட்களைத் தவிர மற்ற நாட்களில் உழவர்கள் மூவேளையும் நெல்லரிசிச் சோறுண்பதில்லை. வரகு, சாமை, கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய அவ்வக் காலத்து விளைந்த தானியத்தையே பகலுணவாய் உண்பர். இல்லத்திலும் நிழலிலும் இருந்து வேலை செய்வோரேல்லாம், பெரும்பாலும், காலையில் பழையதும் நண்பகல் மற்றும் மாலையில் சுடுசோறும் உண்பர். அரசரும் செல்வரும் எல்லா நாளும், பிறரெல்லாம் சிறப்பு நாளும் காலையிற் பலகாரமும் பொங்கல் போன்ற கடு சிற்றுண்டி வகைகளை உண்பர். இருவேளைப் பேருண்டிகளுள் தமிழர்களுக்குச் சிறந்தது நண்பகலதே. குழம்புச் சோறும், மிளகு நீர்ச்சோறும், மோர் அல்லது தயிர்ச்சோறும் என, முச்சுவையுள்ளது பேருண்டி. அதை அறுசுவை என்பது வழக்கு. முக்கனிகளுள் ஏதேனும் ஒரு இனிப்பும், பாகற்காய் அல்லது சுண்டைவற்றல் கசப்பும், காரவடை உறைப்பும், புளிக்கறியும் தயிரும் ஊறுகாயும் புளிப்பும், மாதுளங்காய் அல்லது கச்சல் துவர்ப்பும், உப்பேறி உவர்ப்பும் ஆகும். இத்தகைய உண்டி, தமிழரின் சுவை முதிர்ச்சியையும் தலைசிறந்து நாகரிகத்தையும் மருத்துவ அறிவையும் உடல் நலவுணர்ச்சியையும் ஒருங்கே காட்டும். அறுசுவைகளுள் தமிழருக்குச் சிறந்தவை இனிப்பும் புளிப்பும் ஆகும். இது வெப்ப நாட்டியல்பு(பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக். 33-35).

பண்டைக் காலத்தில் தமிழர்களால் மரக்கறி உணவும் புலால் உணவும் விரும்பி உண்ணப்பட்டன. புலால் உண்ணுதலைத் திருவள்ளுவர் கடிந்து ஒதுக்கினும் பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் புலாலுணவு விரும்பு உண்ணப்படுகிறது.

அரிசிச்சோறு, தயிர்ச்சோறு, காய்கறிச் சமையல், நண்டுக்கறி, வரால் மீன் குழம்பு, ஊறுகாய், உடும்புக்கறி, வரகுச்சோறு, கோழிக்கறி, பன்றியிறைச்சி, ஈயல் உணவு, ஆட்டிறைச்சி, மாதுளங்காயை வெண்ணெயில் பொரித்து உண்ணல், கள்ளுண்டல் முதலிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகப் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.

வீட்டுக்கு வந்த விருந்தினருக்குப் பார்ப்பனப் பெண்கள் மாவடு ஊறுகாயொடு உணவு பரிமாறினர் என்னும் செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. கள்ளுண்டு களித்தல் உணவின் ஒரு பகுதியாகவும் இயல்பான உணவு முறையாகவும் பண்டைய நாளில் இருந்துள்ளது. கபிலர் போன்ற அந்தணப் புலவர்களும் கள்ளுண்டலைப் பாராட்டியே பேசியுள்ளனர்.

தமிழ் நாட்டில் இசுலாமியர், கிறித்தவர், நாயக்கர், மராட்டியர் முதலியோரின் வருகைக்குப் பின்னர், அவர்களின் உணவுமுறைகளில் சில தமிழரின் உணவுமுறையுடன் கலந்தன. வடநாட்டு, மேனாட்டு உணவுமுறைகளும் இடம்பெறலாயின. தேனீர், காபி, குளிர்பானங்கள் அருந்துதல், உணவுமுறைகளில் ஒன்றாகவே காணப்படுகிறது. மற்றவர்தம் உணவு வகைகள் தமிழரின் உணவில் இடம்பெறினும் பண்டிகைகள், படையல்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் மரபான உணவுகளே இடம்பெறக் காணலாம்.

## 5.3 திருமணம்

தமிழர் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுப்பர். களவு, கற்பு, உடன்போக்கு என்னும் மூன்று வகையான அகவாழ்க்கை முறைகள் இருந்துள்ளதை சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியம் ஆகியவை காட்டுகின்றன. பிறர் அறியா வண்ணம் தலைவனும் தலைவியும் சந்தித்துப் பழகும் காதல் வாழ்க்கை களவு எனப்படுகிறது. இத்தகைய காதல் நிகழ்வுகளை சங்க இலக்கியத்தில் மிகுதியாகக் காணலாம்.

காதல் கொண்ட தலைவனும் தலைவியும் பெற்றோரின் இசைவுடன் மணந்து வாழும் வாழ்க்கை கற்பு எனப்படுகிறது. உறவுடைய ஆணும் பெண்ணும் மணந்து வாழ்வதே அக்காலத்துப் பொதுவழக்கு எனலாம். காதல் கொண்டு பின் கற்பு வாழ்வில் ஈடுபடும் தலைமக்கள் குறித்த பாட்டோவியங்கள் பலவும் சங்க இலக்கியங்களில் உள்ளன. தலைவியின் பெற்றோர் கொடுப்பதற்குரிய மரபினர் எனவும், தலைவன் கொளற்குரிய மரபினன் எனவும், திருமணச் சடங்கு கரணம் என்றும் வரையறை செய்யப்பட்டுள்ளது. அக்காலத்தில் மணப்பெண்ணுக்கு மணமகன் பரிசளிக்கும் வழக்கம் நிலவிவந்தது. இது சிறுவிளை விலை, பரியம், பரிசிழை விலை என்று குறிப்பிடப்பட்டது. குடுப்பத்தினரும் ஊராரும் அறியாமல் தலைமக்கள் உடன்போக்கில் ஈடுபட்டுள்ளனர். 'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டு' எனத் தொல்காப்பியம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

**அகநானூற்றில் தமிழர் திருமணம்**

திங்களும் உரோகிணியும் கூடிய நல்ல நாளில் திருமணம் நிகழ்ந்தது. வைகறைப் பொழுதில் மணவினை நடந்தது. பந்தலமைத்து புதுமணல் பரப்பினர். விளக்குகளை ஏற்றினர். மாலைகளைத் தொங்கவிட்டு இல்லத்தை அழகுபடுத்தினர். உழுந்து பெய்த கொழுந்துவை அடிசில் கொடுக்கப்பட்டது. உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர் பெரிய ஆரவாரத்தோடு பந்தலுக்கு வந்தனர். அவர்கள் பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர் ஆவர். புதல்வர்ப் பயந்த இழையணி மகளிர் வாழ்த்தியதோடு நீரில் நெல்லும் மலரும் கலந்து வதுவை நீராடினர். அப்போது பெண்கள் கூட்டம் புகுந்து பேரிற் கிழத்தி ஆக என வாழ்தினர். பெற்றோர் மணமகளைத் தலைவனிடம் தந்தனர் (அகநானூறு 86).

அகநானூற்றில் பாடல் எண் 136-ல் மேலும் சில திருமண நிகழ்வு பற்றிய செய்திகள் உள்ளன. மணவினைச் சடங்கின் போது வெண்ணூலில் வாகை இலையையும், அறுகம்புல்லையும் சேர்த்துக்கட்டி காப்பாகப் பெண்ணுக்கு அணிவித்தனர். தூய உடை அணிவித்தனர் என்னும் செய்தியையும் தருகின்றது. மணச்சடங்கு பற்றிக் காட்டும் முற்பட்ட இலக்கியக் குறிப்புகளில் மணமகளுக்கு மணமகள் தாவி அணிவித்தல் இடம்பெறவில்லை. மணச்சடங்கில் பார்ப்பனர் இடம்பெறுதல், தீயை வலம்வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் ஆகியன பிற்காலத்தில் இடம்பெற்றன. மணமகள் வீட்டாரிடம் வரதட்சனைப் பெறுதல், திருமணமண்டபங்களில் திருமணத்தை நிகழ்த்துதல், மாப்பிள்ளையை ஊர்வலமாக அழைத்து வருதல், மணவரவேற்பு போன்ற நிகழ்வுகளும் பிற்காலத்தில் தோன்றியவையாகும்.

## 5.4 விருந்தோம்பம்

விருந்தினரைப் போற்றுதல் என்பது உயர்ந்த மனிதப் பண்புகளுள் ஒன்றாகும். பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கினர். தொல்காப்பியம் விருந்து போற்றலைத் தலைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது.

விருந்து றந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். கற்பு. 11)

சங்கப் புலவர்கள் விருந்தோம்பலைப் பல இடங்களில் போற்றிப் பாடியுள்ளனர். வேளை தவறிய வேளையில் விருந்தினர் வரினும் முகம் கோணாமல் விருந்தினரை வரவேற்றுப் பேணும் தலைவியை நற்றிணை (142) நமக்குக் காட்டுகிறது.

அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்

கணவன் மனைவிக்கிடையில் சிறு பிணக்கு ஏற்பட்டிருப்பினும், விருந்தினர் வரின் தங்களின் ஊடலை மறந்து விருந்தினரைப் போற்றுவர் என்பது சங்க இலக்கியம் காட்டும் செய்தி. இது விருந்து கண்டு ஒளிந்த ஊடல் எனப்படும். தலைவியின் ஊடலைத் தீர்த்துக்கொள்ள எவரேனும் விருந்தினர் வரமாட்டாரா எனத் தலைவன் ஏங்குவதை நற்றிணை (120) காட்டுகின்றது.

...நப்புலந்து
அட்டி லோளே அம்ம அறிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே
சிறிய முள்ளெயிறு தோன்ற

தன்னை நாடிவந்த விருந்தினரைப் போற்ற முதல்நாள் தன் வாளையும், மறுநாள் யாழையும் அடமானம் வைத்து விருந்தோம்பிய பண்பினைப் புறநானூறு (316) எடுத்துரைக்கின்றது. ஏழ்மைநிலையில் இருப்பினும் கடன் பெற்றாவது விருந்தினரைப் போற்றும் உயர் பண்பையும் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

சிலப்பதி காரத்தில் கண்ணகி விருந்தினரைப் போற்ற இயலாத நிலையை எண்ணி வருந்தியதாக இளங்கோவடிகள் காட்டியுள்ளார் (கொலைக்களக் காதை 71-73). திருக்குறள் உள்ளிட்ட அற இலக்கியங்கள் விருந்தோம்புதலைத் தலையாய அறங்களாகப் போற்றுகின்றன. திருவள்ளுவர் விருந்தோம்பல் என்னும் தலைப்பில் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். பண்டைக் காலத்தில் தமிழரின் இயல்பான பண்பாக இருந்த விருந்தோம்பல் பின்னர் அறமாக வலியுறுத்தப்படும் நிலையை அடைந்ததை இது காட்டுகிறது. கம்பர் தாம்படைத்த இராமாயணத்தில் சீதையின் வாயிலாக விருந்தோம்பல் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். சீதை அசோக வனத்தில் சிறை இருக்கும்போது, விருந்தினர் வருகையில் இராமனால் அவர்களை போற்றமுடியாது போகுமே என்று வருந்துகின்றாள். விருந்தோம்பல் தமிழர்களின் பண்புகளில் ஒன்றாக விளங்கியுள்ளதை மேற்காணும் செய்திகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## 5.5 நம்பிக்கைகள்

நன்று, தீது குறித்த எண்ணத்தால் ஆர்வம், அச்சம் ஆகியவற்றின் விளைவால் தமிழரிடையே காலங்காலமாகப் பல நம்பிக்கைகள் வழங்கிவருகின்றன. இந்த நம்பிக்கைகளில் பல அறிவியல் அடிப்படை அற்றவை. ஆயினும், இவற்றின் தாக்கம் தமிழ் மக்களின் உள்ளங்களில் மிகுதியாக உள்ளது.

நல்லநாள், நல்லநேரம் பார்த்து வேலையினைத் தொடங்குதல், பறவையொலி முதலிய சகுனம் பார்த்தல், பல்லியின் குரல் கேட்டல், பல்லி உடல்மேல் விழுவதற்குப் பலன் எண்ணல், விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், சுண் மற்றும் தோள் துடித்தலின் பலன், கனவுகளுக்குப் பொருள்காணல், விண்மீன் நிலைகாணல், பேயோட்டல், கூடல் இழைத்தல் எனப் பல நம்பிக்கைகள் பண்டைத் தமிழரிடையே நிலவின.

**நல்லநேரம் பார்த்தல்**

திங்களும் உரோகிணியும் கூடிய நல்லநாளில் திருமணம் நடத்தப்பட்டது. இது நன்னாள் பார்த்து மங்கலச் செயல்களைச் செய்யும் நம்பிக்கையைக் காட்டுகிறது. பண்டைநாளில் நல்ல வேளையை 'முழுத்தம்' என்றனர். அதுவே இன்று 'முகூர்த்தம்' எனப்படுகிறது. 'நாள் செய்வதை நல்லவர் செய்யார்' என்பது பழமொழி. வள்ளலை நாடிச் சென்ற புலவர், தனக்குப் பரிசில் கிட்டாததற்குப் புரவலன் காரணமல்ல; புறப்பட்ட பொழுதும் அப்போது எதிர்ப்பட்ட பறவையுமே காரணம் எனக் கூறுவதைச் சங்கப் பாடலொன்று காட்டுகின்றது.

> புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
> உள்ளி வருநர் பழியலர் அதனால்
> புலவேன் வாழியர் ஓ

**பல்லியின் குரல் கேட்டல்**

பல்லியின் குரலைச் சகுனமாகக் கொள்ளும் மரபும், உடம்பில் பல்லிவிழும் இடத்திற்கேற்பப் பலன் காணும் மரபும் பண்டைக் காலந்தொட்டு நிலவுகின்றன. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி பல்லியை
நோக்கி நற்பலன் கூறுக என வேண்டுவதை,

> மையல் கொண்ட மதனழி இருக்கையள்
> பகுவாய் பல்லி படுதோறும் பரவி
> நல்ல கூறுகென நடுங்க

என அகநானூற்றுப் பாடல் கூறுகிறது.

**விரிச்சி கேட்டல்**

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது எதிர்பாராத வகையில் நற்சொற்களைப் பிறர்கூறக் கேட்டல் விரிச்சி கேட்டல் எனப்படுகிறது. இதனை நன்னிமித்தமாகக் கொள்வர். பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவரும் முன் வெட்சி மறவர் விரிச்சி கேட்டலைப் பாக்கத்து விரிச்சி என்பார் தொல்காப்பியர். முதுசெம் பெண்டிர் விரிச்சி கேட்டுச் சொல்வர் என முல்லைப்பாட்டு மொழிகின்றது.

**கனவு பற்றிய நம்பிக்கை**

சுனவில் சில தீய நிமித்தங்களைக் காணுதல் நனவில் சில தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தமிழரின் நம்பிக்கைகளுள் ஒன்று. புறநானூற்றுப் பாடல் 40-ல் தீய நிமித்தங்களைக் கனவில் கண்ட கிள்ளிவளவனின் பகைவர்கள் அஞ்சிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன், பாண்டியன் மாதேவி ஆகியோர் தீய விளைவுகளைத்தரும் சுனவுகளைக் கண்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல, தீய விளைவுகளை ஏற்படுத்தும் கனவு குறித்த நம்பிக்கையைக் காலந்தோறும் பல இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

**மேலும் பல நம்பிக்கைகள்**

உன்னம் பார்த்தல் என்னும் நம்பிக்கையும் பண்டு வழங்கியது. உன்னம் என்பது ஒருவகை மரம். உன்னமரம் தளிர்த்துக் காணப்படின் செயல் வெற்றிபெறும் என்றும், வாடி காணப்படின் தோல்வி என்றும் அக்காலத்தில் நம்பினர். ஆந்தையின் அலறலைத் தீய நிமித்தம் எனக் கருதியமையைப் புறநானூறு காட்டுகின்றது.

ஆடவரின் வலக்கண், வலத்தோள் துடித்தலும், மகளிரின் இடக்கண், இடத்தோள் துடித்தலும் நன்மை நேர்வதற்குரிகளாகக் கருதப்பட்டன. காக்கைக் கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கையும் தமிழர்களிடையே நிலவுகிறது. அறிவியல் கருத்துகள் மிகுந்துள்ள இக்காலத்தில் பெரும்பாலான இந்நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளே என்னும் தெளிவு மிகுந்துள்ளது. வேறுவகையான மூடநம்பிக்கைகள் அவ்விடங்களைப் பிடித்துள்ளன.

**5.6 பழக்கவழக்கங்கள்**

தமிழர்கள் பண்டைக்காலம் முதலே சில பழக்கவழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். அவை மிகவும் பண்பட்டனவாகவும், தனிச்சிறப்புடையனவாகவும், ஒழுங்கமைதி மிக்கனவாகவும் விளங்குகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

1. தான் சோறுண்ணணும் முன் காக்கைக்குச் சோறிடும் பழக்கத்தைத் தமிழர்கள் கொண்டிருந்தனர். காக்கைக்குச் சோறிடலைக் காக்கையது பலி" என்கிறது சங்க இலக்கியம்.
2. அன்புடையோர் ஒருவரையொருவர் தழுவி அன்பை வெளிப்படுத்துவர்.
3. புறப்படுபவரை ஏழடி பின்சென்று வழியனுப்புவது மரபு.
4. குழந்தைக்கு அம்புலி காட்டும் வழக்கம் நிலவியது.
5. கடை வீதியில் பொருள்களைக் குறிக்கக் கொடிகட்டும் வழக்கம் நிலவியது.
6. கள்ளுண்போர் இஞ்சியையும் உடன் உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.
7. புண்பட்ட தம் கணவரின் வருத்தம் தீர மனைவியர் பாடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.
8. ஆடவர் மடலேறும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர்.
9. யாளை வேட்டையின் போது குழிவெட்டி யானையைப் பிடிக்கும் வழக்கம் இருந்தது.
10. கூந்தலை எண்ணெய் து வி அழகு செய்யும் வழக்கமும், பின்னி முடிக்கும் வழக்கமும், சுத்தரியால் குறைக்கும். வழக்கமும் இருந்தது.
11. கையைப் பற்றிச் சூளுரைக்கும் வழக்கம் இருந்தது. கைமேல் அடித்துச் சத்தியம் செய்யும் வழக்கம் இதன் தொடர்ச்சி எனலாம்.

12. கணவனை இழந்த மகளிர் அணிகலன் அணிவதை நீக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். கூந்தலை நீக்கும் வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். இறந்த கணவனுக்கு பிண்டம் வைக்கும் பழக்கமும் இருந்தது.

13. மகளிர் சுவரில் நாட்கணக்கினைக் குறிக்கும் வழக்கத்தினராக இருந்தனர்.

14. கணவன் மணப்பெண்ணுக்குப் பரிசம் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

15. தலையைத் தடவிக் கொடுத்து அன்புகாட்டும் வழக்கத்திளை மக்கள் கொண்டிருந்தனர்.

16. நீர்வேட்கை அடங்க நெல்லிக் காயைத் திண்று நீர் அருந்தும் வழக்கம் இருந்தது.

17. இறந்தவர்களைத் தாழியில் இட்டுப் புதைக்கும் பழக்கம் இருத்தது.

18. தீக்கடைக் கோலால் நெருப்பு உண்டாக்கும் பழக்கம் இருந்தது.

19. இறந்தவரைப் புதைத்த இடத்தில் நடுகல் நாட்டி வழிபாடு செய்யும் வழக்கம் இருந்தது.

20. இறந்தோரின் உடலை வாளால் கீறியே அடக்கம் செய்யும் வழக்கம் இருந்தது. இறந்த குழந்தையையும் இவ்வாறே அடக்கம் செய்தனர்.

இத்தகு பழக்கவழக்கங்கள் தமிழர் வாழ்வில் பண்டை நாளிலேயே காணப்பட்டன. பிற நாட்டார் தொடர்பால் புதிய பழக்கவழக்கங்களும் இக்காலத்தில் வழங்குகின்றன.

**சடங்குகள்**

தமிழர் வாழ்வில் பிறப்புமுதல் இறப்புவரை பல கட்டங்களில் சடங்குகள் நடைபெறுகின்றன. பிறந்த குழந்தையைத் தொட்டிலில் போடுதல், பெயரிடல், காது குத்துதல், மொட்டையடித்தல், பெண்ணுக்குப் பூப்புநீராட்டு, திருமணத்திற்குமுன் பெண்ணின் சிலம்பு நீக்குதல், மண உறுதி செய்தல் (நிச்சயதார்த்தம்). வதுவை புரிதல், கருவுற்றிருக்கும் போது வளைகாப்பு இடுதல், கணவனை இழந்த மகளிர் வளையல் அகற்றல், அணிகலன் துறத்தல், இறந்தவருக்குச் செய்யும் ஈமச்சடங்கு, நடுகல் நாட்டல், ஆண்டுதோறும் நீத்தார் நினைவுக்கடன் ஆற்றுதல் என வாழ்வின் பல நிலைகளில் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. வழிபாடு சார்ந்த, கோயில் சார்ந்த பல சடங்குகளும் உள்ளன. குடமுழக்கின் போது செய்யப்படும் சடங்குகள், வேள்விகள் முதலியன சமயஞ்சார்ந்த சடங்குகளாகும்.

இளம்பருவம் தொட்டுப் பெண் அணிந்திருந்த காற்சிலம்பை, திருமணத்திற்கு முன் அகற்றுதல் ஒரு சடங்காகப் பண்டைக் காலத்தில் நிகழ்த்தப்பட்டது. இதனை அகநானூறு, ஐங்குறுநூறு முதலிய இலக்கியங்கள் பேசுகின்றன. பண்டைக்காலத் தமிழர் திருமணத்தில் சடங்குகள் குறைவாகவே இடம்பெற்றன. காலம் செல்லச் செல்ல மிகுதியாக இடம்பெறத் தொடங்கின. இதனை, "ஆதியில் ஆரியர் கலப்பு மிகுதியாக இல்லாத காலத்தே மணச் சடங்கு ஒருசிலவே இருந்தமையும், பின்னர் அவர்களுடைய கூட்டுறவு தமிழ்நாட்டில் பெருகப் பெருசு, மணச்சடங்கு பெருகிவிட்டமையும் நன்கு புலப்படும்" என்பார் வையாபுரிப்பிள்ள(தமிழர் பண்பாடு - சும்பன் காவியம், ப.74).

இறப்புக் குறித்த சடங்குகள் மிகுதியான அளவில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இறந்தாரை எடுத்துச் செல்ல மூங்கிற் கழிகளால் பாடை கட்டுவது, பிணத்தின் மீது வெள்ளுடை போர்த்துதல், மாரடித்துப் புலம்புதல் முதலியன இறந்தார் உடலை அடக்கம் செய்யும் போது நிகழ்வன. இறந்தார் உடலைத் தாழியில் வைத்துப்

புதைத்தல், எரித்தல் ஆகிய வழக்கங்கள் இருந்தன. போரில் இறந்த வீரர்களுக்குக் கல் நாட்டி வழிபாடு நிகழ்த்தும் சடங்கு நிலவியது. கணவனை இழந்த பெண்கள் வளையல்களையும், கூந்தலையும் அகற்றினர்; அணிகலன்களையும் நீக்கினர். இறந்துபட்டவர்களுக்கு அவர்தம் மைந்தர் செய்யும் கடமை தென்புலத்தார் கடன் எனப்படும். கணவனையிழந்த மகளிர் பிண்டம் கொடுத்தல் பற்றிப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

**மனித உறவுகள்**

வேற்றுமைகளைக் கருதாது மனித உறவுகளைப் பேணும் பண்பையும் பக்குவத்தையும் தமிழர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இதனைக் காலந்தோறும் மலர்ந்த இலக்கியங்கள் காட்டுகின்றன. யாதும் ஊரே யாவரும் கேளிர், ஒன்றே குலம் ஒருவனே தேவன், விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை, மானுடச் சமுத்திரம் நான் என்று கூவு முதலிய புகழ்மிகு தொடர்கள் மனித உறவுகளைப் போற்றும் தமிழரின் செம்மாந்த சிந்தனை வெளிப்பாடுகள் எனலாம்.

குடும்ப விழாக்களில் உற்றார்-உறவினரையும், நண்பர்களையும் பங்கேற்க அழைத்தல், கோயில் திருவிழாக்கள் முதலியவற்றை அனைவரும் சேர்ந்து நடத்துதல், முன்னறிமுகம் இல்லாதவரிடத்தும் முகம் மலர்ந்து பேசுதல், இன்சொல் கூறுதல், விருந்தோம்புதல், பண்டிகைகளின் போது வாழ்துப் பரிமாரிக்கொள்ளுதல் முதலியன மனித உறவுகளைப் பேணும் செயல்பாடுகளாக மிளிர்வன. பிரிதின்நோய் தன்நோய் போல் போற்றும் பண்டம், வாடிய பயிரைக் கண்டு வாடும் பண்பும், வாழையடி வாழையென வந்த மனித உறவினைப் போற்றும் தமிழரின் பண்புகளாகும்.

திருக்குறளின் அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், பொறையுடைமை, புறங்கூறாமை, ஒப்புரவறிதல், ஈகை, அருளுடைமை முதலிய அதிகாரங்களின் சிந்தனைகள் தமிழரின் மனித உறவு போற்றும் சிந்தனைகளாகத் திகழ்கின்றன. எனினும், இன்று சமுதாயத்தில் மனித உறவுகள் சீர்கெட்டு வருவதைக் காண்கிறோம்.பொருள் சார்ந்த வாழ்க்கைமுறை, பரபரப்பு மிக்க அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கை ஆகியவற்றால் மனித உறவுகள் கொச்சைப்படுத்தப்படும் நிலைகளும் ஏற்படுகின்றன.

**குடும்ப உறவுகள்**

சமுதாய நிறுவனங்களுள் ஒன்றாகவும் அடித்தளமாகவும் இருப்பது குடும்பம். குடும்பங்களின் தொகுதியே சமுதாயம். குடும்ப உறவுகள் சீர்பட்டால்தான் சமுதாய உறவுகள் சீர்பெற்றுத் திகழும். இதனை நன்குணர்ந்திருந்த தமிழர்கள் தங்கள் குடும்ப உறவுகளைச் சிறப்பாக அமைத்துப் பேணினர். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்னும் சிந்தனை தமிழரின் குடும்ப உறவுகள் குறித்த தெளிந்த மனப்பாங்கைக் காட்டும். தாய், தந்தை, பிள்ளைகள், தாத்தா, பாட்டி, உறவினர் எனக் கலசுலப்பாவும் ஒற்றுமையுணர்வோடும் அன்புணர்வோடும் குடும்ப அமைப்பு திகழ்கிறது.

பிள்ளைகளைப் பேணும் பெற்றோர், பெற்றோரை மதிக்கும் பிள்ளைகள், வழிநடத்தும் முதிய தாத்தா, பாட்டி எனத் தமிழ்க் குடும்ப அமைப்பு அன்பும் அறனும் சிறக்க

நடைபோடுவதாக உள்ளது. குடும்ப அமைப்பின் கட்டுக்கோப்பு குலையாமல் இருக்கத் தமிழ்ச் சான்றோர்கள் பல்வேறு நெறிமுறைகளை வகுத்தனர். தமிழ்க் குடும்ப அமைப்பில் பிள்ளைகளைச் சான்றோர் ஆக்குதல் தம் கடமை எனக் குடும்பத் தலைவரான தந்தையர் உணர்ந்திருந்தார். அவர்கள் மக்களை அவையத்து முந்தியிருப்பச் செய்பவர்களாக விளங்கினர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள் என உணர்ந்து தொழுவபவர்களாகத் தமிழ்க்குடும்ப அமைப்பில் பிள்ளைகள் வளர்ந்தனர். சான்றோன் எனக் கேட்டு ஈன்றபொழுதின் மகிழ்பவளாகக் குடும்பத் தலைவியாகிய தாய் விளங்கினாள். தாத்தா, பாட்டி எனும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களைப் போற்றிப் பாதுகாத்தும் அவர்தம் பட்டறிவைப் பயன்கொண்டும் குடும்பத்தின் இளைய உறுப்பினர் வாழ்வு நடத்தினர். சுற்றம் தழுவும் பண்பு குடும்பத்து உறுப்பினர்களிடையே கோலோய்ச்சியது. மாமன் மகன், மகள், அத்தை மகன், மகள் ஆகியோரிடையே மண உறவுகொள்ளும் நிலை குடும்பங்களில் நிலவியது.

இக்காலத்தில் கூட்டுக்குடும்பப் பண்பாடு குறைந்து தனிக்குடும்ப அமைப்புகள் பெருகக் காண்கிறோம். முதியோரைப் பேணும் பண்பையும் இன்றைய குடும்ப அமைப்புகள் இழந்து வருகின்றன. தம்மை ஆளாக்கிய மூத்தோரைப் பேணும் பண்பை இத்தகு குடும்ப அமைப்புகள் மீண்டும் போற்றித் தமிழரின் குடும்ப உறவு மாட்சியை நிலைநிறுத்துதல் இன்றியமையாதது.

---

## பொழுதுபோக்கு

---

தமிழர் பொழுதுபோக்குகள் என்பது தமிழர் வாழ்வில் நீங்காத இடம்பிடித்த, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்துவரும் ஒரு கலாச்சார அம்சமாகும். இவை விளையாட்டுகள், கலைகள், மற்றும் பாரம்பரிய நிகழ்வுகள் எனப் பலவிதமாகப் பரந்து கிடக்கின்றன. இவை தமிழர் பண்பாட்டையும், சமூகத்தையும் பிரதிபலிக்கின்றன.

**விளையாட்டுகள்**

உழைக்கின்ற மக்களுக்கு உழைப்பிலிருந்து விடுதலை பெற விளையாட்டுகள் தேவைப்படுகின்றன. உடலைக் கட்டுடன் காப்பதற்கும் மன அமைதி பெறுவதற்கும் மகிழ்ச்சியடைவதற்கும் விளையாட்டுகள் துணை புரிசின்றன, விளையாட்டைக் குழந்தைகள் முதல் பெரியவர் வரை விரும்புகின்றனர்.

உலக மக்கள் அனைவரும் விளையாட்டை விரும்புகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வகையான விளையாட்டுகள் நிலவி வருகின்றன. ஒரு நாட்டின் இயற்கைச் சூழல்களுக்கேற்ப, தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப, பழக்க வழக்கங்களுக்கேற்ப விளையாட்டுகள் அமையும். ஒரு நாட்டு மக்களின் சீரிய பண்பாட்டை அறிவதற்கு அவர்கள் பழக்கத்தில் கொண்டுள்ள விளையாட்டுகளும் துணை செய்கின்றன.

**விளையாட்டு சொற்பொருள் விளக்கம்**

விளை + ஆட்டு = விளையாட்டு, 'விளை' என்ற சொல்லுக்கு விருப்பம் என்று பொருள். விருப்பமாக ஆடுகின்ற ஆட்டம் விளையாட்டு எனலாம். குழந்தைகள் பேசுவதற்கு முன்னரே விளையாடத் தொடங்கி விடுகின்றன. குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை ஒரு மனிதனின் வாழ்வில் விளையாட்டு நீடிக்கிறது. தமிழர் வாழ்வில் சங்க காலம் முதல் இன்றுவரை நிலவி வருகின்ற. மாறி வருகின்ற, மறைத்து வருகின்ற விளையாட்டுகளைக் குறித்துக் காணலாம். தொல்காப்பியம் நமக்குக் கிடைத்த முதல் நூல். அந்நூலில்,

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.மெய்:10)

என உரைக்கிறது. இந்நூற்பா மூலம் மனமகிழ்ச்சியை ஊட்டும் காரணிகளுள் விளையாட்டும் ஒன்று என தொல்காப்பியர் உணர்த்துகிறார். மேலும், நீர் விளையாட்டு, நில விளையாட்டு என விளையாட்டை இரு வகையாகப் பிரிக்கிறார்.

**விளையாட்டுப் பகுப்பு முறைகள்**

விளையாட்டுகளைக் குறித்து நூல்களை எழுதிய சான்றோர். விளையாட்டுகளைப் பலவேறு வகைகளில் பகுத்துப் பார்க்கின்றனர். பாவாணர், தமிழ்நாட்டு விளையாட்டுகளை இளைஞர் பக்கம், குழந்தைப் பக்கம், பெரியோர் பக்கம் என்னும் பாகுபாட்டின் கீழ அடக்கி உரைக்கிறார்.

ஆடவர், மகளிர், சிறுவர் சிறுமியர், சிறுவர், சிறுமியர். குழந்தை விளையாட்டு என்று ஆறு பெரும் தலைப்புகளின் கீழ் இரா. பாலசுப்பிரமணியம் விளக்கியுள்ளார்.
விளையாட்டுகளின் தன்மை அடிப்படையில் உடல்திறன் விளையாட்டு, அறிவுத்திறன் விளையாட்டு, வாய்ப்புநிலை விளையாட்டு, மனமகிழ்ச்சி விளையாட்டு என நால்வகைப் படுத்துகிறார் சு.சிவகாமசுந்தரி.

விளையாட்டுகளைத் தொன்மை நோக்கிலும் ெ நோக்கிலும் பகுத்துக் கொண்டு பேராசிரியா பிச்சை விளக்கியுள்ளார். பாடுதல், உரையாடுதல், உட்காருதல், ஒன்றின்மேல் நிற்றல், ஓடுதல், தொடுதல், சுண்ணை மூடுதல், ஒளிதல், கண்டு பிடித்தல், அடித்தல், தள்ளுதல், இழுத்தல், குனிதல், நடித்தல், நொண்டி அடித்துவரல், தடுத்தல், அழைத்தல், பிடித்துக் கொன்னல், விடுவித்தல் ஆகிய 15 செயல்களை விளையாட்டுகளில் காட்டி ஒவ்வொரு விளையாட்டிலும் இடம்பெறும் செயல்களை அட்டவணைப்படுத்துகிறார். செங்கைப் பொதுவன், விளையாட்டு களை இந்திய வரலாற்று அறிஞ' எப்படிப் பகுத்துக் காண்கின்றனர் என்பதனைத் தம் 'பழங்கால விளையாட்டுகள்' என்ற நூலில் விளக்கியுள்ளார்

**சங்ககால விளையாட்டுகள்**

சங்ககாலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினர்.

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு சார்ந்தே அவர்களின் தொழில் அமைந்திருந்தது. ஆகவே, அவர்களுக்கு நிறைய ஓய்வு இருந்தது. அவர்கள் குழுவாக இயங்கியதால் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகினர். சங்ககால விளையாட்டுகளைச் செங்கைப் பொதுவன் 'கைத்திற விளையாட்டுகள் மெய்த திறவிளையாட்டுகள், நீர் விளையாட்டுகள், போர் விளையாட்டுகள். விலங்கோடு விளையாடல், மகிழ்வு ஆட்டங்கள் எனப் பிரித்து விளக்குகிறார்.

சங்க இலக்கியங்களில் முப்பத்தேழு விளையாட்டுகள் இருந்தனவாக முனைவர் சு. சிவகாமசுந்தரி தம் 'சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.அந்த விளையாட்டுக்களை இருபாலர் விளையாட்டுகள். ஆண்பாலர் விளையாட்டுகள், பெண்பாலர் விளையாட்டுகள் எனப் பிரித்துக் காட்டுகிறார்.

**இருபாலர் விளையாட்டுகள்**

1. அசதியாடல். 2. அம்புலி அழைத்தல், 3 அலவன் ஆட்டம். 4 உலாவல், 5. ஊசல், 6. எண்ணி விளையாட்டு. 7. கண்ண விளையாட்டு, 8. சூது, 9. நீர் விளையாட்டு, 10. பந்து, II. பறவைகளைக் காணல் அவற்றின் செயல்கள் போல் செய்தல், 12. பறவை. விலங்குகளுடன் விளையாடல்

**ஆண்பாலர் விளையாட்டுகள்**

1 ஏறுகோள். 2. குதிரை ஏற்றமும் யானை ஏற்றமும், 3. குறும்பு விளையாட்டுகள், 4. சாம விளையாட்டு, 5. சிறுதேர். 6. சிறுபறை, 7. மல், 8. வில் விளையாட்டு, 9 வட்டு, 10. வேட்டை

**பெண்பாலர் விளையாட்டுகள்**

1 எதிரொலி கேட்டல். 2. சுண் புதைந்து ஒளிந்தாடல். 3. கவண் 4. கழங்கு, 5. குரவை, 6. சிறுசோறு, 7. சிற்றில் செய்தல். 8. செடி கொடி வளர்ப்பு, 9. பறவை வளர்ப்பும் விலங்கு வளாப்பும். 10. பாவை விளையாட்டு. 11. பிசி நொடி விளையாட்டு, 12. புள் ஓட்டம். 13. மணற்குவியலில் மறைத்தாடல், 14. மலர் கொய்தலும் மாலை தொடுத்தலும், 15. வள்ளை,

**ஆங்கிலேயர் கால விளையாட்டுகள்**

ஆங்கிலேயர் தமிழகத்தை ஆண்ட காலங்களில் மேல்நாட்டு விளையாட்டுகள் இடம் பெற்றன. கைப்பந்து, கால்பந்து, கூடைப் பந்து பூப்பந்து, ஆக்கி (Hockey), தென்னிசு (Tennis) முதலியன வழக்கத்திற்கு வந்தன. ஆங்கிலேயர் ராணுவத்தையும் கப்பற் படையையும் வலுப்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டனர். இதனால் தண்டால், பஸ்கி போன்ற பயிற்சிகள் குறைந்தன.

**இக்கால விளையாட்டுகள்**

இந்தியா விடுதலை பெற்ற பிறகு விளையாட்டுத் துறை வேகமான வளர்ச்சி கண்டது. பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவியா படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் திறன் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இருப்பினும் விளையாட்டுகள் பல இக்காலத்தில் மறைந்து வருகின் றன.

தமிழகத்தின் பல பகுதிகளில் சடுகுடு (சுபாடி) என்னும் விளையாட்டு விளையாடப்பட்டு வருகிறது. சல்லிக்கட்டு, சிலம்பம். மற்போர் முதலான வீர விளையாட்டுகளைத் தமிழா மேற்கொள் கின்றனர். கிராமப்புறங்களில் மேற்கூறிய விளையாட்டுகளோடு இளவட்டக்கல், ஓட்டம், உறி மரம் ஏறுதல், இரட்டை மாட்டுப் பந்தயம், மோடி விளையாட்டு, கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி பொம்மைச்சீட்டு, மூணுகட்டை, சூது, தாயம், பானை உடைத்தல், உறிப்பானை விளையாட்டு முதலானவை இன்றும் நடைபெற்று வருவதாக இரா. பால சுப்ரமணியம் தம் 'தமிழா நாட்டு விளையாட்டுகள்' என்னும் நூல் வாயிலாகத் தெரிவிக்கிறார்.

உடல் திறமை சார்ந்த விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக பள்ளி அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில், நாட்டு அளவில் உலக அளவில் போட்டிகள் எற்பாடு செய்யப்பெறுகின்றன. அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி ஒலிம்பிக்.போட்டி, தமிழர்கள் இந்த ஒலிம்பிக் போட்டியில் இடம் பெறுவதனைப் பெருமையாக கருதுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட விளையாட்டைத் தேர்வு செய்து கொண்டு அதிலே விளையாட்டு வீரராகத் திகழ வேண்டும் என்று கருதுபவர் கள் மட்டுமன்றி, தமிழகத்திலுள்ள அனைவரும் விளையாட்டு குறித்த விழிப்புணாவைப் பெற்றுள்ளனர். நகர்ப்புறங்களில் உள்ளோர் காலை மாலை வேளைகளில் விளையாட்டு மைதானங்களிலும்: பூங்காக்களிலும் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தண்டால், பஸ்கி போன்ற உடற்பயிற்சிகளைத் தங்கள் இல்லங்களில் பலர் செய்கின் றனர். பலர் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் சென்று பயிற்சியை மேற்கொள்சின்றனர். ஊடகங்களின் பெருக்கமும் சுகாதார நிறுவனங்களின் பெருக்கமும் மக்களுக்கு விளையாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன.

**உடற்பயிற்சி**

அரசு அலுவலகங்களில் உடற்பயிற்சி, தியானம் முதலான வற்றைக் கற்றுக கொள்வதற்கு அரசு முயற்சி செய்கிறது. தனியார் நிறுவனங்கள் கூடத் தங்கள் நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி உடல் நலம் சார்ந்து சிந்திக்கத் தற்காலத்தில் ஈடுபட்டுள்ளன. அரசுப் பள்ளிகளில் உடற்பயிற்சிக்குத் தருகிற முக்கியத்துவத்தைப் பெரும் பாலான மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வழங்காதது ஒரு குறைபாடாக உள்ளது.

நகர்ப்புறச் சிறு பிள்ளைகள் குழுவாக இயங்க வாய்ப்பின்றித் தனியே அமர்ந்து மின்னணுக் கருவி மூலம் (Video Games) விளையாடுகின்றனர். அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர் களுக்கும் இதே நிலை நீடிக்கிறது. இத்தகு சிறுபிள்னைகளுக்குத் தாங்கள் படிக்கிற பள்ளிகளில் குழுவாக இயங்கும் ஆட்டங்கள் அவசியமாகின்றன. பள்ளிகளும் இதை மறுத்துவிட்டால், சிறு பிள்ளைகள் மனதோய்க்கு ஆளாகக் கூடும். தமிழகத்தின் விடுதலைக கவிஞர், பாட்டுக்கொரு புலவர் பாரதி.

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

எனப் பாடினார். இப்படி ஓடியும் கூடியும் விளையாடுவதை மாலை நேரத்தில் பழக்கிக் கொள்ளுங்கள் என்றும் குழந்தைகளுக்குக் கட்டளையிட்டார். அதனால்தான்.

மாலை முழுவதும் விளையாட்டுயென்று
பழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

என்கிறார். அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**விளையாட்டின் பயன்கள்**

உடல் நலத்துக்கும் உள்ள மகிழ்வுக்கும் தோழமை உணர்வுக்கும் விளையாட்டு உதவுகிறது. நமது பண்பாட்டைப் பிற நாடுகள் உணர்ந்து கொள்ள விளையாட்டுகள் துணை புரிகின்றன. சுருங்கக்கூறின் விளையாட்டு உடல், உள்ளம், மூளை மூன்றையும் ஒரு சேரப் பலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

---

**விருந்தோம்பல்**

---

மனிதன் ஆறறிவு கொண்டவன். இந்த ஆறாம் அறிவே மனிதனை விலங்கினிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. மனிதனிடம் அமைந்துள்ள ஆறாம் அறிவோடு அன்பு, வாய்மை, தூய்மை முதலிய பண்புகள் கொண்டவனாக மனிதன் விளங்க வேண்டும். இந்தப் பண்புகள் தனி மனிதனிடம் அமைந்தால் அவன் நல்ல மனிதன். இதே பண்புகள் ஓர் இனத்திடம் அமைந்தால் அந்த இனம் நல்ல இனம்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இனம் நல்ல இனமாகத் திகழ்வதை நம் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. பழந் தமிழினம் பண்பட்ட இனம் என்பதனை நிறுவ தமிழினம் கொண்ட விருந்தோம்பல் முறை பறை சாற்றுகிறது.

**பண்பாடு விளக்கமுறும் முறை**

ஓர் இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம்,கலைகள், குறிக்கோள், சமயக்கொள்கை, சமயப்பொறை, அரசியல் கொள்கை, சமுதாய நிலை, அறிவியல் சிறப்பு, கல்வி

முதலியனவற்றால் சிறப்புறுகிறது. மேற்கூறிய எல்லா நிலைகளையும் சிறப்பாகச் செயல்படுத்த அன்பு என்ற ஒரு பண்பு போதுமானது. அன்பு அனைத்தையும் ஏற்றுச் கொள்ளும் தன்மையுடையது.

அன்புடையவர்கள் பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகச் கருதுவர். பசியையும் ஒரு துன்பம் என்றே தமிழர் கண்டனர். அதனால்தான் 'பசிப்பிணி' என்னும் 'பாவி' என்றது மணிமேகலை அந்த நோய் ஒருவனை இறந்துபடும் நிலைக்கு இழுத்துச் செல்வதால் தான் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என மணிமேகலை கூறியிருக்கும்போலும் அந்த அடிப்படையில் பிறரின் பசித்துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதிப் பிறருக்குக் கொடுத்து வாழமுற்பட்ட இனம் தமிழினம்தமிழினத்திற்கு இப்படி ஒரு சிறப்பு இருப்பதற்குக் காரணம் தமிழகத்தில் வாழ்ந்த சான்றோர்கள் அவர்களை அப்படிப் பழக்கியிருக்கிறார்கள். அந்தப் பழக்கத்திற்கு உட்படாதவர்கள் பழிக்கு ஆளாவார் என்று எச்சரித்திருக்கிறார் பழிக்குஆனானவர்களைச் சமுகம் எந்த வகையி லும் மதிக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நல்ல விதமான வழி நடத்துதலே பழத்தமிழர் பண்பாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

**விருந்து விளக்கம்**

விருந்து என்றவுடன் நமக்கு அறிமுகமானவருக்கும் சுற்றத்தவருக்கும் உணவிட்டு மகிழ்வது என்ற எண்ணம் இக்காலத்தில் தலை தூக்கி நிற்கிறது.' விருந்து' என்ற சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள் கூறுகிறது தொல்காப்பியம். அப்படியானால் விருந்தினர் என்பவர் நமக்கு முன்பின் தெரியாதவர் என்று பொருள். அப்படிப் பட்டவரை ஏற்றுப் போற்றுதலே விருந்தோம்பல் ஆகிறது. இந்த விருந்தோம்பலைத் தமிழர் ஏற்றுப் போற்றியதை இலக்கியங்கள் வழி காண முடிகிறது.

**மன்னன் போற்றிய விருந்து**

பழந்தமிழ் மக்கள் மன்னனை உயிர் என்று கருதினர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் புறநானூற்று அடி இதனைப் புலப்படுத்துகிறது. இன்னும் ஒரு படிமேலே சென்று வள்ளுவர் மன்னனை 'இறை' என்று வைத்துள்ளார். மன்னன், விருந்து போற்றலை அறம் என்று கருதியிருக்கிறான். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பார்கள். மன்னனைப் போன்று மக்களும் விருந்தோம்பும் இயல்பினராய் இருந்தனர். மன்னன் விருந்தளித்த பாங்கினைக் கீழ்க்காணும் இலக்கியச் சான்றுகள் நமக்கு உறுதிப்படுத்துகிறது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் இவ்வாறு பாடுகிறார். தம்மை நாடிவந்த பரிசிலனுக்கு அந்த மன்னன், நெய்யில் பொறித்த நெடிய சூட்டிறைச்சியையும் மணிக்கலன் நிறைப்பெய்த மணங்கமழும் தேறலினையும் கொடுத்ததாகக் கூறுகின்றார்.

சிறுகுடிக் கிழான், பண்ணனைப் 'பசிப்பிணி மருத்துவன் எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாராட்டுகிறாள் பண்ணனது இல்லத்தில் பழுத்த புளியமரத்தில் புள்ளின ஒலித்தாற்போன்ற ஆரவாரம் கேட்டுக் கொண்டே இருக்கும். பொய்யா எழிலி மழை பெய்யுங் காலத்தைப் பார்த்து எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறுதல் போலச் சோறுடைக் கையினராக, பண்ணனது இல்லத்திலிருந்து இருங்கிளைச் சிறார் வரிசை வரிசையாக

வருகின்றனர் எனப் புறநானூறு கூறுகின்றது. பதிற்றுப் பத்தில் குமட்டூர் கண்ணனார் என்ற புலவர் நெடுஞ்சேரலாதனை வாழ்த்தும் முகமாகப் பல ஆண்டுகளாக உலகத்து உயிர்களெல்லாம் அழியுமாறு மேகம் மழை பொழிவதாயினும், பரிசின் மாக்கள் பசியறியாதவாறு ஈவான என்று பாடுகின்றார். இதேபோல அதியமான் என்ற மன்னனை,

உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன் (புறம். 95;6-8)

எனப் பாடுகிறார் ஔவையார். இந்திரனிடம் அமிழ்தம் பெற்றாலும் அதனைத் தனித்துண்ணாது பகிர்ந்துண்ணும் பண்பைப் பழந்தமிழ் மக்கள் பெற்றிருந்ததாக கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின பாடலால் அறியமுடிகிறது.

**மக்கள் போற்றிய விருந்து**

பழந்தமிழ் மக்கள் விருந்து போற்றுதலை அறம் எனக் கருதினார் பொருளை மனதில் எண்ணாது விருந்து போற்றியபின் அந்த நிகழ்வை இன்பம் எனக் கொண்டனர். விருந்தோம்பும் பண்பு குடும்பத்திலுள்ள இல்லாளின் கடமை என்பதை இலக்கியங்கள் வலியுறுத்தினும் அந்தக் கடமையை மேற்கொள்ளும் இல்லாளின் மேன்மையை எண்ணிப்பார்த்து கணவன்மார் வியந்துள்ளனர்.

வினைமுற்றி மீளும் தலைவன், தன் தலைவியின் விரும்தோம்பும் பண்பை 'அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும் முல்லை சான்ற கற்பின் மெல்லியல் என் தலைவி' (நற்றிணை 142) எனப் பெருமை கொள்கிறான்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஊடல் இருக்குமானால், அதனைத் தீர்க்கும் வாயில்களாக விருந்தினர் இருந்தனர் என்பதனை எமக்கே வருகதில் விருந்தே" (நற்றிணை 120) என்ற பால் வழி அறிய முடிகின்றது. ஒரு தலைவி தன் கணவனுடன் ஊடுவதற்கு வாயப்பை எதிர்ப்பார்க்கிறாள். விருந்தினர் இடைவிடாது வந்த வண்ணம் உள்ளனர். அதனால் அவளால் தலைவனுடன் ஊடல் கொள்ள முடியவில்லை என்று நற்றிணை கூறுகின்றது.

விருந்தினர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களைக் கவனிப்பதற்குப் பொருள் தேவை. அந்தப் பொருள் இல்லாத காலத்தில் நல்ல குடும்பத்தினர் வருந்தியுள்ளனர். வருந்தியது மட்டுமன்றி விருந்தை எதிர்கொள்ளப்பயந்து ஒளிந்து கொண்டதாகவும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

ஒருவர் வீட்டுக்கு விருந்தினர் வந்தார். விருந்து தருவதற்குப் பொருள் ஏதும் இல்லாத நிலை. தன் வாளை அடமானம் வைத்து உணவு படைத்தான். அடுத்த நாள் ஒரு விருந்தினன் வந்தான். அப்போது தன் யாழைப் பணையமாக வைத்து விருந்து உபசரித்தான் எனப் புறநானூறு கூறுகிறது.

நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையமிது கொண்டு-

ஈவதி லாளன்         (புறம் 316; 5-8)

மேற்கூறிய அடிகள் விருந்தோம்பல் பண்பினைத் தமிழர் போற்றிய விதத்தை உரைக்கிறது.

பத்துப்பாட்டுள் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்கள். இந்த மறுப்படை நூல்கள், கலைஞர்களையும் பாணர்களையும் புலவர்கனையும் மக்கள் அழைத்து விருந்து போற்றியதைக் கூறுகின்றன.

பாணர்களுக்கு நெய்தல் நிலத்தில் வசித்த பரதவர்கள் மீன்கறி கொடுத்தனர். முல்லை நில மக்கள் புளியஞ்சோறு, மான் இறைச்சி தத்தனர். மருத நிலத்தில் நண்டும் அரிசிச் சோறும் கொடுத்து உபசரித்தனர் என்பதனைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

மலைபடு கடாம் என்னும் நூல் கூத்தர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பல் பற்றிக் கூறுகிறது. அதாவது, சிற்றூர்களைச் சேரும்போது, "தாங்கள் நன்னனுடைய கூத்தர்கள்" என்று சொன்னால்போதும் உங்களுடைய வீட்டுக்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் நுழையலாம். உறவினர்களைப் போலவே அவர்கள் உங்களுடன் ஒன்றிவிடுவார்கள். நீங்கள் நீண்ட வழியைக் கடந்த துன்பம் தீர உங்களுக்கு இனிய மொழிகளைக் கூறுவார்கள். நெய்யிலே வெந்த மாமிசத்தின் பொரியலையும் சிறிய தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள் என்று குறிப்பிடுகிறான் ஒரு கூத்தன்.

மான விறல் வேள் வயிரியம் எனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக் கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்    (மலைபடுகடாம் 164-169

இவ்வடிகள் சிற்றூர் மக்களின் விருந்தோம்பும் பண்பிளை எடுத்துரைக்கிறது.

**விருந்து நிகழ்வுகள்**

நாட்டில் நடைபெறும் விழாக்கள், திருமணம், காது குத்துதல், பிறந்தநாள் விழா, போருக்குப் புறப்படல், போரிலிருந்து மீளல் முதலான நிகழ்வுகளில் பண்டைத் தமிழர் விருந்து அளித்துள்ளனர்.

சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலர் உண்
பைந் நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில்
வசை இல் வான் திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு
(குறிஞ்சிப்பாட்டு 201-207)

குறிஞ்சிப் பாட்டில் இடம்பெறும் இவ்வடிகள் விழாவின்போது மக்களுக்கு ஈந்து உவக்கும் செய்தியைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வஞ்சித் திணைக்குரிய துறைகள் பதின்மூன்று. அத்துறைகளுள் ஒன்று பெருஞ்சோற்று நிலை' என்னும் துறை. தொல்காப்பியர் அந்தத் துறையை

ஒருவள் தாங்கிய பெருமை யானும்
பிண்ட கேப் பெருஞ்சோற்று நிலையும் (தொல்.புறம், 65:8-9)

என்று கூறுகிறார். இதன்வழி மன்னர் வீரர்களுக்கு விருந்து அளித்தல் புலனாகிறது.

**குடும்பக் கடமை**

தமிழ் மொழியின் கொள்கைகளை மட்டுமன்றி, தமிழரின் வாழ்வையும் எடுத்துரைத்த நூல் தொல்காப்பியம். அந்த நூல் கிழவோள் மாண்புகள் பற்றி எடுத்துரைக்கிறது.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல். கற்பு.11)

பெண்ணின் சிறந்த பண்புகள் எவை எனக் குறிப்பிடுகின்ற தொல்காப்பியம் விருந்தோம்புதலை ஒரு பண்பாக எடுத்துரைக்கிறது. அதுமட்டுமன்றி. ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக விருந்தோம்பலை வைக்கிறது.

தலைவன் பிரிந்திருக்கும்போது தலைவி விருந்தோம்பியதாகச் சங்க இலக்கியப்பாக்கள் அமையவில்லை. தலைவனும் தலைவியும் இணைத்து விருந்தோம்பினர் என்பதைத்தான் சங்க இலக்கியம் வாயிலாக அறிய முடிகிறது.

தமிழில் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். அந்நூலின் காப்பியத் தலைவன் கோவலன், கோவலன், கண்ணகியை விட்டுப் பிரிகிறான். பிரிந்த காலத்தில் கணவன் தன்னோடு இல்லாதது குறித்துக் கண்ணகி கலங்கியதைக் காட்டிலும் விருந்து போற்ற இயலா நிலையை எண்ணியே கலங்குவதாக இளங்கோவடிகள் கூறுகிறார்.

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை, (சிலம்பு, கொலைக்களம் 71-73)

என்று தன் நிலையைக் குறித்து கண்ணகி வருந்தியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

கம்பர், தம் இராமாயணத்தில் இராமனைப் பிரிந்த சீதையின் மனநிலையைக் கூற வருகின்றார். அதில், இராமன் விருந்தினரை எப்படி எதிர்கொள்வாரோ என்று வருந்தியதாகக் குறிப்பிடுகிறார். பெரிய புராணத்தில் சேக்கிழார், சிவனடியார்களை வரவேற்று உணவு படைத்த நிகழ்வை விளக்குகிறார். அதில் ஒரு நிகழ்வைக் காணலாம். இளையான்குடி மாறநாயனார் வீட்டுக்கு இரவு நேரத்தில் சிவனடியார் ஒருவர் வருகிறார். மாறநாயனார் வீட்டில் தானியம் இல்லை. அன்று வயலில் விதைத்த விளைநெல்லைச் சேகரித்துக் கொண்டு வந்து உணவு படைத்ததாகக் கூறுகிறார். போரின் சிறப்பைப் பற்றிப் பேசுகின்ற கலிங்கத்துப்பரணியில்,

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல (கலிங்கத்துப் பரணி 477)

என்ற உவமையைச் செயங்கொண்டார் கையாள்கிறார்.

விருந்தோம்பும் பண்பினைச் செவ்வியல் இலக்கியங்கள் கூறுவதுபோல நாட்டுப்புறப் பாடல்களும் எடுத்துரைக்கின்றன. சான்றாக,

வாழை இலை பரப்பி
வந்தவரை கையமர்த்தி
வருந்தி விருந்துவைக்கும்
மகராசர் பேரனோ

என வியப்பதாக அந்தப்பாடல் அமைகிறது.

**விருந்து குறித்த மதிப்பீடுகள்**

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளில் விருந்தோம்பல் என ஓர் அதிகாரம் வைத்து பத்துக் குறட்பாக்களில் மக்கள் உபசரிக்க வேண்டிய முறை குறித்து விளக்குகிறார் திருவள்ளுவர்.

விருந்தினர்கள் வெளியே இருக்கையில் தான் மட்டும் உண்ணுவது சாவா மருந்தாகிய அமிழ்தமாக இருந்தாலும் கூடாது என வள்ளுவர் வலியுறுத்துகிறார். இல்வாழ்க்கை என்பதே விருந்து போற்றுவதற்குத் தான் எனக் கூறுகிறார் வள்ளுவர்.

இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு (குறள் 81)

என்று உரைக்கிறார்.

மேலும், விருந்தோம்பல் என்னும் வேள்வியைச் செய்யாதவர்கள் பொருளைப் பாடுபட்டுப் பாதுகாத்து இறுதியில் பற்று அற்றுப்போவர் என வள்ளுவர் உரைக்கிறார். அதுமட்டுமன்றி செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பவன் வானத்தவர்க்கு நல்விருந்தாவான்' என்றும் 'முகமலர்ந்து விருந்து படைப்பவனின் இல்லத்தில் திருமகள் விரும்பித் தங்குவாள்' என்றும் 'விருந்தோம்பும் அறத்தை மேற்கொண்டவன் வறுமை அடைய மாட்டான்' என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நான்மணிக் கடிகை விருப்பில்லார் முன் சென்ற விருந்துசாம்' என்றுரைக்கிறது. திரிகடுகம் என்னும் நூல் 'விருந்தின்றி உண்ட பகல் நோயாகும்' என்றுரைக்கிறது. ஆசாரக்கோவை என்னும் நூல் விருந்தினரை உபசரிக்கும் முறையை,

முறுவல் இனிதுரை கால்நீர் மனைபாய்
கிடக்கையோ டிவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
ஊனொடு செய்யும் சிறப்பு (ஆசாரக்கோவை 54)

என்றுரைக்கிறது.

வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' எனத் திரிகடுகம் (12) கூறுகிறது. அதே திரிகடுகத்தில்

"நல்விருந்தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல் புறஞ் செய்தலின் ஈன்றதாய்-தொல்குடியின்

மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்' (திரிகடுகம் 64)

என்றுரைக்கிறது. விருந்து பற்றிப் பழந்தமிழர் கொண்டிருந்த மதிப்பீடுகளை இவற்றால் உணர முடிகிறது.

**விருந்தளியாதார் பெறும் இழிநிலைகள்**

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார் (குறள் 88)

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு (குறள் 89)

என்று திருக்குறள் விருந்து போற்றாதவரை இகழ்கிறது. விருந்து போற்றாத அரண்மனையைப் புறநானூறு.

சுவைக்கு இனிதாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கு ஈவுஇன்றித் தம்வயிறு அருத்தி
உரை சால் ஓங்குபுகழ் ஒரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே (புறம். 127:7-10)

என்றுரைக்கிறது. விருந்து போற்றாத அரண்மனை பொலிவோடு நின்றாலும் அந்த அரண்மனை, வறுமையுடைய ஆய் அண்டிரன் கோயில் அரண்மனை போல ஆகாது. ஏனெனில் ஆய் அண்டிரன் விருந்தினருக்கு எல்லாம் ஈந்து ஒன்றும் இல்லாதிருக்கிறான். அந்த அரண்மனையே பார்வைக்குப் பொலிவுடையாகத் தெரிகிறது என்கிறார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

விருந்து போற்றாதவர்கள் சமூகத்தில் இழிநிலை மாந்தராகக் கருதப்பட்டிருக்கிறார்கள் என்பதனை மேற்காணும் செய்திகளால் பெறமுடிகிறது.

குடும்பத்தில் உள்ள ஊடல் நீங்குவதற்கு விருந்து வாயிலாகப் பயன்பட்டிருக்கிறது. இந்த நிலைமாறி விருந்தினர் வந்துள்ளனர் என்று கூறியவுடன் குடும்பத்தில் எழும் ஊடலை ஔவையார் தம் பாடல் ஒன்றில் பதிவு செய்கிறார்.

இருந்து முகந்திருத்தி யீரோடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான் (தனிப்பாடல் திரட்டு 11)

இந்த இழிநிலையைப் போக்கத்தான் பாரதிதாசன், பசி என்று வந்தவருக்கு ஒரு பிடி புசி என்று கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருப்பார் போலும்! அவர் தம் சிறு காப்பிய மான குடும்ப விளக்கில்,

நற்றமிழர் சேர்த்த புகழ் ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை உயிரென்று பெற்றுவத்தல்

என்று குறிப்பிடுகிறார்.

மரபுச் செல்வமாகத் திகழ்ந்த விருந்தோம்பல் இக்காலத்தில் குறைந்து போனதற்குப் பல

காரணங்கள் உள்ளன. ஓர் ஊரை விட்டு இன்னோர் ஊர் செல்பவருக்குத் தங்குவதற்கு வசதியாகப் பல உணவு விடுதிகள் உள்ளன. இதனால் விருந்தோம்பல் பண்பு குறைந்து போனாற்போல் தோன்றுகின்றது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

---

1. **மனிதன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். அவனுடைய இவ்வேறுபாட்டை உருவாக்குவது எது?**
   அ) அறிவு ஆ) மனம் இ) பணம் ஈ) ஒன்றுமில்லை
2. **மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையாக அமைகின்றன எவை?**
   அ) அன்பு ஆ) தூய்மை இ) ஒப்புரவு ஈ) அனைத்தும்
3. **மனிதனுடைய அறிவும் அனுபவமும் பருப்பொருட்களாகவும் வெளிப்படுகின்றன.**
   அ) உணவு ஆ) சிற்பம் இ) ஓவியம் ஈ) அனைத்தும்
4. **'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்'**
   அ)கலித்தொகை ஆ) நற்றிணைஇ) குறுந்தொகை ஈ)அகநானூறு
5. **தொல்காப்பியம் நாளொன்றை எத்தனைப் பொழுதுகளாகப் பாகுபடுத்தியுள்ளது.**
   அ) 8 ஆ) 6 இ) 4 ஈ)10
6. **தமிழர்தம் அன்றாட வாழ்வின் தொடக்கம் எவற்றை அடிப்படையாகக் கொண்டது.**
   அ) தூய்மை ஆ) அழகியல் இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை
7. **உலகில் முதன்முதலாய் உணவை நாகரிகமாகச் சமைத்து உண்டவன் தமிழனே**
   அ)தமிழன் ஆ) கிரேக்கர் இ) சீனர் ஈ)யூதர்
8. **சூட்டைத் தணிப்பதால் வெப்பநாட்டிற்கு ஏற்றதாகும்**
   அ) பச்சரிசி ஆ) புழுங்கலரிசி இ) தினையரிசி ஈ) வரகரிசி
9. **எத்தனை வகையான அகவாழ்க்கை முறைகள் இருந்துள்ளதை சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் காட்டுகின்றன**
   அ) 5 ஆ) 3 இ) 2 ஈ) 8
10. **காதல் கொண்ட தலைவனும் தலைவியும் பெற்றோரின் இசைவுடன் மணந்து வாழும் வாழ்க்கை**
    அ) களவு ஆ) கற்பு இ) உடன்போக்கு ஈ)அனைத்தும்
11. **கொடுப்பதற்குரிய மரபினர்**
    அ) தலைவியின் பெற்றோர் ஆ) தலைவன் பெற்றோர்
    இ) தலைவன் ஈ) தலைவி
12. **பழந்தமிழர் திருமணம் நிகழ்வை விளக்கி கூறும் இலக்கியம்.**
    அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) நற்றிணை
13. **வெண்ணூலில் வாகை இலையையும், அறுகம்புல்லையும் சேர்த்துக்கட்டி காப்பாகப் பெண்ணுக்கு அணிவித்தனர் என்று திருமண நிகழ்வை கூறும் நூல் எது?**
    அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) நற்றிணை
14. **தலைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்றாகக் எவற்றை தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.**
    அ) சமைத்தல் ஆ) தூய்மையாக இருத்தல் இ) விருந்து போற்றல் ஈ) ஊடல்
15. **அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின் மெல்லியல் - இப்பாடல் இடம் பெறும் நுல்**

அ)கலித்தொகை ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை

16. **கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்டிருக்கும் சிறு பிணக்கை போக்குபவர்,**

அ) விருந்தினர்ஆ) மனைவி இ) கணவன் ஈ)பெற்றோர்

17. **விருந்து கண்டு ஒளிந்தது எவை?**

அ) உறவினர் ஆ) மனைவி இ) கணவன் ஈ) ஊடல்

18. **பண்டைநாளில் நல்ல வேளையை எவ்வாறு அழைத்தனர்.**

**அ)** முகூர்த்தம் ஆ) முழுத்தம் இ) நல்ல நாள் ஈ) எதுவுமில்லை

19. **பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவரும் முன் வெட்சி மறவர் விரிச்சி கேட்பதை.**

அ)நீண்மொழி ஆ) நெடுமொழி இ) பாக்கத்து விரிச்சி ஈ)எருமைமறம்

20. **ஆடவர் மடலேறும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர்**

அ)ஆடவர்கள் ஆ) பெண்கள் இ) திருநங்கை ஈ) சிறுவர்கள்

---

தொகுத்தறிவோம்

---

மனிதனுடைய வளர்ச்சியினை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அகவளர்ச்சி என்றும், புறவளர்ச்சி என்றும் அழைக்கலாம்.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, உணவு முறை, ஆடை அணிகலன்கள் அணியும் முறை. திருமணம், விருந்தோம்பல் பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகள், விழாக்கள், சடங்குகள், உறவுநிலைகள், கட்டடக கலை, சிற்பம், ஓவியம், இசை, கூத்து, நடனம் மற்றும் கைவினைகள் ஆகியவை தமிழ்ப் பண்பாட்டின் தலையாய கூறுகளாகும்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

---

1. ஆ) மனம்
2. ஈ) அனைத்தும்
3. ஈ) அனைத்தும்
4. அ)கலித்தொகை
5. ஆ) 6
6. இ) இரண்டும்
7. அ)தமிழன்
8. ஆ) புழுங்கலர்சி
9. ஆ) 3
10. ஆ) கற்பு
11. அ) தலைவியின் பெற்றோர்
12. ஆ) அகநானூறு
13. ஆ) அகநானூறு
14. இ) விருந்து போற்றல்

15. ஈ) நற்றிணை

16. அ) விருந்தினர்

17. ஈ) ஊடல்

18. ஆ) முழுத்தம்

19. இ) பாக்கத்து விரிச்சி

20. அ)ஆடவர்கள்

---

**பார்வைநூல்கள்**

---


8. **பண்டைத்தமிழ்நாகரிகமும் பண்பாடும், ஞா.தேவநேயன்,** நேசமணி பதிப்பகம், 1966

9. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன்.மு, சாகித்திய அக்காதெமி, புது தில்லி

10. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.


---

**குறுவினாகள் - விடைகள்**

---

1. தமிழர்களின் அன்றாட வாழ்க்கைமுறைகள் என எவற்றைக் குறிப்பிடலாம்?

➢ தமிழர்களின் அன்றாட வாழ்க்கை முறை என்பது மக்கள் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில் கொள்ளுதல் வரையிலான நிகழ்வுகளின் கோவை எனலாம்.

2. சிறுபொழுதுகளாவன யாவை?

➢ தமிழர்கள் ஒரு நாளை ஆறு சிறுபிரிவுகளாகப் பிரித்தனர். அவை சிறுபொழுதுகள் எனப்பட்டன. அவை,

சிறுபொழுது - நேரம்

➢ காலை - காலை 6 மணி முதல் காலை 10 மணி வரை

➢ நண்பகல் – காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை

➢ எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை

➢ மாலை - மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

➢ யாமம் - இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை

➢ வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

3. பெரும்பொழுதுகள் எத்தனை? அவை யாவை?

➢ ஓராண்டின் ஆறு பெரும் பிரிவுகள் பெரும் பொழுதுகள் எனப்பட்டன. ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டு மாதங்கள் பயின்று வரும்.

பெரும்பொழுது - மாதம்

➢ கார்காலம் - ஆவணி , புரட்டாசி

➢ குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை

- முன்பனிக் காலம் – மார்கழி, தை
- பின்பனிக் காலம் - மாசி , பங்குனி
- இளவேனிற் காலம் – சித்திரை, வைகாசி
- முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி

**நெடுவினாகள்**

10. தமிழரின் அன்றாட வாழ்க்கை முறை குறித்து விளக்கி வரைக.
11. தமிழர் வாழ்வும் பண்பாடும் குறித்து சுருக்கி வரைக.
12. தமிழர் பண்பாடு குறித்துக் கட்டுரை வரைக.
13. பண்டைய தமிழர்களின் நம்பிக்கைகளை விளக்கி எழுதுக?
14. தமிழர் அக வாழ்க்கை முறைக் குறித்து கட்டுரை வரைக?

**பிரிவு- 6**

# பண்டைத் தமிழர் வாழ்வியல் - புறம்

**பாட அமைப்பு**

அறிமுகம்
குறிக்கோள்
6.1 போர் முறைகள்
6.2 நடுகல் வழிபாடு
6.3 கொடைப்பண்பு.
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக
தொகுத்தறிவோம்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்
பயிற்சி வினா

**அறிமுகம்**

சங்க காலத்தில் தமிழரின் நாகரிகம் முழு வளர்ச்சியுற்றிருந்தது. மூன்று பேரரசுகள் சங்க காலத்தில் அமைந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இம்மூன்று பேரரசுகளை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாட்டிற்கு நன்மையைச் செய்து மேன்மையடையச் செய்தனர். ஒவ்வோர் மன்னர்க்கும் இடையே ஆதிக்கப்போட்டி நடைபெற்று வந்தாலும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டிருந்தனர். இச்சங்க காலத்தின் அரசியலில் மக்களின் பங்கும் அவசியமாகிறது. எனவே அக்கால மக்களின் புற வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிந்து கொள்வதாக இப்பாடம் அமைந்துள்ளது.

**குறிக்கோள்**

- ❖ முன்னோர்கள் கடைபிடித்த அறநெறிபண்பு, கொடைபண்பு ஆகியவற்றைக் கண்டுணர்ந்து அப்பண்புகளைச் செம்மைபடுத்வும் வளர்ந்துகொள்ளவும் உதவும் வகையில் அமைந்துள்ளது
- ❖ முன்னோர்களை மதித்து வழிபடும் மரபைப் பின்பற்றுதல்.

## 6.1 போர் முறைகள்

சங்க காலத்தில் தமிழர் போர் மரபுகள் அறப்போர் முறையைச் சார்ந்ததே ஆகும். அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பகுத்து புறம் என்று போர்முறைகளுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். அவர்களது போர்முறை நேர்மையாக இருந்தது. காலை சூரிய உதயத்தின் போது, முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும் வரை மட்டுமே போர் நடைபெற்றது. பின் முரசறைந்து போரை நிறுத்துவர். எத்துனை நாள் போராயினும் இதுவே வழக்கானது. பகைவர் ஆயுதத்தை இழந்த போதும், போரில் தோற்றோடும் போதும் அவர் மேல் படை செலுத்தாத அறநெறி இருந்தது. அவர்களுக்கு தகுந்த வாய்ப்பளிக்க மறுநாள் போர் செய்தனர். ஓடி ஒளிந்தாரைக் கொல்லாமல் அவர்கள் வரும் வரை காத்திருந்து போர் புரியும் வீரம் இருந்தது. இறந்தோருக்கு இரங்கும் குணம் இருந்தது.

**போர் அறிவிப்பு**

ஒருமன்னன் பகைவரோடு போரிடக் கருதுவானாயின், கருதியவுடன் படை எடுக்க மாட்டான். தனது கருத்தைப் பகைவரது நாட்டார்க்குப் பறையறைந்து தெரியப் படுத்துவான். அப்போது "ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வரைப் பெறாதீரும் எம் அம்பு கடி விடுதும் நும்மரண் சேரும்", என்று அறிவிக்கப்படும். இதனால் தமிழர் போர் தொடங்கும் போது அற நெறியுடன் தொடங்கினர் என அறியலாம்.

பலிபெறு நன்னகரும் பள்ளியிடனும்
ஒலிகெழு நான்மறையோர் இல்லும்- நலிவொரீஇப்
புல்லா; இரியப் பொருநர் முனை கெடுத்த
வில்லார்க்கு அருள் சுரந்தான் வேந்து.

போர் நடக்கும் நாட்டில் மறவர்கள், பலியிடப்படும் கோவில்களுக்கும், துறவிகள் வாழும் பள்ளிகளுக்கும், வேதவொலி மிக்க அந்தணர்களின் இல்லங்களுக்கும் எந்த நலிவையும் செய்யவில்லை இவை போன்ற தக்கார் உறையும் இடங்களை நீக்கிப் பிற இடங்களில் போரிட்டுப் பகைவரை வென்றுள்ளனர். அவ்வாறு அறநெறிப்படி போரிட்ட மறவர்களுக்கே மன்னனும் சிறப்பு செய்தான். அதுவே அரசியல் அறமாகக் கருதப்பட்டது.

**பூப்புனைதல்**

மறவர் போர் தொடங்கும் போது நிகழ்வுக்கேற்ற அடையாளப் பூவைச் சூடுதல் வழக்கம். ஆநிரை கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கப் போவோர் கரந்தைப் பூவையும், பகைவர் நாட்டின் மீது படை எடுப்போர் வஞ்சிப் பூவையும், அரணைக் காப்போர் நொச்சிப் பூவையும், அரணத்தை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், ஒரு

களத்தில் புக்குப் போரிடுவோர் இரு திறத்தாரும் தும்பைப் பூவையும், போரில் வெற்றி எய்தியோர் வாகைப் பூவையும் சூடுவர். இவ்வாறு பூச்சூடுங்கால் உண்மைப் பூவைச் சூடுவதோடு பொற்பூவைப் புனைதலும் உண்டு. அரசர் மறவர்க்குப் பொற்பூ வழங்கிச் சிறப்பித்தலும் உண்டு. முருகன் கிரவுஞ்ச மலையை வெல்லுங்கால் காந்தட் பூச் சூடினான் என்றும், சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்தில் உழிஞைப் பூச்சூடினான் என்றும் கூறுவர்.

**ஆநிரை கவர்தல்**

போர் அறிவிப்பைச் செய்தும் உணர மாட்டாதவை பசுக்களாகும். எனவே பசுக்களைப் பாதுகாக்க விரும்பி ஆநிரைக் கவர்தல் நடைபெறும். அவ்வாறு கவர்ந்து திரும்பும்போது அப்பசுக்களுக்கு உணவினை வழங்கி, அவற்றிற்கு ஊறு செய்யாமல் ஓட்டிச் செல்வர்.

**நாட்கோள்**

படை எடுக்க விரும்பும் மன்னர் நன்னாளும் நன்முழுத்தமும் அறிந்து தொடங்குவர். அந்நேரத்தில் அரசனும் உடன் செல்ல முடியாதிருந்தால் தனக்கு மாறாகத் தன் குடையையாவது, வாளையாவது புறவீடு விடுவான். அது நாட்கோள் எனப்படும்.

**நெடுமொழியும், வஞ்சினமும்**

படைவீரர்களான மறவர்கள் தம் அரசர் முன்னும் பகை மறவர்களின் முன்னும் நெடுமொழி (தற்பெருமை) கூறிக் கொள்வர். தனது மாமன்னனுக்குத் தன்னுடைய மேம்பாட்டை வீரன் ஒருவன் தானே எடுத்து உரைப்பது நெடுமொழி கூறல் எனப்படும். மன்னர்கள் போர் தொடங்கும் முன் வஞ்சினம் மொழிவர். வஞ்சினம் என்பது 'இன்னது செய்வேன் நான். அவ்வாறு செய்யேனாயின் இன்னன் ஆகுக' என்று வலிய சினத்தில் கூறும் சொல் ஆகும்.

**பகைநாட்டழிவு**

வஞ்சியார் எனப்படும் வஞ்சி மாலை அணிந்த வீரர்கள் பகைவரது நாட்டு எல்லையுள் புகுந்து போருக்கு அடியிடுவர். ஊரை நெருப்பிட்டுக் கொளுத்துவர். ஊர் மனைகளில் கொள்ளையும் இடுவர். கரும்பும், நெல்லும் செழித்த வயல்களில் நெருப்பு மூட்டி அழிப்பர். நீர் தேக்கி வைத்த குளம் முதலியவற்றின் கரைகளை உடைத்துவிடுவர். உழிஞை மறவர் பகைவரது கோட்டைகளை இடித்துத் தரை மட்டமாக்கிக் கழுதை ஏர் கொண்டு உழுவர்; கவடு விதைப்பர். மற்றொரு வகையில் இரு திறத்து மன்னரும் தும்பைப் பூச்சூடி போருக்குச் செல்லுங்கால் போர் ஊருக்குள் நடைபெறாமல் குறிப்பிட்ட ஒரு போர்க்களத்தில் நடைபெறும். இரு திறத்துப் படைகளும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும் இரு திறத்தாருக்குமே மிக்க அழிவு ஏற்படும்

**பாசறை நிலை**

வஞ்சி மறவர்களது படை பகைவர்நாட்டில் புகுந்து ஊர் எல்லையில் தங்கும். அரசன் தங்குவதற்குப் பசிய மூங்கிலால் அறை வகுப்பர். (பசுமை+அறை=பாசறை) அதனைச் சுற்றி மறவர்கள் தங்குவதற்குத் தழைகளை வெட்டி மேற்கூரையாக இட்டுச் சிறுசிறு அறைகள் வகுக்கப்படும். அங்கே ஊரில் வாழ்வது போன்ற எல்லா அமைப்புகளும் இருக்கும். எனவே

அது புதிதாகக் கட்டப்பட்ட ஊரைப் போலவே காணப்படும். இது கட்டூர் எனப்படும். (கட்டு + ஊர் = கட்டூர், பாசறை) ஒரு பக்கம் யானைகள் முழங்கும்; ஒருபக்கம் ஆடல் பாடல் மகளிரின் கூத்து நடக்கும். பாசறையில் தங்கியுள்ள மன்னனுக்குப் பகைவர் திறையளிப்பர். பாசறை மன்னன் தம் மறவர்க்குப் பெருஞ்சோறளித்தலும் உண்டு. போர்க்களம் புகுந்த மறவர் நெடுநாள் பாசறையில் தங்கியிருந்து போரிட்டு வருவர். அப்போது அவர்களுக்கு வழங்கும் உணவு அளவுக்கு உட்பட்டே இருக்கும். அந்நாட்களில் ஒரு நாள் மன்னன் மறவர்க்கு உணர்ச்சி பெருகுதல் வேண்டிக் கறிவிரவிய பெருஞ்சோற்றுத்திரள்களை அளிப்பான், இதுவே பெருஞ்சோறு எனப்படும்.

**மகள் மறுத்தல்**

வஞ்சி மன்னன் பகை மன்னர்களிடம் மகள் வேண்டுவான். காஞ்சியார் மகளைக் கொடுக்க முடியாதென மறுத்துப் பேசுவர். உழிஞை மறவன் மகள் வேண்டுவான்; நொச்சி மன்னன் மகள் தர மறுப்பான். உழிஞை வேந்தன் நொச்சியானது மகளைக் கேட்பான்; நொச்சியான் மகள் தர மறுப்பான். இவ்வாறான காரணங்களுக்காகப் போர் நடைபெறலும் உண்டு.

**உயிர் நீத்தல்**

போரில் விழுப்புண்பட்ட மறவன், மீண்டும் உயிர் வாழ விரும்பாமல் தன் புண்ணைத் தானே வேலால் கிழித்துக் கொண்டு உயிர் நீப்பதும் உண்டு. போரில் தனது அரசன் இறந்ததைக் கண்டு தாமும் உடன் இறப்பதற்காகச் சில மறவர்கள் உயிர் விட்டலும் உண்டு. சில மறவர் செஞ்சோற்றுக் கடன் வாய்ப்பதற்காகத் தமதுயிரை அவியாக (பலியாக) இடுதலும் உண்டு.

**முடி புனைதல்**

பகைவரது மதிலை அழித்த மன்னன் தனது வாளைப் புண்ணிய நீராட்டுவான். முடிசூடித் தானும் புண்ணிய நீராடுவான். முடிபுனைந்த நாளை ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாடுவான்.

**போர்ப்படை**

போரிடுங்கால் யானை, குதிரை, தேர் என்பன கையாளப்படும். மறவர் இவற்றை இயக்கியும் இவற்றின் மீது அமர்ந்து கருவி கொண்டும் போரிடுவர். படையின் முதற்பகுதி தூசிப்படை அல்லது தார் எனப்படும். வில், அம்பு, வாள், குந்தம், ஆழி, வேல் முதலிய கருவிகள் போரில் பயன்படுத்தப்படும். கருவிகள் தம்மீது பாயாமல் பொருட்டுக் கிடுகு (கேடயம்) கையாளப்படும். போர்க்கருவிகளில் வேல் என்பதே முதன்மையானதும் தலைமையானதும் ஆகும். போரிடுங்கால் துடி, முரசம், வளை, வயிர் போன்ற இசைக்கருவிகள் முழங்கும்.

### புறப்பொருள் திணைகள்

வெட்சித் திணை

கரந்தைத் திணை

வஞ்சித் திணை

காஞ்சித் திணை

நொச்சித் திணை

உழிஞைத் திணை

தும்பைத் திணை

வாகைத் திணை

ஆகியவை புறப்பொருள் திணைகள் ஆகும். இந்த எட்டுத் திணைகளும் போரை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திணைகளுக்கான விளக்கமும் பிற திணைகளான

**வெட்சித் திணை:**

பழைய காலத்தில் பகை அரசனிடம் போர் செய்ய நினைக்கும் ஒருவன் போரின் முதல் கட்டமாகப் பகை அரசனது பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வான். இது வெட்சித் திணை எனப்படும். வெட்சி வீரன் வெட்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**கரந்தைத் திணை:**

பகை அரசன் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை அவற்றிற்கு உரியவன் மீட்டுவரச் செய்யும் போர், கரந்தைத் திணை எனப்படும். கரந்தை வீரன் கரந்தைப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**வஞ்சித் திணை:**

பகை அரசன் நாட்டைப் பிடிப்பதற்காக அந்த நாட்டின் மேல் படை எடுத்துச் செல்லுதல் வஞ்சித் திணை எனப்படும். வஞ்சி வீரன், வஞ்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**காஞ்சித் திணை:**

படை எடுத்து வரும் பகை அரசனைத் தடுத்துத் தன் நாட்டைக் காக்க நினைக்கும் அரசன் போருக்குச் செல்லுதல் காஞ்சித் திணை எனப்படும். காஞ்சி வீரன் காஞ்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**நொச்சித் திணை:**

பகை அரசன் படை எடுத்து வந்து கோட்டை மதிலைச் சூழ்ந்து கொண்டபோது, தன்னுடைய கோட்டையைக் காத்துக் கொள்ள அரசன் போர் செய்தல் நொச்சித் திணை எனப்படும். நொச்சி வீரன் நொச்சிப் பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**உழிஞைத் திணை:**

பகை அரசனுடைய கோட்டையை வெல்லக் கருதிய அரசன் தன் படைகளோடு மதிலைச் சுற்றி முற்றுகை இடுதல் உழிஞைத் திணை எனப்படும். உழிஞை வீரன் உழிஞைப்பூச் சூடி, போருக்குச் செல்வான்.

**தும்பைத் திணை:**

பகை அரசர்கள் இருவரும் போர்க் களத்தில் எதிர் எதிர் நின்று போரிடுதல் தும்பைத் திணை எனப்படும். தும்பை வீரன் தும்பைப் பூச் சூடி, போருக்குச் செல்வான். இந்தத் திணைகளுடன் வாகைத் திணை, பாடாண் திணை, பொதுவியல் திணை ஆகிய மூன்று புறத்திணைகளும் உள்ளன. இவற்றையும் சேர்த்து, பத்துப் புறத்திணைகள் என்று கூறுவர். கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் சேர்த்து, பன்னிரண்டு புறத்திணை என்றும் கூறுவர்.

**வாகைத் திணை:**

போரில் வெற்றி பெற்ற அரசனைப் புகழ்ந்து பாடுதல் வாகைத் திணை எனப்படும். வெற்றி பெற்றவர்கள் வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவார்கள்.

**பாடாண் திணை:**

இதுவரை சொன்ன புறத்திணைகள் போர் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை. பாடாண் திணையில் கொடை, கடவுள் வாழ்த்து, அரசனை வாழ்த்துதல் முதலியவை இடம்பெறும்.

**பொதுவியல் திணை:**

போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடுதல், போரில் இறந்த வீரர்களின் மனைவியர் இரங்கல், நிலையாமை முதலியவை பொதுவியல் திணையில் இடம்பெறும்.

**கைக்கிளைத் திணை:**

தன்னை விரும்பாத ஒரு பெண்ணிடம் ஒருவன் காதல் கொள்வது கைக்கிளைத் திணை எனப்படும். இதை ஒருதலைக்காதல் என்று கூறுவர்.

**பெருந்திணை:**

தன்னை விட வயதில் மிகவும் மூத்த பெண் ஒருத்தியிடம் ஒருவன் காதல் கொள்வது பெருந்திணை எனப்படும். இதைப் பொருந்தாக் காதல் என்று கூறுவர். கைக்கிளை, பெருந்திணை என்னும் இவ்விரண்டு திணைகளையும் அகப்பொருள் திணையாகவும் கூறுவர்.

**புறநானூற்றுத் துறைகள்**

**அரசவாகை –** அரசனது இயல்பையும் அவனது வெற்றியைப் பற்றியும் கூறுதல்

**ஆனந்தப் பையுள் –** ஒருவன் இறந்ததுபற்றி அவனுடைய சுற்றத்தார் வருந்திக் கூறுதல்

**இயன்மொழி –** தலைவன் எதிரே சென்று, அவனது செயல்களையும் அவன் குலத்தோரின் செயல்களையும் ஏற்றிப் புகழ்தல்

**உடனிலை –** ஒருங்கே இருக்கும் இருவரைப் புகழ்ந்து பாடுதல்

**உண்டாட்டு –** வீரர் மதுவை உண்டு களித்தலைக் கூறுதல்

**உவகைக் கலுழ்ச்சி** – விழுப்புண்மிகுந்த உடம்பையுடைய மறவனைக் கண்டு அவனது தாய்/மனைவி மகிழ்ந்து கண்ணீர் வடித்தல்

**எருமைமறம்** – படைவீரர் புறமுதுகிட்ட நிலையிலும் தன் பகைப்படையை அஞ்சாது ஒருவன் போரிட்டு நிற்றல்

**ஏர்க்கள உருவகம்** – போர்க்களச் செயல்களை ஏர்க்களச் செயல்களாக உருவகப்படுத்திக் கூறுதல்

**ஏறாண்முல்லை** – வீரம் மிகுந்த மறக் குடியை மேலும் மேலும் உயர்த்திக் கூறுதல்

**கடைநிலை** – அரண்மனை வாயிலில் நின்று பாடுதல்

**கடைநிலை விடை** – தலைவன் வாயிலில் நின்று பாடிப் புலவன் விடை பெறுதல்

**களிற்றுடனிலை** – தன்னால் கொல்லப்பட்ட யானையோடு ஒரு வீரன் தானும் வீழ்ந்து மடிதலைக் கூறுதல்

**குடிநிலை உரைத்தல்** – பழமையும் வீரமும் மிகுந்த குடியின் வரலாற்றைக் கூறுதல்

**குடைமங்கலம்** – அரசன் குடையைப் புகழ்ந்து பாடுவது

**குதிரைமறம்** – குதிரை வீரன் ஒருவனின் வீரத்தையோ அல்லது அவனுடைய குதிரையின் வீரத்தையோ கூறுதல்

**குறுங்கலி** – ஒருவனால் துறக்கப்பட்ட அவன் மனைவியை அவனோடு சேர்க்கும் பொருட்டு இவள்பால் அருள் செய்தல் என வேண்டுதல்

**கையறுநிலை** – தலைவன் இறந்த பின் அவன் பெருமையைக் கூறி வருந்துதல்

**கொற்றவள்ளை** – அரசனுடைய வெற்றியைக் கூறி அவனுடைய பகைவரின் நாடு அழிதற்கு வருந்துதல்

**சால்புமுல்லை** – சான்றோர்களின் சான்றாண்மையைக் கூறுதல்

**செருமலைதல்** – பசுக்களைக் கவர்ந்து சென்ற பகைவரை நெருங்கி அவர்கள் அஞ்சுமாறு போர் செய்தல்

**செருவிடைவீழ்தல்** – அகழியையும் காவற் காட்டையும் காத்து சாவைப் பெற்ற வீரனின் சிறப்பைக் கூறுதல்

**செவியறிவுறூஉ** – அரசன் உலகைக் காக்கும் முறையை அவனிடம் சொல்லி அவன் செவியிற் புகுத்தி அறிவித்தல்

**தலைத்தோற்றம்** – ஒரு வீரன் பகைவர்களின் பசுக்களைக் கவர்ந்து கொண்டுவந்தது குறித்து சுற்றத்தார் தம்முடைய மகிழ்ச்சியைக் கூறுதல்

**தாபதநிலை** – கணவன் இறந்ததால் மனைவி கைம்மை நோன்பை மேற்கொண்டிருத்தலை உரைத்தல்

**தாபதவாகை** – முனிவரின் ஒழுக்க நிலையை உரைத்தல்

**தானைநிலை** – இரு திறத்தாரும் தன் வீரத்தைப் புகழுமாறு ஒரு வீரன் போர்க்களத்தில்

சிறப்பு எய்தல்

**தானைமறம்** – இரு படைகளும் வலிமையுடையவை என்பதால் அழிவு மிகுதி ஆகும் என்பதைக் கருதிப் போரைத் தவிர்க்கலாம் என்றுக் கூறுதல்

**துணைவஞ்சி** – பிறரை வெல்லவோ கொல்லவோ துணிந்து நிற்பவனிடம் சென்று அறிவுறுத்திச் சமரசம் செய்தல்

**தொகைநிலை** – போர்க்களத்தில் அனைவரும் ஒருங்கே மாய்ந்ததைக் கூறுதல்

**தொடாக்காஞ்சி** – பேய்கள் அஞ்சி நீங்குமாறு புண்பட்டு வீழ்ந்த வீரனுடைய மனைவி அவனைக் காத்தல்

**நல்லிசைவஞ்சி** – பகைவரது இடங்கள் கெடுமாறு வென்ற வீரனின் வெற்றியைக் கூறுதல்

**நீண்மொழி** – ஒரு வீரன் போர்க்களத்தில் கூறிய சூளுரையைக் கூறுவது

**நூழிலாட்டு** – ஒரு வீரன் பகைவர் படை அழியுமாறு தன் மார்பில் பட்ட வேலைப் பறித்து எறிதல்

**நெடுமொழி** – போரில் வெற்றி பெற்ற வீரன், தன் அரசனிடம் தன்னுடைய பெருமையைக் கூறுதல்

**பரிசில்கடாநிலை** – பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தும் தலைவனுக்குப் பரிசில் வேண்டுவோன் தனது நிலையைக் கூறி பரிசிலை வலியுறுத்தல்

**பரிசில்துறை** – பரிசிலர் புரவலனிடம் சென்று தாம் பெறக் கருதியது இதுவெனக் கூறுதல்

**பரிசில்விடை** – பரிசில் பெற வந்தவன் ஒருவன் அதனைப் பெற்றானாயினும் பெறானாயினும், பரிசில் அளிப்பவனிடம் விடை பெறுதல்

**பழிச்சுதல்** – புகழ்தல்

**பாடாண்பாட்டு** – ஒருவனுடைய ஆற்றல், ஒளி, ஈகை, அருள் ஆகியவற்றை ஆராய்ந்துக் கூறுதல்

**பாண்பாட்டு** – போரில் இறந்த வீரர்க்குப் பாணன் சாவுப் பண் பாடித் தன் கடன் கழித்தல்

**பாணாற்றுப்படை** – பரிசு பெற்ற பாணன் மற்றொரு பாணனைப் புரவலரிடம் ஆற்றுப்படுத்துவது

**பார்ப்பனவாகை** – கேட்கத் தக்கவை கேட்டுத் தலைமை பெற்ற பார்ப்பானின் வெற்றியைப் புகழ்ந்து பாடுதல்

**பிள்ளைப்பெயர்ச்சி** – நிமித்தம் நன்றாக இருந்தாலும் அஞ்சாது சென்று போர் புரிந்த வீரனுக்கு மன்னன் கோடை புரிதல்

**புலவர் ஆற்றுப்படை** – புலவன் ஒருவன் மற்றொரு புலவனிடம் தலைவனுடைய

இயல்பையும் ஊரையும் பற்றிக் கூறி அப்புலவனைத் தலைவனிடம் ஆற்றுப்படுத்துவது

**பூக்கோள் காஞ்சி** – போருக்குச் செல்லும் வீரன் அந்தப் போருக்குரிய அடையாளப் பூவை பெறுவதையும் சூடுவதையும் கூறுதல்

**பூவை நிலை** – மனிதரை வானுலகில் இருப்பவர்களோடு உவமித்துக் கூறுதல்

**பெருங்காஞ்சி** – நிலையில்லாமையைப் பற்றிக் கூறுதல்

**பெருஞ்சோற்று நிலை** – போருக்குச் செல்லும் மன்னன் அவனுடன் போருக்குச் செல்லும் வீரர்களுக்கு விருந்தளித்தல்

**பேய்க்காஞ்சி** – போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்தவர்களைப் பேய் அச்சுறுத்துவதைக் கூறுதல்

**பொருண்மொழிக்காஞ்சி** – உயிர்க்கு நலம் செய்யும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுதல்

**மகட்பாற் காஞ்சி** – மகளை வேண்டும் தலைவனுடன் மாறுபட்டு நிற்றல்

**மகள் மறுத்தல்** – ஒரு தலைவன் திருமணம் செய்யத் தம் மகளை வேண்ட, அதைப் பெண்ணின் தந்தை மறுத்துச் சொல்லுதல்

**மழபுல வஞ்சி** – பகைவர் நாட்டைக் கொள்ளையிடுதல் எரித்தல் ஆகிய செயல்களைச் செய்து அழித்தலைப்பற்றிக் கூறுதல்

**மறக்கள வழி** – மன்னனை உழவுத் தொழில் புரியும் வேளாளனுடன் ஒப்பிட்டுக் கூறுதல்

**மறக்கள வேள்வி** – பேய்கள் உண்ணுமாறு போர்க்களத்தில் வேள்வி செய்தல்

**மனையறம் துறவறம்** – இல்லறம் துறவறம் ஆகியவற்றின் வேறுபாடுகளைக் கூறுதல்

**முதல் வஞ்சி** – பழம்புகழ் வாய்ந்த முன்னோர் சிறப்புக் கூறுதல்

**முதுபாலை** – காட்டில் தன் கணவனை இழந்த மடந்தையின் தனிமையைச் சொல்லுதல்

**முதுமொழிக் காஞ்சி** – அறிவுடையோர், அறம், பொருள், இன்பம் என்னும் முப் பொருளினது உறுதி தரும் தன்மையைக் கூறுதல்

**மூதின் முல்லை** – வீரர்க்கு அல்லாமல் அம்மறக்குடியில் பிறந்த மகளிர்க்கும் சினம் உண்டாதலை மிகுத்துச் சொல்லுதல்

**வஞ்சினக் காஞ்சி** – பகைவரை இழித்துக் கூறி இன்னது செய்வேன், செய்யேன் ஆயின் இன்ன தன்மையன் ஆவேன் என்று கூறுதல்

**வல்லாண்முல்லை** – ஒரு வீரனின் வீட்டையும் ஊரையும் இயல்பினையும் கூறி அவனுடைய ஆண்மைத் தன்மையைப் பாராட்டுதல்

**வாழ்த்தியல்**: தலைவனை வாழ்த்துதல்

**வாழ்த்து** – தலைவனின் வெற்றி கொடை ஆகியவற்றைப் பாராட்டுதல்

**வாள் மங்கலம்** – தலைவனுடைய வாளைப் புகழ்தல்

**விறலியாற்றுப்படை** – ஆடலும் பாடலும் புரியும் பெண்ணான விறலியைப் அரசனிடம் சென்று பாடி ஆடிப் பரிசில் பெற வழிகாட்டுதல்

**வேத்தியல்** – வீரர்கள் மன்னனின் பெருமையைக் கூறுதல்

## 6.2. நடுகல் வழிபாடு

இறந்து போன வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது பண்டைய தமிழ் மரபு ஆகும். இவ்வாறு நடப்பட்ட கற்களே நடுகல் என்றுப் பொதுவான சொல்லால் வழங்கப்படுகிறது. வீரர்களுக்கு மட்டுமின்றி பொதுவாக இறந்தவர் நினைவாகவும் நடுகல் நடும் வழக்கம் உலகம் முழுவதும் நிலவிய தொன்மையான வழக்கம் ஆகும்.

**காலம் :**

ஆகோள் பூசலில் உயிர் நீத்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் (பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டு) திருவண்ணாமலை மாவட்டம்.

தமிழகத்தில் சங்க காலம் தொட்டே (பொ.ஆ.மு.4காம் நூற்றாண்டு முதல்) வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. நடுகல் நடும் முறைகள் பற்றி "காட்சி கால் கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று இரு மூன்று மரபிற் கல்லொடு புணர" எனத் தொல்காப்பியம் தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும் பல சங்க இலக்கியங்களும் நடுகற்களைப் பற்றிக் கூறுகின்றன. இதன் மூலம் நீத்தோர் நினைவாக நடுகற்கள் நடும் மரபு சங்க காலம் முதற்கொண்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினரால் புலிமான்கோம்பையில் (தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம்) மூன்று நடுகற்கள் கண்டறியப்பட்டன. இதன் காலம் பொ.ஆ.மு 3ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். இந்நடுகற்களே இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டவற்றில் மிகப்பழமையானவை ஆகும்.

**அமைவிடம் :**

பெரும்பாலும் நடுகற்கள் ஊர்களின் புறத்தே காணப்படுகின்றன. ஊர்களின் நடுவில் நடுகற்கள் காணப்படவில்லை. ஒரே இடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நடுகற்கள் காணப்படுவதும் உண்டு. ஓரே போரில் இறந்த பல போர்வீரர்களுக்கும் நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவதும் உண்டு.

**நடுகற்களின் பிற பெயர்கள் :**

நடுகற்கள் வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, மாவட்டங்களில் வேடியப்பன் கல் என்று அழைக்கப்படுகின்றன. இவை இருக்கும் இடத்தை வேடியப்பன் கோயில் என்றும் அழைப்பர். “வேடர்”, “கிருஷ்ணாரப்பன்”, “மீனாரப்பன்”, “சன்யாசியப்பன்” என்று பலபெயர்களிலும் நடுகற்கள் அழைக்கப்படுகின்றன. சில இடங்களில் “ஆஞ்சநேயர் கல்லு” என்றும் அழைக்கப்டுவதும் உண்டு. சில சிறப்புப் பெயர்களும் உண்டு. சிறை மீட்டான் கோயில் (நிரை மீட்டான் என்பதன் திரிபு?) “ஊமை வேடியப்பன்”, “இரட்டை வேடியப்பன்”, “சாவு மேட்டு வேடியப்பன்”, “நத்தமேட்டு வேடியப்பன்” எனப்பல பெயர்களில் நடுகற்கள் சுட்டப்படுகின்றன.

**நடுகற்களின் அமைப்பு :**

நடுகற்களில் வீரனுடைய உருவம் சமர்புரியும் நிலையில் காண்பிக்கப்பட்டிருக்கும். கைகளில் வில்லும் அம்பும் ஏந்தியோ அல்லது வாளும் கேடயமும் ஏந்தியோ வீரன் காட்டப்பட்டிருப்பான். சில நடுகற்களில் வீரனின் ஒரு கையில் வில்லும் மற்றொரு கை இடையில் உள்ள வாளை உருவும் வகையிலும் காட்டப்பட்டிருக்கும். பல நடுகற்களில் வீரனின் உடலில் பல அம்புகள் துளைத்து நிற்பது போலும் காட்டப்பட்டிருக்கும். வீரன் எதிர்த்து நின்று வீழ்ந்து பட்டான் என்றும் வகையில் முன்புறத்திலிருந்து அம்பு பாய்வது போல் காட்டப்பட்டிருக்கும். பெரும்பாலும் வீரன் அரையாடை மட்டும் அணிந்து இருப்பான். இடுப்பில் நீண்ட துணியும் கட்டப்பட்டிருக்கும். உடலின் மேல் ஆடை கிடையாது. தலையில் ஒரு முடி காணப்படுகிறது. சில வீரர் நீண்ட பின்னலை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். பல நடுகற்களில் வீரனின் காலடியில் ஒரு மூக்குக் கெண்டி, ஒரு சிமிழ், கைப்பிடி உடைய முகம் பார்க்கும் கண்ணாடி ஆகியவை காணப்படுகின்றன. சில நடுகற்களில் ஆநிரைகள் காட்டப்பட்டிருக்கும். செங்கம் பகுதி நடுகற்களில் புலிகளிடமிருந்து ஊரைக் காத்தபோது உயிர் நீத்த வீரனுக்கும் நடுகற்கள் எடுத்துள்ளனர். இவ்வகை நடுகற்களில் வீரன் புலியோடு சண்டையிடுவது போல உருவப் பொறிப்புக் காணப்படும். மோத்தக்கல் என்ற இடத்தில் கிடைத்த நடுகல்லில் புலி குத்திப்பட்டான் என்றே குறிப்பு உள்ளது. கோழிச்சண்டையில் உயிர் நீத்த கோழிகளுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை கோழிக்கற்கள் என வழங்கப்பெறுகின்றன.

**நடுகற்களில் எழுத்துப் பொறிப்புகள் :**

நடுகற்களில் மன்னனின் ஆட்சியாண்டு, உயிர் நீத்த வீரன் பெயர் அவனைப் பற்றிய செய்திகள், போர், நிரை கொண்டது, நிரை மீட்டது ஆகியவற்றில் எதனால் வீழ்ந்தான் முதலிய செய்திகள் பொறிக்கப்பட்டிருக்கும். இது வரை கிடைத்துள்ள நடுகற்களில் பெரும்பாலானவை வட ஆற்காடு மாவட்டம், செங்கம் பகுதியில் கிடைத்துள்ளன. தென்னாற்காடு, செங்கல்பட்டு, தர்மபுரி, சேலம், கோலை ஆகிய மாவட்டங்களிலும் சில நடுகற்கள் கிடைத்துள்ளன. மதுரை, திருநெல்வேலி மாவட்டஙக்ளிலும் ஒன்றிரண்டு நடுகற்கள் கிடைத்துள்ளன. சோழ மண்டலத்தில் நடுகற்கள் அதிகம் கிடைக்கவில்லை. இதுவரையில் இப்பகுதிகளில் சங்க கால நடுகற்கள் ஏதும் கிடைக்கவில்லை.

பல்லவர், பாண்டியர், கங்கர், சோழர், நுளம்பர், போசளர், விஜயநகர மன்னர் ஆகிய

அரசரது காலத்து நடுகற்கள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் இடைக்காலம் தொட்டு பொ.ஆ. 16ஆம் நூற்றாண்டு நடுகற்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துள்ளன. சங்க காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் அரிதாகவே கிடைத்துள்ளன. தற்போழுது, திண்டுக்கல், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் ஒரு சில நடுகற்கள் கிடைத்துள்ளன..

### 6.3. கொடைப்பண்பு

சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணர முடிகிறது

கொடை: சொல்விளக்கம்.

கொடை என்பதற்குத் தியாகம், புறத்துறை, திருவிழா, வசவு, அடி என்று பொருள் தருகிறது சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி. (பக்-236 ). தமிழ் தமிழ் அகரமுதலி கொடை என்ற சொல்லுக்கு,

ஈகம்,தியாகம்,கொடை,கைக்கொண்ட அநிரையை இரவலர்க்கு
வரையாது கொடுக்கும் புறத்துறை, ஊர்த்தேவதைக்கு மூன்று
நாள் செய்யும் திருவிழா, வசவு, அடி(ப.- 387)

என்பர். சங்க காலத்தில் இவ்விரண்டும் வேறுபாடின்றி போற்றப்படுவதைக் காணமுடிகின்றது.

**கொடை: இலக்கணம்**

செல்வத்துப் பயனே ஈதல் என்பதைக் காலந்தோறும் இலக்கியங்கள் இயம்பி வந்துள்ளன. செல்வத்துப் பயனே கொடுத்தலாகும் அவ்வாறின்றி யாமே அனைத்தும் நுகர்வோமென்று யாரும் இருந்துவிடமுடியாது என்பதை,

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஒரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே (189:6-9)

என்னும் பாடலடிகள் இதனையுணர்த்தும். புரவலர்களும் இம்மைப் புகழ் இரப்போர்க்குக் கொடுப்பதாலும், மறுமைப் புகழ் பாடுவதாலும் கிடைக்கும் என்று நம்பினர். மன்னன் வஞ்சினம் உரைக்கும் போது,

புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே (72:17-18)

என்று கூறுவதும் இந்நோக்கினையுடயதாகும். என்னால் புரக்கப்படும் கேளிர் இரக்கும் அவர்களுக்குக் கொடாத வறுமையை யான் அடைவேன் என்றுரைப்பதன் மூலம் மன்னர்களின் இம்மைப் புகழ் விரும்பியமைப் பெறப்படுகிறது.

சான்றாக

பேகன் - மயிலுக்குப் போர்வை அளித்தவன் (பொதினி -பழனி)
பாரி - முல்லைக்குத் தேர் தந்தவன் (பறம்பு மலை)

காரி - (திருக்கோவிலூர்) ஈர நன்மொழி கூறியவன்

ஆய் - நீலநாகம் நல்கிய கலிங்கத்தை ஆலமர் செல்வனுக்கு (குற்றாலநாதருக்கு) அணிவித்தவன் (பொதிகை மலை)

அதியமான் - நெல்லிக்கனியை ஔவைக்கு அளித்தவன் (தர்மபுரி)

நள்ளி - துளிமழை பொழியும் நளிமலை (நீலகிரி) நாடன். நட்டோர் உவப்ப நடைப்பரிகாரம் நல்கியவன். நண்பர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் நல்கியவன்

ஓரி -(கொல்லிமலை) தன் குறும்பொறை நாடு முழுவதையும் கோடியர்க்கு(யாழ் மீட்டும் பாணர்க்கு) அளித்தவன். தன் ஓரி என்னும் குதிரைமீதேறி, காரி என்னும் குதிரைமேல் வந்து தாக்கிய காரியோடு போரிட்டவன்

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

---

1. சங்க காலத்தில் தமிழர் போர் மரபுகள் எம்முறையைச் சார்ந்ததே இருந்தது

அ) புறப்போர் ஆ) வீரப்போர் இ) அகப்போர் ஈ) அறப்போர்

2. தமிழ்ர் முரசறைந்து போர் எப்பொழுது தொடங்குவர்

அ) சூரிய உதயத்தின் ஆ) நண்பகல் இ) சூரியன் மறையும் ஈ) மாலை

3.அரணைக் காப்போர் என்ன பூவை சூடுவர்

அ) நொச்சிப் பூ ஆ) வெட்சிப் பூ இ) உழிஞைப் பூ ஈ) கரந்தைப் பூ

4.படைவீரர்களான மறவர்கள் தம் அரசர் முன்னும் பகை மறவர்களின் முன்னும் நெடுமொழி (தற்பெருமை) கூறிக் கொள்வதை எவ்வாறு அழைப்பர்.

அ)காஞ்சி ஆ) வஞ்சினமும் இ) நாட்கோள் ஈ) பாசறை நிலை

5. மகளைக் கொடுக்க முடியாதென மறுத்துப் பேசும் மன்னர்கள் யாவர்?

அ) நொச்சி ஆ) உழிஞை இ) காஞ்சியார் ஈ) வஞ்சி

6. பகை அரசர்கள் இருவரும் போர்க் களத்தில் எதிர் எதிர் நின்று போரிடுதல் எவ்வகைத் திணை.

அ) நொச்சித் திணை ஆ) உழிஞைத் திணை இ) தும்பைத் திணை ஈ) வாகைத் திணை

7. இறந்து போன வீரர்களுக்கு ஈமக்கடனாக என்ன வழக்கம் உலகம் முழுவதும் நிலவியது

அ) அடக்கம் செய்தல் ஆ) கண்ணீர்விடுதல் இ) காப்புக்கட்டுதல் ஈ) நடுகல்

8. இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டவற்றில் மிகப்பழமையான நடுகல் எங்கு உள்ளது.

அ).புலிமான்கோம்பையில். ஆ) . செங்கம் பகுதி இ). மோத்தக்கல் ஈ) . செங்கல்பட்டு

9. வீரன் புலியோடு சண்டையிடுவது போல உருவப் பொறிப்புக் காணப்படும்

அ) புலிமான்கோம்பையில் ஆ) செங்கம் பகுதி இ) தர்மபுரி ஈ) செங்கல்பட்டு,

10. பேய்கள் உண்ணுமாறு போர்க்களத்தில் வேள்வி செய்தல்

அ) நொச்சி ஆ) மறக்கள வேள்வி இ) வஞ்சினம் ஈ) நாட்கோள்

11. வீரர்க்கு அல்லாமல் அம்மறக்குடியில் பிறந்த மகளிர்க்கும் சினம் உண்டாதலை மிகுத்துச் சொல்லுதல்

அ) நொச்சி ஆ) வஞ்சினம் இ) மூதின் முல்லை ஈ) வஞ்சினம்

12. உயிர்க்கு நலம் செய்யும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுதல்

அ) பொருண்மொழிக் காஞ்சி ஆ) நொச்சி இ)காஞ்சி ஈ) தும்பை

13. மனிதரை வானுலகில் இருப்பவர்களோடு உவமித்துக் கூறுதல்
அ)நெடுமொழிஆ) நூழிலாட்டு இ)பார்ப்பனவாகை ஈ) பூவை நிலை
14. நடுகல் எந்த மாவட்டத்தில் வேடியப்பன் கல் என்று அழைக்கப்படுகின்றது
அ)தர்மபுரி ஆ) சேலம் இ)தென்னாற்காடு ஈ) அனைத்தும்
15. நடுகற்கள் இவ்வாறு அழைக்கப்டுகின்றன
அ)சிறைமீட்டான் ஆ) நொச்சி இ)காஞ்சி ஈ) தும்பை
16. புலிமான்கோம்பையில் உள்ள நடுகல்லின் காலம் என்ன?
அ)6ஆம் நூற்றாண்டு ஆ) 3ஆம் நூற்றாண்டு இ)4ஆம் நூற்றாண்டு ஈ) 5ஆம் நூற்றாண்டு 17. கொடை என்பதற்கு தமிழ்ப்பேராகராதி தரும் பொருள் என்ன?.
அ)தியாகம் ஆ) புறத்துறை இ)இரண்டும் ஈ) எதுவுமில்லை
17.ஆநிரை கவரச் செல்வோர் என்ன பூவை சூடுவர்
அ) வெட்சிப் பூவையும், ஆ) உழிஞைப் பூவையும் இ) கரந்தைப் பூவையும் ஈ) தும்பைப் பூவையும்
18. காலந்தோறும் இலக்கியங்கள் செல்வத்தின் பயன் என்ன என்று இயம்பி வந்தன.
அ)வாங்குதல் ஆ) நுகர்தல் இ)ஈதல் ஈ) பெறுதல்
19. முல்லைக்குத் தேர் கொடுத்த வல்லள் யார்?
அ)பாரி ஆ) பேகன் இ)ஔவை ஈ) ஆய்
20. மயிலுக்குப் போர்வை அளித்த
அ)பாரி ஆ) பேகன் இ) காரி ஈ) ஆய்

---

தொகுத்தறிவோம்

---

சங்க காலத்தில் தமிழர் போர் மரபுகள் அறப்போர் முறையைச் சார்ந்ததே ஆகும்

**புறப்பொருள் திணைகள்**

வெட்சித் திணை
கரந்தைத் திணை
வஞ்சித் திணை
காஞ்சித் திணை
நொச்சித் திணை
உழிஞைத் திணை
தும்பைத் திணை
வாகைத் திணை

இறந்து போன வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது பண்டைய தமிழ் மரபு ஆகும்

சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தனர்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

1. ஈ) அறப்போர்
2. அ) சூரிய உதயத்தின்
3. அ)நொச்சிப் பூ
4. ஆ) வஞ்சினம்
5. அ) நொச்சி
6. இ) தும்பைத் திணை
7. ஈ) நடுகல்
8. அ).புலிமான்கோம்பையில்.
9. அ) புலிமான்கோம்பையில்
10. ஆ) மறக்கள வேள்வி
11. இ) மூதின் முல்லை
12. அ) பொருண்மொழிக் காஞ்சி
13. ஈ) பூவை நிலை
14. ஈ) அனைத்தும்
15. அ)சிறைமீட்டான்
16. ஆ) 3ஆம் நூற்றாண்டு
17. அ) வெட்சிப் பூவையும்
18. இ)ஈதல்
19. அ)பாரி
20. ஆ) பேகன்

**பார்வைநூல்கள்**


11. **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், பதிப்பு - 2001.

12. **தமிழ்ப் பண்பாடு, த.அருள் பத்மராசன்,** தமிழரசன் பதிப்பகம் சென்னை-71.

13. **தமிழ் இலக்கிய வரலாறு**, வரதராசன்.மு, சாகித்திய அக்காதெமி, புது தில்லி

14. **புதிய தமிழ் இலக்கிய வரலாறு**, நீல. பத்மநாபன், சிற்பி பாலசுப்ரமணியம், சாகித்திய அகாடெமி, புது தில்லி.


**குறுவினாகள் - விடைகள்**

1. **பண்டைத் தமிழர் நம்பிக்கைகள் மூன்றினைக் கூறுக.**
   நல்ல நேரம் பார்த்தல், நல்ல நேரம் பார்த்து வேலையினைத் தொடங்குதல், பறவையொலி முதலிய சகுனம் பார்த்தல், பல்லி சொல் கேட்டல், விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், கூடல் இழைத்தல், பேயோட்டல்

2. **தமிழர் பழக்கவழக்கங்களில் மூன்றினைக் கூறுக.**

காக்கைக்குச் சோறிடல், குழந்தைக்கு நிலவினைக் காட்டி சோறுட்டல், இறந்தவர்களைத் தாழியில் இட்டுப் புதைத்தல், ஆடவர் மடலேறுதல், அன்புடையவரை ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்ளுதல்.

3. வழிபாட்டிற்கு முக்கிய காரணமாக சிக்மண்ட் பிராய்டு கூறுவது என்ன?

உயிர் மீது உள்ள அச்சம்

4. **பண்டைத் தமிழ் நிலத்தின் நான்கு முதன்மையான தெய்வங்களைக் குறிப்பிடுக.**

குறிஞ்சி - முருகன்

முல்லை - திருமால்

மருதம் - இந்திரன்

நெய்தல் - வேந்தன்

5. **இந்திர விழா பற்றி குறிப்பிடும் நூல் எது?**

சிலப்பதிகாரம் , மணிமேகலை

6. **தமிழர் வகுத்த ஐவகை நிலங்கள் யாவை?**

மலையும் மலைச் சார்ந்த பகுதியும் - குறிஞ்சி

காடும் காடு சார்ந்த பகுதியும் - முல்லை

வயலும் வயல் சார்ந்த பகுதியும் - மருதம்

கடலும் கடல் சார்ந்த பகுதியும் - நெய்தல்

மணலும் மணல் சார்ந்த பகுதியும் - பாலை

7. **நெய்யாட்டு – குறிப்பு வரைக.**

பழந்தமிழர்களில் ஆடவர்கள் புதன் மற்றும் சனி ஆகிய நாட்களிலும், பெண்கள் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எண்ணெய்த் தேய்த்து தலை முழுகினர். இது குளிப்பு நீராட்டு என்றும் தலை முழுக்கு நெய்யாட்டு என்றும் அழைக்கப்பெறும்.

8. **சுண்ணம் குறிப்பு வரைக.**

சுண்ணம் என்பது பலவகை நறுமணப் பொருட்களைச் சேர்த்து இடித்த பொடியாகும். இதனை இடித்து வைப்பது பண்டைக் காலத்து இளமகளிருக்குப் பெருவழக்காக இருந்துள்ளது.

**நெடுவினாகள்**

1. தமிழர் புற வாழ்க்கை முறைக் குறித்து கட்டுரை வரைக?
2. தமிழரின் கொடைப்பண்பு குறித்து விவரி
3. பழந்தமிழரின் நடுகல் வழிபாடு குறித்து எழுதுக.